Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு :12-6-2019 Issued:12-6-2019

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

**வெள்ளிக்கிழமை, ஜனவரி 4, 2019—தொகுதி 52—2**

**Friday the 4th January 2019—Volume 52—2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ.3.00] [Price Rs.3.00

4-1-2019

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | **வினாக்கள்—விடைகள்—** | *51-98* |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | |
| 2. | **தகவல் கோரல்—** | *98* |
| | உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | |
| 3. | **சிறப்புக் கவன ஈர்ப்பு—** | *99-166* |
| | (அ) கஜா புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு | *99-142* |
| | *திரு. துரை. சந்திரசேகரன் | *99-105* |
| | திரு. C.V. சேகர் | *105-112* |
| | திரு. கரி. இராமசாமி | *112-116* |
| | *திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | *116-119* |
| | *திரு. எம். தமிமுன் அன்சாரி | *119-123* |
| | திரு. மு.க. ஸ்டாலின் | *124* |
| | மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | *124-142* |
| | (ஆ) தமிழ்நாட்டில் விளைநிலங்களில் உயரழுத்த மின் கோபுரங்கள் அமைப்பதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை | *142-166* |
| | திரு. மு.க. ஸ்டாலின் | *144-146,164* |
| | திரு. உ. தனியரசு | *146-147* |
| | திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | *147-148* |
| | திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | *148-149* |
| | மாண்புமிகு திரு. பி. தங்கமணி | *149-166* |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| **4.** | **அறிவிப்பு—** | |
| | மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | *166* |
| **5.** | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—** | *167-299* |
| | மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் | *167-190* |
| | திரு. பி.எம். நரசிம்மன் | *167* |
| | *திருமதி பி. கீதா ஜீவன் | *191-202, 204, 206-208* |
| | மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன் | *196-199* |
| | *மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் | *200, 203, 243* |
| | மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | *201-203, 226-228, 234* |
| | *மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன் | *204* |
| | *மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா | *205, 207* |
| | *மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு | *206, 242* |
| | *மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | *208, 274-276, 286* |
| | *திரு. எஸ். பவுன்ராஜ் | *209-223* |
| | *திரு. எச். வசந்தகுமார் | *223-226, 228-241* |
| | மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் | *225, 283-285, 287-294* |
| | *மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | *225,229* |





| | | பக்கங்கள் |
|---|---|---|
| **5.** | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | |
| | மாண்புமிகு திரு. பி. தங்கமணி | *226,232* |
| | திரு. கரி. இராமசாமி | *227* |
| | *மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் | *230-231* |
| | மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | *232-233, 252* |
| | மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | *235-236, 248-252, 269-273* |
| | மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | *236-237, 281-282* |
| | *திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | *242-249, 253-256* |
| | திருமதி ம. கீதா | *256-266* |
| | மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | *256-257, 276-279, 297* |
| | திரு. சிவ.வீ. மெய்யநாதன் | *266-269, 279-281, 283, 296, 298-299* |
| | திரு. அர. சக்கரபாணி | *273, 293* |
| | *மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் | *274* |
| **6.** | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | *299-307* |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விளம்பி, மார்கழி 20, திருவள்ளுவர் ஆண்டு 2049

## 2019 ஜனவரி 4, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி இடத்தால் செயின்."*

*செய்ய வேண்டிய செயல்கள் பற்றி நன்றாகச் சிந்தித்து தக்க இடம் அறிந்து செய்தால், அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு துணை வேண்டாம்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**1—**

### வனவியல் கல்லூரி

***34926—திரு. எ.பி. சக்திவேல்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் தெற்கு தொகுதியில் வனவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*[2019 ஜனவரி 4*

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதியானது நகர்ப்புறப் பகுதியில் அமைந்துள்ளது. இந்தத் தொகுதியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில், 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குரும்பப்பட்டி வன மரபியல் ஆராய்ச்சி மையத்தில்* (Forest Genetics Research Centre) *முக்கியமாக சந்தன மரம், பெருமரம், மூங்கில் மரம் போன்ற மரங்களின் மரபு சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, சேலம் தெற்கு தொகுதியில் தனியாக ஒரு வனக் கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

**திரு. எ.பி. சக்திவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாபெரும் மரம் நடும் திட்டத்தின்கீழ், வனப் பகுதியில் இலட்சக்கணக்கான மரக் கன்றுகளை நட்டு, வனத்தின் வலிமையை அதிகரித்து, மலைவாழ் இன மாணவ, மாணவிகளுக்கான உண்டி உறைவிடப் பள்ளிகளை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியிலே செயல்படும் வகையில், வன உயிரினங்களால் உயிரிழப்பு ஏற்படும்போது பொது மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையினை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாகவும், வனக் காவலர்களுக்கு ரூ.10 இலட்சமாகவும் உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களையும், பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவராகிய உங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சேர்வராயன்மலை, கல்வராயன்மலை, வெள்ளிமலை மற்றும் ஜருகுமலை ஆகிய மலைப் பகுதிகளை உள்ளடக்கியது. இந்த மலைகளிலே அடர்ந்த வனங்களும், மலைவாழ் இன மக்கள் அதிகம் வாழ்கின்ற அதிக ஊர்களும் உள்ளடங்கியிருக்கின்றன. நகர்ப்புறத்தினை எடுத்துக்கொண்டோமானால், கந்தகிரி, குமரகிரி, ஊத்துமலை மற்றும் கரியபெருமாள் கரடு, நாமமலை போன்ற சிறு குன்றுகள் உள்ளடங்கியிருக்கின்றன. எனது தொகுதி நகர்ப்புறமாக இருந்தபோதிலும்கூட, கிராமப்புற, நகர்ப்புற மலைவாழ் இன மக்களின் பிள்ளைகள், மாணவ, மாணவியர்கள் உயர் கல்வி பெறுவதற்காக வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். எனவே, நகர்ப்புறங்களிலே, இந்த சிறு குன்றுகளிலே இருக்கின்ற வனத் துறைக்குச் சொந்தமான இடங்களிலே, கலை மற்றும் அறிவியல் கல்லூரி அல்லது தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்காக அரசு முன்வருமாயின், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான நிலத்தினை அளிப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



*2019 ஜனவரி 4]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதியதாக கலைக் கல்லூரி துவங்குவதற்கு நிலம் ஒதுக்கக்கோரும் பகுதியில் காப்புக் காடுகளோ, காப்பு நிலங்களோ இருப்பின், அதற்கான உரிய கருத்துருவை இணையதளத்தின்மூலம் பயனீட்டாளர்கள் விண்ணப்பிக்கும்பட்சத்தில், அனுமதி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும். அதாவது, உயர் கல்வித் துறை மற்றும் சம்பந்தப்பட்ட இலாகாக்கள் கருத்துருவினை இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில், அனுமதி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள். அவ்வளவுதானா?*

**திரு. எ.பி. சக்திவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**2—**

## பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***12599—திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், காட்டம்பட்டி ஊராட்சி, குத்தலஅள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலினும் பெரிதான கருணை உள்ளம் படைத்த மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில், (மேசையைத் தட்டும் ஒலி) உழவர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு, புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்ற உழவர் பெருமக்களுக்கும் மற்றுமுள்ள அனைவருக்கும் பொங்கல் பரிசாக இதுவரையிலும் தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு, ரூ.1,000/- வழங்குகின்ற சாதனை சரித்திரத்தினைப் படைத்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோருக்கு முதலில் எனது நன்றியினைத் தெரிவித்து, கேள்விக்கு விடையளிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், காட்டம்பட்டி ஊராட்சி, குத்தலஅள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், அப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். கல்வி அறிவால்தான் ஒரு தேசம் முன்னேற முடியும். மாநில கல்வி அறிவு பெற்றவர்களின் பட்டியலில், மாநில சராசரியான 80.33 சதவிகிதத்தைவிட குறைவாக, அதாவது, 67.4 சதவிகிதம் பெற்று மாநிலத்தில் இறுதி இடத்தில் எங்கள் மாவட்டம் உள்ளது என்பதை நினைக்கும்போது, மிகவும் வேதனையாக உள்ளது. கடந்த 7 ஆண்டுகளாக எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே உயர் கல்வித் துறை அமைச்சர்களாக கோலோச்சிய நிலையிலும், பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, காரிமங்களம், நல்லம்பள்ளி ஆகிய ஒன்றியங்கள் மாநிலத்தில் மட்டுமல்லாமல், மாவட்டத்திலும் இறுதி நிலையில்தான் உள்ளன. எனவே, இதுபோன்ற நிலையைப் போக்கிட, எங்கள் மாவட்டத்திற்கு அரசின் நிபந்தனைகளைத் தளர்த்தி, ஏழையெளிய மாணவர்களை ஊக்கப்படுத்திடும் வகையில், தொடக்கப் பள்ளிகளைத் தொடங்க வேண்டியோ, தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியோ, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியோ, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியோ அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவுகளை ஏற்று, சிறப்புக் கவனம் செலுத்தி, வருகின்ற கல்வி ஆண்டே அப்பள்ளிகளைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய மாவட்டத்தின் நிலையினை மனதிலே கொண்டுதான், இந்த ஆண்டு அவருடைய தொகுதியில், ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மாவட்டத்தின் சார்பாக வேண்டுகோள் வைத்திருக்கின்றார். அதனடிப்படையில் அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 5 உயர்நிலைப் பள்ளிகள், 5 மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்கி, தருமபுரி மாவட்டத்திலே அனைத்துத் தொகுதிகளிலும் தேவையை நிறைவு செய்கின்ற அளவிற்கு அந்தப் பணிகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக்கின்ற அந்தப் பள்ளியிலே மொத்தம் 105 மாணவர்கள்தான் படிக்கின்றார்கள். அதிலும் எட்டாம் வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் 15 பேர்தான். குறிப்பாக, எட்டாம் வகுப்பில் 50 மாணவர்கள் இருந்தால் மட்டும்தான், உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த முடியும்.

ஆகவே, இந்த ஆண்டு மாணவர்களின் சேர்க்கை கூடுதலாக வருகின்றபோது, வருகின்ற ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, எந்தெந்தப் பள்ளிகளைத் தரம் உயர்த்த முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவோ, அத்தனை பள்ளிகளையும், அதாவது கல்வியிலே மிகவும் பின்தங்கிய பகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளையும் தரம் உயர்த்திட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், தருமபுரி மாவட்டம், கல்வி அறிவில் இறுதி நிலையில் உள்ள நிலையிலும், பெண்ணாகரம் ஒன்றியத்தில் மட்டும் அதிகப்படியாக 146 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. மேலும், பாலக்கோடு ஒன்றியத்தில் 105 பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், பெண்ணாகரத்தில் உள்ள 5 பள்ளிகளில் தலைமையாசிரியர்களே இல்லாத நிலை உள்ளது. எனவே, கல்வியில் பின்தங்கியுள்ள எங்கள் மாவட்டத்தின்மீது இந்த அரசு, சிறப்புக் கவனம் செலுத்தி, உடனடியாக அந்தக் காலிப் பணியிடங்களை எப்பொழுது நிரப்பும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி சரியான கேள்விதான். இந்த அரசைப் பொறுத்தவரையிலும், T.R.B. (Teachers' Recruitment Board) மூலம் ஆசிரியர்களைத் தேர்வு செய்து, எந்தெந்த இடங்களிலே காலிப் பணியிடங்கள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் நிரப்புவதற்கு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இருந்தபோதிலும், ஆசிரியர்கள் சிலர் சில இடங்களிலே பணியில் சேர்ந்த பிறகு, விடுமுறையிலே சென்றுவிடுகிறார்கள். மகப்பேறு விடுமுறை 9 மாத காலமாக இருப்பதால், சிலர் விடுப்பில் செல்லும்போது அந்த இடங்கள் காலியாகவே தற்காலிகமாக இருக்கின்றன. இதையெல்லாம் மனதிலே கொண்டுதான் தற்காலிக ஆசிரியர்களை நியமிப்பதற்கு இந்த அரசு தேவையான பணிகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், அதற்கு மதுரை நீதிமன்றத்தால் தடையாணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தடையாணையை நீக்கி, நீதிமன்றத்திலிருந்து உரிய தீர்ப்பை நாங்கள் பெற்றதற்குப் பிறகு, நீங்கள் சொல்வதைப்போல தமிழ்நாட்டிலே ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இல்லை என்கின்ற நிலையை இந்த அரசு உருவாக்கிக் காட்டும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதியில் உள்ள கொட்டையூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. பொது மக்கள் சார்பில் 2013 ஆம் ஆண்டே முன்வைப்புத் தொகை ரூபாய் ஒரு இலட்சம் செலுத்தப்பட்டு பல ஆண்டுகளாகியும் தரம் உயர்த்தப்படாததால், அப்பகுதியைச் சார்ந்த மக்கள் பெரிய எதிர்பார்ப்பில் உள்ளார்கள். இதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொட்டையூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு இதே மாமன்றத்தில் இரண்டு பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டேன். "ஒரு பள்ளியை இந்த ஆண்டு தரம் உயர்த்தித் தருகிறேன்; வரும் ஆண்டில் மற்றொரு பள்ளியைத் தரம் உயர்த்தித் தருகிறேன்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்தார்கள். அந்த உறுதியின் அடிப்படையில், இந்த ஆண்டு அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருகின்ற ஆண்டில் அதுபற்றி அரசு முடிவுகளை மேற்கொள்ளும்.

[2019 ஜனவரி 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட, சுந்தரேசபுரம் ஊராட்சியிலே உள்ள அரசு பள்ளிக்கூடம் மிகவும் சிதிலமடைந்த நிலையிலே, ஓடுகள் எல்லாம் பெயர்ந்து, மழை பெய்தால் தண்ணீர் உள்ளே போகக்கூடிய அளவிற்கு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்றபோது, அக்டோபர் மாதம் அந்தப் பணிகள் எல்லாம் நடைபெறும் என்று சொன்னார்கள். எனவே, அந்தக் கிராமப் பகுதி ஏழை மாணவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு, அந்தப் பள்ளியை முழுமையாகப் புனரமைக்கக்கூடிய பணிகளைச் செய்யவேண்டுமென்றும், அதனைத் தரம் உயர்த்த வேண்டுமென்றும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடுநிலைப் பள்ளிகள் வரையிலும் உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும், நபார்டு திட்டத்தின் மூலமாக நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் அந்தப் பள்ளி குறித்து அரசு உடனடியாக என்ன நடவடிக்கையினை மேற்கொள்ளமுடியுமோ, அதனை விரைந்து இந்த மாத இறுதிக்குள் மேற்கொண்டு, அந்தப் பள்ளியில் ஏற்பட்டுள்ள சேதங்களைச் சரிசெய்து, அந்தக் கட்டடங்களை பொலிவுடன் உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.



2019 ஜனவரி 4]

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் கிராமம் நான் பிறந்த கிராமம். நான் படிக்கும்போது 6 கி.மீ. தூரம் நடந்து சென்று, திருவண்ணாமலையில் உள்ள பள்ளியில் படித்தேன். இப்போது அந்தப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக இருக்கின்றது. அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு விதிமுறைகளின்படி, அனைத்துத் தகுதிகளும் இருக்கின்றன. கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகாலமாகத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கின்றோம். நானும் சட்டமன்றத்திலே கன்னிப் பேச்சிலே ஆரம்பித்து, இன்று வரையிலும் அந்தக் கோரிக்கையினைத் தொடர்ந்து வைத்து வருகிறேன். இந்த அரசு இந்த ஆண்டாவது அந்தப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பள்ளி அனைத்து அரசு விதிமுறைகளுக்கும் உட்பட்டிருக்குமேயானால், இந்த ஆண்டு அதைத் தரமுயர்த்துவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**3—**

## துணை மின் நிலையம்

*__7211—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:__ மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலவளவு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2019 ஜனவரி 4

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். இன்று தமிழகத்தை ஒரு சாமானியர் ஆண்டுகொண்டிருக்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் சாமானியருடைய கஷ்டத்தையெல்லாம் புரிந்துகொண்டு, அவர்கள் பொங்கலை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாயை அண்ணன் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தச் சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு பதிலளிக்க விரும்புகிறேன்.

மேலவளவு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுவருகிறது. மார்ச் மாதம் அந்தப் பணிகள் முடிவடையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

**திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மேலூர் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, மேலவளவு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்ததற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், கொட்டாம்பட்டி ஒன்றியம, மேலவளவு பகுதி மக்களின் சார்பாக



2019 ஜனவரி 4]

நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கொட்டாம்பட்டி ஒன்றியம், கம்பூர் ஊராட்சிக்கு ஒரு துணை மின் நிலையமும், மேலூர் தொகுதி, அழகர்கோவில், கீழையூர், கருங்காலக்குடி போன்றவற்றிற்கு உதவி மின் பொறியாளர் அலுவலகங்களும் தேவையாக உள்ளன. தற்போது மேலூர் உதவி செயற்பொறியாளர் அலுவலகமும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே, இவற்றிற்கு அம்மா அவர்களின் அரசு புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உயர் மின்னழுத்தம் காரணமாக மேலவளவு கிராமத்திற்கு ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, தற்போது அது அமைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதில் மின்னழுத்தம் எந்தளவுக்கு இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, தேவைப்படின், அங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அலுவலகங்களெல்லாம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன; அவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அங்கு இடம் இருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

**திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டாம்பட்டி ஒன்றியம், சேக்கிபெட்டி, கம்பூர் ஊராட்சி மற்றும் கேசவம்பட்டி ஊராட்சி ஆகிய

[2019 ஜனவரி 4

பகுதிகளுக்கு, திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பகுதியிலிருந்துதான் மின்சாரம் தற்போது வந்து கொண்டிருக்கிறது. கம்பூர் ஊராட்சியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்பதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் பகுதியிலிருந்துதான் குளச்சேரி, கொட்டாம்பட்டி பகுதிக்கு மின்சாரம் வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்கிருந்து மின்சாரம் வருகிறது என்பது முக்கியமல்ல. மின்னழுத்தம் எந்தளவுக்கு இருக்கிறது என்பதையும், தேவை எந்தளவுக்கு இருக்கிறது என்பதையும் ஆய்வு செய்த பின்னர்தான், தேவையான இடத்தில் துணை மின் நிலையம் அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில், மின்னழுத்தம் எவ்வளவு இருக்கிறது என்பதை ஆய்வு செய்ய வேண்டும். தூரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைத்தால், மின்னழுத்தம் குறைவாக இருக்கும் என்று கருதினால், நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஆய்வு செய்ய சொல்கிறேன். அப்படி மின்னழுத்தம் குறைவாக இருப்பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூடலூர், பந்தலூர் மின் பகிர்மான வட்டங்களில் ஒரு நாளைக்கு 5, 6 முறை மின்வெட்டு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. வன விலங்குகளின் தொல்லைகள் அதிகம் நிறைந்த பகுதி என்பதால், அங்கு பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. காரணம், அங்கு



2019 ஜனவரி 4]

110 கே.வி. துணை மின் நிலையம் கடந்த 5, 6 ஆண்டுக் காலமாக நிறுவப்படாமல் இருப்பதால், அந்தப் பகுதியில் மின்வெட்டு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், அந்தப் பகுதியில் உள்ள 10 ஆயிரம் பேருக்கு மின்னிணைப்பு இல்லை. இதுசம்பந்தமாக நான் பலமுறை சட்டமன்றத்திலும் எடுத்துக் கூறியிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிசீலிக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக அந்த 110 கே.வி. துணை மின் நிலையம் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுசம்பந்தமாக பலமுறை கேட்டிருக்கிறார்கள். அதற்கு நானும் பலமுறை பதில் சொல்லியிருக்கிறேன். அதில் என்ன பிரச்சினை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதுசம்பந்தமான வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. மேலும், 10 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்னிணைப்பு வழங்குவது சம்பந்தமாக, வனத் துறையின் அனுமதி கிடைக்காத காரணத்தாலும், உச்ச நீதிமன்ற ஆணையின் காரணமாகவும் மின்னிணைப்பு கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதற்காகத்தான், "சோலார் வேண்டுமானால் போட்டுக்கொள்ளுங்கள்; அரசு அமைத்துத் தர தயாராக இருக்கிறது" என்று நாங்கள் கடந்த கூட்டத்திலே சொன்னபோது, அந்தப் பகுதி மக்கள் அதை மறுத்துவிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், அங்கு 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பது சம்பந்தமாக, வனத் துறையின் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றது. உங்களுடைய காலத்திலேயே போடப்பட்ட திட்டம்தான். ஆனால், இப்போது அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதற்கு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுதான் காரணமாக இருக்கிறது. இருந்தாலும், அதை விரைந்து நடத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். மேலும், உச்ச நீதிமன்றத்தில் அதற்கான ஆணையைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அந்தப் பகுதிக்குத் தேவையான ஒன்றுதான் அது. ஏனென்றால்,

*[2019 ஜனவரி 4*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 4 மணி நேரம், 5 மணி நேரம் மின்வெட்டு ஏற்படுகின்றது என்று சொன்னார்கள். மின்வெட்டு என்பது கிடையாது. ஆனால், அங்கே காற்றடித்து, கிளை விழுந்துவிட்டாலோ, கம்பங்கள் அல்லது வயர்கள் அறுந்து விழுந்துவிட்டாலோ மின்வெட்டு ஏற்படுகின்றது. அது காட்டுப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், உடனடியாக, இரவு நேரங்களில் பணிகளைச் செய்ய முடியாமல் போகின்றது. காலையில் சென்றுதான் அதற்கான பணிகளை மேற்கொள்ள முடிகிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டுதான் நீதிமன்றத்திலே வாதாட இருக்கிறோம். கூடிய விரைவில் உரிய உத்தரவினைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**4—**

## பாதாள சாக்கடைத் திட்டம்

***18810—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேனி மாவட்டம், கம்பம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், கம்பம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால், விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டு, அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



*2019 ஜனவரி 4]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.*

**திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-20*

*இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறுகின்ற நம்முடைய தமிழக அரசு பல்வேறு துறைகளிலே பல்வேறு சாதனைகளைப் படைத்து, இன்றையதினம் மத்திய அரசின் விருதுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, இன்றையதினம் உள்ளாட்சித் துறையிலே சாதனை படைத்து மத்திய அரசின் விருதினைப் பெற்றதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், கம்பம் நகரிலே பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாற்றாக, இன்றையதினம் FSDP திட்டத்தை நிறைவேற்ற முடியும்; நிறைவேற்றித் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நன்றியைச் சொல்லிவிட்டீர்களா? அவ்வளவுதானா? இரண்டாவது கேள்வி இல்லையா? (குறுக்கீடு) இன்னும் துணைக் கேள்வி இருக்கிறதா என்று கேட்டேன். (குறுக்கீடு) இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.*

*[2019 ஜனவரி 4*

**திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் பகுதியிலே வாரச் சந்தை அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு அதிகம் செலவாகின்ற காரணத்தினால், அந்தத் தொகையை அரசு மானியமாக வழங்கினால், மிகவும் உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர், உங்களிடம் பதில் இருக்கிறதா?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றிய கேள்வி. இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும், துறைமூலம் ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மானியமாகக் கேட்கிறார். அதைப்பற்றி தனியாக அவர் விளக்கமாகக் கடிதம் கொடுத்தால், துறை அதிகாரிகள்மூலம் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற முத்தமிழறிஞர் அவர்களையும், எங்கள் கழகத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். எங்கள் திருவெறும்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு 2017-ல் பிப்ரவரி மாதம் டெண்டர் விடப்பட்டு,* Phase-I, Phase-II, Phase-III *என்று பல்வேறு கட்டங்களில் செயல்படுத்துகின்ற நிலைக்கு வந்திருந்தாலும்,* Phase-I-*ல் மிகவும் மந்தமான நிலையில் அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைச் சொல்வதற்குக் காரணம், எங்களுடைய* extension area-*வில் 61-வது வார்டிலிருந்து 65-வது வார்டு வரைக்கும் இருக்கின்ற சாலைகள் குண்டும், குழியுமாக உள்ளன. பாதாள சாக்கடைத் திட்டத்தையே காரணமாகச் சொல்லி, அந்தச் சாலைகள் இன்னும் செப்பனிடப்படாமல், அப்படியே இருக்கின்றன. இதனால் பல விபத்துகள் ஏற்படுவதோடு, பொது மக்களும் அதைப் பயன்படுத்த முடியாத ஒரு நிலை இருக்கிறது. எப்போது கேட்டாலும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தால்தான், நாங்கள் அதைச் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்சினை மாநகராட்சிப் பகுதியில் மட்டுமல்ல; ஊராட்சிப் பகுதிகளிலும் உள்ளது. எங்களுடைய நவல்பட்டு பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில்,* Phase-I and Phase-III *இரண்டிலும் இதுபோன்ற பிரச்சினை இருக்கிறது.*



*2019 ஜனவரி 4]*

*அதேபோல, கும்பக்குடி பஞ்சாயத்திலும்* PhaseII-*ல் இதேபோன்ற பாதாள சாக்கடைப் பிரச்சினை இருந்துகொண்டுதான் இருக்கின்றது. நான் இதைக் கேட்பதற்கு காரணம்,* Phase-I-*ல் பணிகள் இவ்வளவு* slow *ஆக போய்க் கொண்டிருந்தால், சாலைப் பணிகளை மேற்கொள்ள இன்னும் 5 வருடங்கள் ஆகும்போல் தெரிகிறது. ஆக, 5 வருடங்களுக்கும், நான் ஒவ்வொரு முறையும் பொது மக்களிடம் சென்று, இந்தத் திட்டம் வந்தால்தான் எங்களால் ரோடு போட முடியும் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. எனவே, அதைப் புரிந்துகொண்டு, அந்தப் பணியை வேகப்படுத்துகின்ற நடவடிக்கையை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்கள் ஒருமுறை பேசும்போதுகூட, கழிவுநீரைச் சுத்தப்படுத்துகின்ற மோட்டாரின்* horse power *குறைவாக இருக்கிறது என்று சொன்னபோது, அன்றைக்கு இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பாட்டுக்கு வரும்போதுதான் அதற்கான வேலை நடைபெறும் என்று சொன்னார். ஆகவே, எதற்கெடுத்தாலும் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் காரணமாகச் சொல்லிக் கொண்டிருப்பதால், அதை விரைவுபடுத்துகின்ற நடவடிக்கையை இந்த அரசாங்கம் செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தை ஒவ்வொரு பகுதியிலும் நடைமுறைப்படுத்துவது என்பது மிகவும் சிரமமான காரியம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இதற்குமுன் அவர்களுடைய ஆட்சியில், 2006-2007-ல் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் இதுவரைக்கும் பல*

*[2019 ஜனவரி 4*

இடங்களில் முடிவடையாமல் இருக்கின்றன. இதற்கும் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. Earth work செய்யும்போது deep ஆக போக வேண்டியிருக்கிறது. சுத்திகரிப்பு நிலையத்திற்கு இடப் பிரச்சினைகள் இருக்கின்றன. இதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் புதியதாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். இதனைத் தீர்க்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காக தனியாக ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதாவது, main pipe line எல்லாம் போட்டு முடித்தபிறகு, ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியாகப் பணம் கட்டி, house connection எடுப்பார்கள். ஆனால், தற்போது அம்மா அவர்களுடைய அரசே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, வீட்டிற்கான இணைப்பைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இணைப்பைக் கொடுத்துவிட்டு, உடனடியாக ரோடு போடக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஊராட்சிப் பகுதியில் அந்தப் பிரச்சினை இருப்பதாகச் சொன்னார்கள். ஊராட்சிப் பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் கிடையாது. (குறுக்கீடு) மாநகராட்சி, நகராட்சி மற்றும் சில பேரூராட்சிகளில் இத்திட்டம் இருக்கிறது. பல்வேறு இடங்களில், பல்வேறு சூழ்நிலைகள் இருக்கின்றன. சில இடங்களில் depth அதிகமாகப் போகிறது. அவ்வாறு போகும்போது மணல் வந்துவிடுகிறது. சில இடங்களில் கடுமையான பாறைகள் வந்துவிடுகின்றன. நகர்ப்புறங்களில் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது பற்றி உடனடியாக ஆய்வு செய்து, கூடிய விரைவில் முடிக்க நடவடிக்க எடுக்கப்படும்.

*முற்பகல் 10-25*

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிறைய இடங்களில் சாலைகள் அமைப்பதற்குரிய பணிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்காக கூடுதலாக நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் துறையின் சார்பாகக் கேட்டிருக்கின்றோம். எந்தெந்தப் பகுதிகளில் அதிகமான சேதங்கள் இருக்கின்றனவோ, கண்டிப்பாக அந்தச் சாலைகள் சீரமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2019 ஜனவரி 4]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

**டாக்டர் V.P.B. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் சிறப்பாக பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாயினை எங்களுடைய தொகுதியிலுள்ள வேடசந்தூர் பேரூராட்சிக்கு வழங்கி, இன்றைக்குப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்துடன் சேர்ந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் வழங்கி இருந்தார்கள். எங்களுடைய தொகுதியில் உள்ள 5 பேரூராட்சிகளில், 4 பேரூராட்சிகளில் இதுவரை கழிவுநீருக்கான வாய்க்கால்கள் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. எனவே வேடசந்தூர் பேரூராட்சியைத் தொடர்ந்து வடமதுரை பேரூராட்சியில் இருக்கின்ற முக்கியமான 5 வார்டுகளில் 4.25 கோடி ரூபாய் செலவில் கழிவுநீர் வாய்க்கால் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், கிட்டத்தட்ட 15, 20 வருட காலமாக, முக்கியமான பிரச்சினையாக, அந்தப் பேரூராட்சிப் பகுதியில் கழிவுநீர் வாய்க்கால் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதனை நேரில் நானும், மக்களவை துணை சபாநாயகர் மற்றும் எங்களுடைய தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் மு. தம்பிதுரை அவர்களும் ஆய்வு செய்து, அறிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அனுப்பி இருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அந்த வடமதுரை பேரூராட்சிக்கான கழிவுநீர் வாய்க்கால் பணிகளுக்கு அனுமதி வழங்கிட ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாக இருந்தாலும்கூட,

அவருடைய தொகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அக்கறையில் கேட்டிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக நிதிநிலையை அனுசரித்து, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டத்தைச் சேர்ந்த திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் கேட்ட கேள்வியையொட்டிய கேள்வி இது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகின்றேன். Smart City என்று திருச்சி அறிவிக்கப்பட்டுள்ளது. Smart City என்று அறிவித்த காரணத்தினால், சாலைப் பணிகள் போன்று, எந்த இடத்திலும் எந்தப் பணியையும் செய்யாமல், அனைத்து இடங்களிலும் இப்போது Park அமைக்கின்றார்கள். இப்போது பார்த்தால் park-gym என்று 10-15 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்கூட, அவருடைய தொகுதியிலே ஒரு பெரிய park-ஐ அமைத்து, அதனைத் திறந்து வைத்துவிட்டு வந்தார்கள். நாங்கள் கேட்பது என்னவென்றால், குடிதண்ணீர் கலங்கலாக வருகின்றது; மிகவும் கலங்கலாக வருகின்றது. அதற்கு ஒரேயொரு filter-தான் போட வேண்டும். அதற்கு ஆகும் செலவு 80 இலட்சம் ரூபாய் மட்டும்தான். ஆனால் அதனைச் செய்வதற்கு மாநகராட்சி ஆணையரிடம் சொன்னபோது, அவர் அதனைச் செய்யவில்லை. எனவே, இப்போது பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெறுகின்ற பகுதிகளைத் தவிர்த்து, மற்ற இடங்களில் சேதமுற்றிருக்கின்ற சாலைகளைச் செப்பனிட்டால்தான் சரியாக இருக்கும். இப்போது அந்தச் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. எனவே, இந்தப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் செய்து தருவாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Smart City திட்டத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட திட்டமாக அது இருந்தாலும்கூட, இந்தத் திட்டத்திற்கான நிதி ஆதாரம் 50 சதவிகிதம் மத்திய அரசாங்கத்தாலும், 50 சதவிகிதம் மாநில அரசாங்கத்தாலும் ஒதுக்கப்படுகிறது. ஆனாலும்கூட, மத்திய அரசு சில வரன்முறைகளைக் கொடுத்திருக்கின்றது. Area Based Development என்று area fix செய்து, park போன்ற சில வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, 3 முறை மத்திய அமைச்சர் அவர்களைச் சந்தித்திருக்கின்றோம். இந்த Smart City திட்டப் பணிகள் பொதுவாக எல்லா மாநிலங்களிலும் கொஞ்சம் தொய்வாகத்தான் இருக்கின்றன. இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, கூட்டம் நடத்தி, அந்தப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளார்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. நேரு அவர்கள் சொன்னது உண்மைதான். நாங்கள் பல்வேறு பணிகளைச் செய்வதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கின்றோம். சில பணிகளுக்கு relaxation கேட்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தண்ணீர் கலங்கலாக வருகின்றது என்று சொன்னார். அந்தப் பணியை மேற்கொள்ள 80 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும் கூறினார்கள். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றும்போது, pipeline போடும் பணிகள் பல்வேறு சாலைப் பணிகள் எல்லாம் இருக்கின்றன. இந்த வருடம்கூட, எந்தெந்தப் பகுதிகளில் first phase-ல் சாலைப் பணிகளை எடுத்துக் கொள்ளலாம் என்பதனை ஆய்வு செய்து, அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

[2019 ஜனவரி 4

முற்பகல் 10-30

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட வேலூர் மாநகரில் அரியூர், சித்தேரி, பழவன்சாத்து, பாகாயம் போன்ற பகுதிகளில் Phase-II-ல் வரக்கூடிய பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் இன்னும் துவங்கப்படாத நிலையில் இருக்கின்றன. மேலும், குடிநீர்த் திட்டப் பணிகள் ஆங்காங்கே நடைபெறுகின்ற காரணத்தினால் pipelines, அமைக்கின்ற பகுதிகளிலே உள்ள சாலைகள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. ஆகவே, மாநகராட்சியினுடைய புறநகர்ப் பகுதிகளில் நடைபெற்று வருகிற பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளையும், phase-2 மற்றும் 3-ல் காட்பாடி போன்ற பகுதிகளில் நடைபெறக் கூடிய பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளையும் உடனடியாக நிறைவு செய்து தந்தால்தான், அந்தச் சாலைகளைச் செப்பனிட முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, இந்த அரசு அந்தச் சாலைகளை உடனடியாகச் செப்பனிடுவதற்கு ஏதுவாக, பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைந்து முடித்திட நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நகர்ப்புற மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலெல்லாம் கண்டிப்பாக பாதாள சாக்கடைத் திட்டம் அவசியம் என்பதற்காகத்தான் அதிகமான பாதாள சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு, அதற்காக நிதிகளையெல்லாம் ஒதுக்கினார்கள். அதனடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை வழி நடத்தக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத்தை அறிவித்திருக்கிறார்கள். இதுவரையிலும், எந்த முதலமைச்சரும் எந்தக் காலத்திலும் இவ்வளவு அதிகமான தொகையை தென்னை மரங்களுக்கு நிவாரணமாக அறிவிக்கவில்லை. கடுமையான நிதிச் சுமை இருந்தாலும்கூட,



2019 ஜனவரி 4]

தென்னை மரங்களுக்கும் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கும் அதிகமான நிவாரண நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோல, ஒரு விவசாயியாக இருக்கின்ற காரணத்தினால்தான், பொங்கல் பண்டிகை விவசாயிகளுடைய பண்டிகை என்பதை உணர்ந்து, பொங்கல் பரிசாக தற்போது ரூ.1,000/-ஐ அறிவித்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூர் மாநகராட்சியிலும்கூட, ரூ.343 கோடியே 69 இலட்சம் நிதியை ஒதுக்கீடு செய்து, பாதாள சாக்கடைத் திட்டத்தை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும் அறிவித்தார்கள். இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு, pipeline laying செய்யும்போதே, வீடுகளுக்கு connections-ஐ நாங்களே போடுகிறோம். அவ்வாறு இல்லாவிட்டால், ஒவ்வொரு பக்கத்திலும், road-ஐ cut செய்து கொண்டேயிருப்பார்கள். அப்படியே, ஒட்டுமொத்தமாகப் போட்டபிறகு, road laying செய்துவிடலாம். ஆகவே, தமிழகத்தில் எங்கெங்கே damage ஆன roads இருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கணக்கெடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். கூடிய விரைவிலே கண்டிப்பாக அந்தச் சாலைகள் செப்பனிட்டுத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் என்பது தூய்மையை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டம், காவேரி நதிக் கரையோரம் உள்ள அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகளிலும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று ஏற்கெனவே அரசு அறிவித்து, பல்வேறு இடங்களிலே, சுத்திகரிப்பு நிலையத்திற்கு இடங்கள் கிடைக்காமல், Court-க்குச் செல்கின்ற காரணத்தால், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படாமல் பல திட்டங்கள் கிடப்பிலே கிடக்கின்றன. குறிப்பாக, பாதாள சாக்கடைத் திட்டம் என்பது, எப்படி ஒரு மாயாவியினுடைய உயிர் பாதாள உலகத்திலே போய் ஏழு கடல் தாண்டி கண்டுபிடிக்கப்படுவதுபோல 7, 8 வருடங்களானாலும் நிறைவேறாத நிலையிலேயே இருக்கிறது. ஆகவே, அதனை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலேகொண்டு,

[2019 ஜனவரி 4

எந்தெந்த இடங்களிலே பாதாள சாக்கடை அமைக்கப்பட வேண்டுமோ, அந்த ஊர்களிலே real estate செய்யக்கூடியவர்களிடம் அதற்கான பணத்தை வசூலித்து, இடத்தை எடுத்து வைத்தால்தான், எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். மேலும், இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த நீண்டகாலம் ஆவதற்கு நீதிமன்றத் தடை உத்தரவு உள்ளிட்டவை காரணமாக இருக்கின்றன. அதனை மாற்றுகின்ற வகையிலே எல்லா நகராட்சிகள், பேரூராட்சிகளிலேயும் இத்திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும். எங்களுடைய திருவண்ணாமலை நகராட்சி, ஆரணி நகராட்சி, வந்தவாசி நகராட்சி, கீழ்ப்பெண்ணாத்தூர், பேரூர் போன்ற பகுதிகளிலெல்லாம் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு இப்பொழுதே இடங்களை அரசு அதற்காக எடுத்தால்தான், நிறைவேற்ற முடியும். திருவண்ணாமலைக்கு பல இலட்சம் மக்கள் வந்து செல்கிறார்கள். ஆனால், அங்கு ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு, அடுத்த திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. நீதிமன்றத்தில் சுமார் 7 ஆண்டு காலமாக வழக்கு இருந்து வருகிறது. கடலூரில் 10 ஆண்டு காலமாக நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது. ஆகவே, இந்த பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக இடங்களை ஆங்காங்கே ஒதுக்க வேண்டும். Real estate செய்கிறவர்களிடம்,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, கேள்வியை சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** பணம் வசூலித்து, இடத்தைப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாள் அமைச்சராக இருந்தவர். அவர் எழுப்பிய கேள்வி, நியாயமான கேள்வி. எல்லாப் பிரச்சினைகளையும் அந்தக் கேள்வியிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். பாதாள சாக்கடைத் திட்டம் என்பது பெரிய சவாலான பிரச்சினைதான். பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தளவில், அதற்கான சுத்திகரிப்பு



2019 ஜனவரி 4]

நிலையத்தினை அமைக்கும் பணியையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நகரப் பகுதியில் அதனை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, எங்களுடைய வீட்டுக்குப் பக்கத்தில் அமைக்க வேண்டாம் என்று அப்பகுதி மக்கள் ஆட்சேபம் தெரிவித்து, Court-க்குப் போய்விடுகிறார்கள்.

அதேபோல, திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்; குப்பைக் கிடங்குகளை அமைக்கும் பணியைப் பொறுத்தளவில், அங்கேயிருக்கிற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அது ஒரு பெரிய சவாலாகவே இருக்கிறது. எங்கே பார்த்தாலும், கண்டிப்பாக அந்தத் திட்டம் வேண்டுமென்று கேட்பார்கள். ஆனால், தங்களுடைய வீடுகளுக்குப் பக்கத்தில் அதனை அமைக்க வேண்டாமென்று சொல்கிற உணர்வுதான் எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே, Real estate செய்கிறவர்களிடமிருந்து பணம் வசூலித்து, அதற்கான இடங்களை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு இடங்களை எடுக்கின்ற சூழ்நிலைகளில்கூட பல்வேறு காரணங்களினால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதேபோன்று, கடந்த முறை தி.மு.க. ஆட்சியின் போது தொடங்கப்பட்ட திட்டங்களுக்கு நீதிமன்றத்தில் stay இருப்பதன் காரணமாக, தற்போது வரை முடியவில்லை. Court case நடந்துகொண்டிருக்கிறது. இது ஒரு பெரிய சவாலான பிரச்சினை. இருந்தாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

முற்பகல் 10-35

தமிழ்நாட்டில் பார்த்தீர்களென்றால், 135 நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில், சென்னையைத் தவிர்த்து, கிட்டத்தட்ட 35 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் 3 மாநகராட்சிகள் மற்றும் 25 நகராட்சிகளில் வெவ்வேறு திட்டங்களின்கீழ் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வெவ்வேறு நிலையில் இருக்கின்றன. பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, ஒரு மாற்று ஏற்பாடாக "கசடு கழிவு மேலாண்மைத் திட்டம்" என்ற திட்டத்தினை மேற்கொள்ளலாம் என்று அம்மாவின் அரசு கொள்கை முடிவு ஒன்றை எடுத்துள்ளது. இதன் அடிப்படையில்,

[2019 ஜனவரி 4

*51 நகராட்சிகள், 59 பேரூராட்சிகள் பயன்பெறும்வகையில், 49 நகரங்களில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க சுமார் 217 கோடி ரூபாய் மதிப்பில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அந்த சுத்திகரிப்பு நிலையத்தோடு 2, 3 பேரூராட்சிகள்* tie up *செய்துகொள்வதுபோல் திட்டமிடப்பட்டுள்ளது. அதனை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். அரசாணையும் வெளியிடப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக இந்தத் திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**5—**

## குழந்தைகள் நல வாரியம்

***35134—திரு.** S. **செம்மலை:***மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குழந்தைகள் நல வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மற்றும் குழந்தைகள் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, குழந்தைகள் நலன் சார்ந்த சட்டங்களின் செயலாக்கத்தினைக் கண்காணிக்கவும், மீளாய்வு செய்யவும், குழந்தைகள் தொடர்பான அனைத்து உரிமை மீறல்கள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கவும், மத்திய அரசின் குழந்தைகள்*



2019 ஜனவரி 4]

*உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்களின் சட்டம், 2005, பிரிவு 17(1)-ன்படி, தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டு, தலைவர் மற்றும் 6 உறுப்பினர்களைக் கொண்டு 18-1-2013 முதல் செயல்பட்டு வந்தது. 3-5-2017 முதல் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு தலைவர் மற்றும் 6 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு, ஆணையம் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளில் தீர்வு காண, இளைஞர் நீதி சட்டம், 2015, பிரிவு 27-ன்கீழ் குழந்தைகள் நலக் குழுக்கள் தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டு, குழந்தைகள் நலன் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே, குழந்தைகள் நல வாரியம் அமைப்பதற்கு அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*

**திரு.** S. **செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் என்பதே குழந்தைகளின் பாதுகாப்பை மையமாகக் கொண்டுதான் இருக்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, தமிழ்நாட்டில் 2013 ஆம் ஆண்டில் இந்த ஆணையம் அமைக்கப்பட்டாலும், Immoral trafficking, Sexual a buse, Pedophile போன்ற குற்றங்களுக்காக POCSO போன்ற கடுமையான சட்டங்கள் இருந்தாலும், குழந்தைகள் காணாமல் போவது, குழந்தைகள் களவாடப்படுவது, குழந்தைகள் கடத்தப்படுவது மற்றும் அப்படிப்பட்ட குழந்தைகளை தவறான வழிகளில் ஈடுபடுத்துவது போன்ற இந்த நிகழ்வுகள், ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் அன்றாடம் வருகிற செய்திகளாக இருக்கின்றன. இது மாநிலம் தழுவிய பிரச்சினை மட்டுமல்ல; நாடு தழுவிய பிரச்சினை மட்டுமல்ல; உலகம் தழுவிய பிரச்சினையாக இருந்து வருகிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். குழந்தைகளைப் பராமரிப்பது மட்டும் இந்த ஆணையத்தின் நோக்கமாக இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட ஆபத்துகளிலிருந்து அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றி கரையேற்ற வேண்டும். எனவேதான், நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறபோது

எச்சரிக்கையாகக் கேட்டேன். அதாவது, இந்தக் குழந்தைகளுக்கு மேலும் பாதுகாப்பு அளிக்கிற வகையில், ஆபத்துகளிலிருந்து அவர்களைக் காக்கக்கூடிய வகையில், இந்த ஆணையத்தை விரிவுபடுத்தி, அதிகாரங்களை அதிகமாகக் கொடுத்து, சிறப்பான செயல்பாடுள்ள ஆணையமாக இந்த ஆணையத்தை மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்குமா? அதற்கான நடவடிக்கையை துறை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-3-2018 வரை 1,568 வழக்குகளைக் கையாண்டு, 1,344 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இவற்றில் இளைஞர் நீதி சட்டம் 2015-ல், 701 வழக்குகளும், குழந்தை திருமணச் சட்டத்தில் 40 வழக்குகளும், குழந்தைகளின் கட்டாய மற்றும் இலவச உரிமைச் சட்டம், 2009-ல் 298 வழக்குகளும், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2011-ல் 416 வழக்குகளும், குழந்தைத் தொழிலாளர் தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1996-ன்கீழ் 113 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு, இளைஞர் நீதி சட்டம் 2015, பிரிவு 27-ன்கீழ் குழந்தை நலக் குழுக்கள் தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் செயல்படுவதோடு, குழந்தைப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளுக்குத் தீர்வு காண, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் ஆகியோருக்கு உள்ள அதிகாரத்திற்கு ஒத்த அதிகாரம் அளிக்கப்பட்ட தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைச் சேர்த்து ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குழுவாகச் செயல்பட்டு வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற ஆணையத்தை மேலும் விரிவுபடுத்துகின்ற அவசியம் அரசுக்கு எழவில்லை என்பதை நான் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.





**திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கேள்வியிலே ஆணையம் என்பதற்குப் பதிலாக வாரியம் என்பதைப் பயன்படுத்தியதற்குக் காரணம், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், காவேரி நதி நீர்ப் பிரச்சினையிலே, காவேரி நதி நீர் மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டுமென்று பல கட்டங்களிலே வலியுறுத்தியும், மத்திய அரசாங்கம் காவேரி மேலாண்மை வாரியம் என்ற அந்தச் சொல்லுக்குப் பதிலாக, காவேரி மேலாண்மை ஆணையம் என்ற அந்தச் சொல்லைத்தான் பயன்படுத்தினார்கள். எனவே, இதைப் பார்க்கிறபோது, ஏதோ ஆணையம் என்பது அதிகாரம் இல்லாத ஓர் அமைப்பாக இருக்குமோ என்ற அந்த நோக்கத்தில்தான் நான் வாரியம் என்று அந்தச் சொல்லைப் பயன்படுத்தினேன். இப்போதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழந்தைகளின் நலனுக்காக, குழந்தைகளைப் பாதுகாக்க அரசு நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று சொன்னார்கள். அதை நான் மறுக்கவில்லை. நான் சொல்ல விரும்புவது, அதாவது என்னதான் அரசாங்கம் கடுமையான சட்டத்தைப் போட்டாலும், என்னதான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலும், இன்றைக்கு பொது மக்களுடைய பங்களிப்பு இல்லாமல், அல்லது பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தாத நிலையில், இதைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு முடியாது என்பது என்னுடைய கருத்து. எனவே, இந்த ஆணையத்தை re-constitute செய்து, கூடுதல் அதிகாரத்தைக் கொடுத்து இன்னும் கொஞ்சம் அதிகாரம் உள்ள வாரியமாக மாற்றி, குழந்தைகளுடைய பாதுகாப்பிற்கு அக்கறை எடுத்துக்கொள்வதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையச் சட்டம், 2005, பிரிவு 11(1)-ன்கீழ் கொண்டுவரப்பட்ட மத்திய அரசின் சட்டத்தின்கீழ்தான் இந்த ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் விதிமுறைகள் அனைத்தும், அதிகார வரம்பிற்கு உட்பட்டு இந்த ஆணையத்தின் தலைவருக்கும்,

[2019 ஜனவரி 4

ஆணையத்தில் பணிபுரிகின்ற ஒவ்வொரு உறுப்பினருக்கும் உள்ள அனைத்து அதிகாரங்களும் அவர்களுக்கான தகுதிகளை வரையறுத்துத்தான் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். வாரியத்திற்கு அதிகாரம் இருப்பதாகவும், ஆணையத்திற்கு ஒருவேளை குறைவாக அதிகாரம் இருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள். அப்படியல்ல; ஆணையம் என்பது அதிகாரமிக்கது. அதேசமயத்தில், அதனை Act பிரகாரம்தான் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே, வாரியம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

## சிப்காட் தொழிற்பேட்டை

***26846—திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விக்கிரவாண்டி தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை துவங்குவதற்கான உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.



2019 ஜனவரி 4]

**திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது விக்கிரவாண்டி தொகுதி என்பது, மிகவும் பிற்படுத்தப்பட்ட, வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற மக்களை அதிகம் கொண்ட ஒரு தொகுதியாகும். விக்கிரவாண்டியைச் சுற்றி 2 கிலோ மீட்டர் அளவில், நான்கு பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கிருக்கின்ற ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த நிறைய இளைஞர்கள், பொறியியல் பட்டதாரிகளாக, ஆண்டுதோறும் படித்துவிட்டு வெளியில் வருகின்றார்கள். ஆனால், அங்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. வேலைவாய்ப்பினைத் தேடி அவர்கள் வெளி மாநிலங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் செல்லக்கூடிய ஒரு துர்பாக்கிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, அவர்களுடைய வாட்டத்தைப் போக்க அங்கே சிப்காட் தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் 571.98 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அங்கு புதிய தொழிற்பேட்டை வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. விக்கிரவாண்டி பகுதியில் இருக்கின்ற தொழில்முனைவோர்கள் யார் முன்வந்தாலும், அங்கு தொழிற்பேட்டை அமைப்பதற்குண்டான நிலத்தினைக் கையகப்படுத்தி, அவர்களுக்குண்டான தொழில் மனைகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 ஜனவரி 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

**திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு, எங்கள் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் பரிசீலிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 60 ஏக்கருக்கு மேலாக பஞ்சமி மற்றும் தரிசு நிலங்கள் விக்கிரவாண்டிக்கு அருகிலே உள்ள வடகுச்சிபாளையம் என்ற கிராமத்தில் இருக்கின்றன. ஆகவே, நிலத்தைக் கையகப்படுத்துவதில் ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. ஆகையால், அரசு அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்து, அங்கிருக்கின்ற பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க முன்வர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கோரிக்கை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்றால், 60 ஏக்கர் நிலம் போதாது. 60 ஏக்கர் நிலத்தில் சிட்கோ தொழிற்பேட்டையைத்தான் அமைக்க முடியும். சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்றால், 500 ஏக்கர், 600 ஏக்கர், 1,000 ஏக்கர் நிலம் தேவை. அதற்குண்டான வழிவகை விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எந்தப் பகுதியிலும் இல்லை. எனவே, அங்கு தொழிற்பேட்டை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.



2019 ஜனவரி 4]

**7—**

## சொந்தக் கட்டடம்

***17390—திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, திருவோணம் ஊராட்சி ஒன்றியம், கிளாமங்கலம் தெற்கு தெருவிலுள்ள அமுதம் பல்பொருள் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகிற தெய்வம்; என்னை வாழ வைக்கும் தெய்வம்; இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது வணக்கத்தையும், நன்றியையும் முதலில் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். அம்மா அவர்களுடைய வழியில் ஆட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களும், தமிழகத்தினுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களும் திருவாரூர் உள்ளிட்ட 12 டெல்டா மாவட்டங்கள், கடந்த மாதம் 16 ஆம் தேதி கஜா புயலால் பாதிக்கப்பட்டபொழுது, அந்தப் பாதிப்புகளைக் களைவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள, எங்கள் மாட்டத்திற்கு நேரடியாக வருகை தந்தார்கள். சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் சாலையில் பயணம் செய்து, அதில் 7 கிலோ மீட்டர் தூரம் அளவிற்கு மக்களைச் சந்தித்து, அந்தப் பகுதியினுடைய பாதிப்புகளை ஆய்வு செய்தார்கள். 7 கிலோ மீட்டர் தூரம் நடந்தே பயணம் செய்து ஆய்வு செய்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் டெல்டா பகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், டெல்டா பகுதிகள் கஜா புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்றன; மற்ற பகுதிகள் எல்லாம் வறட்சி போன்ற காரணங்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதால்,

[2019 ஜனவரி 4

வரவிருக்கிற தை பொங்கலுக்கு, உழவர் திருநாளுக்கு, பொங்கல் பரிசாக 1,000 ரூபாயினை தொகுப்போடு சேர்த்து வழங்கி சிறப்புச் செய்த அருமைக்குரிய நம்முடைய தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு வினாவினை எழுப்பியிருக்கிறார். ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி, திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில், வேதவியபுரம் மற்றும் கிளாமங்கலம் வருவாய் கிராமங்களில், கிளாமங்கலம் கூட்டுறவுச் சங்கக் கட்டுப்பாட்டில் மூன்று நியாய விலை அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. அதிலே இரண்டு முழுநேர அங்காடிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. ஒரே ஒரு பகுதிநேர அங்காடி மட்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த அங்காடி பகுதிநேர அங்காடி என்பதாலும், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் நிதி நிலைமையினைக் கருத்திற்கொண்டும், தற்போது அந்த அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019 ஆம் ஆண்டு புத்தாண்டை வரவேற்றும், வரவிருக்கிற தை மாதம் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டை வரவேற்கும் வேளையில், எங்களுடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். நாகரிகத்தின் உச்சாணியாக, அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குபவர் எங்களுடைய கழகத்தினுடைய தலைவர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இந்த அவையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியதற்கு நன்றி தெரிவிக்கிற வகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் கண்டு நன்றி தெரிவித்த விதம் பாராட்டுக்குரியது. வரலாற்றிலே இல்லாத நிகழ்வாக, முரசொலியிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோர் இரங்கல் தீர்மானத்தின்போது பேசிய இரங்கல் உரைகளை அப்படியே பதிவு செய்தும், அவர்களுடைய படங்களை அதில் இடம் பெறச் செய்தும் பெரிய ஒரு நாகரிகத்தை தமிழகத்திலே ஏற்படுத்தியிருக்கிறார் எங்களுடைய தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட தலைமையின்கீழ் நாங்கள் அனைவரும் பணியாற்றி வருகிறோம் என்பதை மகிழ்ச்சியாகக் கருதி, அவருக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 ஜனவரி 4]

நான் எனது தொகுதியில் உள்ள அந்த அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கேட்டேன். அது பகுதிநேர அங்காடியாக இருப்பதால், சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். தமிழ்நாட்டில் பல இடங்களிலுள்ள பகுதிநேர அங்காடிகள், தனியார்களுக்குச் சொந்தமான இடங்களில் வாடகை இல்லாமல்கூட இயங்கி வருகின்றன. வாடகை இல்லாமல் செயல்பட்டுவரும் சூழ்நிலையில், அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்கள் அல்லது அந்த இடத்தின் உரிமையாளர்களால், அந்த அங்காடிகளில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதனைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், அங்காடிகள் அமைக்கப்படும்போதே அதனைச் சொந்தக் கட்டடத்தில் அமைப்பது நல்ல நடைமுறையாகும். அதற்காகத்தான் சொந்தக் கட்டடங்கள் வேண்டுமென்று நாம் தெரிவிக்கிறோம். ஆகவே, சொந்தக் கட்டடத்தில் அவை இயங்கினால், அங்கே தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கும், அங்கே பொருட்கள் குறையாமல் இருப்பதற்கும், மற்றபடி சாதாரண நிலையிலே உபயோகப்படுத்தாமல் இருப்பதற்கும் ஒரு வழிவகை ஏற்படும். ஆகவே, இதை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு, இந்த அரசு இதுபோன்ற அங்காடிகள் செயல்படும் அனைத்து இடங்களிலும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கஜா புயல் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக்

[2019 ஜனவரி 4

கோரிக்கையினைக் கருத்தில்கொண்டு, அங்காடிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டி, அனைத்து மக்களுக்கும் பயன்படும் வகையில் செயல்படுவார் என்று நம்புகிறேன். அந்த வகையில், கிளாமங்கலம் தெற்கு தெருவிலுள்ள அமுதம் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதியில் செயல்பட்டுவரும் 175 அங்காடிகளில், 27 அங்காடிகள் துறையின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 132 அங்காடிகள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன; 4 அங்காடிகள் மட்டும்தான் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

125 நியாய விலை அங்காடிகளுக்கு தலா 5.5 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி, சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில், ஒரத்தநாடு தொகுதிக்குட்பட்ட பொய்யுண்டார்க்கோட்டை, நெம்மேலி மற்றும் மேல உளூர் ஆகிய ஊர்களிலுள்ள நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இப்பேரவையின் முன்பாக வைக்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையில், அரசு நிதியிலிருந்து கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், அதேபோல மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமும் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

முற்பகல் 10-55

எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு முன்வந்தால், உடனடியாக அரசு அதற்கு உத்தரவு வழங்கும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பகுதிநேரக் கடைகளைப் பொறுத்தவரை, அந்தந்த பகுதி மக்களின் தேவையின் அடிப்படையில்தான், அந்தப் பகுதி மக்களின்



2019 ஜனவரி 4]

தேவையைக் கருத்தில்கொண்டுதான் திறக்கப்படுகின்றன. அப்படித் திறக்கப்படுகின்றபொழுது, உடனடியாக அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஆதாரத்தின் அடிப்படையில்தான் சற்று தாமதம் ஆகிறது. அனைத்து இடங்களிலும், பகுதிநேரக் கடைகளாக இருந்தாலும் சரி அல்லது முழுநேரக் கடையாக இருந்தாலும் சரி, எல்லாக் கடைகளுக்குமே முழுமையாக சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நோக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பொதுவான பிரச்சினை என்பதால்தான் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினருக்கு தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூ.2.50 கோடி பணத்தை அரசாங்கம் கொடுத்தாலும், அந்நிதியைப் பயன்படுத்துவதற்கான வழிவகைகளை அரசு தெரிவித்திருக்கிறது. எந்தெந்த பணிகளுக்கெல்லாம் அந்த நிதியை கொடுக்க வேண்டும்; அங்காடிகள் கட்டுவதற்கு எவ்வளவு, கட்டடங்கள் கட்டுவதற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் வரையறுத்துவிட்டு, மீதமுள்ள தொகையை சட்டமன்ற உறுப்பினர் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னால், எப்படி சாத்தியமாகும்? எனக்கு 99 பஞ்சாயத்து இருக்கிறதென்றால், எத்தனை பஞ்சாயத்திற்கு தேவையான நிதியை அந்த 2½ கோடி ரூபாயிலிருந்து கொடுக்க முடியும்? ஆகையால்தான் அரசாங்கம் என்பது பெரியது. 2 இலட்சம் கோடி ரூபாய்க்கு நீங்கள் பட்ஜெட் போடுகிறீர்கள். இதில் உணவுக்கு மட்டும் பல ஆயிரம் கோடி பணத்தை ஒதுக்குகிறோம். ஆகவே, அந்த நிதியை வைத்து அங்காடிகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். அரசே கடைகளைக் கட்டிட வேண்டும். தனியார் சார்பில் கடைகளைக் கட்டி வியாபாரம் செய்ய முடிகிறது. அரசாங்கம் கடையைக் கட்டி வியாபாரம் செய்தால், அங்கு தவறுகள் ஏற்படாமல் பாதுகாப்பாக இருக்கும் என்பதால் நான் சொல்கிறேன். தனியார் கட்டடங்கள் என்றால், வீட்டுக்காரன் சில பொருட்களை எடுத்துக்கொள்கிறான்; விற்பவன் சில பொருட்களை எடுத்துக்கொள்கிறான். நமது அரசாங்கம் கொடுக்கிற இத்தனை ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களை விநியோகிக்கும்போது கடைநிலையில் இருக்கிற சில ஊழியர்கள் தங்களது நடவடிக்கையால் அரசாங்கத்தின் பெயரைக் கெடுத்துவிடுகிறார்கள். அரசாங்கத்தின் பெயர் கெடாமல் இருக்க

*வேண்டும். நாம் சொந்தக் கட்டடம் கட்டி பாதுகாப்பான முறையில் அந்தப் பொருள்களை வைத்து, ஜனங்களுக்கு வழங்குவதுதான் நல்ல நடைமுறை என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, எங்களுக்கு வழிமுறை சொல்வதற்காக அல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி இயங்க வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். அவர் சொல்வதைக் கேட்டு, அதன்படி சட்டமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும். நாங்கள் உபயோகப்படுத்தக்கூடிய தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்திட எங்களுக்கு வழிமுறைகளை அரசாங்கம் சொன்னாலும், அத்தகைய வழிமுறைகள், விதிமுறைகளை நாம்தான் விவாதித்து தயார் செய்கிறோம். எனவே, அதற்கான வழிமுறைகளை நமது பேரவைத் தலைவர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். நம்முடைய அரசாங்கம் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும். இதைச் செய்தால் நல்லது என்பதைக் கருத்தில்கொண்டு, அதற்கேற்ப சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆகவே, இந்த அங்காடிக்கு கட்டடம் அவசியம் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய விதிமுறைகளை நான் ஏதோ வழங்கியதாக அவர் எடுத்துக்கொண்டார் என்று நினைக்கிறேன். அப்படியெல்லாம் இல்லை. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மனம் இருந்தால் நீங்கள் கொடுக்கலாம், இல்லையென்று சொன்னால் அரசாங்கம் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறது என்றுதான் நான் சொன்னேன். ஒவ்வொன்றாகக் கட்டி முடிக்கப்படும். அதில் முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*





**8—**

## கால்நடை மருத்துவமனை

***36598—திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, காரியாண்டியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரியாண்டி கிராமத்தில் கால்நடை அலகுகள் 5000-க்கும் குறைவாக உள்ளதால், கால்நடை மருத்துவமனை துவக்கிட இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி என்பது அதிக கிராமங்களை உள்ளடக்கியது. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், காரியாண்டியில் கால்நடைகள் குறைவாக இருக்கின்றன என்று சொன்னார்கள். காரியாண்டியைச் சுற்றி சடையநேரி, சவலைக்காரன் குளம், இராமகிருஷ்ணாபுரம், தினையூரணி, வடிவால்புரம், பதக்கம் ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ 7,000 ஆடுகளையும், 3,000 மாடுகளையும் "நீங்கள் மேய்த்து பிழைத்துக்கொள்ளுங்கள்" என்று விலையில்லாமல் அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றீர்கள்.*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

*[2019 ஜனவரி 4*

**திரு. எச். வசந்தகுமார்:** *நமது அரசாங்கம் விலையில்லா மாடுகளையும், விலையில்லா ஆடுகளையும், அந்த ஏழை எளிய மக்களின் வாழ்வு உயர வேண்டும் என்பதற்காகக் கொடுத்திருக்கிறது. ஆனால், அந்த ஆடு, மாடுகளுக்கு நோய் வந்தால், அங்குள்ள 10,000 கால்நடைகளும் எங்கே போகும்? அவை சைக்கிளில் போக முடியாது; மோட்டார் பைக்கில் போக முடியாது; van-ல் போனால் கட்டுப்படியாகாது. அவை நடந்துதான் போக வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக ஒரு கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டும். அந்த 10,000 கால்நடைகளுக்காகவும், பல்லாயிரக்கணக்கான ஏழை, எளிய மக்களுக்காகவும் இந்த மருத்துவமனையை கண்டிப்பாக அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கால்நடைகள் மோட்டார் பைக்கில் போக முடியாது என்றும், சைக்கிளில் போக முடியாது என்றும் சொன்னார்கள். அந்த நிலைமையை மாற்றி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் ஆம்புலன்ஸ் வாகனத்தை கூடிய விரைவில் வழங்கவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த ஆம்புலன்ஸ் வாகனத்தில் எங்கு வேண்டுமானாலும் சென்று சிகிச்சை அளிப்பதற்குத் தயார் நிலையில் இருக்கும் வகையில் நம்முடைய அரசால் ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாங்குநேரி தொகுதி, காரியாண்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000-க்கும் மேல் இருந்தால், முதலில் கால்நடைக் கிளை நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும். பின்பு, கால்நடைகளின்*



*2019 ஜனவரி 4]*

*அலகுகள் 5,000-க்கும் மேல் இருந்தால்தான், அந்த கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள காரியாண்டி கிராமத்தில் 3,000-க்கும் மேல் கால்நடைகள் உள்ளதாலும், அருகில் உள்ள கால்நடை நிலையங்களின் தூரம் அதிகமாக உள்ளதாலும், காரியாண்டி கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளதால், அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி காரியாண்டி கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் அமைத்துத் தரப்படும் என்று சொல்லிவிட்டார்களே!*

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்ல வேண்டுமல்லவா! அங்குள்ள 10,000 கால்நடைகளின் எண்ணிக்கையை மறந்துவிடக் கூடாது. முதலில் கால்நடைக் கிளை நிலையம் ஆரம்பித்து, அதற்குப் பிறகு அனைத்தும், அந்த ஆடு, மாடுகளுக்குக் கிடைக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுத்தால், அங்குள்ள மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள். நீங்கள் செய்ததன் பலன் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதற்காகத்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றேன். மிக விரைவில் எல்லா வசதிகளையும் அங்குள்ள கால்நடைகளுக்குச் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் *9*, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 4

**9—**

## திருக்கோயிலைப் புனரமைத்தல்

***34870—டாக்டர் ஆர்.டி. அரசு:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செய்யூர் தொகுதி, சீவாடி அருள்மிகு விநாயகர் திருக்கோயிலைப் புனரமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா எனும் தெய்வத்தை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

*காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, சீவாடி அருள்மிகு விநாயகர் திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான திருக்கோயில் ஆகும். தற்போது இத்திருக்கோயில் சிதிலமடைந்துள்ளது. இத்திருக்கோயிலின் புனரமைப்பு தொடர்பாக தொல்லியல் வல்லுநர்மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கருத்துரு பெறப்பட்டுள்ளது. மண்டல அளவிலான பரிசீலனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது மாண்பமை உயர் நீதிமன்றம் அமைத்துள்ள குழுவின் கூட்டத்தில் வைக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் புனரமைப்பு செய்திட மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

**டாக்டர் ஆர்.டி. அரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலைவர் குடிகொண்ட இடந்தன்னை தமிழர்களின் கோயில்" எனக் கொண்டு வாழும் எம் தலைவருக்கு வணக்கம். எங்களது துணைத் தலைவருக்கும் வணக்கம். ஆன்மா லயிக்கின்ற இடத்தைத்தான் நம் முன்னோர்கள் ஆலயம் எனப் பெயரிட்டார்கள். ஆனால், செய்யூர் தொகுதியில் இலத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட சீவாடியில் அமையப்பெற்ற 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த செல்வ விநாயகர் கோயிலின் மேல்தளம் மிகவும் சிதிலமடைந்து, அந்த மேல்தளத்தினை சிலை தாங்கி நிற்கின்ற நிலை உள்ளது. அதனால், மிக விரைவில் அதனைச் சீரமைக்க இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*



2019 ஜனவரி 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறுவதற்காக இந்தப் பொருள் வைக்கப்பட்டுள்ளது. விரைவில் குடமுழுக்கு செய்திட மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

*முற்பகல் 11-05*

**டாக்டர். ஆர்.டி. அரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 2011 ஆம் ஆண்டிலிருந்து பெரும்பான்மையான கோயில்களில் டிரஸ்ட்-ஐ நியமிக்காததாலும், குறைந்தது தர்மகர்த்தாவைக்கூட நியமிக்காத நிலையினாலும், சீவாடி செல்வ விநாயகர் கோயில் போலவே, சுமார் 1,000 ஆண்டுகள் பழமைவாய்ந்த 100 ஏக்கர் நிலத்தையும் தன்னகத்தே கொண்ட நடுவிளாகம் திருகாமேஸ்வரன் கோயில் பல ஆண்டுகள் புனரமைப்பின்றியும், பராமரிப்பின்றியும் சிதிலமடைந்திருந்தது. ஆகவே, மக்களின் உணர்வுகளுக்கும், நம்பிக்கைக்கும் மதிப்பளித்து செய்யூர் தொகுதியில் சிதிலமடைந்துள்ள அனைத்துக் கோயில்களையும் புனரமைக்க அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கோரிக்கை வைத்து அமர்கின்றேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகம விதிகளுக்குட்பட்டு 12*

[2019 ஜனவரி 4

ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கோயில் குடமுழுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசால் நடத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பெரும்பாலான திருக்கோயில்கள் தொன்மை வாய்ந்தவையாகும். திருக்கோயில்களின் பழமை மாறாமல் திருப்பணிகள் நடத்துவதற்கு, உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்பேரில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு, குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் மட்டுமே திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் நடத்தப்பட வேண்டும். உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் உயர் மட்டக் குழுவின் வல்லுநர்களை வரவழைத்து கூட்டம் நடத்தி, ஒப்புதல் பெறுவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால், சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. இருப்பினும், தற்போது இந்த உயர்மட்ட வல்லுநர் குழு மாதம் இரண்டு முறை கூட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டதன் அடிப்படையில், விரைவாக அனைத்துத் திருக்கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**10—**

## செயற்கை இழை ஓடுதளம்

***37522—திரு. ரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக ரோலர் ஸ்கேட்டிங் வளையத்தில் செயற்கை இழை ஓடுதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மாவின் கனவை நனவாக்க விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில்



2019 ஜனவரி 4]

3 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்து, விளையாட்டு வீரர்களின் வாழ்க்கையில் விளக்கேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவர்களது தொகுதிக்குட்பட்ட பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அமைந்துள்ள ரோலர் ஸ்கேட்டிங் மைதானத்தில் செயற்கை இழை ஸ்கேட்டிங் தளம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு மைதானம் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அமைந்துள்ள ரோலர் ஸ்கேட்டிங் மைதானத்தில் செயற்கை இழை ஸ்கேட்டிங் ரிங் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், மேற்படி இடத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் ஒப்படைக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. ரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக் கரும்பெடுத்து, செவ்வந்தி பூ தொடுத்து, வண்ணப் பட்டாடை வகையுடனே தான் சூடி, எண்ணக் குவியலுக்கு, பொங்கிவரும் பொங்கலுக்கு, தமிழர்களின் வாழ்வில் உவகை சுரக்க, பச்சரிசி, புது வெல்லம், செங்கரும்பு இவற்றோடு தமிழர்களின் திருநாளாம் பொங்கலுக்கு 1,000 ரூபாய் ரொக்கத்தையும் அள்ளித் தந்த அட்சய பாத்திரம் மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர், உழவர்களின் திருமகன் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்டத்தின் தலைநகரில் அமைந்திருக்கிற ரோலர் ஸ்கேட்டிங் மைதானம் என்பது, தமிழகத்தின் இரண்டாவது மிகப் பெரிய ரோலர் ஸ்கேட்டிங் மைதானம் ஆகும். அங்கிருக்கின்ற மாணவர்கள்,

[2019 ஜனவரி 4

இளைஞர்கள் தேசிய அளவிலே பல்வேறு போட்டிகளிலே பங்குபெற்று, பல்வேறு பதக்கங்களைப் பெற்று வந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் அந்த ரோலர் ஸ்கேட்டிங் விளையாட்டு மைதானத்தில் செயற்கை இழை ஓடுதளம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என் நன்றியினைச் சொல்லி, அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

*முற்பகல் 11-10*

**திரு. ரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களின், மாணவர்களின் நலனுக்காக அல்லும் பகலும் அளப்பரிய திட்டங்களை அள்ளித் தருகிற மாண்புமிகு ஐயா எடப்பாடியார் அவர்களுடைய பொற்கால ஆட்சியில், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள இளைஞர்கள், மாணவர்கள் விளையாட்டில் சிறந்து விளங்க, செயற்கை இழை ஓடுதளம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு, அந்த மாவட்ட இளைஞர்களின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றில் கபடி என்பது நமது பாரம்பரிய விளையாட்டுப் போட்டி; அது கடந்த ஆண்டு கரூரில்



2019 ஜனவரி 4]

நடத்தப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டு நடத்தப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். பாரம்பரிய கபடி விளையாட்டினை ஊக்குவித்ததன் விளைவாக, பட்டி தொட்டிகளிலெல்லாம் இன்றைக்கு அந்த விளையாட்டு புகழ்பெற்று வருகிறது. நீங்கள் தொலைக்காட்சிகளில் Pro Kabaddi பார்த்திருப்பீர்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு வளர்ந்து வரக்கூடிய விளையாட்டு கபடி. அந்த விளையாட்டு, வீரர்களை ஊக்குவிக்கும்வண்ணம் ஆண்டுதோறும் போட்டிகளை நடத்த வேண்டும். ஓராண்டு விட்டு, ஓராண்டு நடத்தக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான கபடி போட்டி கடந்த ஆண்டு நடத்தப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டு நடத்தப்படவில்லை. இந்த ஆண்டு அதை நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கபடி என்பது பாரம்பரிய விளையாட்டு என்றும், CM Trophy-க்கான போட்டி கடந்த வருடம் நடத்தப்பட்டது என்றும் குறிப்பிட்டார். அந்தப் போட்டி இந்த வருடமும் நடத்தப்படும். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ஏனென்றால், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற ஒரு scheme இல்லை. இது மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த scheme-ன் prize money-யைப் பொறுத்தவரையில், CM Trophy-க்கு மட்டுமல்ல; School Game Federation-ல்கூட ஒரு individual player-க்கு 2 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது. CM Trophy-க்கான போட்டியில் Individual players-க்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களுக்கு முறையே 1 இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. School Game Federation-ல் ஒரு Individual player-க்கு முதல் பரிசு 2 இலட்சம் ரூபாய், இரண்டாம் பரிசு 1.5 இலட்சம் ரூபாய் மற்றும் மூன்றாம் பரிசு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு village games-க்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கி, 12,524 village panchayats-ம்

விளையாட்டுப் போட்டிகளை நடத்திக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாரம்பரிய விளையாட்டான கபடி குறித்து எழுப்பிய வினாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மேலும் நல்ல முறையில் முன்னேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற மாநிலங்களில், நமது தமிழகம் இந்தியாவிலேயே 8-வது இடத்தில் இருந்தது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆசியோடு தமிழகம் இன்றைக்கு மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், முதலிடத்திற்கு வருவதற்கு இந்த அரசு அனைத்து விதங்களிலும் நடவடிக்கைகள் எடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) நான்தான் சிறப்புக் கவன ஈர்ப்பாக இன்றைக்கு எடுத்துக்கொள்ள இருக்கிறேனே? (குறுக்கீடு) வேறு பிரச்சினையா?

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் திருச்சி ஆகிய 13 மாவட்டங்களில் விளைநிலங்கள் வழியாக உயரழுத்த மின்கோபுரம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையும் இன்றைக்குச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கஜா புயல் பாதிப்பு குறித்து எடுத்துக்கொண்ட பிறகு, அதை எடுத்துக்கொள்கிறேன்.





## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கஜா புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. கஜா புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் ஆகியோரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி ஆகியோரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்களும் விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்களில், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

முற்பகல் 11-15

***திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வரலாற்றில் டெல்டா மாவட்டங்கள் மற்றும் சிவகங்கை, திண்டுக்கல், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில், நவம்பர் 15 ஆம் தேதி இரவு மற்றும் 16 ஆம் தேதி அதிகாலையில் மிகப் பெரிய சேதத்தை கஜா புயல் ஏற்படுத்திச் சென்றிருக்கிறது. குறிப்பாக, அனைத்துக் கூரை வீடுகளும்

[திரு. துரை. சந்திரசேகரன்] [2019 ஜனவரி 4

முற்றிலுமாகச் சேதமடைந்து, இடிந்துவிட்டன. அதேபோல, ஓட்டு வீடுகள், மாடி வீடுகளில் உள்ள மேற்கூரைகள், பள்ளிக் கட்டடங்கள், அரசாங்கத்தின் சார்பில் புதியதாகக் கட்டப்பட்ட நெல் சேமிப்புக் கிடங்குகள் அனைத்தும் தரை மட்டமாகியிருப்பதை எல்லோரும் பார்த்தோம். அதுமட்டுமல்லாமல், மின் கம்பங்கள் அனைத்தும் சேதமடைந்து, மின்மாற்றிகள், துணை மின் நிலையங்கள் அனைத்தும் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டன.

அதேபோல, விவசாயிகள், குறிப்பாக, நெல் விவசாயம் செய்தவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொண்டைக் கதிராக இருந்த நெல், பல பகுதிகளில் அந்தக் காற்றின் வேகத்தால் சேதமடைந்துள்ளது. இன்றைக்கு ஒரு மாவிற்கு நான்கு மூட்டை, அதாவது ஒரு ஏக்கருக்கு 10, 12 மூட்டைகள்தான் அறுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல, வாழைத் தோப்புகள், மக்காச் சோளம் பயிரிட்டவர்கள், மா, பலா, வெற்றிலை கொடிக்கால் பயிரிட்டவர்கள் பாதிப்படைந்ததோடு, முந்திரி, தேக்கு, சவுக்கு போன்ற மரங்களும் முற்றிலுமாக இந்தப் பகுதியில் சேதமடைந்துள்ளன.

அதேபோல, தென்னையைப் பொறுத்தவரையில், காவேரி டெல்டா பகுதிகளில், கடைமடைப் பகுதியில் தண்ணீர் வராத காரணத்தால், 30 ஆண்டுகளாக கஷ்டப்பட்டு, நஞ்சை நிலங்களில் நெற்பயிர் சாகுபடி செய்வதற்குப் பதிலாக, தென்னையை மாற்றுப் பயிராக சாகுபடி செய்து வந்தார்கள். அதன்மூலம் மிகப் பெரிய வெற்றியை, பொருளாதார வளர்ச்சியை தென்னை மர விவசாயிகள் பெற்றார்கள். தென்னை மரத்தைப் பொறுத்தவரையில், வருடத்திற்கு 8 முறை வெட்டி, அதன்மூலம் மிகப் பெரிய பொருளாதார மாற்றத்தை அந்த விவசாயிகள் கண்டார்கள். ஆனால், கஜா புயலினால் அனைத்துத் தென்னை மரங்களும் கீழே விழுந்து, ஒரே நாளில் மிகப் பெரிய கோடீஸ்வரர்களெல்லாம் சாதாரண பாமரனாக ஆகும்வகையில், இந்தப் புயல் அழிவினை ஏற்படுத்திச் சென்றுவிட்டது. பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும், குறிப்பாக டெல்டா மாவட்ட விவசாயிகள் தங்களுடைய உழைப்பால், தமிழ்நாட்டிற்கே உணவை பல தலைமுறைகளாக வாரி வழங்கி வந்தவர்கள், முதல் முறையாக, "எங்களுக்கு உணவு தாருங்கள்" என்று கையேந்துகின்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.



2019 ஜனவரி 4] [திரு. துரை. சந்திரசேகரன்]

பல நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள் எல்லோரும் வந்து பார்த்தார்கள். ஆனால், மிகப் பெரிய சேதம் ஏற்பட்டிருக்கக்கூடிய அந்தப் பகுதிகளை இந்தியாவினுடைய பிரதமர் ஒரு முறைகூட வந்து பார்க்காதது மட்டுமல்ல; புயலினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களுக்கு ஓர் அனுதாபச் செய்தியைக்கூட தெரிவிக்காதது வருத்தத்திற்குரிய ஒன்று. ஆனாலும், 16 ஆம் தேதி காலை புயல் கரையைக் கடந்த பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 17 ஆம் தேதி காலை பாண்டிச்சேரியிலிருந்து தொடங்கி, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களுக்கும், பட்டுக்கோட்டை பகுதிக்கும் நேரடியாக வந்து, இரவு 10-00 மணி வரை பாதிப்புகளைப் பார்த்துவிட்டு, அன்றிரவு தஞ்சை மாவட்டத்திலே தங்கி, மறுநாள் புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சென்று பார்வையிட்டுச் சென்றார்கள். அந்த மக்களுடைய அவல நிலையைப் பார்த்து மிகுந்த வருத்தத்திற்கு ஆளாகி, மூன்று முறை அந்த டெல்டா மாவட்டத்திற்கு நேரடியாக வருகைபுரிந்தார்கள். அதுமட்டுமல்லாமல், அங்கே மின் கம்பங்களையெல்லாம் சரி செய்த தோழர்களைப் பார்த்து, ஒவ்வொரு இடத்திலும் வாகனத்தை நிறுத்தி, "எந்த மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறீர்கள்?" என்று நேரடியாக அவர்களிடம் கலந்துரையாடி, அவர்கள் வேலை செய்வதை ஊக்குவித்துவிட்டுச் சென்றார்கள்.

அதற்குப் பிறகு ஓர் அறிக்கை வெளியிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், 300 லாரிகளில் நிவாரணப் பொருட்களை அனுப்பிட திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த அண்ணன் நேரு அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்து, கிட்டத்தட்ட 900 டன் அரிசி மற்றும் 300 லாரிகளில் கொண்டுவரப்பட்ட அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களையெல்லாம் பல்வேறு மாவட்டங்களுக்குப் பிரித்து, திருச்சியிலிருந்து அந்தந்தப் பகுதிகளுக்கு கொடுத்தார்கள். இது முழுமையாக அவர்களது இழப்பிற்கு ஈடாகாது என்றாலும், ஓர் அரசியல் கட்சி தன்னுடைய பங்கை எதிர்க்கட்சி என்ற முறையில் செய்திருக்கிறது.

அதேபோல், ஆளுங்கட்சியிலிருந்தும் செய்திருக்கிறீர்கள்; இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், இப்போது அறிவித்திருக்கிற அறிவிப்பு, உண்மையிலேயே மிக, மிகக் குறைவு.

அதன் மூலமாக நிச்சயமாக முழுமையான அளவிற்கு அவர்களது இழப்பை ஈடு செய்ய முடியாது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்வார்கள். மத்திய அரசிடம் நீங்கள் கோரிய தொகையை, அவர்கள் பெயரளவிற்கு வழங்கியிருக்கிறார்கள். நீங்கள் உங்களுடைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவை அனைத்தையும் பெற்று, விவசாயிகளுக்கு இழப்பீடாகத் தரவேண்டும். தென்னை விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுடைய வாழ்வாதாரம் 30 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்றுவிட்டது என்பதுதான் உண்மை, ஒன்றுமே அங்கு இல்லை. இந்தத் தலைமுறையில் உள்ள முதியோர்கள், அந்த தென்னை yield-ஐ மீண்டும் பார்ப்பது என்பது, அவர்கள் ஆயுட்காலத்திற்கு நடக்காது. இன்றைக்கு தென்னங்கன்றுகளை நட்டால், 15 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அந்தத் தென்னை மரங்கள் காய்க்கும். பழைய நிலைக்கு வருவதற்கு 15, 20 ஆண்டுகள் ஆகும். எனவே, அரசாங்கம் உரிய நிவாரணம் வழங்கி அவர்களைக் காப்பாற்ற வேண்டும். விவசாயிகள் முழுவதும் ஜீரோ பாயிண்ட்டில் நின்று, இன்றைக்கு கையேந்துகிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-20

அதேபோல, பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை அப்புறப்படுத்த இழப்பீடாக 500, 600 ரூபாய் நீங்கள் கொடுக்கிறீர்கள். அது மிகவும் குறைவு. நீங்கள் எட்டு வழிச் சாலைத் திட்டத்தில் ஒரு தென்னை மரத்திற்கு 50,000 ரூபாய் இழப்பீடாக அறிவித்தீர்கள். அந்த அளவிற்கு எதிர்பார்க்கிறார்கள். அந்த அளவிற்குக் கொடுக்கவில்லையென்றாலும், அவர்களுக்குப் போதிய நிவாரணத்தை அரசாங்கம் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், அவர்கள் தென்னங்கன்றை வைத்து, மீண்டும் உற்பத்தி செய்கின்ற அளவுக்கு, அது இன்னும் 10 ஆண்டுகள் கழித்து அவர்களுக்குப் பலன் தருகிற வரையில், அவர்களுக்கு உதவிகளை செய்து தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நீங்கள் நெற்பயிரைக் கணக்கெடுக்கவில்லை. இதில் அரசுக்கு மிகப் பெரிய கெட்ட பெயர் வரப்போகிறது. வருவாய்த் துறையிலுள்ள கிராம நிருவாக அலுவலர்கள் மூலமாக 5 முறை தென்னை மரங்கள் பாதிப்பு குறித்துக் கணக்கெடுத்திருக்கிறீர்கள். ஆனால், கணக்கு இதுவரையில் tally ஆகவில்லை. ஒவ்வொருவரும் ஒரு கணக்கு சொல்கிறார்கள். வருவாய்த் துறையின்மூலம் நீங்கள் கணக்கெடுத்தால், நிச்சயமாக யாருக்கும் நிவாரணம் வழங்க முடியாது. ஏனென்றால், அடங்கலில் நஞ்சை என்றுதான் இருக்கும். ஒருவருக்கு நஞ்சை நிலமென்றுதான் இருக்கும். அதிலே, தென்னை என்று இருக்காது. புஞ்சையில் தென்னை என்று பதிவாகி இருக்கும். அதேபோல, வீட்டுமனை வைத்திருந்த ஒருவர் 200, 300 தென்னை மரங்கள் வைத்திருக்கிறார் என்றால், அதுவும் கணக்கில் வரவில்லை. எனவே, அதையும் கணக்கெடுப்பதற்கு அந்தத் துறையை அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓர் எக்டேருக்கு 175 தென்னை மரங்களைக் கணக்கெடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு நிலவரம் என்னவென்றால், அதை எவ்வளவு குறைத்து கணக்கு கொடுக்கமுடியுமோ, அந்த அளவுக்குக் குறைத்துக் கொடுங்கள் என்று மாவட்ட நிருவாகத்திலிருந்து அதிகாரிகள், கீழுள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிடுகிறார்கள். அது தவறு. பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்குவதற்கு இந்தத் தொகை போதாது. எனவே, அதை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்போல, இறந்தவர்களுக்கு நீங்கள் நிதி கொடுத்திருக்கிறீர்கள். அந்தப் புயல் பாதிப்பிற்குப் பிறகு, தென்னந்தோப்பினைச் சென்று பார்த்ததில் இறந்தவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். அதுகுறித்தும் மாவட்ட நிருவாகத்தின்மூலம் கணக்கெடுத்து, அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். அதேபோல, மற்ற பயிர்களை கணக்கெடுக்கவே இல்லை. மா, பலா, வாழை மற்றும் முந்திரி போன்ற தோட்டப் பயிர்கள் குறித்து கணக்கெடுக்கவில்லை. அதையும் கணக்கெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒருவாரம் கழித்து பட்டுக்கோட்டைக்கு வந்தார்கள். வந்தவுடன் இயற்கை சூழ்நிலை சரியில்லையென்று உடனடியாகச் சென்றார்கள். இப்போது நான் அதை குறையாகக்கூடச் சொல்லவில்லை. இப்போது அங்கு சகஜ நிலை உள்ளது. சாலைகள் எல்லாம் பழுதடைந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச்சர்களோடு, உடனடியாக அந்த மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளையும் அவசியம் சென்று பார்த்தால்தான், உண்மையான பாதிப்பை உணர முடியும். இது, அந்த விவசாயிகளுடைய வாழ்வில் நிச்சயமாக ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கும். தற்போது மத்திய அரசு நிதியைப் பெயரளவில்தான் கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக முழு அளவு நிதியைப் பெற வேண்டும்.

அதைப்போல, மீனவர்களைப் பொறுத்தவரையில், பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் நேரடியாக மல்லிப்பட்டினத்திற்குச் சென்று பார்த்தேன். கடற்கரையோர மாவட்டங்கள் முழுவதிலும் உள்ள அனைத்துப் படகுகளும், அதாவது, நாட்டுப் படகுகள், விசைப் படகுகள் எல்லாம் நொறுங்கிப் போய், கடலில் மிதந்தன. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக அதையும் பார்த்து, எல்லாப் படகுகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். அவர்களுக்கு நீங்கள் பணம் கொடுப்பது போதாது. அவர்கள் அதை ஒரு குறிப்பிட்ட காலம் வரை வைத்துவிட்டு, மீண்டும் அவர்கள் படகு வாங்க முடியாத நிலைக்குத்தான் தள்ளப்படுவார்கள். எனவே, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் படகினை துறையின் மூலமாக அரசே வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

எனவே, விவசாயிகளினுடைய வாழ்வாதாரம் அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டங்களிலுள்ள விவசாயிகள், எல்லா நாடுகளுக்கும் உணவளித்தவர்கள், இன்றைக்கு அவர்கள் அரிசி வேண்டுமென்றும், பொருட்கள் வேண்டுமென்றும், துணிமணி வேண்டுமென்றும் நடுரோட்டில் நின்று கையேந்தியது மிகப் பெரிய கொடுமையாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் இன்னும் அந்த பாதிப்பிலேயிருந்து மீளவில்லை. இப்படி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வந்து பார்த்தார்கள். எங்களுடைய தலைவர் அவர்கள்கூட மூன்று முறை, நான்கு முறை அங்கு வந்தார்கள். நாங்கள்கூட "அண்ணே, இவ்வளவு முறை நீங்கள் வரவேண்டுமா?" என்று கேட்டோம். "இல்லை, இல்லை; இந்தப் பகுதியைப் பார்க்கவில்லை; அந்தப் பகுதியைப் பார்க்கவில்லை" என்று சொல்லி, அனைத்துப் பகுதிகளுக்கும் நிவாரணப் பொருட்களை வழங்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்பட்டார்கள். தற்போது, அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படுகின்ற இந்த நிவாரணம் போதாது. எனவே, அதை உயர்த்தித் தர வேண்டும்; தென்னை விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு நிவாரணத் தொகைகளை உயர்த்தித் தர வேண்டும். பல விவசாயிகள் கிட்டத்தட்ட தற்கொலை முயற்சிக்கே செல்கின்ற அளவிற்கு நிலைமை மோசமாக இருக்கிறது. பொருளாதாரம் ஒன்றுமே இல்லை. இன்னும் 15 வருடங்கள் கழித்துதான் அவர்களது முதலீட்டிற்கான வருமானம் வரும். எனவே, அதைச் சிறப்புக் கவனமாக எடுக்க வேண்டும்.





அதைப்போல நிவாரணப் பொருட்கள் வழங்கியிருக்கிறீர்கள். கணக்கெடுப்பில் குளறுபடிகள் இருக்கின்றன. வருவாய்த் துறையில், கிராம நிருவாக அலுவலர்கள் strike-ல் இருக்கின்றனர். அவர்கள் எடுத்த கணக்கு தவறாக இருக்கிறது. தற்போது கொடுக்கின்ற நிவாரணப் பொருட்களில் பால் பவுடர் கெட்டுப் போய்விட்டது. பால் பவுடரை சேர்த்துக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். பால் பவுடர் கெட்டுப் போனதால், மொத்த Box-ஏ கெட்டிருக்கிறது. எனவே, அதைத் தேக்கி வைக்காமல் அப்புறப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் பல இடங்களில் சாலை மறியல் செய்கின்றனர். தரமான பொருட்களைக் கொடுக்கவில்லை; தரங்கெட்ட பொருட்களைக் கொடுக்காதீர்கள் என்று சொல்கின்றனர். எனவே, அதையும் சரி செய்து, நல்ல பொருட்களாகத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நாட்டுப் படகு, விசைப் படகு இவற்றிற்கு முழு நிவாரணம் வழங்க வேண்டும். அதைப்போல, தென்னை விவசாயிகளைக் காப்பாற்ற நிவாரணமாக அதிகத் தொகையை அரசாங்கம் வழங்க வேண்டும். அவர்கள் 20,000 ரூபாய் கேட்கிறார்கள். உங்களால் முடிந்த அளவிற்குத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

**திரு. C.V. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவுகளை, இலட்சியங்களை தன் நெஞ்சிலே சுமந்து நல்லாட்சி நடத்தி வரும் எங்கள் போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். ஆலுக்கு விழுதாய் நின்று இந்த நல்லாட்சியில் இணைந்து பணியாற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்; மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன்.

வரலாற்றில் இதுவரை நடந்திராத அளவில் காவேரி டெல்டா பகுதிகளில் ஏற்பட்ட 'கஜா' புயலின் சீற்றத்தால், எங்கள் பகுதியும் பேரழிவைச் சந்திக்க நேரிட்டது. ஏழையெளிய மக்கள் தங்கள் குடிசை வீடுகள், ஓட்டு வீடுகள், காரை வீடுகள் ஆகியவற்றை

இழந்து, என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றனர். அதைப்போல, மீனவப் பெருமக்கள் தங்கள் படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும், வீடுகளையும் இழந்து நின்றனர். விவசாயப் பெருங்குடி மக்களோ, தங்களின் ஒட்டுமொத்த வாழ்வாதாரமாக இருந்த, தங்கள் பிள்ளைகளைப்போல் ஊட்டி வளர்த்த தென்னை மரங்கள் அடியோடு தரையில் வீழ்ந்ததைக் கண்டு, மிகப் பெரிய அதிர்ச்சியில் உறைந்துபோய், இன்றளவும் மீளாத நிலையில் இருந்து வருகின்றனர். அவர்கள் தங்களது குழந்தைகளுக்கான படிப்புச் செலவு, மருத்துவச் செலவு, வளர்ந்து பெரியவர்களான தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணச் செலவு போன்றவற்றை தென்னை மூலமாக வரும் வருமானத்தின் வாயிலாகத்தான் செய்து வந்தனர். நேற்று வரை இலட்சாதிபதிகளாக இருந்த அந்த மக்கள், இன்றைக்குத் தங்களது வாழ்வாதாரம் அனைத்தையும் இழந்து, ரோட்டில் நிற்கின்ற அளவுக்கு, இயற்கை அவர்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிருக்கின்றது.

புயல் பாதித்த ஒரு சில நாட்களில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் எங்களது தொகுதிக்கு வருகை தந்து, பாதிப்படைந்த பகுதிகளைப் பார்வையிட்டு, புயலால் உயிரிழந்தவர்களுக்கு நிதியுதவியும், ஆறுதலும் சொல்லி, எங்களுக்கு நம்பிக்கையூட்டிச் சென்றார்கள். அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் உயிர்ச்சேதம் வெகுவாகக் குறைக்கப்பட்டது, பாராட்டுக்குரியதாகும். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புயல் பாதித்த அடுத்த இரண்டு நாட்களுக்குள் தமிழகமெங்கிலுமிருந்து ஜெனரேட்டர்கள் வரவழைக்கப்பட்டு, குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்பட்டது. ஜே.சி.பி. இயந்திரங்கள்மூலம் நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் வீழ்ந்த மரங்கள் அகற்றப்பட்டன. தேவையான உதவிகளைச் செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின்மூலம், சாலைகளில் வீழ்ந்து கிடந்த மரங்கள் முற்றிலும் அகற்றப்பட்டு, போக்குவரத்து சீர் செய்யப்பட்டது. இதுவரை வரலாற்றில் இதுபோல் நடந்ததில்லை என்று கூறுமளவிற்கு மின் வாரிய ஊழியர்கள், ஒப்பந்த மின் வாரிய ஊழியர்கள் ஆகியோரின் கடுமையான உழைப்பின் காரணமாக, கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக படிப்படியாக கட்டமைப்பு செய்யப்பட்ட மின்சார வழித்தடங்கள், மின்மாற்றிகள் மற்றும் மின் நிலையங்கள் ஆகிய அனைத்தும் மறுகட்டமைப்பு செய்யப்பட்டன; இது மிகவும் பாராட்டுக்குரியது. இதனை ஒரு சாதனை என்றே சொல்லலாம். இதற்காக நான் அரசுக்கும், பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வருகை தந்து, மக்களை ஊக்கப்படுத்தி, மின் வசதி மற்றும் நிவாரண உதவிகள் சம்பந்தமான வேலைகள் முழு வீச்சில் நடைபெற உதவிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைப் பதிவு செய்கிறேன்.





பல்வேறு பகுதிகளில் இன்னும் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படாததால், ஆற்றுப் பாசனம் அல்லாத பகுதிகளில் நடவு செய்த பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு செய்ததைப் போலவே, மின் சீரமைப்புப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள, வெளியூர்களிலிருந்து மீண்டும் அதிக எண்ணிக்கையிலான மின் ஊழியர்களை வரவழைத்து, விவசாயிகளுக்கு உதவிட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பட்டுக்கோட்டை தாலுகாவைப் பொறுத்தவரையில், சுமார் 1,03,900 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இதில், இதுவரை 68,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரண உதவிகள் சென்றடைந்துள்ளன. மீதமுள்ள சுமார் 36,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு, தற்போது கருணை உள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பொங்கல் பரிசு ரூ.1,000/- உடன் சேர்த்து, ரூ.5,000/- ஆக வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

தொகுப்பு வீடுகள், பசுமை வீடுகள் மற்றும் அரசால் வழங்கப்பட்ட ஏனைய வீடுகளில் வாழும் மக்கள் மற்றும் மாடி வீட்டில் வாழும் மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், அவர்களுக்கும் நிவாரணப் பெட்டகங்கள் வழங்கப்பட வேண்டுமென வேண்டுகிறேன். எங்கள் பகுதி மக்களின்

வாழ்வாதாரம், முன்பிருந்த நிலையிலிருந்து சுமார் 25 வருடங்கள் பின்னோக்கித் தள்ளப்பட்டிருக்கிறது என்பதுதான் மறுக்க முடியாத உண்மை. "தென்னைய பெத்தா இளநீரு; பிள்ளையைப் பெத்தா கண்ணீரு" என்பார்கள். பெற்ற பிள்ளைக்கும் மேலாக விவசாயிகளால் போற்றப்பட்ட தென்னையும் எங்கள் விவசாயிகளைக் கண்ணீர் சிந்த வைத்தது மிகவும் வேதனைக்குரியது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள், பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட நிவாரண நிதியைவிட கூடுதலாக, நீங்கள் இடைக்கால நிவாரணமாகவாவது ரூ.5,000/- ஆக உயர்த்தி வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தற்போது அரசு அறிவித்துள்ள இந்தத் தொகையும் உடனடியாக விவசாயிகளைச் சென்றடையும்வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் தங்களுடைய கிணற்றுக்கு அமைத்துள்ள Pump shed முற்றிலும் சேதமடைந்ததால், மின் மோட்டார்களும் சேதமடைந்த நிலையில் இருக்கின்றன. அவர்களுக்கு மானிய விலையிலே மின் மோட்டார்கள் வழங்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கோரிக்கை வைக்கிறேன். வீழ்ந்த தென்னை மரங்களை அகற்றிட அல்லது அங்கேயே துகள்களாக அரைத்திட அரசே ஏற்பாடு செய்து தரவேண்டும்; அல்லது மரங்களை அந்தந்த தோட்டங்களிலேயே பள்ளம் தோண்டி புதைத்திட JCB இயந்திரங்களை ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். வீழ்ந்த மரங்களை மண்ணிலே புதைப்பதன்மூலம் எதிர்காலத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதி காக்கவும். 'கஜா' புயல் பாதிப்புகள் குறித்த முக்கியமான விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. பொறுமையாகக் கேளுங்கள்.

**திரு.** C.V. **சேகர்:** வீழ்ந்த மரங்களை மண்ணிலே புதைப்பதன்மூலம் எதிர்காலத்திலே புதியதாக நடப்படும் அந்தக் கன்றுகள் பூச்சித் தாக்குதலிலிருந்து விடுபடுவதற்கு மிகவும் ஏதுவாக இருக்குமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

100 சதவிகித மானியத்திலே அனைத்து விவசாயிகளுக்கும் தரமான தென்னங்கன்றுகளை வழங்கிட வேண்டும். மேலும்,





நடவு மற்றும் 5 வருடங்களுக்கான பராமரிப்புச் செலவை அரசே ஏற்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தென்னந்தோட்டங்களைச் சுற்றி வேலி அமைக்க அரசு மானியம் தந்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தென்னை மறு நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊடு பயிராக சிறுதானியங்கள், கடலை, உளுந்து, எள் போன்ற பயிர்கள் பயிரிட 100 சதவிகித மானியத்தில் விதைகள், இடுபொருட்கள் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டங்களில் PVC pipe line அமைத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பாசனம் செய்ய ஏதுவாக, PVC pipes-ஐ மானிய விலையில் வழங்கிட வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். பட்டுக்கோட்டையில் தென்னை மறுவாழ்வு மையம் ஒன்று துவங்கப்பட வேண்டும். தற்போது தென்னையில் பூச்சித் தாக்குதல் அதிகரித்துள்ள நிலையில், பட்டுக்கோட்டையில் பூச்சி நோய்க் கட்டுப்பாடு குறித்த உயிரியல் ஆய்வு மையம் மற்றும் மண் பரிசோதனை மையம் துவங்கப்பட வேண்டும். மா, பலா, தேக்கு, நெல், கரும்பு, வாழை மற்றும் எலுமிச்சை போன்ற அனைத்து வகைப் பயிர்கள் மற்றும் மரங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீடுகளைச் சுற்றியுள்ள மரங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்கான கொட்டகை, கோழி வளர்ப்பதற்கான கொட்டகைகளை மீண்டும் புனரமைக்க அரசு உதவிட வேண்டும். 'தானே' புயலில் பாதிக்கப்பட்ட கோழிப் பண்ணையாளர்களுக்கு வழங்கியதுபோல், இப்போதும் கோழிப் பண்ணை உரிமையாளர்கள் மீண்டும் கொட்டகைகள் அமைத்திட மானியம் வழங்கிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுக்கூர், அதிராம்பட்டினம், பேராவூரணி, பெருமகளூர் பேரூராட்சிகள் மற்றும் பட்டுக்கோட்டை நகராட்சியில் வீடுகளற்ற ஏழைகளுக்கு குடிசை மாற்று வாரிய வீடுகள் ஒதுக்கியும், அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தும் தர வேண்டும். வீட்டுமனை இல்லாத ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி, வீடுகள் கட்டித்தர வேண்டும். வீடுகளை ஒதுக்கீடு செய்யும்போது, வறுமைக்கோட்டுக்குக்கீழ்

உள்ளவர்களுக்கு மட்டும்தான் வீடு என்ற விதியைத் தளர்த்தி, அனைத்து குடிசை மற்றும் ஓட்டு வீடுகளை இழந்தவர்களுக்கும் வீடுகளை ஒதுக்கித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். உடைந்த படகுகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும்.

விவசாயிகள், ஆடவர் குழு, மகளிர் சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவுச் சங்கம் மற்றும் வங்கிகளில் பெற்றுள்ள கடன்களைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்கள் பெற்ற கல்விக் கடனை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பட்டுக்கோட்டை தொகுதியில் சேதமடைந்த ஓட்டுக் கட்டடத்திற்குப் பதிலாக, அனைத்துப் பள்ளிகளையும் RCC கட்டடங்களாக மாற்றித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு கல்விக் கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். புயலின்போது மரங்கள் விழுந்து, வீடு இடிந்து, காயமடைந்து, மரணமடைந்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாமல் கிராம நிருவாக அலுவலர் போன்றவர்களுக்குத் தகவல் தெரிவித்துவிட்டு, அவர்களுடைய இறுதிச் சடங்கை நிறைவேற்றியுள்ளனர். அப்படிப்பட்டவர்களுக்கு FIR மற்றும் Post-mortem Certificate இல்லையென்றாலும்கூட, உரிய விசாரணைமூலம், உண்மையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகையை வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை, பேராவூரணி, ஒரத்தநாடு ஆகிய தொகுதிகளுக்கு மறு கட்டமைப்பு செய்திட, தாராளமாக நிதி ஒதுக்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

அன்று தன்னை ஒரு விவசாயி என்று சொல்லிக் கொள்வதிலே பெருமையடைந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்று ஒரு விவசாயியே இந்த நாட்டை முதலமைச்சராக இருந்து வழிநடத்துகிறபோது, சக விவசாயிகளின் உணர்வையும், பாதிப்பையும் உணர்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) வேதனையின் உச்சக்கட்டத்தில் இருக்கும் தஞ்சை டெல்டா பகுதி விவசாயிகளின் வேதனைகளைப் போக்குகின்றவகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





“தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும்” என்பார்கள். எங்கள் தாயின் கனவை நனவாக்குவதற்கு அரும்பாடுபட்டு வருபவரும், இதுநாள்வரை 11,286 கோப்புகளில் துரிதமாக முடிவெடுத்து, பொது மக்களின் தேவைகளை உணர்ந்தவருமான மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் பகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

எங்கள் பகுதிக்கு வருகை தந்து, ‘கஜா’ புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணப் பணிகளை முழு வீச்சில் நடைபெறச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுக்கும், நிவாரணப் பொருட்கள் வழங்கிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்களுக்கும், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசுகின்றபோது மற்ற பிரச்சினைகள் குறித்துப் பேசுவது மரபு அல்ல என்றபோதும், ‘கஜா’ புயலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மன உணர்வுகளை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையை நிறைவு செய்யும்போது, “தமிழ்நாட்டு மக்கள்,

இந்த மாநிலத்திற்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்காகவும் அர்ப்பணிப்பு உணர்வோடு உறுதியுடன் பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் உங்களைத் தேர்வு செய்து, இந்த சட்டமன்றப் பேரவைக்கு தங்களின் பிரதிநிதியாக அனுப்பியுள்ளார்கள். தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கைக்கு உற்ற வகையில், அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிட கடின முயற்சிகளை மேற்கொள்வது உங்களது தலையாயக் கடமை ஆகும்" என்று குறிப்பிட்டார்கள். அந்தவகையில்தான், என்னுடைய கடமையை நிறைவேற்றுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயலால் சேதமுற்றிருக்கின்ற 6, 7 மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். புயல் வருவதற்கு முன்பாக, புயல் வர இருக்கிறது என்ற செய்தியை, அந்தத் துறையைச் சார்ந்தவர்களும், நம்முடைய அரசும் எல்லா மக்களிடமும் சரியான நேரத்தில் தெரிவித்தார்கள். ஆனாலும், புயல் பாதிப்பு என்பது மிகக் கடுமையாக இருந்தது. இது இயற்கையினுடைய சதி என்றுதான் சொல்ல வேண்டும். இருந்தபொழுதும் அங்கே பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு உதவிகளை உடனடியாகச் செய்திருக்க வேண்டும். அரசு வழங்கும் நிவாரணத்தைப் பொறுத்தமட்டில், இன்றுவரை பல கிராமங்களுக்கு நிவாரண உதவிகள் சென்றடையவில்லை என்பது வருத்தமாக இருக்கிறது.

*முற்பகல் 11-40*

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அந்தப் பகுதிகளிலே நெல் பயிர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, மா மரங்கள், பலா மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தென்னை மரங்கள் மிக மோசமான நிலைமையிலே





பாதிக்கப்பட்டிருக்கின்றன. மீனவர்களுடைய படகுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே வாழ்வதற்கு இடமில்லாமல் இன்றைக்குப் பல குடும்பங்கள் நடுத் தெருவிலே நிற்கின்றன. ஏறத்தாழ, 50 நாட்கள் கடந்துவிட்டன. இன்னும் ஏன் நிவாரண உதவிகள் முழுமையாக வழங்கப்படவில்லை? ஒருபுறம் மத்திய அரசை நாம் நம்பியிருந்தோம். மத்திய அரசிடம் புயல் நிவாரணத் தொகையாக தமிழக அரசு 15 ஆயிரம் கோடி ரூபாயைக் கேட்டது. அதுவே போதாது என்று நாம் கருதினோம். ஆனால், அவர்கள் தற்போது 1,400 கோடி ரூபாய் அளவிற்குத்தான் நிவாரணத் தொகையை வழங்கியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். மத்திய அரசு ஏன் இதுபோன்ற இடர்பாடுகளின்போது உரிய நிதியை ஒதுக்கவில்லை என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். உண்மையிலேயே மனிதாபிமானத்துடன் மத்திய அரசு நடந்துகொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அரசு தன்னால் செய்ய முடிந்ததைத்தான் செய்யும். அதற்குமேல் நிதிப் பற்றாக்குறை ஏற்படும்போது, மத்திய அரசுதான் இதுபோன்ற நிலையிலே உதவிட வேண்டும். ஆனால், மத்திய அரசு நமக்குத் தர வேண்டிய நிதியை மறுத்திருக்கிறது. எனவே, நம்முடைய அரசு, மத்திய அரசிடம் போராடி, அந்த நிதியைப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பிரச்சினை குறித்துச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, ஒரு தென்னை மரத்திற்கான இழப்பீட்டுத் தொகையை 1,400 ரூபாய் என்ற அளவிற்கு நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், தமிழகத்திலே, வேறு பகுதிகளிலே நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் சாலைகளை அமைக்கும்போது, பாதிக்கப்படும் ஒரு தென்னை மரத்திற்கு 40 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என்று இழப்பீடுகளை அறிவித்து, வழங்கியிருக்கிறீர்கள். இதற்கும், அதற்கும் என்ன வித்தியாசம் என்பதை அரசு விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். "இதற்கு ஒரு நீதி, அதற்கு ஒரு நீதியா?" என்பது மக்களினுடைய கேள்வி. இதை விளக்க வேண்டியது அரசினுடைய கடமை.

இன்னொன்று; எந்தெந்தப் பகுதியிலே, எப்படியெல்லாம் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன? ஒரு மரத்திற்கு எவ்வளவு இழப்பீடு தரப் போகிறீர்கள்? அதுகுறித்து விவசாயிகளுக்குத்

தெரிகிறதா என்றால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத் தெரியவில்லை. நான் பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்றிருந்தேன். முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்களும் அங்கே இருந்தார்கள். அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது அவர்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். அந்தப் பகுதியிலே கடுமையான பாதிப்பு. தென்னை மரங்களெல்லாம் தலைகீழாகக் கவிழ்ந்து கிடக்கின்றன. இந்த நிலையில் இந்த அரசு செய்ய வேண்டியது என்னவென்றால், ஒவ்வொரு கிராமத்திலும் பாதிப்படைந்த மரங்களின் எண்ணிக்கை குறித்து தாலுகா அலுவலகத்தில் தகவல் பலகையில் குறிப்பிட வேண்டும். அதாவது, எந்தெந்த ஊரில் எத்தனை மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும், யார் அந்த விவசாயி என்றும், அந்த விவசாயிக்கு எவ்வளவு ரூபாய் வழங்க இருக்கிறீர்கள் என்பதையும் நீங்கள் தெளிவாகக் குறிப்பிட்டு, ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திலும் ஒரு போர்டை வைக்க வேண்டுமென்று இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, தங்களுக்கு எவ்வளவு தொகை நிவாரணமாக வந்திருக்கிறது என்ற விவரமே தெரியவில்லை. உங்களிடம் நாங்கள் கேட்டோம் என்றால், “பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகுப்பு வழங்கினோம்” என்று நீங்கள் சொல்கிறீர்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால், விவசாயிகள் அங்கே நடு ரோட்டிலே நிற்கின்றார்கள்.

குறிப்பாக, தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் இருந்தது. இன்றைக்கு, அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள் நடு ரோட்டிலே கையேந்தக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு அரசை நான் குற்றம் சொல்ல விரும்பவில்லை. இது இயற்கையின் சதி. ஆனால், விரைந்து செயல்பட்டு, இதிலேயிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டியது அரசினுடைய கடமை.

*முற்பகல் 11-45*

ஏனென்றால், 50 நாட்கள் ஆகியும், இந்த அரசு அங்கே உரிய நடவடிக்கையை இதுவரையும் எடுக்கவில்லை. (குறுக்கீடு) எடுக்கவில்லை. (குறுக்கீடு) யார்? (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன்; (குறுக்கீடு) நான் சொல்கிறேன்; (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடு)





இல்லை, நான் சொல்கிறேன். எந்த அமைச்சர், எந்த ஊருக்கு வருவதாகச் சொன்னாலும், நான் அந்த இடத்திற்கு வருகிறேன். அந்த மக்கள் அங்கே என்ன சொல்கிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். இதை வேறு காரணத்திற்காக நான் சொல்வதாக எண்ண வேண்டாம். உண்மையான நிலை அது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது, ஒவ்வொரு கிராமத்திற்கும் எவ்வளவு நிதி கொடுக்கப்போகிறீர்கள்? ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நிதி கொடுக்கப் போகிறீர்கள் என்பதை நீங்கள் தெளிவாக அறிவிக்க வேண்டும். இதை ஒரு வெள்ளை அறிக்கையாக ஏன் இந்த அரசு வெளியிடக் கூடாது? அதைச் செய்யுங்கள். அதையும் செய்யாமல், நாங்கள் சிரமப்படுகிறோம் என்று சொல்லிக்கொண்டுதான் இருக்கிறீர்களேயொழிய, அங்கே அவர்கள் படுகின்ற தொல்லை மிக அதிகமாக இருப்பதை உணரவில்லை.

இன்னொன்று, விவசாயக் கடன்களை இரத்து செய்யுங்கள். ஏன் இரத்து செய்யக் கூடாது? இப்பொழுது சில மாநிலங்களிலே விவசாயக் கடன்களை இரத்து செய்திருக்கிறார்கள். நீங்கள் மாநிலம் முழுவதும் செய்யவில்லை என்றாலும், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மட்டுமாவது விவசாயக் கடன்களை இரத்து செய்யுங்கள்; அதையாவது செய்யுங்கள். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, நாங்கள் கேட்பதற்கு நீங்கள் பதில் சொல்லிக் கொண்டே இருந்தால், விவசாயிகள் முன்னேறவே முடியாது. விவசாயிகளுடைய வருமானத்தை இரண்டு மடங்காக அதிகமாக்குவோம் என்று நம்முடைய பிரதமர் அவர்கள் சொன்னார். ஆனால், இன்றைக்கு விவசாயிகளுடைய நிலை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். இங்கே இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, கொஞ்சம் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** உரையை முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன. அதனால் உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** பேசி முடித்துவிட்டேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது அமைச்சர்கள், "நாங்கள் முழுமையாக அங்கே எல்லா நிவாரணப் பணிகளையும் செய்துவிட்டோம்; நிவாரணங்களை எல்லாம் வழங்கிவிட்டோம்; எல்லோரும் பெற்றுக்கொண்டார்கள்" என்று சொல்வதற்குத் தயாராக இருக்கிறீர்களா? பல படகுகள் இன்றைக்கு உடைந்து, மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். உடனடியாக நீங்கள் கடற்கரைப் பகுதிகளுக்குச் செல்லுங்கள். நீங்கள் சென்று, அங்கே இருக்கக்கூடிய மீனவர்களைச் சந்தியுங்கள். நம்முடைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு வேண்டிய, உரிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு இதிலே மெத்தனமாக இருக்கிறது; இதில் மெத்தனமாக இல்லாமல், உடனடியாக நிவாரணப் பணிகளை அரசு செய்ய வேண்டும். விவசாயக் கடன்களை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு, இதிலே அரசினுடைய கவனத்தினை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கஜா" புயல் குறித்த அரசினுடைய சிறப்புக் கவன ஈர்ப்பிலே பேசக்கூடிய வாய்ப்பினை எனக்குத் தந்தமைக்கு தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னர் பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளுங்கட்சி உறுப்பினரும் பல்வேறு விஷயங்களை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். "கஜா" புயலினுடைய பாதிப்பிலிருந்து இன்றுவரை டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளும், பொது மக்களும் மீள முடியாத அளவிற்கு மிகவும் பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளிலே அரசாங்கம் ஈடுபட்டிருந்த நிலையும், அதற்குப் பிறகு செயல்பட முடியாத அளவிற்கு, எந்த அளவிற்குப் பாதிப்பிற்கு உள்ளானார்கள் என்பது பற்றியும் இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, தென்னை மரங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைக் குழந்தையைப் போன்று 10 வருடங்களாக வளர்த்து, அதிலிருந்து வருவாய் பெற முடியும் என்ற நம்பிக்கையிலே இருந்த நேரத்தில், முற்றிலுமாக அங்கே அந்த தென்னை மரங்கள் எல்லாம் சாய்ந்ததால், விவசாயிகள்





மிகப் பெரிய அளவிற்கு பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கின்றார்கள். கிராமப்புற மக்கள் எப்படி தென்னை மரங்களால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தார்களோ, அதேபோல, அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய படித்தவர்கள், பல்லாண்டு காலமாக பாலைவனம் போன்றிருக்கின்ற அரபு நாடுகளுக்குச் சென்று, அங்கே தங்களுடைய அனைத்து உழைப்பையும் செலுத்தி, அதன்பிறகு இந்தியாவிற்கு வந்து, தமிழகத்திலே விவசாயம் செய்ய வேண்டுமென்று அதில் முதலீடு செய்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் முற்றிலுமாக வருவாயை இழந்து, நடுத்தெருவிற்கு வந்திருக்கின்றார்கள் என்பதை நாங்களெல்லாம் நேரிலே சென்றபோது பார்த்தோம். அவர்கள் சிந்தும் கண்ணீரின் மூலமாக அவர்களுடைய பாதிப்புகளை அறிய முடிந்தது.

*முற்பகல் 11-50*

இன்னும் அங்கே புனரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவுபெறவில்லை என்பதுதான் உண்மையாகும். பல்வேறு துறைகளைச் சார்ந்த அமைச்சர்களும் அங்கே சென்று பணிகளை ஆற்றினார்கள். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்கூட அங்கே சென்று, மிக விரைவிலே மின்சாரம் சீர் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால், அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை. அந்தப் பணிகளைச் செய்வதற்குண்டான போதுமான ஊழியர்கள் நம்மிடத்தில் இல்லை. இருந்த ஊழியர்களைக்கொண்டு முழுமையாக அந்தப் பணிகளைச் செய்ய முடியவில்லை என்பதுதான் உண்மை என்பதை நாம் யாரும் மறந்துவிட முடியாது. கஜா புயல் ஏற்பட்டதற்குப் பின்பு, தன்னார்வத் தொண்டர்களை முழுமையாகப் பயன்படுத்தி இருக்க முடியும். அங்கும் இங்குமாகத் தனியாகச் சென்றவர்களை, அரசு ஒருமுகப்படுத்தி, அந்தப் பணிகளைச் செய்திருந்தால், விரைவாக அந்தப் பணிகள் நிறைவு பெற்றிருக்கும். மத்திய அரசாங்கத்தினுடைய உதவியை நம்பி, நாம் எதையுமே செய்ய முடியவில்லை. மத்திய அரசாங்கத்தோடு நல்ல அணுகுமுறையோடு, அனுசரணையாக இருந்து, அவர்களுடன் நல்லுறவு பாராட்டி வருவதாக தமிழக அரசின் சார்பாக சொன்னாலும்கூட, எல்லா விஷயங்களிலும் மத்திய பா.ஜ.க. ஆட்சி வஞ்சித்திருக்கிறது. மனிதாபிமானமே இல்லாமல், கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருத்தம்கூட தெரிவிக்காமல் பிரதமர் மௌனமாக இருந்ததோடு, 10 சதவிகித நிதியைக்கூட வழங்காமல் நம்மை சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாக்கி இருக்கிறார்கள்.

இந்த நிலையில், இனிவரும் காலங்களிலாவது அந்தக் கடலோரப் பகுதிகளில் நிரந்தரமாக பேரிடர் உதவி மையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசாங்கத்தையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற காலங்களில், தன்னார்வத் தொண்டர்களை எப்படி நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்திட வேண்டும் என்பதற்கான ஒரு திட்டத்திற்கும் இந்த அரசாங்கம் வழிவகை காண வேண்டும். பாராளுமன்றத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினாலும், மத்திய அரசாங்கத்தை மேலும் எந்த வகையில் வலியுறுத்த முடியுமோ, அந்த அளவிற்கு வலியுறுத்தி நிவாரண உதவிகளைப் பெற வேண்டும். அதைப்போலவே, நீங்கள் இப்போது நிவாரண உதவிகளை அறிவித்திருந்தாலும்கூட, மிக விரைவிலே பொங்கலை, தமிழர் திருநாளை நாம் எல்லாம் கொண்டாட இருக்கின்ற நிலையில், எல்லா மாவட்டத்தினுடைய மக்களும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதைப்போல, டெல்டா மாவட்டத்தில் உள்ள மக்களும் மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, டெல்டா மாவட்டத்தினுடைய ஒரு பகுதியில், சமத்துவப் பொங்கலைக் கொண்டாட வேண்டும் என்பதையும் இங்கே வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்களோடு பொங்கலை மகிழ்ச்சியாகக் கொண்டாடும்போது, அவர்களுடைய துயரிலே நாமும் பங்கேற்பதாக அது அமையும்.

அதேபோன்று, இந்தத் துயர் துடைக்கக்கூடிய பணிகளில் அரசாங்கத்திற்கு முன்பாகவே எதிர்க்கட்சித் தலைவர், தி.மு.க.-வினுடைய தலைவர் அவர்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று, மக்களோடு மக்களாக தங்களுடைய பணியை மிகச் சிறந்த முறையில் செய்திருக்கின்றார்கள். அதேபோன்று, பல்வேறு இயக்கங்களும் அங்கே பணிகளை ஆற்றி இருக்கின்றன. எங்கள் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகவும் நாங்கள் ஆயிரம் தொண்டர்களை வைத்து ஒன்றரைக் கோடி ரூபாய் மதிப்பில் நிவாரண உதவிகளையெல்லாம் செய்திருக்கின்றோம். இப்படியாக பல்வேறு நிலைகளில் பணியாற்றியிருக்கக்கூடிய அனைவருக்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதேபோன்று, அங்கே வாழ்வாதாரத்தை இழந்திருக்கக்கூடியவர்கள் நல்ல நிலையை அடைவதற்குண்டான சிறப்புத் திட்டங்களை அரசாங்கம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். ஏதோ நிவாரணப் பணிகள் முடிந்துவிட்டன என்றில்லாமல், நம்முடைய பணிகளைச் செம்மைப்படுத்தக்கூடிய வகையில், மக்களுடைய துயரைப் போக்கக்கூடிய வகையில்,





டெல்டா மாவட்டங்களில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளின் கடனை இரத்து செய்ய வேண்டும். அந்த மக்களினுடைய குழந்தைகள் கல்வி கற்பதற்கு ஏதுவாக சிறப்பு நிதியை வழங்க வேண்டும். அதேபோன்று, அங்கே மின்சார இணைப்பு எல்லாம் துண்டிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில், மின்சாரக் கட்டணத்தையும் நீங்கள் இரத்து செய்ய வேண்டும். அதேபோன்று, டெல்டா மாவட்டங்களில் கஜா புயலால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு சிறப்புத் திட்டங்களை வழங்க வேண்டும் என்றும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள்; வக்ஃபு வாரியத்திற்குப் பொறுப்பு வகிக்கிற அமைச்சர் இருக்கின்றார்கள். அங்கே இரண்டு பள்ளிவாசல்களின் மினாராக்கள் பட்டுக்கோட்டையிலும், கோடியக்கரையிலும் உடைந்து விழுந்திருக்கின்றன. அண்ணன் இருக்கின்றார்; அவருக்கு நன்றாகவே தெரியும். அதற்கும் உங்களுடைய துறை சார்பாக ஏதாவது நிதியை வழங்கினால், மினாராக்களை மீண்டும் அமைப்பதற்கு இந்தப் பள்ளிவாசல்களுக்கு நீங்கள் உதவியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அரசாங்கம் சிறப்புக் கவனம் செலுத்தி, கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டு, தங்கள் வாயிலாக அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். சற்று சுருக்கமாகப் பேசி முடியுங்கள். இன்னும் இரண்டு, மூன்று issues-ஐ நான் எடுத்துக்கொள்ளவேண்டும்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு, நவம்பர் 15 ஆம் தேதி விடியற்காலையில் வீசிய கஜா புயல் பெரும் சீரழிவை ஏற்படுத்திவிட்டுச் சென்றிருப்பதை ஒட்டுமொத்த தேசமும் உணர்ந்து பார்த்திருக்கிறது. அந்தப் புயல் கரையை மட்டும் கடக்கவில்லை; எங்கள் வாழ்க்கையையும் கடந்திருக்கிறது. எங்கள் மகிழ்ச்சிப் பூக்களைப் பறித்திருக்கிறது. எங்கள் பாட்டன், பூட்டன் நட்டு வைத்த நூற்றாண்டு கால மரங்களைச் சாய்த்திருக்கிறது.

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [*2019 ஜனவரி 4*

இயற்கை எழில் கொஞ்சும் பசுமை வழிச் சாலைகள் பொலிவிழந்து கிடக்கின்றன. எங்களைப் பரவசப்படுத்திய பறவைகளை, இப்போது எங்களுடைய கானகங்களில் நாங்கள் காண முடியவில்லை. அலைகடலில் படகுகளைச் செலுத்தி, மீன் பிடித்த எங்களுடைய மீனவச் சொந்தங்கள் கண்ணீரில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக, நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடிய தஞ்சைத் தரணியின் கடலோரப் பகுதிகளும், உட்பகுதிகளும், பெரும் பேரழிவைச் சந்தித்திருக்கின்றன.

இந்த இக்கட்டான தருணத்தில் மீட்புப் பணியிலே முழுமையாக ஈடுபட்ட அனைத்து நல்உள்ளங்களையும் இந்த நேரத்திலே நன்றியோடு நினைவுகூர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தப் பகுதிக்கு வருகை தந்து மக்களை ஆறுதல்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே டெல்டா மக்களின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோன்று, புயல் பாதித்த பகுதிகளிலே உண்மையான நிவாரணப் பணிகளிலே எல்லோரும் ஈடுபட்டிருந்தாலும், கதாநாயகர்களாக மக்களால் பார்க்கப்பட்டவர்கள் யாரென்று சொன்னால், மின்சார ஊழியர்கள்தான். தங்களுடைய உணவைப் பற்றிக் கவலைப்படாமல், உறக்கத்தைப் பற்றிக் கவலைப்படாமல், உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள் ஆற்றிய பணிகளின் காரணமாகத்தான், இருண்டு கிடந்த டெல்டா மாவட்டங்கள் மின்னொளி பெற்றிருக்கின்றன என்பதை மனசாட்சியுள்ள ஒவ்வொருவரும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, புயல் பாதித்த பகுதிகளிலே, துப்புரவுப் பணிகளிலே ஈடுபட்டு, மிகப் பெரிய அளவில் தியாகத்தைச் செய்தவர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆவர். அவர்களையும் நன்றியோடு இந்த நேரத்திலே நினைவுகூர்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோன்று, மக்கள் கொந்தளிப்பாக இருந்த நிலையில், சட்டம்-ஒழுங்கைச் சிறப்பாகப் பராமரித்ததற்காக காவல் துறைக்கும் நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



*2019 ஜனவரி 4*] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

முன்பு சுனாமியால் பாதிக்கப்பட்டபோது, உலகம் முழுக்க வாழ்ந்தவர்கள் எப்படி அந்தப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு உதவினார்களோ, அதையும் தாண்டி, தஞ்சை, நாகை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களிலே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓடோடி வந்து நிவாரணப் பொருட்களை வழங்கிய, தேசம் முழுக்க இருக்கக்கூடிய நல்உள்ளங்களுக்கும், தேசத்தைத் தாண்டி, நதிகளாய் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய உலகம் முழுவதும் இருக்கும் தமிழ் அன்பர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படி கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களை உலகம் முழுவதும் உள்ள மக்கள் கண்ணீரோடு எட்டிப்பார்த்த தருணத்திலே, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நம்மை வந்து பார்ப்பார் என்று மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், ஓர் ஆறுதல் வார்த்தையைக்கூட தெரிவிக்கவில்லையே என்ற வருத்தம் எங்களுடைய டெல்டா மாவட்ட மக்களிடம் இருந்துகொண்டிருக்கிறது. தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "ரூ.15,000 கோடி நிதியை எங்களுக்குத் தந்து உதவுங்கள்; அது எங்களுக்கு அல்ல; அந்த மக்களுடைய நிவாரணத்திற்கு" என்று கேட்டார்கள். ஆனால், மத்திய அரசு அதிலே 10 சதவிகிதத் தொகையைக்கூட வழங்காதது, மிகப் பெரிய வேதனையாக இருக்கிறது. நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசு, தமிழக அரசு கேட்ட ரூ.15,000 கோடி நிதியை உடனடியாகக் கொடுத்து உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நாகப்பட்டினம் தொகுதி பெரிய அளவிலே பாதிக்கப்பட்ட பகுதிகளிலே ஒன்று. ஆனால், அங்கே 15 நாட்கள் மின்சாரம் இல்லாத நிலையும் இருந்தது. என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்கு முழுமையாக நிவாரண உதவிகள் விடுவிக்கப்படவில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, என்னுடைய நாகப்பட்டினம் தொகுதி மக்களுக்கு, புயல் பாதித்த பிற பகுதிகளிலே கிடைக்கக்கூடிய அனைத்து நிவாரண உதவிகளும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். ஒருவேளை அதற்கான வாய்ப்புகள் இல்லையென்று சொன்னால், எனது தொகுதியில் இருக்கக்கூடிய ஒவ்வொரு ரேஷன் அட்டைதாரர்களுக்கும் தலா ரூ.5,000/-ஐ நிவாரண உதவியாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தமிழக அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2019 ஜனவரி 4

இந்தப் புயலால் ஆயிரக்கணக்கான படகுகள் சேதமடைந்துள்ளன. 14 ஆண்டுகளுக்கு முன்பாக, சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பிற்கு, ஒவ்வொரு படகுக்கும் ரூ.75,000/- இழப்பீடாக வழங்கினார்கள். இப்போது, 14 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் புயலினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நேரத்திலே, வெறும் 85,000/- ரூபாயை மட்டுமே தமிழக அரசு நிவாரணமாக அறிவித்திருக்கிறது. ஒரு படகைச் சீர்செய்ய ரூ.12 இலட்சம் வரை செலவாகிறது. எனவே, வலைகள், இயந்திரங்கள் உள்ளிட்ட அனைத்து உபகரணங்களையும் கவனத்திலேகொண்டு, மீனவர்களுக்கான நிவாரணத் தொகையை தமிழக அரசு உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பல தென்னந்தோப்புகள் மொத்தமாக அழிந்திருக்கின்றன. மாந்தோப்புகள் அழிந்திருக்கின்றன; முந்திரித் தோப்புகள் அழிந்திருக்கின்றன; சவுக்குத் தோப்புகள் அழிந்திருக்கின்றன. இந்த நிலையில் சவுக்குத் தோப்புகளுக்கு இழப்பீடு ஏதும் வழங்கப்படவில்லை. 'தானே' புயலால் சவுக்குத் தோப்புகள் அழிந்தபொழுது, முன்னாள் முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள் அதற்கு நிவாரணம் அளித்ததை இந்த நேரத்திலே நினைவூட்டி, சவுக்குத் தோப்புகளுக்கும் உரிய இழப்பீடுகளை இந்த அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

தென்னை, மா, பலா, சவுக்கு, பனை, புளி ஆகிய வருவாய் தரும் மரங்களும் இந்தப் புயலால் அழிந்திருக்கின்றன. அந்தப் பகுதிகளில் இழந்த பசுமையை மீட்டெடுக்க, இயற்கையை சமன் செய்ய, தமிழக அரசு இலவசமாக மரக் கன்றுகளையும், விதைகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல தொழில் கட்டமைப்புகளும் இந்தப் புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வணிகர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.வர்த்தகப்பொருட்களும் சேதமடைந்திருக்கின்றன. இவர்களின் தொழில்களைத் தொடங்க வங்கிகளில் வாங்கிய கடனுக்கான வட்டிக் குறைப்பு செய்ய அல்லது வட்டியில்லாமல் வழங்க, தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிவாரணத் தொகையை ECS முறையில் அனுப்ப, Net வசதி இதுநாள்வரை பல இடங்களில் மேம்படுத்தப்படவில்லை. எனவே, Mobile வங்கி அமைத்து, Net வசதியுடன் விவசாயிகளுக்குக் கிடைத்திட, மத்திய அரசை நம்முடைய தமிழக அரசு வற்புறுத்திட வேண்டுமென்று



2019 ஜனவரி 4] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

கேட்டுக்கொண்டு, கடைசியாக ஓரிரு கோரிக்கைகளுடன் நிறைவு செய்ய விரும்புகின்றேன். 'அனைவருக்கும் வீடு' கட்டும் திட்டத்தின்கீழ் அரசு ரூ.2,10,000/- வழங்குகிறது. இது போதாது. ஏனென்றால், டெல்டா மாவட்டங்களில் கொள்ளிடத்திலிருந்து மணல் எடுப்பதற்கும், கரூரிலிருந்து ஜல்லியைக் கொண்டுவரவும் அதிகம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், N.G.O. அமைப்புகள் அனைத்தையும் அழைத்து, அவர்களுடன் ஆலோசனை செய்து, ஒவ்வொரு வீட்டிற்கும் தலா ரூ.90,000/- பெற்று, மொத்தமாக ரூ.3.00 இலட்சம் மதிப்பில் வீடுகள் கட்டுவதற்கு ஆவன செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு நிலத்தில் வீடுகள் கட்ட ஏதுவாக, அதற்கு பட்டா வழங்கவும் ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நாகை உள்ளிட்ட புயல் பாதிக்கப்பட்ட மாவட்டப் பகுதிகளில் குடிசைகளை முழுமையாக அகற்றி, 100 சதவிகிதம் குடிசைகளற்ற கான்கிரீட் பகுதிகளாக மாற்றுவதற்கு தமிழக அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புயல், வெள்ளம் ஆகிய அபாயங்களைக் கருத்தில்கொண்டு, நாகை மற்றும் கடலூர் மாவட்டங்களில் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் மேலே செல்லும் மின்சாரக் கம்பிகளை, under ground cables-ஆக பூமிக்குள் புதைக்கும் திட்டத்தை அமல்படுத்த தமிழக அரசு முன்வர வேண்டும். தற்போது நாகை மாவட்டம், வேளாங்கண்ணியில் அந்தத் திட்டம் செயல்பாட்டில் வந்துள்ளதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதேபோன்று, மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், புயல் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே அதனை இரத்து செய்ய வேண்டும். அவ்வாறு இரத்து செய்யக்கூடிய நிலை இல்லையென்றால், ஏற்கெனவே மின்சார வாரியம் பெரிய இழப்பை சந்தித்திருக்கிறதென்றால், சுமார் 50 சதவிகிதக் கட்டணத்தையாவது தள்ளுபடி செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, புயல் பாதித்த பகுதிகளில் கல்வி மற்றும் விவசாயக் கடன்களை முற்றிலுமாக இரத்து செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

[2019 ஜனவரி 4

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கஜா புயல் குறித்து நீங்கள் எடுத்திருக்கக்கூடிய சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் அடிப்படையில், இன்று திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் சார்பில், காங்கிரஸ் கட்சியின் சார்பில், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில், அதேபோல் திரு. தமிமுன் அன்சாரி அவர்களின் சார்பிலும் இங்கே பல கருத்துகள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அனைவரும் பேசுகின்ற நேரத்தில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகள், வங்கிகளில் வாங்கியிருக்கக்கூடிய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நானும் அதையேதான் வலியுறுத்துகிறேன்; வற்புறுத்துகிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில், தேசியமயமாக்கப்பட்டிருக்கக்கூடிய வங்கிகளில், கூட்டுறவு வங்கிகளில் வாங்கியிருக்கக்கூடிய அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். விவசாயிகளின் கடன் மட்டுமல்ல; மாணவர்கள் தங்களுடைய கல்விக்காக வங்கிகளில் வாங்கியிருக்கக்கூடிய கடன், பெண்கள், மகளிர் சுய உதவிக் குழுவிற்காக வாங்கியிருக்கக்கூடிய கடன், நம்முடைய மீனவ சமுதாயத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் தங்கள் படகுகளுக்காக வாங்கியிருக்கக்கூடிய கடன்கள் ஆகியவற்றை முழுமையாக இரத்து செய்வதற்கு அரசு முன்வர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு பதிலுரை வழங்க இருக்கிறார். இந்தப் பிரச்சினை குறித்து நிச்சயமாகப் பதில் சொல்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன். எதிர்பார்ப்பது மட்டுமல்ல, அவற்றை வழங்குவார் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம் என்று கூறி இந்தக் கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊறுஓரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்".

அதாவது, துன்பம் வருவதற்கு முன்னரே அதைத் தடுத்துவிடுவது, ஒரு வேளை மீறி வந்துவிட்டால் மனம் தளராமல் இருந்து



2019 ஜனவரி 4] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அத்துன்பத்தைக் களைவது ஆகிய இரண்டுமே செயல்திறம் படைத்தவரின் கொள்கையாகும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, கடந்த ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட இயற்கை இடர்பாடுகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எதிர்கொண்டவிதம், மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மீட்புப் பணிகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளினால் மக்களின் இயல்பு வாழ்க்கை விரைவாகத் திரும்பியதை மக்கள் நன்கறிவார்கள். அதுகுறித்து விளக்கமாக இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் 18 பேர், கஜா புயல் குறித்து கவன ஈர்ப்பை இங்கே கொண்டுவந்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் இந்த விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-05

வடகிழக்குப் பருவமழையினை எதிர்கொள்ள எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து 14-9-2018 மற்றும் 7-10-2018 ஆகிய நாட்களில் நான் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, ஆலோசனைகளை வழங்கினேன். 11-11-2018 அன்று கஜா புயல் வங்கக் கடலில் நிலைகொண்டிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததையடுத்து, 12-11-2018 அன்று மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் விரிவான ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினேன். எனது உத்தரவின்பேரில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பல்வேறு துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள், இந்தப் புயலினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைச் சமாளிப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாகத் துவக்கினார்கள்.

மூத்த அமைச்சர்கள், மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் ஆகியோர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், புயலால் ஏற்படும் சேதங்களைக் குறைக்கும்பொருட்டும் மாவட்டங்களில் கண்காணிப்பு அலுவலர்களாக அனுப்பி வைக்கப்பட்டனர். தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த பதினோரு குழுக்கள் பல்வேறு துறைகளிலுள்ள 1,151 ஜே.சி.பி. இயந்திரங்கள், 1,650 மரம் அறுக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றுடன் தகுந்த பணியாளர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். கஜா புயலால் பழுதடைந்த மின்

கம்பங்களுக்கு மாற்றாக 7,000 மின் கம்பங்களுடன் 2,000 மின் துறை ஊழியர்கள், பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட்டனர்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

புயல் கரையைக் கடக்கும் நேரத்திற்கு முன்னரே அனைத்து மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டு, மாலை 6-00 மணி முதலே பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிட்டது. தனியார் நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டு, பணியாளர்கள் விரைவில் வீடு திரும்பினர். புயல் கரையைக் கடப்பதற்கு முன்னரே, தாழ்வான பகுதிகள் மற்றும் புயல் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் இருந்த 81,948 நபர்கள் 471 முகாம்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தங்க வைக்கப்பட்டனர். இதன் விளைவாக புயலின்போது ஏற்பட இருந்த உயிர்ச் சேதங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், வருவாய்த் துறைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோர் கட்டுப்பாட்டு அறையில் இரவு முழுவதும் புயலின் நகர்வைக் கண்காணித்து, உடனுக்குடன் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகளை வழங்கி வந்தனர். (மேசையைத் தட்டும் ஒலி) 16-11-2018 அன்று அதிகாலை கஜா புயல் நாகப்பட்டினத்தில் 110 கிலோ மீட்டர் வேகத்தில் கரையைக் கடந்தது. நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் கோட்டம் உள்ளிட்ட 12 மாவட்டங்கள் கஜா புயல் காரணமாக எண்ணிப் பார்க்க இயலாத அளவிற்கு பெரும் பாதிப்பிற்குள்ளாயின. இந்தப் புயலின் தாக்கத்தினால் 52 நபர்கள் உயிரிழந்துள்ளனர். 5 இலட்சத்து 57 ஆயிரத்து 492 வீடுகள் இந்தப் புயலினால் சேதமடைந்தன. 2 இலட்சத்து 21 ஆயிரத்து 485 கால்நடைகள் மற்றும் பறவைகள் இந்தப் புயலால் உயிரிழந்தன. ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 63 ஹெக்டேர் பரப்பளவில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக, 78 ஆயிரத்து 584 ஹெக்டேர் தென்னை மரங்களும், 8 ஆயிரத்து 486 ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிர்களும் சேதமடைந்தன. 3 இலட்சத்து 31 ஆயிரத்து 772 மின் கம்பங்கள், 1,655 மின்மாற்றிகள், 201 துணை மின் நிலையங்கள், 32,111 கிலோ மீட்டர்



நீள மின் கம்பிகள் இந்தப் புயலால் சேதமடைந்துள்ளன. இந்தப் புயலினால் மீனவர்களின் 5,662 படகுகளும், 6,157 இயந்திரங்களும், 10,648 வலைகளும் சேதமடைந்தன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசால், 16-11-2018 அன்றே உயிரிழந்த நபர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு தலா 25,000 ரூபாயும் நிவாரணமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. 19-11-2018 அன்று புயல் பாதிப்பு குறித்து தலைமைச் செயலகத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி, உடனடியாக 1,000 கோடி ரூபாயை விடுவித்து, புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியமான நிவாரண உதவிகளை அறிவித்தேன். அதன்படி முகாம்களில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கியதுடன், கூடுதலாக ஒரு வேட்டி, ஒரு சேலை மற்றும் 4 லிட்டர் மண்ணெண்ணெய்யும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பசு மற்றும் எருமை மாடு இறப்புக்கு தலா 30,000 ரூபாயும், காளை மாடு இறப்புக்கு 25,000 ரூபாயும், ஆடு ஒன்றுக்கு 3,000 ரூபாயும், முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு 10,000 ரூபாயும், பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு 4,100 ரூபாயும் அறிவிக்கப்பட்டது. வாழ்வாதார நிவாரணமாக 5,000 ரூபாய் மற்றும் 27 பொருட்கள் அடங்கிய நிவாரணத் தொகுப்பும் மாண்புமிகு அம்மாவின் அரசால் மக்களுக்கு வழங்கப்பட்டது.

தென்னை விவசாயிகளுக்கு சிறப்பு நிவாரணத் தொகுப்பாக மரம் ஒன்றுக்கு 600 ரூபாயும், விழுந்த மரங்களை வெட்டியெடுக்க 500 ரூபாயும் என ஒரு ஹெக்டேருக்கு 175 மரங்கள் எனக் கணக்கிட்டு, 1 இலட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபாய் என்றும், அதிகபட்ச நிவாரணமாக ஒரு விவசாயிக்கு 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் என்றும் நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டது.

பிற்பகல் 12-10

தென்னை மறு சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு 72 ஆயிரத்து 100 ரூபாய் வழங்கவும் அரசால் உத்தரவிடப்பட்டது. ஆக மொத்தம்,

தென்னை விவசாயிகள் ஹெக்டேர் ஒன்றுக்கு 2 இலட்சத்து 64 ஆயிரத்து 600 ரூபாய் பெறுவர் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். 35 இலட்சம் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நெல், கரும்பு, வாழை, சவுக்கு மற்றும் இதர இறவைப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாயும், மா, பலா, முந்திரி, வெற்றிலைக் கொடி, மிளகு உள்ளிட்ட பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 18 ஆயிரம் ரூபாயும், முந்திரி மரங்களை வெட்டி அகற்றிட மரம் ஒன்றுக்கு 500 ரூபாயும், உச்சவரம்பாக ஒரு விவசாயிக்கு 800 மரங்களுக்கு 4 இலட்சம் ரூபாயும் என நிர்ணயித்து வழங்க அரசு உத்தரவிட்டது.

முழுவதும் சேதமடைந்த வலைகளுடன்கூடிய கட்டுமரங்களுக்கு தலா 42 ஆயிரம் ரூபாயும், FRP படகுகள் மற்றும் வலைகளுக்கு தலா 85 ஆயிரம் ரூபாயும், விசைப் படகுகளுக்கு 5 இலட்சம் ரூபாயும், வலை ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக அரசு அறிவித்தது. பகுதியாக சேதமடைந்த FRP படகு மற்றும் வலைக்கு 30 ஆயிரம் ரூபாயும், விசைப் படகுக்கு 3 இலட்சம் ரூபாயும், எஞ்சின் பழுது நீக்கம் செய்ய 5 ஆயிரம் ரூபாயும் உள்ளிட்ட பல்வேறு நிவாரணங்களை 41.63 கோடி ரூபாய் மதிப்பில் மீனவர்களுக்கு வழங்க உத்தரவிட்டேன். மீனவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்ததை கருத்தில்கொண்டு, முழுவதும் சேதமடைந்த FRP படகுகள் மற்றும் வலைகளுக்கு ஏற்கெனவே அறிவித்த நிவாரணமான 85 ஆயிரம் ரூபாய், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துத் துறை நடவடிக்கைகளையும் நான் துரிதப்படுத்தி, மக்களின் இயல்பு வாழ்க்கை விரைவில் திரும்ப வேண்டி, பிற மாவட்டங்களிலிருந்து நிவாரணப் பொருட்களை அனுப்ப ஏற்பாடு செய்தும், அவ்வாறு அனுப்பப்படும் நிவாரணப் பொருட்கள் உரியவர்களுக்குச் சென்றடைகிறதா என்பதைத் தொடர்ந்து கண்காணித்துக்கொண்டே இருந்தேன். பாதிக்கப்பட்ட பகுதிகளில்





மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் முகாமிட்டு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொண்டு வந்த நிலையிலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாக நேரடியாகச் சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தினார்கள். அதுமட்டுமல்லாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலும் கூறினார்கள்.

சாலைகளில் மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் விழுந்தும், பழுதடைந்திருந்த நிலையில், சீரமைப்புப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தன. மேலும், சாலை மார்க்கமாகச் சென்றால் பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களையும் பார்க்க இயலாது என்பதால், 20-11-2018 அன்று நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் ஹெலிகாப்டரில் சென்று, புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டோம். அந்த நேரத்தில் மழை விடாமல் பெய்து, மோசமான வானிலை இருந்ததால், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கு என்னால் செல்ல முடியவில்லை. அவ்வாறு ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டபோது, புயலின் தீவிரத்தையும், புயலால் பாதிக்கப்பட்ட பரந்த நிலப்பரப்பையும், விழுந்த தென்னை மற்றும் பிற பயிர்களின் பரப்பையும், வீடுகளின் சேதாரத்தையும் என்னால் உணர முடிந்தது. இதனால்தான் மாநிலப் பேரிடர் நிவாரண நிதி வழங்கப்படுவதற்கான விதிமுறைகளைத் தளர்த்தி, வேறு எந்த இயற்கைச் சீற்றத்தின்போதும் வழங்காத அளவிற்கு நிவாரணத் தொகைகளை உயர்த்தி வழங்க முடிந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாதிப்பின் அளவினைப் பார்த்த நான், உடனடியாக, அதாவது 22-11-2018 அன்றே புது டில்லிக்குச் சென்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, புயலினால் ஏற்பட்ட சேதங்களை ஹெலிகாப்டர் மூலமாக எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் விளக்கி, புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்கு, அன்றுவரை எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, 14 ஆயிரத்து 910 கோடி ரூபாயும், தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்காக 1,431 கோடி ரூபாய் நிதியும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். மத்திய அரசின் சேத மதிப்பீட்டுக் குழுவை அனுப்பவும் கோரிக்கை விடுத்தேன். அதனை உடனடியாக ஏற்ற மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்,

மறுநாளே, அதாவது 23-11-2018 அன்றே, சேத மதிப்பீட்டுக் குழுவினை தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தார். அக்குழுவினர், 24-11-2018 அன்று என்னை நேரில் சந்தித்தனர். அச்சமயம், புயல் பாதிப்பு குறித்த விவரங்களை அவர்களிடம் எடுத்துரைத்தேன். அதன் பின்னர், புயல் பாதித்த பகுதிகளில் ஏற்பட்ட சேதங்களை குழுவினர் பார்வையிட்டு, பின்னர், என்னிடம் அதுசம்பந்தமாக 27-11-2018 அன்று விரிவாக விவாதித்தனர். இதற்கிடையில், சேதம் பற்றிய கணக்கீடு முழுவதுமாக முடிந்ததால், 5-12-2018 அன்று தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்கு 2,709 கோடி ரூபாயும், நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்கு 15 ஆயிரத்து 190 கோடி ரூபாயும் தேவை என்பது தெரிய வந்தது. இதை மத்திய அரசுக்குத் தெரிவித்து, கூடுதல் தொகை கோரப்பட்டது.

பிற்பகல் 12-15

பின்னர், 28-11-2018 அன்று திருவாரூர் மாவட்டத்தில் கட்டிமேடு, திருத்துறைப்பூண்டி, தென்பாதி, மேலமருதூர், மணலி, மான்குடி, திருவாரூர் ஆகிய இடங்களுக்கும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் புஷ்பவனம், நாலுவேதபதி, வெள்ளபள்ளம், கோவில்பத்து, வேட்டைக்காரணிருப்பு, விழுந்தமாவடி, காமேஸ்வரம், பிரதாமராமபுரம், பெரிய குத்தகை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களுக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சருடன் நான் நேரில் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டேன். அப்போது அங்கிருந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், முதியோர், முகாமில் தங்கியிருந்தோர், களப் பணியாளர்கள் ஆகியோரை நேரில் சந்தித்து, அப்பகுதிகளின் தேவைகளைக் கேட்டறிந்து, அவற்றை உடனுக்குடன் நிறைவேற்ற களத்திலேயே உத்தரவிட்டேன். மேலும், அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த மின் பணியாளர்கள், தூய்மைப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பணியாளர்களைச் சந்தித்து, அவர்களை ஊக்கப்படுத்தினேன். மின்சாரம், குடிநீர், சாலைப் போக்குவரத்து மற்றும் அத்தியாவசியத் தேவைகளை போர்க்கால அடிப்படையில் செய்து கொடுக்க நேரில் அறிவுரை வழங்கினேன். அத்துடன், முகாமில் வழங்கப்படும் குடிநீர் மற்றும் உணவுகளின் தரத்தையும் சோதனை செய்தோம்.

அச்சமயம் முகாம்களிலிருந்து வீடு திரும்புவோர் உடனடியாக தங்கள் அன்றாடப் பணிகளைத் துவக்கும் வகையில், 10 கிலோ அரிசி, 2 கிலோ துவரம் பருப்பு, 1/4 கிலோ புளி, ஒரு கிலோ





பால் பவுடர், 2 கிலோ சர்க்கரை, ஒரு கிலோ உப்பு, 200 கிராம் டீத்தூள், 100 கிராம் சாம்பார் பொடி, 2 கிலோ ரவை, 4 பிஸ்கெட் பாக்கெட்டுகள், ஒரு பாய் அல்லது ஜமுக்காளம், 2 லிட்டர் சமையல் எண்ணெய், 2 வேட்டிகள், 2 சேலைகள், 2 துண்டுகள், ஒரு நைட்டி, ஒரு கைலி, ஒரு போர்வை, 50 கிராம் தேங்காய் எண்ணெய், 2 குளியல் சோப்பு, 2 துணி துவைக்கும் சோப்பு, ஒரு பாக்கெட் கொசுவர்த்திச் சுருள், 2 பாக்கெட் சானிட்டரி நாப்கின்கள், பிளாஸ்டிக் வாளி, பிளாஸ்டிக் கோப்பை, ஒரு குடை மற்றும் 2 தீப்பெட்டிகள் என 233.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) 27 பொருட்கள் அடங்கிய நிவாரணத் தொகுப்பு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் தாயுள்ளத்தோடு வழங்கப்பட்டது. அப்பொருட்கள் புயலால் பாதித்த 6 இலட்சத்து 39 ஆயிரத்து 495 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், பாதிக்கப்பட்ட கூரை வீடுகளில் குடியிருப்போருக்கு தார்ப்பாலின் வழங்க உத்தரவிடப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தந்த மாவட்ட மின் ஊழியர்கள் மட்டுமின்றி, சுமார் 28,644 மின் வாரிய ஊழியர்கள் பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலிருந்தும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, இரவு பகல் பாராமல் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பசி வேளையில்கூட, பணி செய்த மின் ஊழியர்கள், சாலைகளிலேயே ஏன், விழுந்த மின் கம்பங்களிலேயேகூட அமர்ந்து உணவருந்தி, கடுமையான இன்னல்களுக்கிடையே தங்கள் கடமையைச் செய்தனர். (மேசையைத் தட்டும் ஒலி) புயலின் தாக்கத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்கள் முழுவதிலும் புதியதாக மின் இணைப்பு மற்றும் மின் சேவை வழங்குவதற்கு ஒப்பான பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் மற்றும் அலுவலர்களை நான் நேரில் சந்தித்து அவர்களுக்கு ஊக்கமளித்ததுடன், விவசாய நிலங்களில் இருந்த மின் கம்பங்களைச் சீரமைக்கும்போது, அவற்றை சாலை ஓரங்களில் நடுமாறும், இதனால் இனிவரும் காலங்களில் மின்சாரப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வசதியாக இருக்கும் என்றும் நான் வழங்கிய அறிவுரையின்படி, பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக, அத்தியாவசிய சேவைகளான பொது மருத்துவமனைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றுக்கு ஒரே நாளிலும், மாநகராட்சிப் பகுதிகளில் மூன்றே நாட்களிலும்

மின்சாரம் வழங்கப்பட்டது. மின் இணைப்புப் பணிகளுக்கென பிற மாவட்டங்கள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து 28 ஆயிரத்து 644 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களின் கடும் உழைப்பினால், இதுவரை கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மொத்த 66 இலட்சத்து 56 ஆயிரத்து 369 வீட்டு மின் இணைப்புகளில், 65 இலட்சத்து 78 ஆயிரத்து 590 மின் இணைப்புகள் சரி செய்யப்பட்டுவிட்டன. பல மாதங்கள் நடைபெற வேண்டிய இப்பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டதன் விளைவாக, குறுகிய காலத்தில் முடிக்கப்பட்டு, 99 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் மின்சாரப் பணிகளை மேற்கொள்வதில் தொய்வு ஏற்பட்டதாகத் தெரிவித்தார். இலட்சக்கணக்கான வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுத்தவர்கள் நம்முடைய மின் ஊழியர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், மின்சாரப் பணி என்பது கடுமையான பணி. மற்ற பணிகளை யாரை வைத்து வேண்டுமானாலும் செய்துவிடலாம். ஆனால், மின்சாரப் பணிகளைப் பொறுத்தவரையில், அந்தப் பணிகள் தெரிந்த மின் ஊழியர்களை வைத்துத்தான் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள் நான் அங்கே சென்றிருந்தபோது சில விளக்கங்களைக் கொடுத்தார். மின்சார ஊழியர்கள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு தகவலையும் தெரிவித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் மின் ஊழியர்களின் கஷ்டத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இலட்சக்கணக்கான மின் கம்பங்கள் சாய்ந்து கிடந்தன. அவற்றையெல்லாம் சரி செய்து மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று சொன்னால், சற்று காலதாமதம் ஆகும். ஏனென்றால், இது மிகவும் சிரமமான பணி. இந்தப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது பல ஊழியர்கள் தங்கள் உயிரை இழந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.





பிற்பகல் 12-20

கஜா புயலினால் மின் விநியோகம் பாதிக்கப்பட்டதால், குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்ட 184 நகராட்சிப் பகுதிகள், 270 பேரூராட்சி வார்டுகள் மற்றும் 9,048 ஊராட்சிப் பகுதிகளுக்கும் 1,334 ஜெனரேட்டர்கள் மூலமாகவும், 325 டேங்கர் லாரிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டது. தற்போது குடிநீர் விநியோகம் முழுவதும் சீர்செய்யப்பட்டுள்ளது.

மறு நடவு செய்யப்படும் வரை, தென்னை விவசாயிகளின் இடைக்கால வருமானத்திற்காக ஊடுபயிராக சிறு தானியங்கள், உளுந்து, எள் போன்றவை பயிரிட 100 சதவிகித மானியத்தில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்வாதார தொகுப்புத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்படவுள்ளது.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. இராமசாமி அவர்கள் பேசுகின்றபொழுது, மறுசீரமைப்புக்கு என்ன செய்வீர்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அதற்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. விவசாயிகள் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்காக, கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாழ்வாதார தொகுப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், சொட்டு நீர்ப் பாசனத்திற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுள் 75 சதவிகித மானியமும் வழங்கப்படும். ஆக மொத்தம், தென்னை வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் 81 கோடி ரூபாய் செலவில் மறு சாகுபடி செய்ய மானியத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது. அதேபோல், தோட்டக்கலைப் பயிர்களில் நுண்ணீர்ப் பாசனத்துடன் மறு சாகுபடிக்கு 149 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தென்னை விவசாயிகள் மறு சாகுபடி செய்வதற்காக இந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்த இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், 4.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 805 கனரக மரம் அறுக்கும் கருவிகளையும், 2.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 107 டிராக்டரில் இணைக்கப்பட்ட துகளாக்கும்

கருவிகளையும் வாங்கி, விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வழங்க உத்தரவிட்டுள்ளேன். சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதியின்கீழ் பாதிக்கப்பட்ட மீனவ மக்களின் வாழ்வாதாரத் திட்டத்திற்காக 11.90 கோடி ரூபாய் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊரகப் பகுதிகளில் பட்டா நிலங்களில் சேதமடைந்த வீடுகளுக்கும், அரசு புறம்போக்கு இடங்களில் சேதமடைந்த வீடுகளுக்கும் மாற்று இடத்தில் வீடு கட்டித் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் முதலாம் ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகளும், அடுத்த நான்காண்டுகளில் தலா 50 ஆயிரம் வீதம் 2 இலட்சம் வீடுகளும் என மொத்தம் 3 இலட்சம் வீடுகளை 5 ஆண்டுகளில் கட்டி முடித்திட, (மேசையைத் தட்டும் ஒலி) நிதி ஒதுக்கீடு செய்யுமாறு நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கோரியுள்ளேன். நகர்ப்புறங்களில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகப் புதிய வீடுகள் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள பிற மாவட்டங்களிலிருந்து 3,000-க்கும் மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு, துப்புரவுப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றன. கஜா புயல் தாக்கத்தால் தொற்று நோய் ஏற்படாமல் இருக்க 1,647 மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டன. மேலும், 22,047 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை நேரடியாகச் சந்தித்து, மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் மொத்தம் 11 இலட்சத்து 66 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதன் காரணமாக கஜா புயல் பாதித்த பகுதிகளில் நோய்த் தொற்று ஏற்படாமல், பொது சுகாதாரம் பேணிக் காக்கப்பட்டது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், வேலைவாய்ப்பு 100 நாட்கள் என வழங்கப்பட்டு வந்ததை, 150 நாட்களாக உயர்த்தி வழங்கவும், (மேசையைத் தட்டும் ஒலி) அப்பணியாளர்களைக் கொண்டு புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விழுந்த மரங்களை வெட்டுவதற்கும், அகற்றுவதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது. டெல்டா





மாவட்டங்களில், 16-11-2018 முதல் 26-12-2018 வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பணியாற்றும் 88 இலட்சத்து 61 ஆயிரத்து 490 ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், புஷ்பவனம், பெரியகுத்தகை, நாலுவேதபதி, வெள்ளப்பள்ளம் ஆகிய கிராமங்களில் கடல் சேறு 5 அடி உயரத்திற்குப் படிந்து, விவசாய, மீனவ மக்களின் வாழ்வாதாரத்தைப் பெரிதும் பாதித்தது. மீனவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் முகத்தான், வல்லம் மற்றும் வலைகளைக் கடலுக்குள் கொண்டு செல்ல ஏதுவாக, முதற்கட்டமாக, வேளாண் பொறியியல் துறையின் மூலமாக பாதைகள் சுத்தம் செய்யப்பட்டு, சீரமைக்கப்பட்டன. தற்போது, மீதமுள்ள சேற்றினை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பிற்பகல் 12-25

சாலைகளில் வேரோடு விழுந்த மரங்களை அகற்றி, உரிய விதிமுறைகளைப் பின்பற்றி ஆங்காங்கே ஏலத்தில் விற்க, அரசுத் துறைகள் பணிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் வயல்களில் விழுந்த தென்னை, மா, பலா, முந்திரி மற்றும் சவுக்கு போன்ற மரங்களை அகற்றி, அவற்றை ஏலம் விடுவதற்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், வனத் துறை மற்றும் தனியார் மர விற்பனையாளர்கள்மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கால்நடைத் தீவனங்கள் தடையின்றி கிடைப்பதற்காக அவற்றை இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது. கஜா புயலினால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களும் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என அறிவிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 13 கடற்கரை மாவட்டங்களிலும் கரை பாதுகாப்பு வளையங்களை உருவாக்க 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, வனத் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட திட்ட மேலாண்மை அமைப்பைப் போன்றே, தற்போது கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு "கஜா மறு கட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டம்"

என்று தனியாக ஒரு திட்ட அலகு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், வீடுகள் கட்டுவது, தென்னை மறு சாகுபடி உள்ளிட்ட நிரந்தர மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த 3 இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் 2 அதிகாரிகள் தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுவார்கள்.

மத்திய அரசு, மாநில பேரிடர் நிவாரண நிதியாக 353.70 கோடி ரூபாயை முதல் தவணையாக 2018-2019 ஆம் நிதியாண்டுத் தொடக்கத்திலேயே வழங்கியது. மேலும், கஜா புயலுக்குப்பின் நமக்கு வர வேண்டிய இரண்டாம் தவணையான 353.70 கோடி ரூபாயை டிசம்பர் மாதம் உடனடித் தேவைக்காக விடுவித்தது. 31-12-2018 அன்று தேசிய பேரிடர் நிவாரண நிதியாக 1,146 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு இதுவரை 2,301 கோடியே 41 இலட்சம் ரூபாயை பல்வேறு துறைகளுக்கு நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்துள்ளது. மாநில பேரிடர் நிவாரணத் தொகுப்பிலிருந்து தரப்படும் நிவாரணத் தொகையை மாற்றியமைக்க வேண்டுமென்றும் ஒரு விரிவான கடிதத்தை நான் 29-11-2018 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ளேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மற்றொரு கடிதத்தில் விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்கான காலக்கெடுவினை நீட்டிப்பதற்கும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி வலியுறுத்தியுள்ளேன். அதன் பயனாக, மத்திய அரசு காலக்கெடுவினை மேலும் 15 நாட்கள் நீட்டித்தது. இதனால், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு பல விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

28-12-2018 அன்று கஜா புயல் நிவாரணம் மற்றும் சீரமைப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டம் ஒன்று எனது தலைமையில் மூத்த அமைச்சர்கள், உயரதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை உடனடியாகவும், முழுமையாகவும் வழங்கிடவும், விவசாய மின் இணைப்புகளை சீராக்கும் பணிகளை கூடுதல் பணியாளர்களைக் கொண்டு விரைந்து முடிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.





“கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி” என்று மக்களுக்கு எடுத்துரைத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் வழி வந்த *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மாவின் அரசு, வேளாண் பெருமக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு இயற்கைப் பேரிடரினால் ஏற்பட்ட விவசாயிகளின் துயர் துடைத்து, அவர்கள் இயல்பு வாழ்க்கைத் திரும்புவதற்கு என்றென்றும் உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

“ஊர் கூடி தேர் இழுத்தால் வந்து சேரும்; சிறு உளிகள் செதுக்குவதே சிற்பமாகும்” என்பதுபோல, கஜா புயலினால் ஏற்பட்ட சேதங்களுக்கான மீட்பு, நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு, இரவு, பகல் பாராமல் உழைத்த அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், அனைத்துத் துறை அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள், குறிப்பாக தங்கள் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றிய மின் வாரியப் பணியாளர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், வேளாண்மைத் துறை, குடிநீர் வழங்கல் வாரியம், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, கால்நடை மற்றும் மீன் வளத் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாணாக்கர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகிய அனைவருக்கும் எனது சார்பிலும், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றிகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தப் பாதிப்புகளை ஈடு செய்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்கிய மக்கள் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள், தொழில் நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், அரசு ஊழியர்கள், பொதுத் துறை ஊழியர்கள், பொது மக்கள், மாணாக்கர்கள் மற்றும் தங்கள் உழைப்பையும், பல்வேறு நிவாரணப் பொருட்களையும் அள்ளிக் கொடுத்த பல்வேறு தரப்பினருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

"தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிதான் என்னுடைய வளர்ச்சி என்ற முறையில் நான் தொடர்ந்து பாடுபடுவேன்" என்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அமுத மொழிக்கேற்ப, மக்களுக்காகவே செயல்படும் அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-30*

இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள், "இன்னும் பல இடங்களுக்கு நிவாரண உதவிகள் சென்றடையவில்லை" என்று சொன்னார்கள். இப்பொழுது நான் முழுமையாகத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், இலட்சக்கணக்கானவர்கள் இந்தப் புயலால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதுகுறித்துக் கணக்கிடப்பட வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதைப்போல, எவ்வளவு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற முழு விவரத்தையும் தெரிவித்திருக்கிறேன். அவற்றையெல்லாம் கணக்கிட்டு, உரிய முறையிலே அவர்களுக்கு அந்த நிவாரணம் போய்ச் சேரவேண்டும். அந்தப் பணியிலே, அதிகாரிகளை ஈடுபடுத்தி, நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அதுமட்டுமல்ல; இன்றைக்கு மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள், முழுமையாக இன்னும் பல பகுதிகளில் மின்சாரம் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். மின்சாரம் கிட்டத்தட்ட 99 சதவிகிதம் வழங்கப்பட்டுவிட்டது. எஞ்சிய 1 சதவிகிதம்தான் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. அதுவும் குறிப்பாக, டெல்டா மாவட்டம் வயல்கள் நிறைந்த பகுதி. டெல்டா பகுதியில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். வயல்வெளியில் ஒரு மின்கம்பம் சாய்ந்துவிட்டால், ஒடிந்துவிட்டால், கிட்டத்தட்ட 3 பர்லாங், 4 பர்லாங் தூரம் எடுத்துச் சென்றுதான் மின்கம்பத்தை நடவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு கம்பத்தை எடுத்துச் செல்வதற்கு 20 பேர் தேவைப்படுகிறது. அந்த வயல் பகுதியில் வழுக்கி விழுந்துவிட்டால் அவர்கள் உடல் நலன் பாதிக்கப்பட்டுவிடும்; கை, கால்கள் உடைந்துவிடும். எச்சரிக்கையாக அந்த மின்கம்பங்களை எடுத்துச்சென்று, வயல் பகுதியில் நட வேண்டும். அதுவும் நீர் சூழ்ந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, மண்ணை எடுத்தால், குழ குழ என்றிருக்கும். அந்த மண், உறுதித் தன்மை இல்லாத காரணத்தினாலே, அங்கே மின்கம்பத்தை நட்டால், உடனே சாய்ந்துவிடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. மின்கம்பம் நடுவதற்குத் தேவையான மண்ணை வெளியிலிருந்து எடுத்து வந்து நிரப்பி, உறுதிப்படுத்தியபின்தான், மின் பணியாளர்கள் அந்தப் பணியைச் செய்ய வேண்டும். ஒரு மின்கம்பம் நடுவதற்கு கிட்டத்தட்ட 6, 7 மணி நேரம் ஆகிவிடுகிறது. இதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது. நகரப் பகுதியாக இருந்தாலும் சரி, பேரூராட்சிப் பகுதிகளாக இருந்தாலும் சரி, வறண்ட பகுதிகளில் ஒடிந்து விழுந்த மின்கம்பங்களையெல்லாம் அகற்றி, புதிய மின்கம்பங்களை நட்டு, அந்தப் பகுதிகளில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. கிராமங்களிலே இருக்கின்ற டெல்டா பாசனப் பகுதியிலே, இப்பொழுது நெற்பயிர்களெல்லாம் முதிர்ந்திருக்கின்ற நிலை. இந்த நிலையில், அந்தப் பகுதிகளில் உள்ள வயல்களின் வழியாக மின் கம்பங்களை எடுத்துச் சென்றால், அங்குள்ள விவசாய நிலங்களில் எடுத்துச் செல்லக் கூடாது என்று விவசாயிகள் தடை செய்கிறார்கள். ஏனெனில், மின் கம்பங்களை வயல்களில் எடுத்துச்சென்றால் விளை நிலங்கள் எல்லாம் பாதித்துவிடும். இந்தச் சூழ்நிலையின் காரணமாகத்தான் எஞ்சிய பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளிலும், விரைந்து செயல்படுத்தி, அனைவருக்கும் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்காக நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 15 நாட்கள் அங்கேயே தங்கியிருந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மேலும், அரசு கொடுத்த நிவாரணத்தைவிட, எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அதிக அளவில் நிவாரணம் கொடுத்திருக்கின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* நீங்கள் அங்கேயிருக்கின்ற மக்களைப் போய்ப் பாருங்கள். நாகப்பட்டினம் மாவட்டத்திலிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். கட்சி அலுவலகத்திலே 400 பேரை வைத்துக்கொண்டு, பல இடங்களிலிருந்து கழகத்தின் நிருவாகிகள் அளித்த பொருட்களை பைகளில் போட்டு, அந்தந்தப் பகுதிக்கு நிவாரணம் கொடுத்திருக்கிறோம். அரசு கொடுத்த நிவாரணம், அதுமட்டுமல்லாமல், பல்வேறு மக்கள் கொடுத்த நிவாரணம், கட்சிகள் சார்பாக கொடுக்கப்பட்ட நிவாரணம் எல்லாம் எல்லா வீடுகளுக்கும் பாகுபாடில்லாமல் கொடுக்கப்பட்டன. அங்கு "கையேந்தி நின்றார்கள்" என்று சொல்வதெல்லாம் தவறு.

ஆகவேதான், 27 பொருட்களைக் கொடுத்திருக்கின்றோம். இதுவரை, வறட்சியால், புயலால், பேரிடரால் ஏற்பட்ட இடர்பாடுகளில் மக்கள் பாதிக்கப்பட்டபோது, இவ்வளவு பொருட்கள் கொடுக்கப்பட்டதாக வரலாறே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மக்களின் தேவை என்ன என்பதை உணர்ந்து, மக்களின் அன்றாடப் பயன்பாட்டிற்கு என்ன தேவை என்பதை உணர்ந்து, அத்தனை பொருட்களையும் சரிபார்த்து, அந்தப் பெட்டியிலே போட்டு, அவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

அங்கே மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்கலாம். ஆனால், அந்த ஊரிலுள்ள எல்லோரும் நிவாரணம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுதான் பிரச்சினையே. ஆகவேதான், எல்லா விவரங்களும் கணக்கிடப்பட்டுள்ளன. அரசு அலுவலர்கள்தான் கணக்கிட்டார்கள். கணக்கிட்டவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் அல்ல. அரசு ஊழியர்கள் கணக்கிட்டுக் கொடுத்ததன் அடிப்படையில்தான், அரசு நிவாரணப் பொருட்களைக் கொடுக்கின்றது. நிவாரண முகாம்களில் தங்கியிருந்த அனைவருக்கும் 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அதில் எந்தவொரு பாகுபாடும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை பேருக்கும் உடனுக்குடன் கொடுக்க வேண்டும் என்பதற்காக, புயலால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும், நிவாரண மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அங்கு 150 computers வைக்கப்பட்டு, ECS மூலமாகப் பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளில் உடனுக்குடன் வரவு வைக்கப்பட்டன. எந்தவிதத் தவறும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வங்கிக் கணக்குகளில் அந்தப் பணம் அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வாறு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இலட்சக்கணக்கானவர்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டும். நீங்கள் சொன்னவுடன் கொடுப்பதற்கு, அங்கு ஒருவர், இரண்டு பேர் மட்டும் அல்ல. பாதிக்கப்பட்ட அனைவரையும் கணக்கிட வேண்டும்.

*பிற்பகல் 12-35*

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு ஒவ்வொரு பகுதியாகச் சென்று, அங்கு கணக்கெடுத்ததில், மரங்கள் மட்டும்–கிட்டத்தட்ட 78,584 ஹெக்டேர் பரப்பில் உள்ள தென்னை மரங்கள் எல்லாம் சாய்ந்திருக்கின்றன. அத்தனை இடங்களுக்கும் சென்று பார்வையிட்டு, எத்தனை மரங்கள் சாய்ந்துள்ளன என்பதைக் கணக்கெடுக்க வேண்டுமென்றால், எவ்வளவு நாட்கள் ஆகும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், நீங்களும் ஒரு விவசாயியாக இருக்கின்றீர்கள். எனவே, பாதிப்புக்குள்ளாகிய பகுதிகளில் கணக்கெடுக்கும்போது, துல்லியமாகக் கணக்கிட வேண்டும். எந்தவொரு விவசாயியும் விடுபட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கின்றது. அதேபோன்று, 23,141 ஹெக்டர் பரப்பளவில் உள்ள தோட்டக்கலைப் பயிர்கள் சேதமடைந்திருக்கின்றன என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.





அடுத்து, வேளாண் பயிர்கள்; 20,357 ஹெக்டர் பரப்பளவில் உள்ள வேளாண் பயிர்கள் சேதமடைந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் அங்கிருக்கின்ற வருவாய்த் துறை அதிகாரிகளும், வேளாண் துறை அதிகாரிகளும் பார்வையிட்டு, அவர்கள் கொடுத்திருக்கின்ற கணக்கின் அடிப்படையில்தான் அரசு இந்த நிவாரணத் தொகையை வழங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதுமட்டுமல்ல; குடிசைகளைப் பொறுத்தவரையில், பாதிப்படைந்த குடிசைகள் மொத்தம் 5,57,492. அத்தனை பேருக்கும் நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும். இவற்றிற்காக மையங்கள் அமைக்கப்பட்டு, உடனுக்குடன் நிவாரணம் வழங்கிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) புயல் வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, வறட்சி ஏற்பட்டாலும் சரி, எத்தகைய இயற்கைப் பேரிடர் வந்தாலும் உடனுக்குடன் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கக்கூடிய ஒரே அரசு, அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் பேசும்போது, “அங்குள்ள மக்கள் உணவுக்காக கையேந்துகின்ற நிலை இருக்கிறது” என்று குறிப்பிட்டார்கள். அந்த நிலை நிச்சயமாக இல்லை. ஏனென்றால், புயல் வந்தவுடன் எவ்வளவு சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை யாரும் கணக்கிட முடியாது. இது இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்டுள்ள சேதம். இதுவரை இல்லாத அளவிற்கு பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிற ஒரு புயல். யாரும்

எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு அந்தப் புயலினுடைய தாக்கம் இருந்த காரணத்தினால், அதிகளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. அங்கு ஒருவார காலமாக தகவல் தொடர்பே இல்லை. ஆகவே, இவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டிய அந்தச் சூழ்நிலையில், யாரும் யாரையும் பார்க்க முடியவில்லை. அங்கு செல்வதற்கு வழியும் இல்லை; சாலைகளிலெல்லாம் மரங்கள் சாய்ந்துவிட்டன. அந்தப் பகுதியிலேயே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், புயலினால் ஏற்பட்டுள்ள சேதங்களை நன்கு அறிவார்கள். அந்த நிலையிலும்கூட, அரசு ஊழியர்களால், சாலைகளிலிருந்த மரங்களெல்லாம் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டு, தகவல் தொழில்நுட்பக் கோளாறுகள் சரிசெய்யப்பட்டு, வாகனங்கள் செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது. அந்த அளவிற்கு அங்கிருந்த அரசு ஊழியர்கள், உண்மையிலேயே கடுமையாகப் பணியாற்றினார்கள். அது அங்கிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, அரசு முடிந்த அளவிற்கு அனைத்து உதவிகளையும் செய்து, அங்கே போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவாக, புயலால் பாதிக்கப்பட்ட மக்கள் மீட்டெடுக்கப்பட்டனர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, நன்றி கூறி அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுதே நேரம் 12 மணி 37 நிமிடங்கள் ஆகிவிட்டன. நேரத்தின் அருமை கருதி நான். . . (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயலால் ஏற்பட்ட பாதிப்பின்போது, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படாதவண்ணம், காவல் துறை அதிகாரிகளும் அங்குள்ள மக்களுக்கு உடனுக்குடன் உதவிகளைச் செய்தார்கள். அதற்காக, காவல் துறை அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) தமிழ்நாட்டில் விளை நிலங்களில் உயரமூத்த மின் கோபுரங்கள் அமைப்பதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி, இன்றைக்கு இன்னொரு சிறப்புக் கவன ஈர்ப்பினையும் நான்





எடுத்துக்கொள்கிறேன். நேரம் அதிகமாகிவிட்டது. அதுகுறித்துப் பேசுகிற உறுப்பினர் பெருமக்கள் குறித்த காலத்திற்குள் பேசி, உரையை முடிக்க ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்புக் கவன ஈர்ப்பு. தமிழ்நாட்டில் விளை நிலங்களில் உயரமுத்த மின் கோபுரங்கள் அமைப்பதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி ஆகியோரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள் கஜா புயல் பாதிப்பு குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பில் பேச அனுமதிக்கப்பட்டதால், ஏற்கெனவே அவரிடம் தெரிவித்தவாறு, இதிலே பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். எனவே, அவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும். ஆகவே, உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, குறித்த நேரத்தில் உரையை முடித்துக்கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ள உறுப்பினர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் தங்கள் கருத்துகளைச் சுருக்கமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள். முதலிலே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை இதுகுறித்துப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளை நிலங்கள் பாதிக்கப்படுவது சம்பந்தமான ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து நான் மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற 13 மாவட்டங்களில் விளை நிலங்கள் வழியாக உயர் மின் கோபுரங்கள் அமைக்கப்படுகிற காரணத்தால், 2018 ஆம் ஆண்டு, மே 6 ஆம் தேதியிலிருந்து சுமார் 7 மாதங்களாக அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். Power Grid நிறுவனமும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகமும் விவசாயிகளிடத்தில் கேட்காமல், இந்த உயர் மின் கோபுரங்களை அமைக்கக்கூடிய பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. 40-க்கு 90 மீட்டர் அகலத்தில் மின் பாதை அமைக்கிற காரணத்தால், ஒரு ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கர் நிலங்கள் வைத்திருக்கக்கூடிய இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டிருக்கக்கூடிய சிறு, குறு விவசாயிகள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; நிலம் எடுப்பதற்கு போதிய இழப்பீட்டுத் தொகையும் வழங்குவதில்லை. ஏற்கெனவே, கடந்த காலங்களில் நிறுவப்பட்டிருக்கிற உயர் மின் கோபுரங்களுக்கு மாதாந்திர வாடகையும் வழங்க முடியாத நிலை. அந்த நிலங்களை விவசாயிகள் எதற்கும் பயன்படுத்த முடியாத நிலையில், அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இது வேதனைக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

ஏற்கெனவே 13 மாவட்டங்களில் 200-க்கும் மேற்பட்டிருக்கக்கூடிய ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி, 16-க்கும் மேற்பட்டிருக்கக்கூடிய ஆர்ப்பாட்டங்களிலே, அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு, அதன் தொடர்ச்சியாக சென்னையிலே இப்போது அவர்கள் போராடக்கூடிய நிலை வந்திருக்கிறது. ஆக, சென்னையிலே நேற்றையதினம் போராடியவர்களை இந்த அரசு கைது செய்து, சென்னையில், சிந்தாதிரிப்பேட்டை பகுதியில் உள்ள இரண்டு திருமண மண்டபங்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று காலையில்கூட நானும், எங்களுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் நேரடியாகச் சென்று அவர்களையெல்லாம் பார்த்துவிட்டுத்தான் வந்தோம்.





பெண்களென்றும்கூட பாராமல் அவர்களை இரவிலே கைது செய்து, திருமண மண்டபத்தில் அடைத்து வைத்திருப்பது என்பது மனித உரிமையை மீறிய செயலாக அமைந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, உடனடியாக அவர்களை இந்த அரசு விடுதலை செய்ய வேண்டும். அவர்களை நேற்றையதினம் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்; நான் ஏற்றுக்கொள்கிறேன். பேச்சுவார்த்தையில் உடன்பாடு வரவில்லை. இன்று நாங்கள் அவர்களைச் சந்தித்த நேரத்தில் அவர்கள் வைத்த ஒரு கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாங்கள் சந்திக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் எங்களை அழைத்துப் பேசிட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

குறிப்பாக, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, பூமிக்கு அடியில் கேபிள் வழியாக மின்சாரத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்று அந்த விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். இதை நான் சொல்கிறபோது, துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கேபிள் வழியாக மின்சாரத்தைக் கொண்டு செல்வது சாத்தியமில்லை என்று ஒரு விளக்கம் சொல்லலாம். நான் ஏற்றுக்கொள்கிறேன்; அதை மறுக்கவில்லை. ஆனால், தற்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில், சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய பகுதிகளில்கூட 400 கிலோ மீட்டர் பரப்பளவில் இருக்கக்கூடிய துணை மின் நிலையங்களை இணைக்கக்கூடிய வகையில், 400 கிலோ வாட் மின்சாரத்தை 110 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதை வடங்களை சாலையோரமாக அமைத்திட தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஒப்பந்தப்புள்ளியைக் கோரியிருக்கிறது. அதற்கான ஆதாரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. அது மாண்புமிகு அமைச்சரிடமும் இருக்குமென்று நான் நம்புகிறேன்.

அதேபோல, Power Grid நிறுவனம் கேரளாவில் 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு 325 கிலோ வாட் மின்சாரத்தைத் தற்போது புதைவட கேபிள் வழியாகக் கொண்டு செல்லும் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஏன், நம்முடைய தமிழ்நாட்டில், மதுரையிலிருந்து இலங்கை, புதிய அனுராதாபுரத்திற்கு 525 கிலோ வாட் மின்சாரத்தை கூட புதைவட கேபிள் அமைத்து, கடல் பகுதியில் கொண்டுசெல்வதற்கான ஒரு செயல் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கக்கூடிய பல மாநிலங்களில்கூட பார்க்கிறோம். உதாரணமாக சத்தீஸ்கர் மாநிலம், ரெய்ச்சூர் முதல் புகளூர் வரை 800 கிலோ வாட் மின்சாரத்தைப்

புதைவட கேபிள்மூலம் கொண்டு செல்லும் திட்டத்தை (A.V.B.) நிறுவனம் புதிய தொழில்நுட்பம் மூலமாகச் செய்து வருகிறது. அதுமட்டுமல்ல; கேபிள்மூலம் மின்சாரத்தை எடுத்துச்செல்கிற காரணத்தால், 10 சதவிகிதம் மின் இழப்பு சேமிக்கப்படுகிறது. இதனால் ஆண்டுக்கு சுமார் 42 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பும் தவிர்க்கப்படும் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அப்படியிருக்கும்போது, தமிழ்நாட்டில் மட்டும் ஏன் 400 கிலோ வாட், 800 கிலோ வாட் மின்சாரத்தைப் புதைவட கேபிள் மூலமாகக் கொண்டு செல்லும் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறோம் என்பதுதான் என்னுடைய கேள்வி. மனமிருந்தால் மார்க்கமுண்டு. பணமிருந்தால் செய்யலாமென்று விளக்கம் சொல்வீர்கள். இருந்தாலும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தப் பணிகளையெல்லாம் உடனடியாக நிறுத்தி, சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளை அழைத்துப் பேசி, சுமுகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, புதைவட கேபிள் வழியாகக் கொண்டு செல்லக்கூடிய அந்தத் திட்டத்தை இந்த அரசு உடனடியாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

பிற்பகல் 12-45

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக மின் விநியோகம், உயர் மின் கோபுரங்கள் வழியாகத்தான் நமது தேசம் முழுவதும் இவ்வளவு ஆண்டுக் காலமாக நடந்தது. ஆனால், இப்போது மின் நுகர்வு அதிகரித்திருக்கிறது. அதன் காரணமாக, குறிப்பாக, எங்களுடைய மேற்கு மண்டல பகுதிகளில் விளை நிலங்கள் முழுவதும் மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு, மின் வழித்தடங்களாகவும், மின்சாரக் கம்பிகள் செல்லும் வழியாகவும் இருக்கின்றன. எனவே, நிலத்தை தேசத்தின் சொத்தாகக் கருதி, மத்திய அரசும், நம்முடைய மாநில அரசும், உயர் மின் கோபுரங்கள் அமைத்து, பூமியின் மேல் பகுதியில் மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்கு மாற்றாக, புதைவடங்கள் அமைத்து, அதைக் கொண்டு சென்றால், விவசாய விளை நிலங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இருக்கும்.





அதேபோன்று, கஜா புயலினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட துறை, மின்சாரத் துறைதான் என்று நாம் எல்லோரும் அறிவோம். பூமிக்கு மேலே உயர் மின் கோபுரங்கள் செல்வதால், புயலினால் அவை சாய்ந்து, மின் கம்பிகள் அறுந்து விழுந்து பெருமளவிற்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது. புதைவடங்களாக அதை மாற்றினால், இதுபோன்ற இயற்கைப் பேரிடர் காலங்களில், நமக்கு சேதம் அதிக அளவில் ஏற்படாது. எனவே, மின்சாரத் துறை இதுபோன்ற பாதிப்புகளைத் தவிர்க்கும் வகையில், உயர் மின் கோபுரங்களை அமைத்து, விளை நிலங்களின் வழியாக மின்சாரத்தைக் கொண்டு செல்லாமல், புதைவடங்கள் அமைத்து மின்சாரத்தைக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசும், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு எடப்பாடியாருடைய அரசும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. தங்கமணி அய்யா அவர்களும், மிகுந்த பரிவோடு விவசாயிகளுடைய இந்த நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, புதிதாக அமைக்கவிருக்கின்ற மின் வழித்தடங்களை புதைவடங்களாக மாற்றிடவும், ஏற்கெனவே, உயர் மின் கோபுரங்களின் வழியாக மின்சாரம் கொண்டு செல்வதை மாற்றி, புதைவடங்கள் அமைத்து, அதன் மூலமாக அனைத்து மின்சாரத்தையும் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு எடப்பாடியாருடைய அரசு இதனைப் பரிசீலிக்குமா? இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் மின்சாரத் துறையில் அதற்கேற்ப கொள்கை மாற்றத்தைக் கொண்டு வர வேண்டுமென்றும் கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே தொடர்ந்து விவசாயிகள் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு போராட்டங்கள்; டெல்லி வரை அவர்கள் சென்று போராட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இதற்குப் பரிகாரம் கிடைக்கவில்லையென்ற வருத்தத்தோடு இருக்கிற நிலையில், கோவை, திருப்பூரில் தாராபுரம், சேலம் போன்ற பல மாவட்டங்களில் விளை நிலங்களின் வழியாக மின் வழித்தடங்களை அமைப்பதை எதிர்த்து, விவசாயப் பெருமக்கள் போராளிகளாக நின்று, இன்றைக்குப்

போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போராடுவது அவர்களுடைய உரிமை. நேற்றையதினம் பெண்கள் உட்பட, பலரைக் கைது செய்திருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

வெளிநாடுகளிலே, இன்னும் பல மாநிலங்களிலே, குறிப்பாக, கேரளாவிலே, புதைவடங்களை அமைத்திருக்கிறார்கள். அது எளிதான ஒன்று; அரசுக்கு இலாபமான ஒன்று. 400 கிலோ வாட், 500 கிலோ வாட், 800 கிலோ வாட் மின்சாரத்தை உயர் மின்னழுத்தக் கம்பிகள்மூலம் விவசாய நிலங்களின் வழியாகக் கொண்டு செல்லும்போது, பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. விவசாயிகள் பயிரே செய்ய முடியாத அவல நிலையில் இருக்கிறார்கள். இது நடைமுறையில் இருக்கக்கூடிய ஒன்று. அதனால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. மேலும், விளை நிலங்களில் ஏற்கெனவே போடப்பட்ட மின் கம்பங்களுக்கு, அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈட்டைக் கொடுக்கவில்லை. அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் அரசு இல்லை. அவர்களுக்கு உரிய நஷ்ட ஈட்டினை வழங்கி, அவர்களைச் சமாளிப்பதற்கான சூழ்நிலையும் இல்லை. தொடர்ந்து இந்தப் பிரச்சினை இருக்குமென்றால், முழுவதுமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டு விடுவார்கள். நமக்கு விவசாயிகள் மிகவும் முக்கியமானவர்கள்; விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. ஆகவே, புதிதாக புதைவடங்கள் அமைத்து, அவற்றின் மூலமாக மின்சாரத்தைக் கொண்டு செல்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். அதை இந்த அரசு செய்யுமென்ற நம்பிக்கை இருக்கிறது; செய்ய வேண்டும். இல்லையென்றால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, எதிர்காலத்திலே விவசாயிகள் பாதிப்படையாத வகையில், உரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு, நாமக்கல், திருப்பூர் உள்ளிட்ட 13 மாவட்டங்களிலே விளை நிலங்களிலே உயர் மின் கோபுரங்களை



அமைப்பதை எதிர்த்து, அங்கேயுள்ள விவசாயிகள் எல்லாம் பல்வேறு நிலைகளிலே போராடி வருகின்றார்கள். உயர் மின் கோபுரங்களை அமைப்பதற்குப் பதிலாக, கேரளா போன்ற மாநிலங்களிலே செய்திருப்பதைப் போன்று, பூமிக்கடியிலே புதைவடங்களை அமைப்பது போன்ற பணியினைச் செய்தால், விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் இருக்காது என்று அங்கேயுள்ள பொது மக்கள் எல்லாம் வலியுறுத்தி வருகின்றார்கள். தொடர்ந்து பல்வேறு நிலைகளிலே விவசாயத்தைப் பற்றியும், விவசாயிகளைப் பற்றியும் ஆதங்கப்பட்டுப் பேசும்போதெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தானும் ஒரு விவசாயிதான் என்று ஒவ்வொரு முறையும் சொல்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் அவருடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையிலே, இதுபோன்ற கோரிக்கைகளை அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் வைத்து வருகின்றோம். எனவே, இதுசம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களோடு வெளிப்படையாகப் பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும்; விவசாயிகளினுடைய துயர் துடைக்கக்கூடிய பணிகளில் இந்த அரசாங்கம் ஈடுபட வேண்டுமெனக் கேட்டு, தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக ஈர்த்து அமைகின்றேன்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அனைவரும் மின் கோபுரங்கள் அமைப்பது பற்றிக் குறிப்பிட்டு, அதை புதைவடத் தடங்களாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இதை வலியுறுத்தித்தான், விவசாயிகளும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியதுபோல, எல்லோரும் சொன்னதைப்போல, அவர் ஒரு விவசாயி, விவசாயிகளுடைய கஷ்டங்களை அறிந்தவர். அவர் விவசாயியாக இருக்கின்ற காரணத்தால், விவசாயிகளுக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அறிந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பின்படி,

இன்றையதினம் விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளை அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. மின்கோபுரம் அமைப்பதைப் பற்றி இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சட்டீஸ்கர் மாநிலத்திலிருந்து 6,000 மெகா வாட் அளவிற்கு மின்சாரத்தை நேரடியாகத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து, அதன்மூலம் தமிழ்நாடு 4,000 மெகா வாட்டும், கேரளா 2,000 மெகா வாட்டும் பயன்பெற பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த மின்சாரம் நமக்காக வருகின்றது. வழியில் இருக்கின்ற வேறு எந்த மாநிலத்திற்கும் இந்த மின்சாரம் கிடையாது. மாண்புமிகு அம்மா அவர்கள், கிட்டத்தட்ட 7 ஆண்டுக் காலமாகப் போராடி இந்தத் திட்டத்தைக் கேட்டுப் பெற்றிருக்கின்றார்கள். தமிழகம் வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில், மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகின்றது. வருடத்திற்கு 1,000 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகத் தேவைப்படுகின்ற காரணத்தால், அதற்கான கட்டமைப்பை ஏற்படுத்தினால் மட்டுமே தமிழகம் மின் மிகை மாநிலமாக இருக்கும்; தமிழகத்தை மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்க முடியும் என்ற அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கிட்டத்தட்ட 7 ஆண்டுகளாகிவிட்ட நிலையில், இப்போதுதான் அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சட்டீஸ்கரிலிருந்து கேரளா வரை 1,761 கி.மீ. தூரத்திற்கு பணிகள் நடைபெறுகின்றன. சட்டீஸ்கர், மகாராஷ்டிரா, ஆந்திரா, தெலுங்கானா போன்ற மாநிலங்களிலெல்லாம் இந்தப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. தமிழகத்தில், வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம் உட்பட 13 மாவட்டங்களில் இதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், இந்த மின் கோபுரங்களை அமைக்கக் கூடாது என்று அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, அங்கே சென்று அதைப் பார்த்ததாகச் சொல்லியிருக்கின்றார்கள். இது 800 கிலோ வாட் திறன் கொண்ட ஒரு மின் கோபுரம்; உலகத்திலேயே 800 கிலோ வாட் திறன் கொண்ட கேபிள் கிடையாது என்பதை நான் பலமுறை விவசாயிகளிடத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இப்போது சபையின் வாயிலாகவும் சொல்லியிருக்கிறேன். வளர்ந்த நாடான அமெரிக்காவில்கூட, 800





கிலோ வாட் அளவிற்கு மின்சாரத்தைக் கொண்டுசெல்வதற்கான கேபிள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயியாக இருக்கின்ற காரணத்தால், அப்படியொரு வாய்ப்பு இருந்தால், அதை முதன்முதலாக தமிழகத்தில் பயன்படுத்த வேண்டும் என்றுதான் சொல்வாரேயொழிய, விவசாயிகளைப் பாதிக்கின்ற திட்டங்களை நிச்சயமாகச் சொல்லமாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியொரு தொழில்நுட்பமே இல்லாத நிலையில், 800 கிலோ வாட் திறன்கொண்ட கேபிள்களைப் புதைவடத் தடமாக போட வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். நான் அவர்களை பலமுறை அழைத்துப் பேசினேன். "இதுபோன்ற வாய்ப்பு இல்லை. இதுபோன்ற தொழில்நுட்பமே இல்லாமல் இருக்கின்றது" என்று சொன்னேன்.

நேற்றையதினம்கூட, என்னிடத்தில் அவர்கள் பேசியபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வைத்த கோரிக்கையைத்தான் அவர்களும் சொன்னார்கள். இலங்கையில், கடலுக்கடியில் செல்கின்ற மின் பாதை மூலமாக கிட்டத்தட்ட 500 மெகா வாட் அளவிற்குத்தான் மின்சாரத்தைக் கொண்டு சென்றிருக்கின்றார்கள். அதற்குரிய கருத்துருதான் இருக்கிறது. அதுகூட நடைமுறையில் சரியாக வருமா என்பதை அவர்கள் ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், கடலில் நேராகப் போட்டுவிடலாம், அங்கே எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், இங்கே புதைவடங்களாக அந்த அளவிற்கு அமைப்பதற்கு தொழில்நுட்பம் இல்லை. இருந்தாலும்கூட, அப்படிப் போடுகின்றபோது, 5 கி.மீ., 10 கி.மீ.-க்கு ஒருமுறை அந்தக் கேபிள்களை இணைப்பதற்கு மற்றோர் இணைப்பு போட வேண்டும். அதற்காக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். அதற்கான நிலத்தைக் கையகப்படுத்த வேண்டும். எனவே, விவசாயிகள் இவற்றையெல்லாம் தெரிந்துகொள்ளாமல், எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் குறையாகச் சொல்லவில்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில், இதேபோல் மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; 1996-2001-ல் 9,409 மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன; 2006-2011-ல் 19,716 மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அப்பொழுதெல்லாம் அந்த விவசாயிகள் போராடவில்லை. அப்பொழுதெல்லாம் அந்த விவசாயிகள் புதைவடங்களாகப் போட வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், இப்பொழுது சொல்கிறார்களென்று

[திரு. பி. தங்கமணி] [2019 ஜனவரி 4

சொன்னால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். "கேரளாவிலே புதைவடத் தடங்களாகப் போடுகிறார்கள்" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள் உட்பட பலபேர் என்னிடத்தில் வந்து தெரிவித்து கேள்விகளைக் கேட்டார்கள். அப்போது, நான் அவர்களிடத்தில் சொன்னேன், தமிழகத்திற்கு 4,000 மெகா வாட் மின்சாரம் கொண்டுவரப்படுகிறது; கோயம்புத்தூரிலிருந்து அதைப் பிரித்து, 2,000 மெகா வாட் கேரளாவிற்கும் செல்கிறது. 320 கிலோ வாட்டாக அதை மாற்றி கொண்டு செல்கின்றார்கள். அதிலும்கூட, வனப் பகுதியாக இருக்கின்ற பகுதியிலும், கொச்சின் நகரத்திலும் மட்டும்தான் 29 கி.மீ. தூரத்திற்குப் புதைவடத் தடமாகப் போடப்படுகின்றது; அது 320 கிலோ வாட் மின்சாரம்தான். கேரளாவிலும் மீதமுள்ள பகுதிகளில் 183 மின் கோபுரங்கள்தான் அமைக்கப்படுகின்றன. ஆகவே, தவறான தகவலை விவசாயிகளுக்குச் சொல்லி, விவசாயிகளைத் திசை திருப்புகின்றார்கள். நான் அவர்களிடம், "நீங்கள் வாருங்கள்; நான் உங்களை அழைத்துச் சென்று காண்பிக்கிறேன். மின் கோபுரம் அமைத்தால், நீங்கள் ஒப்புக்கொள்ளுங்கள். இல்லையென்றால், உங்களுடைய கோரிக்கைகளை நான் ஒப்புக்கொள்கிறேன்" என்று சொன்னபோது, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

பிற்பகல் 12-55

கேரளாவிலே அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது போராடினார்கள். இதேபோன்று, மின் கோபுரங்களை போடக் கூடாது என்று சொன்னார்கள். இன்றையதினம் அங்கே ஆளுங்கட்சியாக அவர்கள் இருக்கின்ற நிலையில், 153 டவர்களைப் போடுவதற்கு அனுமதித்து, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக, அரசியலுக்காக இதைச் செய்கிறார்கள் என்பதுதான் என்னுடைய தனிப்பட்ட கருத்து. நான் உங்களைச் சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், முதலிலே அவர்களைத் தூண்டி விட்டுவிட்டார்கள். தூண்டிவிட்டதற்குப் பின்னால், இந்தப் பணியை எப்படியாவது நிறுத்த வேண்டும்; இந்தப் பணியை நிறுத்தினோமென்று சொன்னால், மேற்கு மாநிலங்களிலே இருப்பதுபோல மின்சாரப் பற்றாக்குறை வரும்; மின்சாரப் பற்றாக்குறை வந்தால், அதன்மூலம் அரசியல் ஆதாயம்



2019 ஜனவரி 4] [திரு. பி. தங்கமணி]

அடையலாமென்று ஒரு சிலர் நினைத்திருக்கின்றார்கள். நான் அதற்குள் செல்லவில்லை.

எனவே, உங்களுடைய ஆட்சிக் காலமாக இருந்தாலும் சரி; அம்மாவினுடைய ஆட்சிக் காலமாக இருந்தாலும் சரி; யார் ஆட்சியில் இருந்தாலும், உயர் மின் கோபுரங்கள் அமைத்துத்தான் அதைக் கொண்டு செல்ல முடியும் என்பதை தயவுசெய்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நான் வேண்டுமென்று சொல்லவில்லை. ஏனென்றுசொன்னால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோதே, அமைச்சர் இதற்கு பதில் சொல்வார் என்று சொன்னார்கள். அது முடியாததுதான். அதுபோன்ற ஒரு technology இல்லாதபோது, எப்படி அதைப் போட முடியும் என்பதுதான் என்னுடைய கருத்து. அதே விவசாயிகளிடத்திலே நான் நேற்று கேட்டேன். "இதுகாறும் இத்தனை டவர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக உங்களுடைய தோட்டத்திற்கு, விவசாயத்திற்கு மின் இணைப்பு வந்திருக்கின்றது; உங்களுடைய வீட்டுக்கு மின் இணைப்பு வந்திருக்கின்றது. அடுத்தவர் தோட்டத்தில் டவர் போட்டு உங்களுடைய வீட்டுக்கு விவசாயத்திற்கு மின் இணைப்பு வரலாம். ஆனால், உங்கள் தோட்டத்தில் டவர் வரும்போது நீங்கள் அந்தத் திட்டத்தை வேண்டாம் என்று சொன்னால், இது எந்தவிதத்தில் நியாயம்?" என்று நான் கேட்டேன்.

4,000 மெகா வாட் மின்சாரத்தை சட்டீஷ்கர் மாநிலத்திலிருந்து நேரடியாகத் தமிழகத்திற்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. நேற்றையதினம்கூட அமைச்சரவைக் கூட்டத்திலே—பல்வேறு தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. இன்னும் 5 ஆண்டுக் காலத்தில், கிட்டத்தட்ட 2,000, 3,000 மெகா வாட் மின்சாரம் நமக்குத் தேவைப்படுகிறது. அதாவது தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு மட்டுமே கிட்டத்தட்ட 3,000 மெகா வாட் அளவுக்கு மின்சாரம் நமக்குத் தேவைப்படுகின்றது. வருடா வருடம் எவ்வளவு தேவைப்படுகின்றதோ, அந்த அளவுக்கு நாம் மின் தொடரமைப்பைச் சரிசெய்தால் மட்டும்தான், அந்தத் தேவையை நாம் முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியும். அதேபோல, தடையில்லா மின்சாரத்தைக் கொடுக்க முடியும்.

[திரு. பி. தங்கமணி] [2019 ஜனவரி 4

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நஷ்ட ஈட்டைப் பற்றியும் சொன்னார்கள். அதாவது, விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே இருக்கக்கூடிய அந்த மின் பாதையில் மரங்கள் இருந்தால்—அதாவது வெள்ளாமை இருந்தால்—பயிர் இருந்தால் அதற்கு நஷ்ட ஈடு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதேபோல, தென்னை மரங்கள் இருந்தால், அதற்கும் நஷ்ட ஈடு கொடுத்துக்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விவசாயியாக இருக்கின்ற காரணத்தினால், இப்பொழுது பயிர் இருந்தால், அதற்கும் தனி நஷ்ட ஈடு; தென்னை மரம் இருந்தால், அதற்கும் தனி நஷ்ட ஈடு வழங்க ஆணையிட்டிருக்கிறார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில்-- அப்போதிருந்த value-ஐச் சொல்கிறேன். தவறாகச் சொல்லவில்லை. உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு தென்னை மரத்திற்கு 11,600 ரூபாய் கொடுத்தீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ஆணையிட்டு, ஒரு தென்னை மரத்திற்கு 32,000 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, என்ன பயிராக இருக்கின்றதோ, அந்தப் பயிருக்கேற்ப நஷ்ட ஈட்டை வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதேபோல, நிலத்தினுடைய மதிப்பிற்கேற்ப, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்பதற்காக, 2017 ஆம் ஆண்டு, 9 மாவட்ட ஆட்சித் தலைவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழைத்துப் பேசி, பின்னர் ஒரு புதிய அரசாணையை வெளியிட்டு இப்போது பயிருக்கான நஷ்ட ஈட்டோடு, இடத்திற்கென்றும் நஷ்ட ஈடு வழங்கப்படுகின்றது. எந்த அளவிற்கு இடத்தின் மதிப்பு இருக்கின்றதோ, அதற்கேற்ப, நகரமாக இருந்தால், 225 per cent; அதாவது, இரண்டே கால் மடங்கு வழங்கப்படுகின்றது. நிலத்தின் மதிப்பு எந்த அளவிற்கு இருக்கின்றதோ, அதாவது market value ஆக இருந்தாலும் சரி, guideline value ஆக இருந்தாலும் சரி; அதிலே இரண்டே கால் மடங்கு கொடுக்க வேண்டும். Percentage-ல் பார்த்தால், 225 per cent. அதேபோல, நகர்ப் பகுதியிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிற்குள் இருந்தது என்று சொன்னால், 275 per cent; அதாவது இரண்டே முக்கால் மடங்கு. அதுவே, 30 கிலோ மீட்டருக்குமேல் 50 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருந்தால், 325 per cent'; அதாவது, மூன்றேகால் மடங்கு கொடுக்கின்றோம். அதுவே 50 கிலோ மீட்டருக்குமேல் என்று சொன்னால், கிட்டத்தட்ட 425 per cent. அதாவது நான்கே கால் மடங்கு கொடுக்கின்றோம்.



2019 ஜனவரி 4] [திரு. பி. தங்கமணி]

அதுமட்டுமல்ல; விவசாய நிலத்தில் இருக்கின்ற பயிர்களுடைய சேதம் போக, நிலத்திற்கான மதிப்பைக் கணக்கிட்டும் நாங்கள் கொடுக்கின்றோம். இப்படிக் கொடுத்துக் கொண்டிருக்கும்போதே, "கொடுக்கவில்லை" என்று சொன்னார்களென்றால், அது தவறான தகவல். நிறைய பேர் இதுபோல் தொகையை வாங்கியிருக்கின்றார்கள். ஆக, யாராவது தவறாகச் சொன்னால் தயவுசெய்து—இந்தப் பணத்தை நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இந்தப் போராட்டத்தைப் பார்த்து, எப்படியாவது இந்தத் திட்டத்தை நிறுத்திவிடுவார்கள்; ஆகையால் நாம் வாங்கக் கூடாது என்று ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு பணம் வாங்கிக் கொண்டிருந்தவர்களும்கூட, இப்பொழுது அதை வாங்க மறுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நான் அனைவரிடத்திலும் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழகம் வளர்ந்து வருகின்ற ஒரு மாநிலம். வளர்ந்து வருகின்ற தமிழகத்தில், மின்சாரத் தேவை அதிகமாக இருக்கின்றது. இப்போது சட்டீஷ்கர் மாநிலத்தை எடுத்துக்கொண்டீர்களென்று சொன்னால், 3,500 மெகா வாட் மின்சாரம் மட்டும்தான் அவர்களுக்குத் தேவை. ஆனால், இப்போது அங்கே 15,000 மெகா வாட் அளவிற்கு மின்சாரம் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றது. 15,000 மெகா வாட் மின்சாரம் இன்னும் 6 மாத காலத்திற்குள் உற்பத்தியாகின்ற அளவுக்கு மின் நிலையங்கள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து மின்சாரத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், அதற்கான கட்டமைப்புகள் நம்மிடம் இருக்க வேண்டும். அங்கிருந்து தமிழகத்திற்கென்று 4,000 மெகா வாட் மின்சாரத்தைக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைப் பெற்றிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், எதிர்காலத்தில் தமிழகம் மின்வெட்டு இல்லாத மாநிலமாக இருக்க வேண்டுமென்பதற்காக இதைச் செய்திருக்கின்றார்கள். நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்; அனைவரும் தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள். எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. தனியரசு மற்றும் யாராக இருந்தாலும், விவசாயிகளிடத்திலே எடுத்துச் சொல்லுங்கள். சாத்தியமில்லாத ஒரு காரியத்தை நீங்கள் செய்ய நினைத்தீர்களென்று சொன்னால், எதிர்காலத்தில் தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தைக்

கொண்டுவர முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதை தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோதுகூடச் சொன்னார்கள். 400 கிலோ வாட் அளவிற்கு, சென்னையிலே கேபிள்களை போட்டுக் கொண்டிருக்கிறார்களென்று சொன்னார்கள். அதைக்கூட அதிக தூரம் போட முடியாது. 41 கிலோ மீட்டர் அளவிற்குத்தான் போடுகிறார்கள். அடிக்கடி ஏதாவது விபத்து ஏற்படும்போது, மின்வெட்டு ஏற்படுகிறது என்ற காரணத்தினால், மணலியிலிருந்து தரமணி வரை கொண்டு வரவேண்டுமென்பதற்காக, மத்திய அரசின் CEA என்று சொல்லக்கூடிய Central Electricity Authority-யினுடைய அனுமதியைக் கேட்டிருக்கின்றோம். இன்னும் அனுமதி கொடுக்கவில்லை. 41 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீங்கள் போடக் கூடாது; பாதி தூரம்தான் போட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். இன்னொன்று, ஏதாவது ஒரு சிறிய விபத்து ஏற்பட்டால்கூட, புதைவடக் கேபிளிலே எந்த இடத்திலே fault ஆகியிருக்கிறது; எந்த இடத்திலே பழுதாகியிருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு இரண்டு நாட்கள் ஆகிவிடும். அதனால் மின்சாரம் வருவதற்கு 2, 3 நாட்கள் ஆகிவிடும். ஆனால், அதுவே டவர் லைனாக இருந்தால், உடனடியாக, ஒரு மணி நேரத்திற்குள், 2 மணி நேரத்திற்குள் பழுது ஏற்பட்ட இடத்தைக் கண்டுபிடித்து, உடனடியாக அதனைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு மேலேயும் இதுபோன்று ஒரு நிலைமை இருந்தது என்று சொன்னால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதற்கு மாற்று ஏற்பாடு செய்வாரேயொழிய, விவசாயிகளைத் துன்புறுத்தி, அங்கே போடுவதற்கு அனுமதிக்க மாட்டார்கள். அந்த எண்ணம் எப்பொழுதுமே இல்லை.

நான் கடந்த முறை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சியிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, என்னுடைய தோட்டத்திலேகூட, மின் கோபுரத்தை அமைத்தார்கள். ஒரு நாள்கூட கையெழுத்து போட்டு நான் எதிர்க்கவில்லை. இத்தனைக்கும் இதற்கு நஷ்ட ஈடுகூடக் கிடையாது. அதுபோன்றதொரு நிலைமை எனக்கு மட்டுமல்ல; அங்கேயிருக்கின்ற அத்தனை பேருக்கும் ஏற்பட்டது. அப்பொழுதெல்லாம் யாருமே அரசியல் செய்யவில்லை. ஆனால்,



இப்பொழுது, இதுபோன்று அரசியல் செய்கின்ற காரணத்தினால், மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். கோயம்புத்தூர் பகுதியைப் பொறுத்தவரையில், அது வளர்ந்து வருகின்ற ஒரு தொழில் நகரம். அதேபோன்று, ஈரோடு, சேலம் போன்றவை வளர்ந்து வருகின்ற தொழில் நகரங்களாகும். அங்கெல்லாம் தேவையான மின்சாரத்தை நாம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அனைவருமே இதற்கு ஒத்துழைக்க வேண்டும். அனைவருடைய ஒத்துழைப்பும் வேண்டுமென்பது மட்டுமல்ல; விவசாயிகளிடத்திலே உண்மை நிலையை எடுத்துச் சொல்லவும் வேண்டும்.

நேற்றையதினம் பேசியபோதுகூட, இதேபோன்று பூட்டானிலே போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இங்கேயிருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நான் சொல்கின்றேன். வளர்ந்த நாடுகளான அமெரிக்கா போன்ற நாடுகளிலேகூட மின் புதைவடத் தடம் என்பது ஒரு சதவிகித அளவிற்குக்கூட இல்லை. 0.6 சதவிகித அளவிற்குத்தான் அங்கே போட்டிருக்கின்றார்கள். வளர்ந்த நாடுகளான ஜப்பானாக இருந்தாலும் சரி, அமெரிக்காவாக இருந்தாலும் சரி, இங்கிலாந்தாக இருந்தாலும் சரி; எப்பொழுதுமே 500 கிலோ வாட்டுக்குமேல் இருந்தாலே, எல்லாவற்றையும் மின் கோபுரமாகத்தான் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி ஒரு வாய்ப்பு இருந்தால், நாங்கள் அதைச் செய்வோம். விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தி, விவசாயிகளை வஞ்சித்து மின் கோபுரங்களைப் போட வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏனென்று சொன்னால், அவர்கள் எங்களிடத்திலே பேசுகின்றபோது, முதலிலே ஒப்புக்கொள்ள மறுத்தார்கள். அதற்குப் பின்னர், நஷ்ட ஈட்டை சேர்த்துக் கொடுங்கள் என்று சொன்னார்கள். நஷ்ட ஈட்டை நாங்கள் சேர்த்துத் தருகிறோம் என்று சொன்னவுடன், "ஒரு வாரம் எங்களுக்கு கால அவகாசம் கொடுங்கள்; நாங்கள் எல்லோரும் கலந்துபேசி பிறகு வந்து சொல்கிறோம்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். ஒரு வார கால அவகாசம் என்று எங்களிடத்திலே கேட்டுவிட்டுச் சென்ற அவர்கள், 3-வது நாள், தொடர் போராட்டம் என்று அறிவித்துவிட்டார்கள். மரியாதைக்குரிய திரு. டில்லி பாபு அவர்களும் என்னிடத்திலே பேசினார்கள். நான் அவரிடம், "நீங்கள், என்னிடத்திலே பேசிவிட்டு, இப்பொழுது திடீரென்று போராட்டத்தை அறிவித்துவிட்டீர்களே?

[திரு. பி. தங்கமணி] [2019 ஜனவரி 4

ஒரு வாரம் என்னிடத்திலே கால அவகாசம் கேட்டீர்கள்; நீங்கள் முடியும், முடியாது என்று சொல்லிவிட்டு, அதற்குப் பின்னால் இந்தப் போராட்டத்தை அறிவித்திருந்தால்கூட, அரசு அழைத்துப் பேசியதற்கு ஒரு மரியாதை இருக்கும்" என்று கேட்டேன். "எனக்குத் தெரியாமல் நடந்துவிட்டது. நான் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்று சொன்னார். நான் அவரை குறை சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், அவரைக் காட்டிக் கொடுப்பதாக ஆகிவிடும்.

அதேபோன்று, கேரள மாநிலத்தில் போடுகிறார்கள் என்று ஒரு தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது 320 கிலோ வாட் திறன் கொண்ட மின் இணைப்பு. அதற்கு கேபிள் இருக்கின்றது. அதைக்கூட கொச்சின் நகரத்திலும், வனப் பகுதியிலும் மட்டும்தான் போடுகிறார்கள். அதுவும் மொத்தம் 29 கிலோ மீட்டர் தூரத்திற்கு மட்டும்தான்; அங்கே 183 மின் கோபுரங்களாகத்தான் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நேற்றையதினம் அவர்கள் வந்தபோதுகூட நான் சொன்னேன். "வாருங்கள்; நானே அழைத்துச் செல்கின்றேன்; டவர் போட்டால் ஒத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னேன். "அதெல்லாம் வேண்டாம்; வேறு எந்த மாநிலத்தில் எப்படியிருந்தாலும் சரி, நீங்கள் இதைப் போட்டுக் கொடுங்கள்" என்று சொல்கிறார்கள். நடைமுறையில் இல்லாத technology-ஐ எப்படி நாங்கள் செயல்படுத்த முடியும்? இதிலே அனைவரும் ஒத்துழைத்து, எதிர்காலத்தில் தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தைக் கொண்டு வர வேண்டும்; மின்சாரம் தடையில்லாமல் கிடைக்க வேண்டும். நீங்களும் உங்கள் காலத்தில் டவர் போட்டிருக்கின்றீர்கள்; அம்மா அவர்களுடைய காலத்திலும் டவர் போட்டிருக்கின்றோம்; நாங்களும் போட்டு கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இது அனைத்து மக்களுக்கும் தேவையான ஒரு முக்கியமான நிகழ்வாக இருக்கின்ற காரணத்தினால், அந்த விவசாயிகளிடத்திலே நீங்களும் பேசுங்கள், நாங்களும் தொடர்ந்து பேசிக் கொண்டுதான் இருக்கின்றோம். "நீங்கள் எங்கே அழைத்தாலும் நான் வருவதற்குத் தயாராக இருக்கின்றேன்" என்று நான் பல முறை அவர்களிடத்திலே சொன்னேன். அவர்கள் அழைக்கின்ற இடத்திற்கு நீங்கள் செல்ல வேண்டுமென்று என்னிடத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நான் வருகிறேன் என்றுதான் சொன்னேன். ஆனால், தொடர்ந்து அவர்கள் இதுபோன்ற



2019 ஜனவரி 4] [திரு. பி. தங்கமணி]

காரியத்திலே ஈடுபட்டு வருகிறார்கள். இப்பொழுது அந்த மின்சாரப் பணிகளே நடைபெறக் கூடாது என்று சொன்னால், எதிர்காலத்தில், அதுவும் மேற்கு மண்டலப் பகுதியில், வளர்ந்து வருகின்ற தொழில் நகரத்தில், எப்படி மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், தூத்துக்குடியில் நடைபெற்றதைப் போல ஒரு சம்பவத்தை உருவாக்கிட முயற்சி செய்கிறார்கள். நான் யார் என்று சொல்லவில்லை. வழக்கறிஞர் ஒருவர் WhatsApp-லே பேசியிருக்கின்றார். "மாணவர்களே நீங்கள் வாருங்கள். மாணவர்களே வந்து இந்தப் போராட்டத்தைத் தூண்டுங்கள். அப்பொழுதுதான் இந்தப் போராட்டம் வெற்றி பெறும். மாணவர்கள் நினைத்தால் அனைத்துப் போராட்டங்களும் வெற்றி பெறும். நீங்கள் வாருங்கள்" என்று WhatsApp-லே அழைத்திருக்கின்றார் என்று சொன்னால், இவர்கள் உண்மையான விவசாயிகளா என்பதை தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். "போராட்டத்திற்கு வாருங்கள்" என்று மாணவர்களை அழைத்து, மாணவர்கள் மூலமாக இந்தப் போராட்டத்தை நடத்தி, மேற்கு மண்டலத்திலே எங்களுடைய இயக்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்றுதான் நினைத்தார்களேயொழிய, வேறொன்றுமில்லை. இவர்கள் உண்மையாக இருந்து, "விவசாயிகள்! வாருங்கள், போராடுங்கள்" என்று சொல்லியிருந்தால்கூட நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஒவ்வொரு கல்லூரியாகச் சென்று மாணவர்களை அழைத்தார்கள். அதுமட்டுமல்ல; WhatsApp-ல் அழைத்ததோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு கல்லூரிக்கும் சென்று, "எங்களுக்கு 100 பேரை அனுப்புங்கள்; 200 பேரை அனுப்புங்கள்" என்று மாணவர்களை அழைத்தார்கள் என்றால், இவர்களுடைய உள் நோக்கம் என்ன என்பதை தயவுசெய்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளை சந்திக்கவில்லை என்று சொன்னார்கள். சந்தித்தார்கள்; கொங்கு ராஜாமணி உட்பட, விவசாயச் சங்கத்தைச் சார்ந்த அத்தனை பேரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை முதன்முதலாகச் சந்தித்து, கோரிக்கை வைத்தபோது,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், 'உங்களுக்கு நஷ்ட ஈடு தருகிறேன்' என்று சொன்னார்கள். அவர்களும் சரி என்றுதான் சொன்னார்கள். அதற்குப் பின்னால் அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை; யார் பின்னணியோ தெரியவில்லை; போராட்டத்தை ஆரம்பித்துவிட்டார்கள். இப்படியெல்லாம் மாணவர்களைத் தூண்டிவிட்டு; விவசாயிகளைத் தூண்டிவிட்டு போராட்டம் செய்து கொண்டிருந்தால், தமிழகத்திற்குத்தான் நஷ்டம் என்பதைத் தயவுசெய்து அனைத்துக் கட்சியினரும் புரிந்துகொள்ள வேண்டும்.

*பிற்பகல் 1-05*

இது எல்லோருடைய ஆட்சிக் காலத்திலும் வருகின்ற மின்சாரம்தான். எல்லா ஆட்சிக் காலத்திலும் டவர்மூலம் மின்சாரம் கொண்டுவரப்படுகிறது. உங்களுடைய ஆட்சிக் காலம்; எங்களுடைய ஆட்சிக் காலம் என்று நான் பிரித்துச் சொல்லவில்லை. அதேபோல, விவசாயிகளுக்கு இதற்கான வாடகையைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, விவசாயிகளின் நிலங்களில் ஏற்கெனவே இருக்கின்ற டவர்களுக்கும், இப்போது போடுகின்ற டவர்களுக்கும் வாடகை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது மாநில அரசினுடைய திட்டம் கிடையாது. The Indian Telegraph Act என்பது Central Government-னுடைய Act. அந்த Act பிரகாரம்தான் நாம் செயல்பட முடியும். இதுபோன்ற நேர்வுகளில், வாடகை கொடுப்பது என்பது இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாதபோது, தமிழகத்தில் மட்டும் அதை நடைமுறைப்படுத்துவது எப்படிச் சாத்தியமாகும்? அதுமட்டுமல்லாமல், தமிழகம் இதுபோன்ற ஒரு நடைமுறையை தாமாகக் கொண்டுவந்து செயல்படுத்த முடியாது. அது மத்திய அரசினுடைய கையிலே இருக்கின்றது. நீங்கள் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். இப்போது அமைக்கப்படுகின்ற டவருக்கு கிட்டத்தட்ட, 24 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும். இந்த 4 ஆயிரம் மெகா வாட்டிற்கு எவ்வளவு செலவாகின்றதோ, அதை முழுக்க, முழுக்க தமிழக அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாளையதினம், நாம் நமக்குண்டான மின்சாரத்தை வாங்குகின்றபோது, இந்தச் செலவுத் தொகையெல்லாம் நாம் சேர்த்துத்தான் கொடுக்க வேண்டும். நாம் எவ்வளவு நஷ்ட





ஈடு கொடுத்தாலும் பரவாயில்லை என்ற அடிப்படையில்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு தகுந்த நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். ஆக, அந்த 24 ஆயிரம் கோடி ரூபாயில், 4 ஆயிரம் மெகா வாட்டிற்கான share என்னவோ, அதை நாம்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இப்போது அந்த மின் தொடரமைப்பை ஏற்படுத்துவதற்கு, கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டருக்கு 4½ கோடி ரூபாய் செலவாகிறது என்று சொன்னால், விவசாயம் செய்பவர்களுக்கு, நஷ்ட ஈடாக நான்கு கோடி ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. ஆக, ஒரு கிலோ மீட்டருக்கு கிட்டத்தட்ட ஒன்பது கோடி ரூபாய் செலவாகின்றது. அந்தளவுக்கு நஷ்ட ஈட்டினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, இதிலே தவறான பிரச்சாரம் செய்து பணிகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்காகவே செய்து கொண்டிருக்கிறார்களேயொழிய, வேறொன்றுமில்லை. வாய்ப்பிருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும், மரியாதைக்குரிய முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய அரசுக்கு புதைவடத் தடம் அமைப்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது.

அதுமட்டுமல்ல; புதைவடத் தடம் அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதே அவர்களுக்குத் தெரிவதில்லை. அந்த புதைவடத் தடத்தினை, அவர்களுடைய விவசாய பூமியிலே போட்டால்கூட, கிட்டத்தட்ட 5 மீட்டர் அளவிற்குத் தோண்டி எடுக்க வேண்டும். 5 மீட்டர் எடுத்து, 5 மீட்டர் ஆழத்தில் கேபிள்களைப் பதித்து, அதற்கு மேலே கான்கிரீட் போட்டு, பின்னர் சுவர் எழுப்பிட வேண்டும். இன்றையதினம் மின் கோபுரங்களை அமைக்க 24 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்று சொன்னால், அதை புதைவடத் தடமாக அமைத்தால், கிட்டத்தட்ட பத்து மடங்கு செலவு அதிகரிக்கும். அதாவது 2 இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும். எந்த மாநிலத்திலாவது இது முடியுமா? எந்த மாநிலத்திலாவது செய்திருக்கிறார்களா? இல்லை, எந்த நாட்டிலாவது இந்தமாதிரி செய்திருக்கிறார்களா என்பதை தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப்

பார்க்க வேண்டும். ஏதோ, விவசாயிகளுக்கு எதிரான கருத்தினை நான் சொல்வதாக நினைக்க வேண்டாம், நியாயத்தைச் சொல்கிறேன்; இருக்கின்ற நிலைமையைச் சொல்கிறேன். ஆக, எல்லோரும் ஒத்துழைத்திட வேண்டும். இதிலே விவசாய பூமி, விவசாயினுடைய விளை நிலம் பாதிக்கப்படும் என்பது உண்மை. அதற்கான நஷ்ட ஈட்டைக் கொடுக்கின்றோம். அதில் ஒன்றே ஒன்று; அப்படி டவர் போடுவதால், அந்த நிலத்தின் மதிப்பு குறைந்துவிடுகிறது என்பது உண்மை. ஆனால், விவசாயம் செய்யலாம். *(குறுக்கீடு)*

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் பேசுகின்றபோதுகூட, அதுபோன்ற நிலங்களில் விவசாயம் செய்ய முடியாது என்று சொன்னார்கள். அப்படியல்ல; போட்டோக்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன. அந்த டவருக்கு அடியில் இருக்கின்ற விளைநிலங்களில் என்னென்ன விளைந்திருக்கின்றன என்பது குறித்த விவரங்கள் எங்களிடத்திலே இருக்கின்றன. வேண்டுமென்றால், அவற்றை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்துவிடுகின்றேன். நீங்கள் பாருங்கள். கர்நாடகாவிலே உங்களது ஆட்சிதான் நடைபெறுகிறது. கர்நாடகாவில் புதைவடத் தடம் போட்டுவிட்டார்களா? உங்களுடைய கட்சிதானே ஆட்சி செய்கிறது? அங்கே அதைப் போட்டுவிட்டார்களா என்று நீங்கள் சொல்லுங்கள். எனவே, மாநிலத்திற்கு மாநிலம் கொள்கையை மாற்றிக்கொள்ளக் கூடாது. எந்த அரசாக இருந்தாலும், மக்கள் அனைவரையும் ஒன்றாகத்தான் பார்ப்பார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆக, ஒரு மாநிலத்திற்கு ஒரு கொள்கை; இன்னொரு மாநிலத்திற்கு வேறு ஒரு கொள்கை என்று இருக்கக் கூடாது. கேரளாவிலே ஒரு கொள்கை; தமிழ்நாட்டிலே ஒரு கொள்கை என்ற அடிப்படையில் கம்யூனிஸ்டு கட்சியினர் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களிடம் நானும் சொல்லிவிட்டேன்; "அங்கே 183 டவர் அமைக்கின்றார்கள், வந்து பாருங்கள்" என்று சொல்லிவிட்டேன். ஆனால், அதை விட்டுவிட்டு, முதன்முதலாக தமிழகத்தில் புதைவடத் தடம் போட வேண்டுமென்று சொன்னால், எப்படி? டெக்னாலஜியே இல்லாமல், புதைவடத் தடத்தை எப்படிப் போட முடியும்?





அதைப்போல, சாலையோரம் போடுங்கள் என்றும் சொல்கிறார்கள். சாலையோரம் அதைப் போட்டால் பாதுகாப்பாக இருக்குமா என்பதை நீங்களே புரிந்துகொள்ளுங்கள். கிட்டத்தட்ட 800 கிலோ வாட் திறன் கொண்ட மின்சாரம் செல்கின்ற ஒரு கேபிளைப் போடவே முடியாது; அது வேறு. அப்படியே ஒருகால் போட்டாலும்கூட, சாலைகளில் ஏற்படும் அதிர்வினால், இதன்மூலம் எவ்வளவு ஆபத்து ஏற்படும் என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளாமல் சொல்கின்றார்கள். அதுமட்டுமல்ல; புதைவடத் தடம் போட முடியாது. இருந்தாலும், அவர்களுக்குத் தெரியாது என்பதற்காக நான் சொல்கின்றேன். அப்படியே போட்டாலும் அதிலே எந்த மரமும் வைக்க முடியாது; எந்த வெள்ளாமையும் செய்ய முடியாது. ஐந்து மீட்டர் அளவு என்றால், ஐந்து மீட்டருக்கு ஒன்றுமே செய்ய முடியாது. அது ஒரு பாதை போன்று ஆகிவிடும். அவ்வளவுதான். அதையெல்லாம், அவர்கள் புரிந்துகொள்ள மறுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதோடு விவசாயிகளையும் திசை திருப்புகின்றார்கள். விவசாயிகள் இந்தப் போராட்டத்திலிருந்து எப்படியாவது வாபஸ் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக, அவர்களைத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, இங்கிருக்கின்ற அனைவரும் தயவுசெய்து தமிழகத்தினுடைய எதிர்காலத்தை மனதிலே கொண்டு செயல்பட வேண்டும். இதில் சாத்தியமில்லாத ஒரு திட்டத்தைக் கொண்டுவாருங்கள் என்று சொல்வது தவறு என்று அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் நீங்களும் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும்.

அதேபோன்று, இரவு நேரங்களில் பெண்களைக் கைது செய்கிறார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதுபோன்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. நேற்றையதினம் என்னிடத்திலே இதுகுறித்துச் சொன்னார்கள். உடனடியாக, காவல் துறை அதிகாரிகளிடத்திலே அதுசம்பந்தமாக நாங்கள் கேட்டோம். அதுபோன்றதொரு நிகழ்வு ஏதும் இல்லை. தவறாகச் சொல்கின்றார்கள் என்று சொன்னார்கள். இருப்பினும், மரியாதைக்குரிய அண்ணன் அவர்களுடைய அரசு, அதுபோன்ற நிகழ்வுகளை நிச்சயமாகச் செய்யாது. பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று நாங்கள் இப்போதும் சொல்கின்றோம். பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று நாங்கள் சொல்லவில்லை. இப்போதும் சொல்லியிருக்கிறோம். இதை The

[திரு. பி. தங்கமணி] [2019 ஜனவரி 4

Indian Telegraph Act-ன்படி செயல்படுத்த வேண்டியுள்ளதால், மத்திய அரசிடம் நாங்கள் கோரிக்கை வைக்கின்றோம் என்று சொன்னவுடன், அதை நீங்கள் இப்போது வைப்பீர்கள், இப்போது தேர்தல் வருகிறது என்றார்கள். இந்த நிலையில், 6 மாதங்களுக்கு வேலையே நடைபெறாது. 6 மாதங்களுக்கு வேலையே செய்ய வேண்டாமென்று சொன்னால், இந்தத் திட்டம் எப்படிச் சாத்தியப்படும் என்பதை மட்டும் தயவுசெய்து புரிந்துகொண்டு, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இதற்கு முழு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, இந்த அளவில் எனது விளக்கத்தை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். நான் ஒரு சந்தேகத்தைக் கேட்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம் மனப்பூர்வமாக வரவேற்கிறது. அதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. அதில் நீங்கள் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால், 800 கிலோ வாட் திட்டத்தை கேபிள் வழியாகக் கொண்டு வர முடியாது; அது சாத்தியமில்லை என்று நீங்கள் தெளிவாகச் சொல்கிறீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், 800 கிலோ வாட் திட்டத்தை இரண்டாகப் பிரித்து, எப்படி கேரளாவிலே 301 கிலோ வாட் அளவிற்கு கொண்டு செல்கிறார்களோ, அதேபோல் 400 கிலோ வாட், 400 கிலோ வாட் என்று பிரித்து, புதைவடத் தடமாகக் கொண்டு வருவதற்கான வாய்ப்பிருக்கிறதா; அது சாத்தியப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் சொன்னதை சரியாகக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன்.



2019 ஜனவரி 4] [திரு. பி. தங்கமணி]

கேரள மாநிலத்திற்கு 2,000 மெகா வாட் மட்டும்தான். அதில் 320 கிலோ வாட்டை மட்டும்தான் புதைவடக் கேபிள் வழியாகக் கொண்டு போகிறார்கள். அதுவும் 29 கிலோ மீட்டர் தூரம்தான். ஆனால், இது 800 கிலோ வாட் கொண்டது. 800 கிலோ வாட் கொண்டதை நீங்கள் 400, 400 ஆகப் பிரித்துக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொல்கிறீர்கள். 400 கிலோ வாட் கூட, இப்போது சென்னையில் மட்டும்தான், அதுவும் அதிகபட்சம் 20 கிலோ மீட்டர் தூரம் வரை போட்டிருக்கின்றோம். இதுவரை வேறு எந்த மாநிலத்திலும் அந்த அளவிற்கு இல்லை. டெல்லியில் போட்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இப்பொழுது 5 கிலோ மீட்டருக்கு ஒரு sub station-க்கு, ஒரு reactor போட வேண்டும். அதற்கான இடத்தை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், அதற்கு 10 மடங்கு செலவாகும். 400 கே.வி. என்பதை நாம் இதுவரை தமிழ்நாட்டில் போடவில்லை. தமிழ்நாட்டில் மட்டுமல்ல; வேறு எந்த மாநிலத்திலுமே 400 கிலோ வாட் கொண்ட கேபிளை அதிக தூரத்திற்கு, எங்குமே போட்டது கிடையாது. 10 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர், 1 கிலோ மீட்டர் என்றுதான் போட்டிருக்கின்றார்கள். அது சாத்தியமில்லாத காரணத்தினால்தான், இதைச் செய்கிறோம்; சாத்தியமிருந்தால் நாங்கள் எதற்கு விவசாயிகளுடன் இவ்வளவுமுறை பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்? சாத்தியமிருந்தால், அதை நிச்சயமாகச் செய்வோம். அதற்கும் வாய்ப்பில்லாமல் இருக்கின்றது.

இப்பொழுது தூத்துக்குடிக்குப் பக்கத்தில் 2,000 மெகா வாட், சென்னையிலே 2,000 மெகா வாட் என்று 2021 ஆம் ஆண்டிற்குள் 4,000 மெகா வாட் அளவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மின் உற்பத்தி செய்யவிருக்கின்றது. அதற்கெல்லாம் மின் தொடரமைப்பு இருந்தால்தான், முழுமையான அளவிலே மின்சாரத்தை நாம் கொண்டு செல்ல முடியும் என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது, கேரளாவில் 320 கிலோ வாட் கேபிள் வழியாக கொண்டு செல்கிறார்கள். கேரள மாநிலத்திற்கு 2,000 மெகா வாட் மட்டும்தான். ஆனால், தமிழகத்திற்கு 4,000 மெகா வாட் அளவிற்கு மின்சாரம் கொண்டுவரப்படவுள்ள காரணத்தினால்தான், அது 800 கிலோ வாட்டாக இருக்கின்றது. அதைப் பிரித்துப் போட வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். முதன்முதலாக ஒரு துணை மின் நிலையத்தை மின்சாரம் தயாரிக்கின்ற இடமான சட்டீஸ்கரில்

போடுகிறார்கள். அதற்குப்பிறகு காங்கேயத்தில் போடுகிறார்கள். அதாவது, புகளூர் பகுதியில் 4,250 கோடி ரூபாய் செலவில் போடுகின்றார்கள். அதற்கிடையிலே அந்த மின்சாரத்தைப் பிரிக்க முடியாத சூழ்நிலைதான் இப்பொழுது இருக்கிறது. அப்படியே பிரித்தாலும்கூட, 400 கிலோ வாட் அளவிற்கு முழுமையாகக் கேபிள் போட முடியாத சூழ்நிலைதான் தற்போது உள்ளது. எந்த மாநிலத்திலும் இதுபோன்று இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் போராட்டத்தைத் தூண்டினார்கள் என்று இவர்களைச் சொல்லவில்லை.

## 4. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 6-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கின்றேன்:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. எஸ்.பி. சண்முகநாதன்
3. திரு. சு. ரவி
4. திரு. இரா. குமரகுரு
5. திரு. சு. குணசேகரன்
6. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா





## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2019 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 2 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை வழிமொழிதல், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆராதனைக்குரிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் முன்மொழிந்த, மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்சிமை மிகுந்த திராவிட இயக்கத்தின் பிதாமகன் தந்தை பெரியார்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை தமிழ்நாட்டிற்குத் தந்த தமிழகத்தின் பிதாமகன் பேரறிஞர் அண்ணா; ஏழரைக் கோடி தமிழ் மக்களின்

---

@ 309 முதல் 345 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [*2019 ஜனவரி 4*

உள்ளங்களிலே அலை பாய்ந்து கொண்டிருக்கும் உயிரோவியம், கல்லறைக்குள்ளே இருந்தாலும், உலகத்தாரின் கவனத்தை இன்றைக்கும் தன்மீது ஈர்த்துக்கொண்டிருக்கும் ஏழைகளின் பிதாமகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஆலயத்தின் ஆராதனைக்குரிய பிதா மகள், மறைந்தும், மறையாமல் மக்கள் உள்ளங்களிலேவாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தலைவி, மாணிக்கத் தலைவி, மாசற்ற தலைவி, ஒப்பாரும், மிக்காரும் இல்லாத மனிதப் புனிதவதி, மனித நேயம் மிக்க ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தெரசாவே இல்லம் தேடிவந்து வாழ்த்திய போயஸ் தோட்டத்துப் பொன் மகள், தமிழக மக்களின் தெய்வத் தாய், வங்கக் கடலோரம் தங்கத் தலைவனின் அருகே சந்தனப் பேழையில் துயில் கொள்ளும் பொன்மனச் செம்மலின் புகழ் வடிவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

*பிற்பகல் 1-15*

பேரறிஞர் அண்ணா அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, "ஒரு மரத்திலே ஒரு கனி தொங்கிக்கொண்டிருந்தது. அந்தக் கனி யார் மடியில் விழுமோ என்று நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக அந்தக் கனி என் மடியில் விழுந்தது. அந்தக் கனியை நான் எடுத்து, என் இதயத்தோடு வைத்துக்கொண்டேன். அந்தக் கனிதான் இதயக் கனி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்." என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களோடு 40 ஆண்டுக் காலம் நண்பராக இருந்து பழகி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் குறித்து, தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மறைந்த கலைஞர் அவர்கள், "தலைவா! உன்னால் நான் உயர்ந்தேன்" என்ற தலைப்பில் ஒரு கவிதையைப் பாடியுள்ளார்; அதை நான் இங்கே பதிய வைக்க விரும்புகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

இந்தக் கவிதையைப் பாடியவர் உங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

"வென்றாரும் வெல்வாரும் இல்லாத வகையில் ஒளி
வீசும் தலைவா!



*2019 ஜனவரி 4*] [முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்]

குன்றனைய புகழ் கொண்ட குணக்குன்றே!
முடியரசர்க்கில்லாத செல்வாக்கெல்லாம்
முழுமையுடன் பெற்று விளங்கும் முழுமதியே!
தென்னாடும் தென்னவரும் உள்ளவரை
மன்னா உன் திருநாமம் துலங்க வேண்டும்!
உன்னாலே உயர்வடைந்த என் போன்றோர்
உள்ளங்கள் அதைக் கண்டு மகிழ வேண்டும்!"

என கவிதை பாடினார் மறைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே ஒப்பற்றப் புகழுக்குச் சொந்தக்காரரான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வழியிலே நடைபெற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியை, அம்மா அவர்கள் அமர்ந்த இருக்கையிலே அமர்ந்து தமிழகத்தில் இன்றைக்கு சிறப்பாக தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்ற எளிய முதலமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

சமீபத்தில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திக்கச் சென்றேன். கால் மணி நேரம்; அரை மணி நேரம் காத்திருந்தேன். ஏதோ முக்கியமான அமைச்சர்களோடு அவர் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றார் என்று நான் நினைத்தேன். உள்ளே பேசிக்கொண்டிருந்த நபர்கள் வெளியே வந்தார்கள். அவர்கள் நரிக்குறவச் சமுதாயத்தைச் சேர்ந்த ஏழையெளிய மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரை மணி நேரமாக அவர்களுடைய குறைகளைக் கேட்டு, நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்ற ஒரு எளிய முதலமைச்சராக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியில், புரட்சித் தலைவி அம்மாவின் வழியிலே நல்லாட்சி தந்துகொண்டிருக்கின்ற கொங்கு மண்டலத்தினுடைய நாயகன் அண்ணன் எடப்பாடியார் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு மக்களுக்கு எது தேவையோ, அதை நிறைவேற்றித் தந்திருக்கிறீர்கள். ஜல்லிக்கட்டு தேவை என்று நினைத்த நேரத்தில், ஜல்லிக்கட்டை நடத்துவதற்கான உரிமையை தமிழ்நாட்டில் நிலைநிறுத்திக் காட்டிய ஜல்லிக்கட்டு நாயகன், தென்பாண்டிச் சிங்கம் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்பு வாய்ந்த 15-வது சட்டமன்றப் பேரவையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை முன்மொழிந்து

பேசும் வாய்ப்பினை எனக்குத் தந்தமைக்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள், தனது உரையில், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த திட்டங்களையும், கொள்கைகளையும் முனைப்போடு செயல்படுத்தி, அவர்கள் பின்பற்றி வந்த பெருமைமிகு மரபை, தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில், மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்தும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, உறுதியாக உள்ளது; மக்கள் நல அரசாக இந்த அரசு திகழ்ந்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனது திறமைமிக்க தலைமையின்மூலம், பதவியேற்ற நாள் முதல் இதுவரை, 11,286 கோப்புகளில் துரிதமாக முடிவு கண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படும் அரசாக, இந்த அரசை வழிநடத்தி வருகின்றார் என்று மேதகு ஆளுநர் அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டமைக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இந்த அவையின் சார்பாக உரித்தாக்கிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆம், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அம்மா அவர்கள் காட்டிய வழியில் நல்லாட்சி நடத்துகின்றார். இம்மாமன்றத்தில் இதே இடத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள், "எனக்குப் பிறகும் இந்த ஆட்சியும், கட்சியும் இன்னும் நூறாண்டுக் காலம் இருக்கும்" (மேசையைத் தட்டும் ஒலி) என்றார். அந்தத் தாயின் சபதத்தை நிறைவேற்றும் தனயனாக, தாய் சொல்லைத் தட்டாத பிள்ளையாக, அமைதியின் வடிவமாக, நிருவாகத் திறமையோடு, ஆன்றோர்களும், சான்றோர்களும் பாராட்டும் வகையில், இடர்பாடுகளைத் தவிடு பொடியாக்கிய அண்ணன் எடப்பாடியார் அவர்கள் சப்தமில்லாமல் சரித்திர சாதனைகளை நிகழ்த்தி தமிழகத்தை உன்னதமான ஓரிடத்திற்குக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-20*

அம்மா வழியில் காவேரியை வென்றெடுத்த காவேரி நாயகன், எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சேலத்து இரும்பைப் போன்ற உறுதியையும், சேலத்து மாங்கனியைப்





போன்ற சுவையையும் ஒருங்கே கொண்ட கொங்கு நாட்டுச் சிங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி இடரின்றிச் செல்வதற்கு அவருக்கு எல்லா வகைகளிலும், உறுதுணையாக இருந்து நல் ஆலோசனைகளைச் சொல்கின்ற, அம்மாவின் வழியில் செயல்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் துணையாக, தோளோடு தோள் நின்று, சிறப்பாகச் செயல்பட்டு வரும் தென்பாண்டிச் சிங்கம் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'சுதந்திரத்தைப் பெறுவதுகூட எளிது; அதைப் பாதுகாப்பது அதைவிடக் கடினம். பாதுகாப்பதுகூட எளிது; சுதந்திரத்தில் ஏற்படும் பயனை எல்லோருக்கும் சேரச் செய்வது கடினம்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அப்படிப்பட்ட கடினமான பணியை, அரசின் திட்டங்களை பாமர மக்களிடம் எடுத்துச் செல்லும் பணியைச் செவ்வனே செய்த பெருமைக்குரியவர், இறந்தும் இன்றளவிலும் இறைவனாகப் போற்றப்படக்கூடியவர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லாட்சி தந்தார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, 'அம்மாவால் நான், அம்மா வழியில் நான்' என்று தமிழகத்திலே நல்லாட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சட்டம்-ஒழுங்கு சீராக இருக்கிறதென்றால், அங்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெறுகிறது என்று பொருள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே சட்டம்-ஒழுங்கு சீராக இருக்கிறது என்று சொன்னால், அங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி நடைபெறுகிறது என்று பொருள். ஆனால், எதிர்க்கட்சியினரோ, தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்று இந்த அவையிலும் சரி, அவைக்கு

வெளியிலும் சரி, குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தருணத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன எடுத்துக்காட்டுதான் என்னுடைய நினைவிற்கு வருகிறது.

அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். 'வானவில்லைப் பார்க்கிறோம். அந்த வண்ண அழகைக் கண்டு மயங்குகிறோம்; வியந்து நிற்கிறோம். அதே நேரத்தில், விரக்தியடைந்து வழியில் செல்லும் ஒரு வழிப்போக்கன், 'என்ன பார்க்கிறாய்?' என்று கேட்டால், 'அந்த வானவில்லைப் பார்; எவ்வளவு அழகாய் இருக்கிறது' என்று கூறுவோம். விரக்தியில் உள்ள வழிப்போக்கனோ, 'என்ன மகா பெரிய வானவில்? அதில் என்ன அழகு இருக்கிறது?' என்றுதான் கூறுவான். விரக்தியடைந்தவர்கள், ஏமாற்றமடைந்தவர்கள் அழகையும், கலையையும் வெறுப்பது நியாயம்தான். அதுபோல, தேர்தலிலே, ஒரு முறையல்ல; இரு முறையல்ல; மூன்று முறை தோல்வியடைந்தவர்கள், விரக்தியின் விளிம்பிலே இருப்பவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசை வெறுக்கிறார்கள். இந்த இடத்திற்கு வர முடியாதவர்கள், இந்த இடத்திலே அமர முடியாதவர்கள் இந்த அரசை வெறுக்கிறார்கள். இந்த அரசின்மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார்கள். இந்த அரசைப் பற்றி விமர்சிக்கிறார்கள். மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பேசுகிறார்கள். அதை நாங்கள் உணர்கிறோம். இருப்பினும், அதைப் பொருட்படுத்தாமல், அம்மா அவர்களின் வழியில் தொடர்ந்து ஆட்சி நடத்தும் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான எங்கள் அரசு, இந்த நாட்டு மக்களுக்கு நற்பணி ஆற்றிக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே அடக்கத்தோடு பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வன்முறைச் சம்பவங்களே நடைபெறவில்லையென்றோ, வழிப்பறிச் சம்பவங்களே நடைபெறவில்லையென்றோ, திருட்டுச் சம்பவங்களே நடைபெறவில்லையென்றோ, கொலை, கொள்ளைகளே நடைபெறவில்லையென்றோ நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. காரணம், எந்த ஆட்சியாக இருந்தாலும், குற்றங்கள் நடைபெறுவது என்பது வாடிக்கை. அதே சமயத்தில், குற்றங்கள் பெரிய அளவில் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்வதும், குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பதும், பொது மக்களின் நண்பனாக காவல் துறை செயல்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதும்தான் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களுடைய





கடமை. அந்தக் கடமையை மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த அரசு சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அமளிக் காடாக இருந்த தமிழகம், அமைதிப் பாதையில் செல்ல வழிவகுத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகத்தை அமைதிப் பாதையில் அழைத்துச் சென்று, தமிழ்நாட்டின் வளத்தையும், வளர்ச்சியையும் முன்னேற்றப் பாதையில் எடுத்துச் சென்று ஆட்சி செய்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் இந்த அவையின் சார்பாக, பெருமையோடு, நான் மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-25

இங்கே கஜா புயல் குறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யாரும் தர முடியாத அளவில் மிகச் சிறப்பான ஒரு விளக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். ஓர் இயற்கை இடர்பாடு ஏற்பட்டு, அதிலும் மிகப் பெரிய இயற்கை இடர்பாடாக அது ஏற்பட்டு, அது 12 மாவட்டங்களை ஒரே நேரத்தில் பாதித்திருக்கின்றது. வருகின்ற புயல் காற்றை ஆட்சியாளர்களால் தடை செய்ய முடியாது. ஆனால், புயல் காற்றினால் ஏற்படுகின்ற உயிர்ச் சேதத்தைத் தடுத்திட வேண்டுமென்பதற்காக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலகத்தில், ஒரு நாள் முழுவதும் அமர்ந்திருந்து, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அடிக்கடி தொலைக்காட்சிகள் மூலமும், பத்திரிகைகள் மூலமும் மக்களை உஷார்படுத்தியவர் நமது மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்பு எத்தனையோ இயற்கை இடர்பாடுகள் இதுபோன்று வந்திருக்கின்றன. ஆனால், அப்பொழுதெல்லாம் இப்படிப்பட்ட ஓர் எதிர்பார்ப்பு நடவடிக்கை, முன்னெச்சரிக்கை நடவடிக்கை இந்தியாவிலேயே எந்த அரசின் சார்பாகவும், எந்த மாநிலத்திலும் எடுக்கப்பட்டதில்லை. ஆனால், தமிழகத்தில் கஜா புயல் வருவதற்கு முன்பாகவே, எப்பொழுதெல்லாம் ஆய்வுக் கூட்டங்களை நடத்த வேண்டுமோ, அதைவிட கூடுதலாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, ஓர் அமைச்சரையே அந்த அலுவலகத்திற்கு அனுப்பிவைத்து,

“இதோ புயல் அங்கே வருகிறது; இங்கே வந்துவிட்டது; இந்தத் திசையிலே போகிறது; எச்சரிக்கையாக இருங்கள், தாழ்வான பகுதிகளில் இருப்பவர்கள் அனைவரும் மேடான பகுதிகளுக்கு வாருங்கள்; asbestos sheet-ல் தங்கியிருப்பவர்களெல்லாம் கான்கிரீட் கட்டடங்களுக்கு வாருங்கள்; கூரை வீடுகளில் இருப்பவர்கள் அனைவரும் பாதுகாப்பாக முகாம்களுக்கு வாருங்கள்” என்று சொல்லி, சுமார் 5 இலட்சம் பேர்களை முகாம்களில் தங்க வைத்து, பல்லாயிரக்கணக்கானவர்களின் உயிர்களைக் காப்பாற்றி, உயிர்ச் சேதத்தை, தவிர்த்த அரசு, *(மேசையைத் தட்டும் ஒலி)* அம்மாவின் வழியில் நடக்கிற இந்தத் தமிழக அரசு என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குமேல் நான் கஜா புயல் குறித்து விரிவாக விளக்க வேண்டிய அவசியம் இல்லை.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக மிகத் தெளிவாக, அற்புதமாக இந்த அவையில் சிறப்பான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆக, இந்தப் புயலின்மூலம் ஏற்பட்ட சேதத்தை இந்த அரசு முழுமையாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நினைக்கிறது. ஆனால், அரசு கஜானாவில் இருக்கிற நிதிநிலைமைக்கேற்ற வகையில், ஒரு மாநில அரசு என்னென்ன செய்ய வேண்டுமோ, செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் நிச்சயமாக செய்ய வேண்டும். எந்த ஓர் அரசு, விவசாயிகளை தலையில் வைத்துக்கொண்டாடுகிறதோ, எந்த ஓர் அரசு, விவசாயிகளை உயிர் மூச்சாக நினைக்கிறதோ, அந்த அரசு, எந்நாளும் விழாது; மக்கள் மனதில் எந்நாளும் நீடித்து நிலைக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு இந்த அரசு, அம்மாவின் அரசு, இன்னும் உதவிகளைச் செய்திட வேண்டும். மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் ஓர் உழவன் மகன்; மாண்புமிகு அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஓர் உழவன் மகன். ஆக, நீங்கள் செய்ய வேண்டியது, அளந்து தர வேண்டாம்; அள்ளிக் கொடுங்கள். கிள்ளித் தர வேண்டாம்; எவ்வளவு முடியுமோ கொடுங்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆண்டாண்டு காலமாக உழுது, உழுது வாழ்ந்து வந்த விவசாயிகள் அந்த மண்ணிலே தற்போது கண்ணீர் சிந்தி, மண்ணோடு மறைகிற அளவிற்கு அந்த விவசாயிகளுக்கு வேதனை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பாதிப்பைக் கருத்தில்கொண்டு, தென்னை மரங்களில் நல்ல ஜாதி மரங்களாக, காய்க்கின்ற திறன் உள்ள மரங்களாக, குறுகிய காலத்தில் பலன் தரக்கூடிய மரங்களாக, உயரம் செல்லாத மரங்களாக, எதிர்காலத்தில் புயல் காற்றைத் தாங்கக்கூடிய மரங்களாக, மண்ணிலிருந்து சுமார் 5 அடி உயரத்திற்குள், 10 அடி உயரத்திற்குள் காய்க்கும் திறன் உள்ள மரங்களாக வளரும் வகையில், உரிய மரக் கன்றுகளை அரசின் சார்பாக இலவசமாக அம்மாவின் அரசு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் ஒரு விவசாயி என்கிற முறையில், ஒரு தென்னை விவசாயி என்கிற முறையில், நான் இரு கரம் கூப்பி உங்களைப் பணிவோடு வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அளவு பார்க்க வேண்டாம்; அளந்து கொடுக்க வேண்டாம், அள்ளி அள்ளிக் கொடுங்கள். இந்த அரசு விவசாயிகளுடைய அரசு என்பதை நாடு அறியட்டும்; உலகம் அறியட்டும் என்று நான் உங்களை இங்கு பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*





அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பான, மிகத் தெளிவான ஒரு விளக்கத்தை இங்கே கொடுத்தார்கள். இந்த விவசாயிகளையெல்லாம் Power Grid Corporation அலுவலகத்தில் நாங்கள் அழைத்து, மிக முக்கியமான அலுவலர்களையெல்லாம் வரவழைத்து, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தினோம். அனைத்து நிலைமைகளையும் விளக்கிச் சொன்னோம். எதிர்காலத்தில் தொழில்கள் வளர வேண்டும்; படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தர வேண்டும்; படிக்காதவர்களுக்கும், உழைக்கின்ற திறன் உள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்புத் தர வேண்டும்; வீட்டில் எப்போது பட்டனைப் போட்டாலும் மின்சாரம் வர வேண்டும்; மிக்ஸி ஓட வேண்டும்; கிரைண்டர் ஓட வேண்டும்; தொழிற்சாலைகள் இயங்க வேண்டும், ஆக, இத்தனையும் நடைபெற வேண்டுமென்றால், மின்சாரம் வேண்டும். புதிது புதிதாக தொழிற்சாலைகள் வேண்டும். புதிதாக பொறியியல் படித்து வந்த பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்புத் தர வேண்டும். டிப்ளமோ படித்து வந்தவர்களுக்கு வேலைவாய்ப்புத் தர வேண்டும். இவை அனைத்தையும் ‘வேண்டும், வேண்டும்’ என்று சொல்கிற நாம், வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும் என்றும் சொல்கிறோம். கரன்ட் வேண்டுமென்றால், இங்கே நிலக்கரி சுரங்கங்கள் குறைவு; இங்கே நீர்மின் நிலையங்கள் குறைவு. அப்படியென்றால் எங்கே நிலக்கரி சுரங்கங்கள் இருக்கின்றனவோ, அங்கிருந்து கொண்டுவர வேண்டும். அதனடிப்படையில்தான் சத்தீஸ்கர் மாநிலத்திலிருந்து மின்சாரத்தை தமிழகத்திற்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. அங்கிருந்து 4,000 மெகா

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [*2019 ஜனவரி 4*

வாட் மின்சாரம் தமிழ்நாட்டிற்கு வருகிறது என்று சொன்னால், அடடா! எவ்வளவு தொழிற்சாலைகள் தொடங்கலாம்? எத்தனை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தரலாம்? எவ்வளவு பேரின் வறுமையை ஒழிக்கலாம்? இந்த அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்தவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் கொண்டு வந்த இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால், தமிழகம் சிறப்பு பெற்றுவிடும் என்று சிலர் மனக் கணக்குப் போடுகிறார்கள். அம்மா அவர்களின் ஆத்மா நிச்சயமாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-30*

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசியதுபோல, விவசாயிகளுடைய இடர்களை நீக்கி, தொழிற்சாலைகள் வேண்டுமென்று கேட்கிறவர்கள், கல்வி நிலையங்கள் வேண்டுமென்று கேட்கிறவர்கள், வேலைவாய்ப்புகள் வேண்டுமென்று கேட்கிறவர்கள், சமுதாய முன்னேற்றத்திலே அக்கறை உள்ளவர்கள், இந்த நாடு வளர்ச்சி பெறவேண்டுமென்று எண்ணுகிறவர்கள், 21 ஆம் நூற்றாண்டிலே இந்தியாவிலே, தமிழகம் வலிமையுள்ள மாநிலமாக முன்னேற வேண்டுமென்று நினைக்கிறவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின்பால் உண்மையான அக்கறை உள்ளவர்கள், ஆளுங்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாடு, எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாடு என்று இருக்கக் கூடாது. 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்று எண்ணுகிற நிலையை மாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழகம், நம்முடைய நாடு, நம்முடைய மக்கள், நம்முடைய முன்னேற்றம் என்கிற நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்.

எனவே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளைக் கேட்டு, தயவு செய்து யாருக்கெல்லாம் மக்களோடு தொடர்பு உள்ளதோ, அவர்களெல்லாம் தொடர்புகொள்ள வேண்டியவர்களையெல்லாம் தொடர்பு கொண்டு, எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த மின் கம்பிகள் போகிற பாதையிலே விவசாய நிலமே இல்லாதவர்கள்தான் வரிந்துகட்டிக்கொண்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதியிலேதான் பெரும்பாலான மின் கம்பிகள் போகின்றன. Tower lines



*2019 ஜனவரி 4*] [முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்]

போகின்றன. நான் அவர்களையெல்லாம் போப்பு மாப்பாகப் பேசி சரி செய்து வைத்திருந்தேன். ஆனால், 'மேயற மாட்ட நக்கற மாடு கெடுத்ததைப்போல' (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளிடம் அதை, இதை என்று ஆசை வார்த்தை சொல்கிறார்கள். நல்ல விவசாயிகள், பண்பான விவசாயிகள்; அவர்கள் கேட்பதை இந்த அரசு கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். ஆனால், அவர்களை திசைமாற்றுவது என்பது தவறானது என்பதை எடுத்துச் சொல்லி, அதை நிறைவேற்றுவதற்கு முன் வரிசையிலே உள்ள தலைவர்கள் முன்வர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மின்சாரம் இருந்தால்தான் நாடு முன்னேறும்; நாமும் முன்னேறுவோம். நாடு முன்னேறாவிட்டால், நாம் முன்னேற முடியாது; நம்முடைய ஊர் முன்னேற முடியாது, நம்முடைய மக்கள் முன்னேற முடியாது என்கிற அடிப்படையிலே, நீங்கள் செயல்பட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டுமென்றால், உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். உட்கட்டமைப்பு வசதி என்பது ஏற்றுமதி, இறக்குமதிக்கான சிறந்த துறைமுகங்கள். துறைமுகங்களுக்கு பொருட்களை எடுத்துச் செல்லவும், இறக்குமதி செய்த பொருட்களைத் தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லவும் சிறந்த சாலைக் கட்டமைப்பு வசதிகள் தேவை. சாலைகளை அமைக்கவும் விடமாட்டேன் என்கிறார்கள்; துறைமுகம் அமைக்கவும் விடுவதில்லை. போக்குவரத்து வசதிக்காக சாலைகளை அகலப்படுத்தும்போது மக்களைத் தூண்டிவிட்டுப் போராடுவதும், மின்சாரம் கொண்டுவர வழித்தடத்தை அமைக்கும்போது தடுப்பதும் நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்த செயல்கள் அல்ல. எதிர்காலத்தில் இவர்களை வரலாறு மன்னிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

பன்னாடுகளிலிருந்து வணிகர்கள் வந்து செல்வதற்கு விமான நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இன்றைய வளர்ச்சிக்கு ஏற்றவாறு பன்னாடுகளிலிருந்து cargo flights போன்ற மிக பெரிய விமானங்கள் வந்து இறங்குவதற்கு தமிழகத்திலே உள்ள முக்கியமான விமான நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இது அம்மா அவர்கள் Vision 2023-ல் குறிப்பிட்டுள்ள கனவு. (மேசையைத் தட்டும் ஒலி) கோவை

விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாகத் தரம் உயர்த்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடியும் நிலையிலே உள்ளன. 627 ஏக்கர் நிலங்களை பேச்சுவார்த்தையின் மூலமாகக் கையகப்படுத்தும் பணிகள் தற்போது நிறைவடைகின்ற கட்டத்தில் உள்ளன. இதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் மற்றும் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் அன்பு சகோதரர் திரு. சி. மகேந்திரன் ஆகியோருக்கு இந்த அவையின் மூலமாக இந்த நேரத்தில் ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தினுடைய அனைத்து மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நீண்ட காலமாக கோவை விமான நிலையத்தை International Airport ஆக மாற்ற வேண்டுமென்று கேட்ட மக்களுடைய, தொழிலதிபர்களுடைய தாகத்தைத் தீர்த்தமைக்காக உங்களுக்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்படுவதன்மூலம், அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஜப்பானில் உள்ள டோக்கியோவைவிட கோயம்புத்தூர் மாவட்டம், மிகச் சிறந்த ஒரு தொழில் மாவட்டமாக முன்னேறும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-35*

அடுத்து, தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு. தமிழகத்தின் இன்றைய சூழ்நிலையில், தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோர் தலைமையில் செயல்படும் அரசால் தடையில்லா மின்சாரம் வழங்கப்படுவதாலும், அமைதியான, பாதுகாப்பான நல்லாட்சி நடைபெறுகின்ற காரணத்தினாலும், பல நாடுகளிலிருந்தும், பல மாநிலங்களிலிருந்தும் தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வருகிறார்கள். இங்கே ஓர் அமைதியான ஆட்சி, பாதுகாப்பான ஆட்சி நடைபெறுவதோடு, 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம் கிடைக்கின்ற காரணத்தினால், தமிழ்நாட்டில் தொழில் தொடங்க, அம்மா அவர்கள் சொன்னதுபோன்று, அம்மா அவர்களின் VISION 2023-ன்படி, மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு துணை முதல்வர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, வருகிற ஜனவரி 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் இரண்டாவது உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு சிறப்பாக நடைபெறவுள்ளது. இரண்டு





இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு, தொழில் முதலீடுகள் புதிதாகக் கிடைக்க வாய்ப்புள்ளது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், அரசு அதிகாரிகளையும் இந்த அவையின் சார்பாக வெகுவாகப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தை, மாநில அரசு ஊழியர்களுக்கும் அளிக்கும் வகையில் ஊதியக் குழு ஒன்றை அமைத்து, அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் என 18 இலட்சம் பேர்களுக்கு, ஒரே சமயத்தில் 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வை அளித்தவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* சுதந்திரத்திற்குப் பிறகு, இந்த 65 ஆண்டுக் காலத்தில், ஒரே சமயத்தில் 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான். அதற்காக நான் என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் இந்த அரசிற்கு, இந்த அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரை இல்லாத அளவுக்கு முதன்முறையாக பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்ற வகையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் சிறப்புத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது. 2 கோடியே ஒரு இலட்சம் குடும்பங்கள்; இதில் 1½ கோடி குடும்பங்கள் பொங்கலை எப்படிக் கொண்டாடுவது என்று தவித்துக் கொண்டிருந்தார்கள். 50 இலட்சம் குடும்பங்கள் தாங்களாகவே பொங்கலைக் கொண்டாடி விடுவார்கள். ஆனால், 1½ கோடி குடும்பங்களுக்கு, ‘கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் கலந்தூட்டும் ஈசனைப்போல’, குடும்பத்திற்கு 1,000 ரூபாய் வழங்குவதோடு, *(மேசையைத் தட்டும் ஒலி)* பொங்கல் வைப்பதற்காக ஒரு கரும்பு, சர்க்கரை, பச்சை அரிசி, முந்திரி, ஏலக்காய், உலர் திராட்சை இத்தனையும் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, உங்களை நாங்கள் எப்படிப் பாராட்டுவது என்றே தெரியாமல், *(மேசையைத் தட்டும் ஒலி)* நாங்கள் மட்டுமல்ல; நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உங்களை எப்படிப் பாராட்டுவது என்பது தெரியாமல், மனமுவந்து, மகிழ்ச்சியோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்ல; 1,264 கோடி ரூபாய் மதிப்பில் மதுரை மாவட்டம், தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனையை அமைக்க வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மத்திய அரசிற்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மருத்துவமனை தென் மாவட்ட மக்களுக்கு நிச்சயமாக உயிர்காக்கும் வரப்பிரசாதமாக அமையும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "மக்கள் நலம், மக்கள் நலம் என்றே சொல்வார்; தன் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்வார்" என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகள்தான் என்னுடைய நினைவிற்கு தற்போது வருகின்றன. தன் மக்களுக்காக டெல்லி சென்றவர்கள் மத்தியில், தமிழ்நாட்டு மக்களுக்காக டெல்லி சென்ற மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்னுடைய நினைவிற்கு வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்! காவேரி நதிநீர்ப் பிரச்சினைக்காகவும், முல்லைப் பெரியாறு பிரச்சினைக்காகவும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையை நாடாளுமன்ற வளாகத்தில் வைப்பதற்காகவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையை நாடாளுமன்ற வளாகத்தில் வைப்பதற்காகவும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். அவர் பேசட்டும்.

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** தமிழ்நாடு அரசு கேபிள் நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் பெறுவதற்காகவும், பலமுறை டெல்லிக்குச் சென்று, பாரதப் பிரதமர்களை வலியுறுத்தி, உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகளைத் தொடுத்து, அதன்மூலம் அனைத்துப் பிரச்சினைகளிலும் வெற்றியைக் கண்ட ஒரே தலைவர், தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆனால், இதுபோன்ற சாதனைகள் வேறு எந்த ஆட்சிக் காலத்திலும் நிகழ்த்தப்படவில்லை என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-40*

மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பிறகு, தமிழக அரசை வழிநடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன்





எடப்பாடியார் அவர்கள், சட்டப் போராட்டம் நடத்தி, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்துக் காட்டினார்கள். அதே சமயத்தில், காவேரிப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் முற்றிலுமாகக் கோட்டை விட்டவர்களும் இருக்கிறார்கள். 5-2-2007 அன்று வெளியான காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை, ஆட்சியில் இருக்கும்வரை, மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்ற கோரிக்கையை, அன்றைக்கு மத்திய அரசை தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த, அப்போது தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்த மாநில அரசு செய்யத் தவறிவிட்டது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முல்லைப் பெரியாறு நதிநீர்ப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம்; அணை வலுப்படுத்தப்பட்ட பின்னர் 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்ற உச்ச நீதிமன்ற ஆணையை, 2006 ஆம் ஆண்டு சட்டப் போராட்டம் நடத்திப் பெற்றுத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பின்னர் ஆட்சிக்கு வந்த அரசு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, கேரள அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தத்தை எதிர்த்து, தனது ஆட்சிக் காலத்தில் தொடுக்கப்பட்ட வழக்கினைத் துரிதப்படுத்தி, மத்திய அரசின் உதவியுடன் உச்ச நீதிமன்ற ஆணையைச் செயல்படுத்த முடியவில்லை. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றம், ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் ஒரு குழுவை அமைக்க உத்தரவிட்டபோது, தமிழ்நாட்டின் சார்பில் யாரையும் நியமிக்கப் போவதில்லை என்று அன்றைய தமிழக அரசு அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்தது. இதை எதிர்த்து மாண்புமிகு அம்மா அவர்கள் குரல் கொடுத்தவுடன், நீதியரசர் திரு. ஏ.ஆர். லட்சுமணன் அவர்களை அப்போதைய தமிழக அரசு நியமனம் செய்தது. ஆனால், 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், சட்டப் போராட்டம் நடத்தி, தமிழகத்திற்குச் சாதகமான தீர்ப்பினைப் பெற்று, அதனை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து, அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் காட்டினார்கள் என்பதை இங்கே நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேகதாது அணைப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு அழுத்தம் கொடுக்கவில்லை; மத்திய அரசுக்கு அடிபணிந்து போகின்ற அரசாங்கமாக தமிழ்நாடு அரசு விளங்குகிறது என்று எதிர்க்கட்சிகள் இந்த அரசின்மீது குற்றஞ்சாட்டுகின்றன. இதைப்பற்றிய எனது கருத்தினை இங்கே பணிவோடு பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*எங்கள் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு; எங்கள் இயக்கம் யாருக்கும் கட்டுப்பட்டது அல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் யாருக்கும் அடிபணிய மாட்டோம்; (மேசையைத் தட்டும் ஒலி) சுயசார்பு உள்ளவர்கள் நாங்கள்; நாங்கள், ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அடிமை சாசனம் எழுதிக் கொடுத்தவர்கள் அல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், தனிப் பாதையில், சிறப்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில் செல்லும் ஆட்சி என்பதை நான் இங்கே பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*காவேரி நதியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதைத் தடுப்பதற்காக எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 37 பேர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மிகச் சிறப்பாகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் யாருக்கும் அடிமை சாசனம் எழுதித் தரவில்லை; அடிமைகளாக இருக்கவில்லை; எங்களுடைய ஆட்சி மைனாரிட்டி ஆட்சி இல்லை; மைனாரிட்டி ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாங்கள் யாரிடத்திலும் கை கட்டி சேவை செய்யவில்லை; (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீறும் சிங்கங்களாகச் செயல்பட்டு, நாடாளுமன்றத்தை ஸ்தம்பிக்க வைத்து, இன்றைக்கு* suspend *செய்யப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் உரிமைகளைக் காப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அந்த மாவீரர்களுக்கு நாங்கள் இங்கே தலைவணங்கி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் போய் “நீங்கள் யாருக்கோ அடிமை” என்று சொல்கிறார்களே!*



“நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்” என்ற வகையில், எமனுக்கே அஞ்சாத தலைவரான டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் வந்தவர்கள் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மேகதாது அணையைக் கட்டுவதுபற்றி அவர்கள் சொன்னால்-முல்லைப் பெரியாறு அணையின் குறுக்கே ஒரு மாற்று அணை கட்டுவதற்கான வரைவுத் திட்டத்திற்கு, அப்போதைய மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் திரு. ஜெயராம் ரமேஷ் அவர்கள் அனுமதிக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு மூன்று நாட்கள் மேலாகியும் இதை எதிர்த்து அன்றைய இவர்களுடைய அரசு குரல் கொடுக்கவில்லை. மாறாக, “முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை, சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ளதை மத்திய அரசு அறியும். எனவே, கேரள அரசுக்கு இதைப்போன்ற அனுமதியை கொடுத்திருக்காது என்றுதான் நம்புகிறோம்” என்று சமாதான தொனியில் தெரிவித்தனர். இதைக் கண்டித்து மாண்புமிகு அம்மா அவர்கள் குரல் கொடுத்தவுடன், இந்தப் பிரச்சினை குறித்து அப்போதைய மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆ. ராசா மற்றும் மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் திரு. ஜெயராம் ரமேஷ் அவர்களைச் சந்தித்துப் பேசியதாகவும், அப்போது கேரள அரசுக்கு வழங்கப்பட்ட அனுமதியை நிறுத்தி வைக்க உத்தரவிடுவதாக திரு. ராசாவிடம் திரு. ஜெயராம் ரமேஷ் உத்தரவாதம் அளித்ததாகவும் செய்திகள் வெளியாயின.

*பிற்பகல் 1-45*

இந்தச் சூழ்நிலையில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மாண்புமிகு திரு. ஜெயராம் ரமேஷ், முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் புதிய அணை கட்டுவதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு கேரள அரசுக்கு அனுமதி அளித்ததை உறுதிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், தமிழக அரசுக்கு எவ்விதமான உத்தரவாதமும் தரப்படவில்லை என்றும் தெரிவித்தார். இதைக் கண்டித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் *5-10-2009* அன்று தேனி மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, வேறு வழியின்றி, மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சரைக் கண்டித்து *1-11-2009* அன்று மதுரையில் தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதில் தானும் கலந்துகொள்ளப் போவதாக முன்னாள் முதலமைச்சர் தெரிவித்தார். ஒரு சில நாட்களில், மதுரையில் நடைபெறும் கண்டனப் பொதுக் கூட்டம்

*மத்திய அமைச்சரையோ, மத்திய அரசையோ எதிர்த்து அல்ல என்றும், கேரள அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கண்டனப் பொதுக் கூட்டம் நடத்தப்படும் என்றும் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். பின்னர், முல்லைப் பெரியாறு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது என்று கூறி, கண்டனப் பொதுக் கூட்டத்தையே இரத்து செய்துவிட்டார்கள். ஆனால், இன்றைக்கு அண்ணா தி.மு.க. அம்மாவின் அரசு, அம்மாவின் ஆட்சி, அம்மாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தையே ஸ்தம்பிக்க வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி முல்லைப் பெரியாறிலே மாற்று அணை கட்ட முடியவில்லையோ, அதைப்போல நிச்சயமாக மேகதாதுவிலே மாற்று அணை கட்ட நாங்கள் விடமாட்டோம். (குறுக்கீடு) மேகதாதுவிலே மாற்று அணை கட்ட நாங்கள் விடமாட்டோம். (குறுக்கீடு) ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நடந்த சம்பவத்தைத்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.*

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *உரையை முடிக்கப் போகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உரையை முடிக்கப் போகின்றேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் ஏதாவது தவறாகப் பேசினேனா?*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)*

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** Please, *உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)* Please, *உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரே நிமிடம். (குறுக்கீடு)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *அவர் பேசி முடிக்கட்டும்.*

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *நிச்சயமாக மேகதாதுவில் அணை கட்ட அம்மாவின் அரசு அனுமதிக்காது. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அனுமதிக்கமாட்டார்கள். நாங்கள் விடமாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)*



*மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்களை விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு இந்தப் பேரவையிலே 2002 ஆம் ஆண்டு மே மாதம் அறிமுகம் செய்யப்பட்டு, விவாதிக்கப்பட்டது. அந்த நேரத்தில் இந்த பிளாஸ்டிக்கின் தீமையைக் குறித்து நம்முடைய மறைந்த முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பேரவையில் ஒரு மணி நேரத்திற்கு மேலாகப் பேசினார்கள். சென்னையிலிருந்து புறப்பட்டு மகாபலிபுரம் போகின்ற வரையில் பல்வேறு பகுதிகளில் இந்த பிளாஸ்டிக் படர்ந்து கிடப்பதனால் ஏற்படுகிற தீமை, விவசாயத்திற்கு இந்த பிளாஸ்டிக் ஏற்படுத்துகிற தீமைகளை எல்லாம் சுட்டிக்காட்டி, எந்தக் குறிப்பும் இல்லாமல் மாண்புமிகு அம்மா அவர்கள் 1 மணி நேரத்திற்கும் மேலாகப் பேசினார்கள். எதிர்வரிசையில் பேராசிரியர் இருந்தார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் இருந்தார்கள். அண்ணன் திரு. கரி. இராமசாமி அவர்கள் இருந்தார்கள் மற்றும் இங்கிருக்கிற திரு. சேகர்பாபு அவர்கள் இருந்தார்கள். திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் இருந்தார்கள். 1¼ மணி நேரத்திற்கும் மேலாக அம்மா அவர்கள் பேசினார்கள். பிளாஸ்டிக் பொருட்களை எதற்காகத் தடை செய்ய வேண்டும் என்று பேசினார்கள். அந்தப் பேச்சைப் பாராட்டி மறுநாள் உங்களுடைய எதிர்க்கட்சி துணைத் தலைவர், அம்மா அவர்களிடம், "இவ்வளவு அறிவு பெற்றிருக்கிறீர்களே, எந்தக் குறிப்பும் இல்லாமல், இவ்வளவு நேரம் அற்புதமாகப் பேசினீர்களே, அம்மா! நான் அருகிலேயே அமர்ந்திருந்தேன்.* Really I appreciate you" *என்று சொல்லி உங்களுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் அன்றைக்கு ஒரு புத்தகத்தை அம்மா அவர்களுக்குப் பரிசாகக் கொடுத்தார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அம்மா வழி வந்த அரசு, அம்மா சொன்ன அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அம்மா சொன்ன அந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்ற அடிப்படையில், இத்தனை ஆண்டுக் காலம் கழித்து, 'தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும்' என்பதைப்போல, அம்மாவின் பிள்ளை; அண்ணன் எடப்பாடியார் அவர்கள், உலகத்திற்கே ஒரு வழிகாட்டியாக; எடுத்துக்காட்டாக இருந்து, இன்றைக்கு பிளாஸ்டிக் மீதான தடையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [*2019 ஜனவரி 4 பிற்பகல் 1-50*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழகத்தில் நெடுஞ்சாலைத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. புறவழிச் சாலைகள், வட்டச் சாலைகள், மேம்பாலங்கள் உட்பட முக்கிய சாலைக் கட்டமைப்புத் திட்டங்களை அம்மாவின் அரசு 'ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்' சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. சென்னை துறைமுகம்-மதுரவாயல் இடையேயான உயர் வழித் தடம்; சென்னை-பெங்களூரு தொழில் வழித் தடம்; சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித் தடம்; கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தும் திட்டம் ஆகியவை தமிழ்நாட்டிற்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களாகும். இவற்றிற்கான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் தமிழகமும், தமிழக மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து ஒத்துழைப்பு கொடுப்போம்.

என்னுடைய தொகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்த நன்மைகளை இந்த ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமை. பொள்ளாச்சி நகருக்கு ஒரு கிழக்கு புறவழிச் சாலை வேண்டுமென்று முதல் கூட்டத்தொடரிலே கேட்டேன். அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தார்கள். 25 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்து, அந்தச் சாலைப் பணிகள் சிறப்பாக முடிவடைந்துவிட்டன. மேற்கு புறவழிச் சாலை வேண்டுமென்று சென்ற ஆளுநர் உரையின்போது நான் கோரிக்கை வைத்தேன். அதற்காக 53 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொடுத்து, அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

அதுமட்டுமல்லாமல், பொள்ளாச்சி-கோவை சாலையை உலகத் தரம் வாய்ந்த கான்கிரீட் சாலையாகவும், நான்கு வழிச் சாலையாகவும், தேவைப்படும் இடங்களில் service road, தேவையான இடங்களில் மேம்பாலங்கள், அதாவது கிணத்துக்கடவில் ஒரு மேம்பாலம், ஈச்சனாரி விநாயகர் கோயில் அருகில் ஒரு மேம்பாலம், எல்&டி ரோடு கிராசிங்கில் ஒரு மேம்பாலம், அதேபோன்று, 550 கோடி ரூபாயில் பொள்ளாச்சி-



*2019 ஜனவரி 4*] [முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்]

கோவை சாலையை, 65 ஆண்டுக் காலமாக யாரும் பெற்றுத் தராத சாலையை, கான்கிரீட் சாலையை, உலகத் தரம் வாய்ந்த சாலையாகப் பெற்றுக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்களுக்கு பொள்ளாச்சி சுற்று வட்டார மக்கள், பொள்ளாச்சியிலுள்ள விவசாயப் பெருமக்கள் எப்படி நன்றி சொல்வதென்றே தெரியாமல், மனமகிழ்ச்சியோடு இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், இன்னொன்று, பொள்ளாச்சி கிழக்கு புறவழிச் சாலையில் 6 வழிச் சாலை அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு--இது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்களுக்குத் தெரியும்--பொள்ளாச்சியிலிருந்து 6 வழிச் சாலையாக, பொள்ளாச்சிக்கு வடக்குப் பக்கத்திலிருந்து உடுமலைப்பேட்டை சாலை வரை சென்று, பொள்ளாச்சி-ஒட்டன்சத்திரம் வரை எக்ஸ்பிரஸ் ரோடாகவும், ஒட்டன்சத்திரத்திலிருந்து கொடநாடு வரை 6 வழிச் சாலையாகவும் வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். இது உங்கள் எல்லோருக்கும் தெரியும். பொள்ளாச்சியில் தென்னை நார் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்ற கன்டெய்னர்களில் இளநீர், தேங்காய், பதப்படுத்தப்பட்ட தேங்காய் போன்றவற்றை தூத்துக்குடி துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கு 6 வழிச் சாலை வேண்டுமென்று சென்ற கூட்டத்தில் நான் கேட்டிருந்தேன். இதுகுறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. வருகிற 10 ஆம் தேதி அந்த 6 வழிச் சாலைக்கான ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படவிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக பணிகள் தொடங்கப்படவுள்ளன. பொள்ளாச்சியிலிருந்து புறப்பட்டால் 4 மணி நேரத்தில் கன்டெய்னர் தூத்துக்குடி துறைமுகத்தைச் சென்றடைந்துவிடும். அதன்மூலம் தொழில்கள் நல்ல முறையில் வளர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதையும் இங்கே பணிவோடு சுட்டிக்காட்டுகிறேன்.

பொள்ளாச்சியில் ஓர் இரயில்வே crossing பொள்ளாச்சி நகரத்திற்குள் இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு இரயில்வே மேம்பாலம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். கேட்டு 1½ வருடங்களாகிவிட்டதே என்று எண்ணியிருந்தேன். திடீரென்று நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்பு அதற்கான உத்தரவு வந்து சேர்ந்திருக்கிறது. நில எடுப்பிற்கு 15 கோடி ரூபாயும், மேம்பாலத்திற்கு 48 கோடி ரூபாயும் யார் தருவார்கள்? யாரால் இப்படிப்பட்ட பணிகளைச் செய்ய முடியும் என்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்கள், மாண்புமிகு

துணை முதலமைச்சர் அவர்கள் அதற்குத் துணை நிற்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆக, 63 கோடி ரூபாய் செலவில் பொள்ளாச்சி நகரத்தில் ஓர் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

அதுமட்டுமல்ல; சகோதர, சகோதரிகளே, நான் பொள்ளாச்சி, பொள்ளாச்சி என்று சொல்வதால், பொள்ளாச்சிக்கு மட்டும் என்று நினைத்துக்கொள்ளக் கூடாது. பொள்ளாச்சி ஒரு புனிதமான நகரம். நீண்ட கால பாரம்பரியம் மிக்க நகரம். பொள்ளாச்சி-பாலக்காடு சாலை 70 கோடி ரூபாய் செலவில் விரைவில் அமையவுள்ளது. பொள்ளாச்சி-கொச்சின் சாலை கன்டெய்னர்கள் செல்லத்தக்க வகையில் 90 கோடி ரூபாய் செலவில் அமைவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள். இவையெல்லாம் அமைந்து முடியும்போது, பொள்ளாச்சியின் சுற்றுவட்டாரம் முழுவதும் பயனடையும் அந்தத் திட்டம் 5, 6 தொகுதிகளை உள்ளடக்கியதாகும். நான் பொள்ளாச்சிக்காக மட்டும் பேசவில்லை. வால்பாறை, கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம் போன்ற பகுதிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களெல்லாம், துறைமுகங்களுக்குச் சென்றடைய வேண்டும் என்பதற்காகத்தான் நான் பொள்ளாச்சியை மையப் பகுதியாக வைத்துக் குறிப்பிடுகிறேன். இத்தனை சாலைகளையும் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி ஒதுக்கிக் கொடுத்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

பொள்ளாச்சி நகரத்திலே மாவட்ட மருத்துவமனை செயல்படுகிறது. அதற்கு புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டேன். 8 மாடிக் கட்டடத்திற்கு நிதியொதுக்கப்பட்டு, 2 மாடிகள் கட்டி முடிக்கப்பட்டு, 3-வது மாடி கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கோவை மாவட்டத்திலே, பொள்ளாச்சிக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டோம். கல்லூரி ஒதுக்கப்பட்டு, கல்லூரி இரண்டாம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல ஆனைமலையாறு-நல்லாறு திட்டம் நிலுவையிலிருக்கிறது. அதற்கு ஓர் உயர்மட்டக் குழு அமைக்க வேண்டுமென்று கேட்டோம். இதய தெய்வம் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். உயர்மட்டக் குழு தன்னுடைய பணியை சிறப்பாகச் செய்து முடிக்கும் நிலையில்





இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, தயவு செய்து எப்படி அவிநாசி-அத்திக்கடவு திட்டத்தை நீங்கள் 1,650 கோடி ரூபாய் செலவிலே, 25,000 ஏக்கர் நிலம் பயன்பெறத்தக்க வகையிலே சிறப்பாகச் செயல்படுத்தவுள்ளீர்களோ, எப்படி விரைவில் வந்து நீங்கள் பூஜை போட இருக்கிறீர்களோ, அதேபோல, நீங்கள் இந்த ஆனைமலையாறு-நல்லாறு திட்டத்தைத் தொடங்குவதற்கான ஏற்பாட்டை, கேரள அரசோடு பேசி செயல்படுத்துவதற்கு நீங்கள் முன்வர வேண்டும். நீங்கள் கேரள அரசோடு பேசி, எப்படியாவது அவர்களைச் சம்மதிக்க வைத்து, ஆனைமலையாறு-நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதோடு, Dam to Root-அணையிலிருந்து விவசாயிகளின் பயிர்களின் வேர் வரையில் குழாய்ப் பாசனமாக, சொட்டுநீர்ப் பாசனமாக நான்கரை இலட்சம் ஏக்கர் பாசன நிலத்தையும் இஸ்ரேல் முறை பாசனமாக நீங்கள் மாற்றித் தர வேண்டுமென்று அன்போடு சுட்டிக்காட்டுகிறேன்.

இத்தனையையும் நான் சொல்லியதோடு, இறுதியாக ஒன்றையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, கோவை மாவட்டம் என்றால், தொழில் துறைக்கான மாவட்டம். திருப்பூர் மாவட்டம் என்றால், நெசவாளர்களுக்கான Textile District. பொள்ளாச்சி என்றால், விவசாயிகளுக்கான மாவட்டம். யதார்த்தமாக வேளாண் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதி பொள்ளாச்சி பகுதி. பொள்ளாச்சி என்பது மிகப் பெரிய தாலுகாவாக இருந்தது. பொள்ளாச்சி தாலுகாவிலிருந்து வால்பாறை தாலுகா, ஆனைமலை தாலுகா, கிணத்துக்கடவு தாலுகா எல்லாம் பிரிந்து சென்றுவிட்டன. இப்பொழுது எங்களுடைய வேண்டுகோள், இவ்வளவு வசதிகளையும் கொண்டது பொள்ளாச்சி. அம்மா அவர்கள் ஒரு முறை தேர்தல் சுற்றுப்பயணத்திற்கு வந்தபோது, பொள்ளாச்சியிலே ஒரு நாள் தங்கியிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சொல்ல விரும்புகிறேன், அம்மா அவர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு வந்தபோது பொள்ளாச்சியில் ஒரு நாள் தங்கியிருந்தார்கள். மறுநாள் தேர்தல் பயணத்தை முடித்துவிட்டுப் புறப்படுகிற நேரத்திலே அம்மாவிடத்திலே சென்று, "அம்மா; நீங்கள் ஒரு நாள்தானே தங்கினீர்கள்; இன்னொரு நாள் தங்கிப் போகலாமே?" என்று கேட்டேன். அம்மா அவர்கள் 'தேர்தல் பிரசார பயணமாச்சே ஜெயராமன்' என்று சொன்னார்கள். நான் பாவமாக அம்மாவைப் பார்த்தேன். பழனி வரைக்கும் அம்மா பேசிக்கொண்டே போனார்கள். பழனி போய் பிரசாரம் முடிந்ததும், திரும்பவும் பொள்ளாச்சிக்கு வண்டியை திருப்புங்கள் என்று

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [*2019 ஜனவரி 4*

சொல்லிவிட்டார்கள். பொள்ளாச்சியில் நான்கு நாட்கள் அம்மா தங்கினார்கள். என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரர் வீட்டில் நான்கு நாட்கள் தங்கி ஓய்வெடுத்துச் சென்றார்கள். அம்மாவுக்கு ரொம்பப் பிடித்த ஊர் பொள்ளாச்சி. மாசாணியம்மன் ஸ்தலம் இருக்கிற ஊர் பொள்ளாச்சி; சூளக்கல் மாரியம்மன் இருக்கிற ஊர் பொள்ளாச்சி; பல தர்காக்கள் இருக்கின்ற ஊர் பொள்ளாச்சி.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

எனவே, இத்தனை புகழும் வாய்ந்த இந்த பொள்ளாச்சியை, வேளாண் பெருங்குடி மக்கள் அதிகம் வாழ்கிற இந்த பொள்ளாச்சியை, வேளாண் தொழிலையே உயிராகக் கருதுகிற இந்த பொள்ளாச்சியை, அடுத்த கூட்டத் தொடர் வரை காத்திராமல், இந்தக் கூட்டத் தொடரிலேயே, வேளாண்மைக்கான மாவட்டமான பொள்ளாச்சியை நீங்கள் தனி மாவட்டமாக அறிவித்திட வேண்டுமென்று தாள்பணிந்து கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, சிறப்பாக நீரா பானம் இறக்குவதற்கான வாய்ப்பு கொடுத்தீர்கள். இன்னும் அதற்கான தொழிற்சாலை அமைக்கப்படாமல் உள்ளது. நல்லதொரு தொழிற்சாலையை அமைத்து tetra pack, Bottling pack போன்றவற்றைத் தயார் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பினை என்னுடைய சொந்த கிராமமான திப்பம்பட்டியில் அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அது இருக்கிறது, அங்கே நீரா பானம் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அமைத்து, உலகம் முழுவதும் நீரா பானம் ஏற்றுமதி செய்திட நீங்கள் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைதியான நல்லாட்சி, ஏழை மக்கள் முன்னேற்றத்திற்கான நல்லாட்சி, உழைக்கும் மக்கள் உயர்வுக்கான நல்லாட்சி, அம்மா வழியில், எம்.ஜி.ஆர். காட்டிய வழியில் நடக்கின்ற நல்லாட்சி, இந்த நல்லாட்சியின் நாயகர்களான நீங்கள் இருவரும் காணுகிற காட்சி ஒன்றாக இருக்க வேண்டும். உங்கள் இருவருடைய செயலும் ஒன்றாக இருக்கிறது. உங்கள் பின்னால் இந்த இயக்கம் இருக்கும்; அம்மா காட்டிய வழியில் நூறாண்டு காலம் இந்த ஆட்சியும், கட்சியும் *(மேசையைத் தட்டும் ஒலி)* தொடரும் என்று சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய பேச்சில் குறுக்கிடாத எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



*2019 ஜனவரி 4*]

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் எழுந்து நின்றார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் ஒன்றுமில்லை. உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* அதெல்லாம் முன்மொழிந்துவிட்டார், உட்காருங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

***திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வறியா சூரியன் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் ஓய்வெடுத்துவரும் திசை நோக்கி வணங்குகிறேன். 2019 ஆம் ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துகளை எடுத்து வைத்திட வாய்ப்பளித்த எங்களுடைய கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும் என்னுடைய நன்றி வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய கருத்துகளை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரை, பக்கம் 6-7-ல் என்னுடைய தொகுதியில் அமையப்பெற்றுள்ள ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுகுறித்து மக்களின் கருத்தை, மக்களின் எண்ணத்தை, அவர்களின் உணர்வை ஒரு சட்டமன்ற உறுப்பினராக இந்தச் சட்டமன்றத்தில் பதிவு செய்திட வேண்டுமென்று, சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னரே ஒரு வார்த்தை சொல்லிவிடுகிறேன். அந்தப் பொருள் குறித்த வழக்கு தீர்ப்பாயத்தில் இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* இல்லையில்லை.

**திருமதி பி. கீதா ஜீவன்:** எல்லா இடங்களிலும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்திலும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. *(குறுக்கீடுகள்)* அரசும் அதில் கவனம் செலுத்தி வருகிறது. *(குறுக்கீடுகள்)* இருங்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** அதாவது நான் contrary-யாக எதையும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அந்தப் பொருள் குறித்து ஆழமாகப் பேசாமல், அதற்குக் குந்தகம் விளைவிக்காத வகையில் மேலோட்டமாகப் பேசுங்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மக்களுடைய உணர்வுகளை மட்டுமே நான் எடுத்து வைக்கவிருக்கிறேன். வேறு எதையும் நான் விரிவாகப் பேசவில்லை. நடந்த நிகழ்வுகளுக்குள் நான் செல்லவில்லை. இனி செய்ய வேண்டியவற்றை மட்டும் மக்களின் கருத்தாக அரசிடம் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

பொதுவாக தூத்துக்குடி தொகுதியில், பசுமைத் தீர்ப்பாயத் தீர்ப்பிற்குப் பிறகு எந்தவொரு பேச்சுரிமையும் மறுக்கப்படுகிறது. கூட்டங்களோ, ஆர்ப்பாட்டங்களோ நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. நீதிமன்றத்தில் அனுமதி கேட்டாலும், தமிழக அரசு வழக்கறிஞர்களும், ஸ்டெர்லைட் ஆலையின் வழக்கறிஞர்களும் அனுமதி வழங்கக் கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருந்து, எந்தவொரு உரிமையும் வழங்கப்படுவதில்லை என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, தார்மீக உரிமையே மறுக்கப்படுகிறது. அப்பகுதியில் 144 தடை உத்தரவு போடாத நிலையிலும், 144 தடை உத்தரவு போட்ட நிலையிலேயே அந்தத் தொகுதி இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலையில் மக்கள் 'நீறு பூத்த நெருப்பு' போல, அரசு என்ன அறிவிக்கப் போகிறது என்பதை எதிர்பார்த்து, ஆளுங்கட்சியை எதிர்பார்த்து இருக்கிறார்கள் என்பதுதான் உண்மையான நிலைமை.

9-4-2018 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், ஆலை விரிவாக்கம் மற்றும் உரிம புதுப்பித்தலுக்கு மறுத்து, நிராகரித்து உத்தரவிட்டுள்ளது. அதே உத்தரவின் அடிப்படையில்தான், தற்போது தமிழக அரசு அந்த ஆலைக்கு சீல் வைத்து மூடியுள்ளது. நடைபெற்ற சம்பவங்கள் எதற்குள்ளும் போக நான் விரும்பவில்லை. ஆனால், இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அறிவீர்கள். அதே உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் அடிப்படையில்தான் ஆலை மூடப்பட்டுள்ளது. அப்பொழுதே எங்களுடைய தலைவர் தளபதியார் அவர்கள், அந்த உத்தரவில் அடிப்படைக் காரணங்கள் அரசால் விளக்கப்படவில்லை; அமைச்சரவையைக் கூட்டி அரசு





கொள்கை முடிவு எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அதேபோல, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையும் அரசு வழங்கிய உத்தரவில் தெளிவான அடிப்படைக் காரணங்கள் இல்லை, அதனால் தெளிவான காரணங்களோடு உத்தரவு வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தியது. இருந்தாலும் அரசு அதைப் பொருட்படுத்தவில்லை. அரசு சீல் வைத்து ஆலையை மூடியது. ஆலை நிருவாகம் தீர்ப்பாயத்தில் முறையீடு செய்தது. 15-12-2018 அன்று அந்த ஆலை திறக்கப்படலாம் என்றும், அரசினுடைய நடவடிக்கைகளை, அரசினுடைய உத்தரவினை இடித்துரைத்து, தீர்ப்பாயம் உத்தரவு வழங்கியுள்ளது. குறிப்பாக அந்தத் தீர்ப்பிலே, ஆலையை மூட தமிழக அரசின் உத்தரவு நியாயப்படுத்த முடியாத உத்தரவு என்றும், தமிழக அரசு தன்னிடமுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் எடுக்கக்கூடாத முடிவு என்றும், தமிழக அரசு கொள்கை முடிவெடுத்து ஆலை மூடப்படவில்லை என்பதால், தமிழக அரசின் ஆணையை இரத்து செய்யும் அதிகாரம் பசுமைத் தீர்ப்பாயத்திற்கு இருக்கிறது என்றெல்லாம் இடித்துரைத்து, அந்த ஆலையைத் திறப்பதற்கு உத்தரவிட்டுள்ளது. ஆகவே, தற்போது தமிழக அரசு அதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. இதுதான் மக்கள் எதிர்பார்ப்பது.

2013 ஆம் ஆண்டில் இதேபோல ஒரு chemical disaster ஏற்பட்டது. 2013 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 23 ஆம் நாள் ஏற்பட்ட அந்த disaster-ல் அந்த நகரத்திலிருந்த அனைத்து மக்களுக்கும் மூச்சுத் திணறல் ஏற்பட்டு, பலர் சிகிச்சை பெற்றனர். அந்த நிலை வந்தபோது, அப்போதைய முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள் ஆலையை மூட உத்தரவிட்டார்கள். ஆலை மூடப்பட்டது. அப்போதும் இதே நிலைதான். இப்போது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் எந்தப் பிரிவின்கீழ் அந்த ஆலையை மூடியுள்ளதோ, அப்போதும் இதே பிரிவின்கீழ்தான் அந்த ஆலை மூடப்பட்டது. பின்னர் ஆலை நிருவாகம் பசுமைத் தீர்ப்பாயத்தில் முறையீடு செய்தது. பசுமைத் தீர்ப்பாயத்தில் இடைக்கால உத்தரவு, பின்பு இறுதி உத்தரவு பெற்று ஆலை இயங்கி வந்தது. அரசு மேல்முறையீடு செய்தது. அந்த மேல்முறையீட்டு வழக்கில் இன்றுவரை விசாரணை நடைபெற்று வருகிறது என்பதை அரசியலிலுள்ள அனைவரும் அறிவோம். அதே நடைமுறைதான் இப்போதும் பின்பற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய உத்தரவின்பேரில் ஆலை மூடப்படுகிறது; ஆலை

நிருவாகம், பசுமைத் தீர்ப்பாயத்தில் முறையீடு செய்து ஆலையைத் திறக்க தற்போது உத்தரவு வாங்கி வந்துவிட்டது. மீண்டும் அரசு மேல்முறையீடு செய்கிறபோது, மக்கள், எங்களுடைய எண்ணங்களை அரசு புரிந்துகொள்ளவில்லையா; அரசுக்குத் தெரியவில்லையா, தெரியப்படுத்தவில்லையா என்று கேட்கிறார்கள். அரசு நிச்சயமாக இதிலே கொள்கை முடிவெடுக்க வேண்டுமென்ற முறையில், எங்களுடைய பகுதி மக்கள், தொகுதி மக்கள் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் இந்தக் கருத்தை அரசுக்குத் தெரிவித்திட விரும்புகிறார்கள்.

*பிற்பகல் 2-05*

*28-5-2018* அன்று அந்த ஆலைக்கு சீல் வைக்கப்பட்டது. இந்த நிலையில், மக்களுடைய எண்ணத்தை கவனத்தில்கொண்டு, அரசு செயல்பட வேண்டும். சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்கிற நிலையில், இதிலே அரசு என்ன முடிவு எடுக்கவிருக்கிறது என்று எங்கள் தொகுதி மக்கள் காத்திருக்கிறார்கள். மக்களுடைய எண்ணத்தை, உணர்வை நான் உங்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறேன். அந்த ஆலைக்கு எதிராக பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. கடந்த *23-7-2018* அன்று மத்திய நீர் வளத் துறை அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் ஓர் அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள். ஸ்டெர்லைட் ஆலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட நிலத்தடி நீரை ஆய்வு செய்தபோது அதில் பல்வேறு வகையான உலோகங்கள், கிட்டத்தட்ட Nickel, Lead, Fluoride, Iron, Cadmium போன்ற உலோகங்கள் அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக இருக்கிறது என்று ஓர் அறிக்கையை மத்திய அரசு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அதேபோல, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமும் அங்கு நிலத்தடி நீரை எடுத்து, பகுப்பாய்வு செய்தபோது, மக்கள் உபயோகப்படுத்த முடியாத அளவிற்கு, சரிசெய்ய முடியாத அளவுக்கு அதில் மாசு உள்ளது என்று ஓர் அறிக்கையை அளித்துள்ளது. அதேபோல, கடந்த மாதம் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி நகரில் காற்றில் மாசின் அளவை அளவீடு செய்தபோது, ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டபின்பு காற்றில் மாசின் அளவு குறைந்துள்ளது என்று ஓர் அறிக்கை கொடுத்துள்ளது. ஆகவே, இந்த ஆலை தொடங்கப்பட்டதிலிருந்தே பல்வேறு விபத்துகள், சிறு விபத்துகள், சில பெரிய விபத்துகள் எல்லாம் நடந்து வருகின்றன. பல்வேறு உயிரிழப்புகள் நடந்துள்ளன. பலர் உடல் உறுப்புகளை இழந்துள்ளனர். ஆகவே, இந்த ஆலையால் மக்களுக்கு, சுற்றுச்சூழலுக்கு பாதிப்புகள் ஏற்படாத அளவிற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.





பொதுவாக, சுற்றுச்சூழலை மாசு ஏற்படுத்தும் ஆலையானது வேலைவாய்ப்புக் கொடுக்கின்றது என்ற காரணத்தினாலும், அதை மூடும்பட்சத்தில் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்கிற காரணத்தினாலும், அந்த ஆலையைத் தொடர்ந்து நடத்திட உரிமை கோர முடியாது என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். ஆக, அந்த ஆலையைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் நன்கு அறிவார்கள். அநேக அரசு விதிமுறைகளை அந்த ஆலை கடைப்பிடிப்பதில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. தமிழகத்தில் ஒரேயொரு தாமிர உருக்காலைதான் அமையப்பெற்றுள்ளது. ஆகவே, கொள்கை முடிவெடுப்பது என்பது மிகவும் எளிதான ஒன்றாகும் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதேபோல, கடந்த இரண்டு வார காலமாக பொது மக்கள்மீது, குறிப்பாக, அங்கே பெண்கள்மீது பல்வேறு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகளையெல்லாம் அரசு கருணை அடிப்படையில் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் நான் வைக்க விரும்புகிறேன். ஆகவே, தூத்துக்குடி தொகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம மக்களுடைய கருத்திற்கு, உணர்விற்கு மதிப்பளித்து, எங்களுடைய கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் வலியுறுத்தியதைப்போல, ஸ்டெர்லைட் ஆலையால் அந்தப் பகுதி மக்களுக்கு சரி செய்ய முடியாத அளவிற்கு ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்புகள் தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் சேகரித்து, அறிவியல்பூர்வமான ஆய்வுகளை மேற்கொண்டு, தூத்துக்குடி மண்ணை, நிலத்தடி நீரை, காற்றை மாசுபடுத்தும் அந்த ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடிட தமிழக அமைச்சரவை கொள்கை முடிவெடுத்திட வேண்டும். அல்லது, ஜல்லிக்கட்டுக்கு இயற்றியதுபோல சட்டமன்றத்தில் ஒரு சிறப்புச் சட்டம் இயற்றிட வேண்டுமென்று நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கையாக, வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, ஜனவரி *1* ஆம் தேதி முதல், சில பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எல்லாப் பகுதிகளிலும் மாநகராட்சி மற்றும் நகராட்சி அதிகாரிகள் கடை

[திருமதி பி. கீதா ஜீவன்] [2019 ஜனவரி 4

கடையாகச் சென்று, பிளாஸ்டிக் கவர்களை எல்லாம் பறிமுதல் செய்து வருகிறார்கள். ஆனால், அதிலே ஒரு குழப்பமான சூழ்நிலை நிலவி வருகிறது. ஏனென்றால், கடைகளில் Kurkure, Bingo, பிஸ்கட் பாக்கெட்டுகள், Lays பாக்கெட்டுகள் எல்லாம் இருக்கின்றன. அதை யாரும் பறிமுதல் செய்வதில்லை. அதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதா, இல்லையா? இல்லை, அவையும் பறிமுதல் செய்யப்படுமா? அவற்றை விற்கக் கூடாதா என்பதிலே மக்களிடையே ஒரு குழப்பம் ஏற்படுகிறது. ஆகவே, நம்முடைய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல், வியாபாரிகளுக்கு இன்னும் கூடுதல் அவகாசம் கொடுத்து, நாம் இதைச் செயல்படுத்தினால், எளிதாக இருக்கும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, ஏற்றமிகு தமிழகத்தை எழுச்சியோடு வழிநடத்திக் கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

பிற்பகல் 2-10

இன்றைக்கு இந்தியத் திருநாடே எதிர்பார்த்துக் கொண்டிருந்த பிளாஸ்டிக் ஒழிப்பு நடவடிக்கை, தமிழகத்தில் பொது மக்களிடத்திலும், அனைத்துக் குழந்தைச் செல்வங்களிடமும் பெரும் நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், 2-5-2018 அன்று 6 மாதம் அவகாசம் கொடுத்து, 1-1-2019 முதல் இது அமலுக்கு வருமென்று சொன்னார்கள். அப்போதிருந்தே, இதற்கு நல்ல ஒரு எதிர்பார்ப்பு நாட்டு மக்களிடம் இருந்ததன் காரணமாக, இன்றைக்குத் தமிழகத்தை 6 மண்டலங்களாகப் பிரித்து, இரண்டு மண்டலங்களுக்கு ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி என்ற முறையில் நியமிக்கப்பட்டு, 6 மாதங்களாக ஆய்வு செய்து, பொது மக்களிடத்திலே சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தி, எந்த ஒரு தவறும் நடைபெறாதவண்ணம், நமக்கு ஊறு விளைவிக்கின்ற 14 வகையான பிளாஸ்டிக் பொருட்கள் மட்டும்தான் தடை செய்யப்படுமென்கின்ற ஒரு நல்ல செய்தியை மாண்புமிகு



2019 ஜனவரி 4] [திரு. கே.சி. கருப்பணன்]

முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே, அந்த 14 வகையான பிளாஸ்டிக் பொருட்கள் மட்டும்தான் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காக Multi-national Company-க்கு இந்த அரசு எந்தச் சலுகையும் செய்யவில்லை.

அதேபோல, இன்றைக்கு டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் மற்றும் சிறுவணிகர்களெல்லாம், உணவுப் பொருளை கெட்டுப்போகாமல் பாதுகாப்பதற்கு, பிளாஸ்டிக்கை பயன்படுத்துகிறார்கள். 100-க்கும் மேற்பட்ட வகைகளில் பிளாஸ்டிக் பொருட்கள் இன்னும் தமிழகத்தில் இருக்கின்றன. மறு சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் பொருட்களான கேரி பேக் போன்ற 14 பொருட்களை மட்டும்தான் அரசு தடை செய்திருக்கின்றது. இதில் எந்த ஒரு குளறுபடியும் இல்லை. நாட்டு மக்களிடத்திலே எந்த ஒரு கிளர்ச்சியும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அந்த 14 வகையான பொருட்களை மட்டும்தான் தடை செய்திருக்கிறோம். பிளாஸ்டிக்கைப் பொறுத்தவரையில், 100 சதவிகிதம் தடை இல்லை. மக்களுக்குக் கேடு விளைவிக்கின்ற, நதிகள் மற்றும் குளங்களையெல்லாம் பாழாக்குகின்ற, கால்வாய்களில் அடைப்பு ஏற்படுத்தி கொசுக்களைப் பெருக்குகின்ற, 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு மட்டும்தான், ஒரு முறை பயன்படுத்தி எறியக்கூடிய மக்காத பொருட்களுக்கு மட்டும்தான், தடை விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எதற்கும் தடையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதாவது, ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறியக்கூடிய அந்த 14 வகையான பொருட்களுக்கு மட்டும்தான் தடையே தவிர, வேறு எதற்கும் தடையில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய கோரிக்கை என்னவென்றால், ஏழையெளிய மக்கள் உபயோகப்படுத்துகிற பிளாஸ்டிக் கவர்கள், ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறிகின்ற பிளாஸ்டிக் கவர்கள், பூ விற்கின்றவர்கள் வைத்துள்ள கவர்களை எல்லாம் தடை செய்கிறீர்கள். ஆனால், ITC போன்ற பெரிய Branded கம்பெனிகளுடைய Kurkure, Lays, Bingo, பிஸ்கெட் கவர்களுக்கெல்லாம் தடை உண்டா, இல்லையா என்பதை அரசு இதுவரைக்கும் தெளிவுபடுத்தவில்லை. (குறுக்கீடு) அவற்றையும் தடை செய்திட வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

[*2019 ஜனவரி 4*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *பலமுறை சொல்லிக் கொண்டிருக்கின்றோம். 14 வகையான பிளாஸ்டிக்; 100-க்கு மேற்பட்ட பொருட்கள் (குறுக்கீடுகள்) இருங்கள்; சொல்கிறேன் கேளுங்கள். ஒரு நிமிடம் இருங்கள். 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்குத்தான் தடையே தவிர, வேறு எதற்கும் தடையில்லை. நம்முடைய கிராமப்புறங்களில் செய்கின்ற பிஸ்கெட், முறுக்கு, மிக்சர் போன்ற பண்டங்களையெல்லாம், பிளாஸ்டிக் கவர்களில்தான் அடைத்து விற்பனை செய்கிறார்கள். அதற்கும் தடையில்லை. அதேபோன்று, நம்முடைய தமிழகத்தில் வாழ்கிற அடித்தட்டு மக்கள் சிறுதொழில்களின்மூலம் உற்பத்தி செய்கின்ற,* Multi-national Companies *தின்பண்டங்களையெல்லாம் பேக் செய்யப் பயன்படுத்துகின்றவற்றிற்கும் தடையில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) அந்த* Multi-national Companies-*லிருந்து வருகின்ற கழிவுப் பொருட்களை உரிய முறையில் அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது. (குறுக்கீடுகள்) அதற்கும் சம்பந்தப்பட்ட கம்பெனிகள், அந்தந்த இடத்திலேயே, அந்தந்த* Departmental Stores-*ல் ஒரு* Machine-*ஐ வைத்து, எப்படி* Cool drinks *போன்றவற்றை எல்லாம் பணம் செலுத்தி எடுத்துக்கொள்கிறோமோ, அதேபோல, அந்தக் கவர்களை எல்லாம் கொண்டுபோய், அதிலே போட்டு அதற்குண்டான பணத்தைப் பெற்றுக் கொள்கின்ற முறையும் கூடிய விரைவில் அமலுக்கு வரவுள்ளது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) சின்னச் சின்ன வியாபாரிகளெல்லாம் உற்பத்தி செய்கின்ற கடலை மிட்டாய், முறுக்கு, மிக்சர் போன்றவற்றை* pack *செய்யப் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளுக்கு எல்லாம் தடையில்லை. அவர்கள் பேக் செய்கிறார்கள். அதற்குத் தடையில்லை. அரசு அதையும் தெளிவுபடுத்தும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

**திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிளாஸ்டிக் பைகளை எல்லாம் ரோடு போடுவதற்கெல்லாம்கூட உபயோகப்படுத்துகிறார்கள். அவற்றை* recycle *பண்ண முடியும். ஆனால், அந்த* Kurkure *போன்றவற்றிற்குப் பயன்படுத்தும் பிளாஸ்டிக் கவர்களை நிச்சயமாக* recycle *பண்ண முடியாது. அவை சுற்றுச்சூழலுக்கு மிகப் பெரிய கேட்டினை ஏற்படுத்துகிறது. ஆகவே, அரசு அதற்கு நடவடிக்கை எடுத்திட வேண்டும். அதுமட்டுமல்லாமல், கடலை மிட்டாயை கண்ணாடி பாட்டிலில் வைக்கும்போது மொறுமொறுப்பாக இருக்கும். எனவே, இவற்றையெல்லாம்* pack *செய்ய எதைப் பயன்படுத்த வேண்டுமென்று வியாபாரிகளுக்கு நீங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும். மேலும், கால அவகாசமும் கொடுத்திட வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அடுத்ததாக, நம்முடைய . . .*



*2019 ஜனவரி 4*] [திருமதி பி. கீதா ஜீவன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு 6 மாதம் அவகாசம் கொடுக்கப்பட்டு விட்டது. இது ஆரம்பக் கட்டம். இன்னும் வர வர அதனுடைய நிலைகளில் எல்லாம் ஒரு சில மாற்றங்கள் வரும். அப்போது அரசு அதுகுறித்து தெளிவுபடுத்தும். இது ஆரம்ப நிலை. கூடியவிரைவில் அதற்கான முழு அரசாணையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட உள்ளார்கள். அப்போது அது தெளிவாக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 2-15*

**திருமதி பி. கீதா ஜீவன்:** *அதாவது, வியாபாரிகள் யாரும்* prepared *ஆக இல்லை. தயாராக இல்லாததால், இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் உடனடியாக வேலை இழக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசு இதை* detailed *ஆக ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை மட்டும்தான் வலியுறுத்த விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 253 சிறிய கம்பெனிகள் உள்ளன. எந்தக் கம்பெனியிலும் 25 பேருக்குமேல் வேலை செய்யவில்லை. அதையெல்லாம் பார்க்கும்போது, இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு இதனால் வேலையிழப்பு ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**திருமதி பி. கீதா ஜீவன்:** அடுத்ததாக, அரசின் சார்பில் வேலைவாய்ப்பு மையங்கள்மூலம் இதுவரை வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வந்தது. ஆனால், கடந்த 2 ஆண்டு காலமாக, குறிப்பாக TNPSC மூலம் அறிவிக்கும் பணியிடங்களுக்கெல்லாம், பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, interview call for செய்து பணியமர்த்தப்படுகிறார்கள். அதற்கு என்னுடைய கண்டனத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய தூத்துக்குடி மாவட்டத்தில், வேலைவாய்ப்புத் துறைமூலம் O.A. post-க்கு call for செய்திருந்தார்கள். பத்திரிகைகளில் வந்த அந்த விளம்பரத்தில், இன சுழற்சி முறை குறிப்பிடப்படவில்லை; வயது வரம்பு குறிப்பிடப்படவில்லை; பணியிடம் தற்காலிகமானதா, நிரந்தரமானதா என்பவை குறிப்பிடப்படவில்லை. ஆனால், 200 பேர் அந்த வேலைக்கான நேர்க்காணலுக்குப் போயிருக்கிறார்கள். எம்.பி.ஏ., படித்தவனும் அந்த O.A. வேலைக்கு நேர்க்காணலுக்குப் போயிருக்கிறான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** முத்திரைக் கொல்லர் என்ற O.A. post-க்காக call for செய்திருந்தோம். பத்திரிகைகளில்தான் call for செய்திருந்தோம். அது cancel செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு O.A. post-க்கு call for செய்துள்ளோம். அதற்கு முறைப்படியாக call for செய்து, interview வைத்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான செய்தி வந்தவுடனேயே, நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் இதுபற்றி எடுத்துக் கூறினேன். அவர்கள், அதுகுறித்து தெரியாது என்று கூறினார்கள். நம்முடைய மாவட்டத்தில் எப்படி உங்களுக்குத் தெரியாமல் இந்த அறிவிப்பு வந்தது என்று கேட்டேன். தாங்கள் நடவடிக்கை எடுத்திருந்தால் மிக்க மகிழ்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே Employment Exchange-மூலம் recruit செய்தோம். But, High Court-க்குப் போனவுடன், High Court ஒரு direction கொடுத்தது. All leading Dailies-ல், அதாவது எல்லா செய்தித்தாள்களிலும் விளம்பரப்படுத்தி, அதனடிப்படையில் விண்ணப்பங்களைப் பெற்ற பிறகுதான், நீங்கள் recruitment செய்ய வேண்டுமென்ற உயர் நீதிமன்ற உத்தரவை ஏற்று, செயல்படுத்தும் நிலையில்தான் அரசு இருக்கின்றது. இதுதான் உண்மை. எனவே, யார் வந்தாலும் சரி, communal rotation-படிதான் நியமனம் செய்யப்படுகிறார்கள். பணியிடங்களில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு வீரர்கள் என categories-படி நியமிக்கப்படுகிறார்கள். தற்போது sports quota 3% என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் quota ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார். அந்த மாதிரி எல்லா வகைகளிலும் reservation adopt செய்துதான், முழுமையான அளவிற்குப் பணிகளில் அமர்த்தப்படுகிறார்கள். ஏற்கெனவே, இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, தீர்ப்பின் அடிப்படையில்தான் பணி நியமன முறை செயல்படுத்தப்படுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** அதுமட்டுமல்லாமல், 38 கால்நடை மருத்துவர்களை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு தொகுப்பூதியத்தில் எடுத்துள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, வேலைவாய்ப்பு மையத்தில் பதிவு செய்துள்ள இளைஞர்களின் எதிர்காலத்தையும், அவர்களுடைய வாழ்வாதாரத்தையும் கருத்தில்கொண்டு, அரசு ஒரு சரியான நடவடிக்கையை எடுத்து, வேலைவாய்ப்பு மையத்தில் பதிவு செய்தவர்களுக்கு வாய்ப்பு வழங்கிட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஆளுநர் உரை பக்கம் 14-ல், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளதோடு, பறிமுதல் செய்யப்பட்ட படகுகள்

எல்லாம் திரும்பப் பெறப்பட்டன என்றும் கூறப்பட்டுள்ளது. தூத்துக்குடி தொகுதியைப் பொறுத்தவரையில், 2015-2016 ஆம் ஆண்டில் சிறைபிடிக்கப்பட்ட 6 வல்லங்கள் இன்னும் இலங்கை கடற்படையினரிடம் இருக்கின்றன. அதேபோன்று, 2018-ல் ஒரு படகு; வல்லங்கள் அங்கே உள்ளன. அதுமட்டுமல்லாமல், மீனவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், கிட்டத்தட்ட 1½ வருடங்களுக்கும் மேலாக அவை இலங்கை கடற்படையினரிடம் இருக்கும்போது, அவற்றிலுள்ள வலைகள், Long-liner, GPS, Eco cylinder, wireless, winch, engine உட்பட பொருட்கள் அனைத்தும் களவாடப்படுகின்றன. அதுபோல, 1½ ஆண்டு காலமாக மழையிலும், வெயிலிலும் அவை இருப்பதால், படகுகள் சேதமடைந்திருக்கின்றன; சிதிலமடைந்திருக்கின்றன. அங்கிருந்து எடுத்துக்கொண்டு வரும்போது கூடுதான் இருக்கிறது என்ற கவலையான எண்ணத்தில் மீனவர்கள் இருக்கிறார்கள்.

பிற்பகல் 2-20

ஆகவே, அந்த Salvation Team - அந்த மீட்புக் குழு அங்கு போய், அதை எடுத்து வருவதற்குக்கூட அவர்களால் பணம் செலவழிக்க முடியவில்லை. ஏனென்றால், 5 மீனவர்கள் போக வேண்டும்; தச்சர் வேண்டும்; Mechanic வேண்டும். ஆகவே, ஓராண்டுக்கும் மேலாக இலங்கை கடற்படையிடம் சிறைபிடிக்கப்பட்டிருக்கிற Boats-ஐ, totally damaged, அதாவது முழுமையாக சேதப்படுத்தப்பட்டது என்று அறிவித்து, படகு உரிமையாளருக்கு அதற்குரிய இழப்பீட்டைத் தந்திட வேண்டுமென்ற மீனவர்களுடைய கோரிக்கையை இங்கே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றின் வேகம் காரணமாக, எல்லையை மீறுகின்ற நிலையில் இலங்கை கடற்படையினரால் நம்முடைய மீனவர்கள் பிடிக்கப்படுகின்றார்கள். எனவே, அப்படி சிறைபிடிக்கப்படுகின்ற மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவ்வப்போது பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்திக்கும்போதும் சரி, அதேபோன்று கடிதம் வாயிலாகவும் சரி அழுத்தங்கள் கொடுத்து வருகிறார்கள். அதன் அடிப்படையிலே, மீனவர்கள் மீட்கப்படுவதோடு, படகுகளும் விடுவிக்கப்படுகின்றன.





அந்தவகையில், தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த, நாட்டுப் படகிலே சென்ற 8 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த நாட்டுப் படகு அங்கே இருக்கின்றது. அந்த 8 மீனவர்களையும் மீட்பதற்காக நம்முடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழுத்தம் கொடுத்ததன் காரணமாக, இன்னும் ஒரு சில தினங்களிலே அவர்கள் தமிழகம் திரும்ப இருக்கின்றார்கள் என்ற செய்தியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக சிறைப்பிடிக்கப்பட்ட விசைப் படகுகள் அங்கு நிறுத்தப்படும்போது காற்றின் வேகம், அலையின் வேகம் காரணமாக பல விசைப் படகுகள் சேதமடைகின்றன. அந்த நிலையிலே அவற்றை மீட்டுக் கொண்டு வருவதற்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு Team-ஐ form செய்திருக்கிறார்கள். அந்த Team அங்கே போய்ப் பார்த்தது. அந்தப் படகுகளைக் கொண்டு வருவதற்கு ஒரு ரூபாய்கூட மீனவர்களிடம் வாங்கவில்லை. கிட்டத்தட்ட 240 படகுகளைக் கொண்டு வருவதற்கு, நன்றாக இருக்கிற படகுகளைக் கொண்டு வருவதற்கு, Mechanic-ஐ உடன் அழைத்துச் செல்வதோடு, ஒவ்வொரு படகிலும் கிட்டத்தட்ட 10 பேர்கள் வீதம் சென்றுவரும் நிலையில் அவர்களுக்கான சாப்பாடு செலவு, படகுகளுக்கான fuel செலவு போன்றவற்றை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது வேலைவாய்ப்பு தொடர்பான அறிவிப்பு பற்றி Collector-க்குத் தெரியவில்லை என்று கூறினார்கள். (குறுக்கீடு) தகவல் தெரியவில்லை என்று சொன்னார்கள். ஒவ்வொரு முறையும் வேலைவாய்ப்பு குறித்து நாங்கள் அறிவிக்கும்போதும், compassionate ground-ல் எத்தனை candidates இருக்கின்றார்கள் என்ற விவரத்தை Collector-இடம் வாங்கிய பிறகுதான், call for செய்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** அடுத்தபடியாக, திருமண உதவித் திட்டம். திருமண உதவித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், சரியான நேரத்தில் அந்தப் பெண்களுக்கு உதவித் தொகை கிடைப்பதில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சில இடங்களில் ஓராண்டு ஆகிறது. சில இடங்களில் இரண்டு ஆண்டுகள்கூட ஆகின்றன. ஆகவே, எப்போது அமைச்சர் அவர்கள் தேதி தருகிறார்களோ, அப்போதுதான் அந்த இடத்தில் அவர்களை அழைத்து திருமண உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. ஆகவே, தனி நபருக்குப் பயன்படும் இந்த நலத் திட்ட உதவிகள் எல்லாம் குறிப்பிட்ட காலத்தில் மக்களுக்குப் போய்ச் சேர்ந்தால்தான், திட்டத்தினுடைய நோக்கம் நிறைவேறும். அவர்களும் உரிய நேரத்தில் பலன் பெறுவார்கள். ஆகவே, இதில் நீங்கள் கவனம் செலுத்தி, விரைந்து, உரிய காலத்தில் செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று Laptop கொடுக்கும் திட்டம். கடந்த மார்ச் மாதம் கொடுக்கப்பட வேண்டிய laptop இன்றுவரையிலும் கொடுக்கப்படவில்லை. ஏனென்றால், மார்ச் மாதத்தில் பிள்ளைகளுடைய T.C.-க்குப் பின்னால், 'Laptop to be issued' என்று ஒரு seal வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதை எங்கள் ஊர் மாணவர்கள் எல்லோரும் தூக்கிக்கொண்டு அலைகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவிலே எந்த அரசும் செய்யாத ஓர் உன்னதமான சாதனைத் திட்டம். பள்ளத்திலே கிடக்கின்ற மாணவர்களை மேலே தூக்கி விடக்கூடிய வகையில் செயல்படுத்திவரும் அம்மாவினுடைய அரசு, 39 இலட்சம் மடிக்கணினிகளை இத்திட்டம்மூலம் வழங்கியிருக்கின்றது. அதுமட்டுமல்ல; வருகின்ற ஆண்டுகளில், 11, 12 மற்றும் I.T.I., Polytechnic-ல் படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கு வழங்குவதற்காக 15 இலட்சம் மடிக்கணினிகளுக்கு டெண்டர் கோரப்பட்டு, டெண்டர் எல்லாம் இறுதிசெய்யப்பட்டு LOA கொடுக்கிற நிலையிலே இருக்கின்றது. ஜனவரி மாதம், அதாவது இந்த மாத இறுதியிலோ அல்லது பிப்ரவரி மாத தொடக்கத்திலோ, ஒவ்வொரு மாணவருக்கும் மடிக்கணினியினை இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருமண நிதியுதவித் திட்டத்தில் பயனாளிகளுக்கு குறித்த காலத்தில் பயன்கள் கிடைக்கவில்லை என்றும், அமைச்சர் தேதி கொடுத்தால்தான் அவர்களுக்குத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் பயன்கள் கிடைக்கின்றன என்றும் உண்மைக்குப் புறம்பான செய்தியைப் பதிவு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்துகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருமண நிதியுதவித் திட்டத்தை இந்த ஆண்டு துவக்கி வைத்திருக்கிறார்கள். அதனடிப்படையில், 32 மாவட்டங்களிலும் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டு, உடனடியாக தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம் 32 மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். Online application என்பதால், காத்திருப்போர் பட்டியல் அதிகமாக இருக்கிறது என்பதையும் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். Online application என்பதால், பயனாளிகளை seniority அடிப்படையில்தான் நாம் தேர்வு செய்கின்றோம். (குறுக்கீடுகள்) நிதிநிலைக்கு ஏற்ப, (குறுக்கீடுகள்) இல்லை; 32 மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு, உடனடியாக தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள், நீங்கள் விடுங்கள். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா ஜீவன். (குறுக்கீடு) Point of order எல்லாம் இதில் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[*2019 ஜனவரி 4*

**திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல முதியோர் உதவி. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே தாலிக்குத் தங்கம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவில்லை; அதனால் நீண்ட நாட்களாக உதவிகள் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். மேலும், மாண்புமிகு அமைச்சர்கள் தேதி கொடுத்தால்தான் நடைபெறுகிறது என்றும் தகவல்களைச் சொன்னார்கள். அப்படியல்ல; இரண்டே நாட்களில் அந்தத் திட்டத்திற்கு பயனாளிகளுக்குண்டான நிதியும், தாலிக்குத் தங்கமும் வந்து சேர்ந்தவுடனே, கோவில்பட்டியிலே ஒரு மையத்தில் வைத்து, 702 பயனாளிகளுக்கும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திலே 798 பேருக்கும், ஆக மொத்தம் 1,500 பயனாளிகளுக்கு இரண்டே நாட்களில், கடந்த வாரம் தூத்துக்குடி மாவட்டத்திலே தாலிக்குத் தங்கமும், திருமண உதவியும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நடப்பு ஆண்டைத் தவிர, (குறுக்கீடுகள்) அத்தனை பேருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சீக்கிரம் பேசி உரையை முடியுங்கள்.*

**திருமதி பி. கீதா ஜீவன்:** *ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை, இடைத் தேர்தலுக்காக இப்பொழுது வேகமாக வேலை நடைபெறுகிறது. இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் வேகப்படுத்த வேண்டும். ஏனென்றால் நேரடியாக வந்து பெண்கள் சொல்வதால்தான் சொல்கிறேன். கையில் பிள்ளையோடு வந்துதான் திருமண நிதி உதவியை வாங்குகிறார்கள். அதனால், அதை இன்னும் வேகப்படுத்த வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களே, உங்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். என்னைப் பேசவிடுங்கள். அடுத்தாற்போல, முதியோர் உதவித் தொகைக்காக விண்ணப்பித்து நிறைய தகுதியுள்ள நபர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு நீங்கள் புதியதாக உத்தரவுகள். . . (குறுக்கீடு)*



*2019 ஜனவரி 4*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை இடைத் தேர்தலுக்காக நாங்கள் விரைந்து கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தேர்தலை கருத்தில்கொண்டு செயல்படுகிற அரசு, இந்த அரசு அல்ல. "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்ற அடிப்படையில் செயல்படுகிற அரசு; இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த அரசு. இது எனவே, அம்மா அவர்களுடைய அரசு நலத் திட்டங்களை விரைந்து செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

**திருமதி பி. கீதா ஜீவன்:** *மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்குவதற்கு உத்தரவிடப்படுகிறது. ஆனால், முதியோர் உதவித்தொகைக்கு முதியோர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசு பரிசீலனை செய்து அவர்களுக்கு வழங்க வேண்டும். சில இடங்களில் இடைத்தரகர்களுடைய தலையீடு என்பது, புதிதாக உருவாகி வருகிறது. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வங்கிகளின்மூலம் நேரடியாக உதவித் தொகை பெற முடியாதவர்களை, வங்கிக்குச் செல்ல முடியாதவர்களை சில இடைத்தரகர்கள் அணுகி, உதவி செய்வதாக அழைத்துச் சென்று, பின்னர் முழுத் தொகையும் முதியோர்களுக்கு கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்திட வேண்டும்.*

*அதேபோல, எட்டயபுரம் மற்றும் விளாத்திகுளம் தாலுகாக்களில் இந்த முறை படைப் புழுவினால் மக்காச் சோளம் பயிர் முழுமையாகச் சேதமடைந்தது. அதேபோல, 40 நாட்களாகத் தொடர்ந்து மழை இல்லாத காரணத்தால், மானாவாரிப் பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு, விளைச்சல் இல்லாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. எனவே, அவர்கள் தங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்; நிவாரணம் வழங்க வேண்டுமென்று அரசிடம் கோரிக்கை வைத்தவண்ணம் இருக்கிறார்கள். அதுபோல, தற்போது* V.A.O.s *வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால், புதிய காப்பீடு திட்டத்தில் சேருவதற்கு கூடுதல் கால அவகாசம் வேண்டுமென்றும் அவர்கள்*

[திருமதி பி. கீதா ஜீவன்] [*2019 ஜனவரி 4*

கோரிக்கை வைக்கிறார்கள். ஆகவே, விளாத்திகுளம், எட்டயபுரம் தாலுகாக்களைச் சார்ந்த விவசாயிகளுக்கு நிவாரணமாக ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கிட வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா ஜீவன், உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது. இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** சரி முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு point மட்டும். உள்ளாட்சியில் வரி உயர்வினை தனி அலுவலர்கள் ஏற்கெனவே செய்துவிட்டார்கள். அதற்கு தனி அலுவலருக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் மீண்டும் வரி உயர்த்தப்படுவதாகத் தெரிகிறது. எனவே, அந்த வரி உயர்வு என்பது மக்கள்மீது சுமத்தப்படும் சுமை என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து அதனைச் செய்ய வேண்டாம் என்பதை மட்டும் கூறிக் கொண்டு, மக்களின் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல் அரசு இருக்குமேயானால், அரசின் ஆளுநர் உரையினால் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்பதை மட்டும் பதிவு செய்து, என்னுடைய உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 2-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தவறான ஒரு தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது, தனித் தனியாக வரியை உயர்த்துவது என்பது, Board-ல் முடிவு செய்வதுதான். இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, எங்கேயும் அதுபோன்று வரி உயர்வினைச் செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. அப்படி ஏதாவது இருந்தால், அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2019 ஜனவரி 4*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

***திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாராது வந்த மாமணியாய்; வந்துதித்த தெய்வம்; வணங்கியவருக்கு வேண்டுகின்ற வரமளித்த தெய்வம்; வாக்களித்த மக்களுக்கு நல்வாழ்வளித்த தெய்வம்; வான் பொய்த்தாலும், தான் பொய்யா காவேரியின் உரிமையை மீட்டெடுத்த தெய்வம்; முல்லைப்பெரியாறின் உயரம் தொட்ட தெய்வம்; மக்கள் நலன் காத்திட்ட மகத்தான தெய்வம்; சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக மீட்டெடுத்த தெய்வம்; முத்தமிழோடு நான்காம் தமிழாய் அறிவியல் தமிழ் தந்த முதன்மையான தெய்வம்; திராவிடம் நமக்குத் தந்திட்ட தனிப்பெரும் தெய்வம்; கல்வியில் புரட்சி செய்த கருணைமிகு தெய்வம்; *(மேசையைத் தட்டும் ஒலி)* பார் போற்றும் நல்லாட்சி தந்த பாசமிகு தெய்வம்; உலகத் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்திட்ட நேசமிகு தெய்வம்; மழைநீர் சேகரிப்புத் திட்டம் தந்த மாதரசி தெய்வம்; 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என வாழ்ந்திட்ட மாசற்ற தெய்வம்; மக்களைத் தேடி அரசு என்ற மகத்தான தத்துவத்தை தந்திட்ட தெய்வம்; வெற்றி மேல் வெற்றிகளை கழகத்திற்குப் பெற்றுத் தந்த தெய்வம்; இந்திய அரசியலில் கழகத்தை மூன்றாவது பெரிய கட்சியாய் மாற்றிக் காட்டிய தெய்வம்; கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகளே இல்லையென சூளுரைத்த தெய்வம்; தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்திட்ட தரணி போற்றும் தெய்வம்; இப்புவியில் இவருக்கு நிகர் எவருமில்லை என பேச வைத்த தெய்வம், தன்னம்பிக்கைக்கு இலக்கணமாய்த் திகழ்ந்திட்ட தெய்வம்; வீரமும், விவேகமும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற தெய்வம்; அமைதிப் பூங்காவாய் தமிழகத்தை மாற்றிக் காட்டிய *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆற்றல்மிகு தெய்வம்; இராணுவக் கட்டமைப்புடன் கழகத்தைப் புனரமைத்த தெய்வம்; தன்னிகர் இல்லாத தனித்தலைமை கொண்ட தெய்வம்; இந்தியத் திருநாட்டிற்கே அரசியலைக் கற்றுத் தந்த தெய்வம்; இமைப்பொழுதும் தூங்காமல் இறுதிவரை மக்களுக்காகவே உழைத்திட்ட தெய்வம்; மறைந்தும், மறையாமலும் நம் நெஞ்சங்களில் வாழ்கின்ற தெய்வம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசிப்பிணி போக்கிட்ட அன்னபூரணி தெய்வம்; வறுமையை அறவே ஒழித்திட்ட வரலாற்றுத் தெய்வம்; மகத்தில் பிறந்து ஜெகத்தை

[திரு. எஸ். பவுன்ராஜ்] [*2019 ஜனவரி 4*

ஆண்ட மாதரசி தெய்வம்; வள்ளலின் வழியில் அனைத்தையும் விலையில்லாமல் வாரி வழங்கிய தெய்வம்; அன்னை தெரசாவின் அன்பைப் பெற்ற தெய்வம்; தொட்டில் குழந்தைத் திட்டம் தந்து, பெண் குழந்தைகளைக் காத்த பெண்ணரசி தெய்வம்; இலை கொண்ட இயக்கத்தின் புகழை இமயம்வரை சேர்த்திட்ட தெய்வம்; என் போன்ற எளியவனுக்கும் வாழ்வளித்த தெய்வம்; என் இரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்; நாங்கள் என்றும் வணங்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா எங்களுக்கு அடையாளம் காட்டிய அருட்கொடை; காலம் நமக்குத் தந்திட்ட கருணைப் பெட்டகம்; கொங்குத் தமிழ் மண் தந்த கொடை வள்ளல்; பிளாஸ்டிக்கை முற்றிலும் தடை செய்த சுற்றுச்சூழல் நாயகன்; அம்மாவின் வழியில் காவேரியை மீட்டெடுத்த இரண்டாம் கரிகால் சோழன்; அமைதியின் உருவாய், ஆற்றலின் வடிவாய், காட்சிக்கு எளியவராய், எத்தனை தடைகள் வந்தாலும், அத்தனையையும் தகர்த்தெறிந்து, அரசியல் களத்தில் நின்று விளையாடி (மேசையைத் தட்டும் ஒலி) சிக்ஸர்களையும், பவுண்டரிகளையும் அடித்து விளாசிக் கொண்டிருக்கும் ராசியான முதல்வர், ஈசியாக சந்திக்கக்கூடிய முதல்வர்; (மேசையைத் தட்டும் ஒலி) 'தாயைப் போல பிள்ளை; நூலைப் போல சேலை' என்ற பழமொழிக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தடம் மாறாமல் ஆட்சியையும், கட்சியையும் சீரோடும், சிறப்போடும் நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிவுக்கு இலக்கணம் வகுத்தவர்; விசுவாசத்தின் அடையாளமாகத் திகழ்பவர்; கழகத்தை கண் இமைபோல் காத்து நிற்பவர்; மாண்புமிகு அம்மா அவர்களின் செல்லப்பிள்ளை; வீர விளையாட்டிற்கு அனுமதி பெற்றுத் தந்து தமிழர்களின் தன்மானம் காத்தவர்; கழகத்தின் ஒருங்கிணைப்பாளர், கடைக்கோடி தொண்டனின் அன்பையும், பாசத்தையும் ஒருங்கே பெற்றவர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.



*2019 ஜனவரி 4*] [திரு. எஸ். பவுன்ராஜ்]

*பிற்பகல் 2-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டக் கழகச் செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான மாண்புமிகு அண்ணன் திரு. O.S.M. அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2-1-2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திலே கலந்து கொண்டு பேசுகின்ற நல்வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, எனது உரையைத் தொடங்குகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களின் உரை, இந்த அரசுக்குக் கிடைத்திட்ட நற்சான்றிதழ். ஆளுநர் அவர்களின் உரை, 'சர்க்கரைப் பொங்கலாய், செங்கரும்பாய், முக்கனியாய், கற்கண்டாய், சுவைமிகு பாலாய், செந்தமிழாய், தீஞ்சுவையாய், தித்திக்கும் தெள்ளமுதாய், கேட்க, கேட்க திகட்டாத மழலையின் குரலாய் இனிக்கிறது'. தமிழக மக்களின் உள்ளங்களை மகிழ்ச்சியடைய செய்திருக்கிறது. சந்தர்ப்பவாதிகளுக்கு இது சம்பிரதாய அறிக்கையாகத் தெரிகிறது. அரசியல் வாழ்விலே விரக்தி அடைந்தவர்களுக்கு இது வெற்று அறிக்கையாகத் தெரிகிறது. காமாலை கண்களுக்கு காண்பதெல்லாம் மஞ்சளாகத்தான் தெரியும். அதற்கு நாம் பொறுப்பேற்க முடியாது. அவர்களின் பார்வையிலேதான் குறையே தவிர, உரையில் அல்ல.

ஒளிவு மறைவற்ற, திறமைமிக்க மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை அளிப்பதுதான் ஒரு நல்ல அரசின் இலக்கணம் என்னும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கும், குறிப்பாக, ஏழையெளிய மக்களின் நலனையும், எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினரின் நலனையும் பாதுகாப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தி, தொடர்ந்து பாடுபட்டு வரும் உண்மையான மக்கள் நல அரசாக, இந்த அரசு திகழ்ந்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தனது திறமைமிக்க தலைமையின்மூலம் பதவியேற்ற நாள் முதல் இதுவரை முன்னெப்போதும் இல்லாத அளவிலே, 11,286 கோப்புகளிலே துரிதமாக முடிவு கண்டு, பொது மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படும் அரசாக, இந்த அரசை வழிநடத்தி வருகிறார் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதிக்கும் அணைப் பாதுகாப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்திலே மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. வருங்காலங்களில் இயற்றப்படும் இதுபோன்ற சட்டமுன்வடிவுகளில் தமிழ்நாட்டின் கருத்துகளை மத்திய அரசு பாகுபாடில்லாமல் ஆராய்ந்து, நியாயமான முடிவுகளை எடுக்க வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தியிருப்பதன்மூலம், எந்தச் சூழ்நிலையிலும் தமிழகத்தின் உரிமைகளை இந்த அரசு விட்டுத் தராது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு அனுமதி தந்தது தி.மு.க. அரசு; இடம் ஒதுக்கித் தந்தது தி.மு.க. அரசு; ஸ்டெர்லைட் ஆலையைத் திறந்து வைத்தவர் அப்போதைய துணை முதலமைச்சரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்தான். ஆனால், மக்களைப் பாதிக்கும் ஸ்டெர்லைட் ஆலையை மூட உத்தரவிட்டவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட உத்தரவிட்டவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது ஸ்டெர்லைட் ஆலை தொடர்பாக தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் ஆணையை எதிர்த்து இந்த அரசு மேல்முறையீடு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதன்மூலம், மக்களை பாதிக்கும் எந்தத் திட்டத்திற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒருபோதும் அனுமதி வழங்காது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

'சுனாமி' மற்றும் 'வர்தா' புயலை எதிர்கொண்டு, வந்த சுவடே தெரியாமல் தமிழகத்தை மீட்டெடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 'தானே' புயலை வந்த தடம் தெரியாமல் வெற்றி கண்டவர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள். 'கஜா' புயல் குறித்து





முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து, உயிர் பலியைத் தடுத்து, மக்களைப் பாதுகாத்தவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கஜா' புயல் தமிழகத்தைத் தாக்கும் எனத் தெரிந்தவுடன், விரைவாகச் செயல்பட்டு 4.81 இலட்சம் மக்களை நிவாரண முகாம்களிலே தங்க வைத்து, இந்தப் புயலால் மனித உயிர்பலி ஏற்படாமல் தடுத்து, அனைத்துக் கட்சியினரின் பாராட்டுதல்களையும் பெற்று, பேரிடர் மேலாண்மையில் உலகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்கின்ற அரசு என்பதை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிரூபித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டத் தலைநகரங்களை ஒரு மினி தலைமைச் செயலகமாக மாற்றி, அனைத்து அமைச்சர் பெருமக்களையும் களத்திலே இறக்கி, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு, புயல் ஓய்ந்த அடுத்த நாளே போக்குவரத்தைச் சரி செய்து, 15 நாட்களில் சேதமடைந்த 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மின் கம்பங்களை நட்டு, அனைத்துக் குக்கிராமங்களிலும் உடனடியாக மின்சார வசதியை வழங்கியுள்ளார்கள். மின்சார சீரமைப்புப் பணியில் கால நேரம் பார்க்காமல், மழை, குளிர் பார்க்காமல், அன்னம், தண்ணீர் பருகாமல், பணியாற்றிய மின் வாரிய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் அதிதீவிர பணியினை நன்றியோடு நினைவுகூர்ந்து பாராட்டுகின்றோம்.

பாதிக்கப்பட்ட 6.4 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணமாக இழப்பீட்டுத் தொகையுடன் 27 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பைகள் வழங்கியும், முழுமையாகப் பாதிக்கப்பட்ட 1 இலட்சம் குடிசை வீடுகளுக்குப் பதில் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கும், ஆடு, மாடு மற்றும் கோழி உயிரிழப்பிற்கு நிவாரணம் வழங்கியும், தென்னை மரங்கள் உட்பட தோட்டப் பயிர் சாகுபடியை மறுசாகுபடி செய்ய முழு நிதியுதவி வழங்கியும், பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்திற்குப் புத்துயிர் அளிக்கும் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தும், கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களின் துயர் துடைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார்

[திரு. எஸ். பவுன்ராஜ்] [*2019 ஜனவரி 4*

அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், களப்பணியில் எங்களுடன் தோளோடு தோள் நின்று பணியாற்றிய அனைத்து அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர், மின்சாரத் துறைப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், நிவாரணப் பொருட்கள் வழங்கி உதவிய பெருமக்கள் அனைவருக்கும் நாகப்பட்டினம் மாவட்ட கழகச் செயலாளரும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான அண்ணன் திரு. O.S.M. அவர்களின் சார்பாகவும், எங்கள் மாவட்ட மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கஜா புயலை வைத்து அரசியல் செய்யலாம் என நினைத்தவர்கள், வதந்திகளைப் பரப்பி, சமூக வலைதளங்களில் தங்களது வக்கிர புத்தியைப் பயன்படுத்தி, இல்லாத தகவல்களை பொல்லாத தகவல்களாக்கி, வெளி உலகத்தில் உள்ளவர்களுக்கு தகாத சம்பவமாக்கிக் காட்டினார்கள்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

வன்முறையைத் தூண்டிவிட்டு, குளிர் காயலாம் என நினைத்தவர்களின் முகத்தில் கரியைப் பூசி, கஜா புயலை களத்திலேயே நின்று எதிர்கொண்டு, உண்ணாமல், உறங்காமல் நெஞ்சுறுதியோடு களப்பணியாற்றி, மக்களைக் காத்து, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, அனைவரின் பாராட்டுதல்களையும், நன்மதிப்பையும் பெற்ற எங்கள் மாவட்ட கழகச் செயலாளரும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான அண்ணன் திரு. O.S.M. அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடச் செய்து, காவேரியில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமைகளை மீட்டெடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், கர்நாடகாவில் மேகதாதுவிலோ அல்லது காவேரி வடிநிலப் பகுதிகளிலோ, வேறு எந்த இடத்திலோ எந்தவொரு பணியினையும் கர்நாடக அரசோ, அதன் அமைப்புகளோ மேற்கொள்ளக் கூடாது என கர்நாடக அரசிற்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டுமென



*2019 ஜனவரி 4*] [திரு. எஸ். பவுன்ராஜ்]

இம்மாமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு என அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு நிரூபித்துக் காட்டியுள்ளது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 135 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக் காட்டி சாதனை படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்திடவும், கேரள அரசு புதிய அணை கட்டுவதைத் தடுத்திடவும் சட்டரீதியாகப் போராடிவரும் அரசு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு.

*பிற்பகல் 2-45*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தனது ஆட்சிக் காலத்தில் ஒரு மீனவர் உயிருக்குக்கூட இலங்கை அரசால் பாதிப்பு ஏற்படவில்லை என்ற வரலாற்றைப் பதிவு செய்து, தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பாக விளங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியிலே, இலங்கை சிறையில் வாடிய 543 மீனவர்களையும், பிடிபட்ட 206 படகுகளையும் விடுவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைத்துப் படகுகளையும் இலங்கையிலிருந்து மீட்டெடுத்து, பழுதான படகுகளுக்கு நிவாரணம் வழங்கி, மீனவர்களின் வாழ்க்கைக்கு பெரிதும் உதவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, பாராட்டுகிறேன்.

பொங்கல் பண்டிகையை ஏழையெளிய மக்கள் மகிழ்ச்சியோடு சிறப்பாகக் கொண்டாடிட, விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைத் தொடங்கியவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். விலையில்லா வேட்டி, சேலையுடன் ரூ.100/- மற்றும் பொங்கல் சிறப்புத் தொகுப்பையும் வழங்கி, மக்கள் மகிழ்ச்சியோடு பொங்கல் பண்டிகையைக் கொண்டாடிட வழிவகை செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

'தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும்' என்ற பழமொழிக்கேற்ப, அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பச்சரிசி, சர்க்கரை, உலர் திராட்சை, முந்திரி, ஏலக்காய், கரும்பு உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய சிறப்புத் தொகுப்புடன் ரூ.1,000/- வழங்கப்படும் என அறிவித்து, *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழக

[திரு. எஸ். பவுன்ராஜ்] [2019 ஜனவரி 4

மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வன்னியர் அறக்கட்டளை சட்டத்தை அரசு அறிவிக்கை செய்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. சுதந்திரப் போராட்ட வீரரும், முன்னாள் அமைச்சருமான இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் மணிமண்டபம் கட்டப்படும் எனவும், அவரது பிறந்த நாள், அரசு விழாவாகக் கொண்டாடப்படும் எனவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இராமசாமி படையாச்சியார் அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்படும் எனவும் அறிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கையினை, ரூ.1.08 கோடி செலவில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் இந்த அரசு நிறுவிட ஆணையிட்டுள்ளதை எண்ணி, புரட்சித் தலைவரின் தொண்டன் என்கிற முறையில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்மொழியையும், தமிழர் பண்பாட்டையும் பேணிப் போற்றும் வகையில், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் மூலமாக உலகத் தமிழ் அமைப்புகளின் மாநாடு நடத்த உத்தரவிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்ச் சமுதாயம் என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தை புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம் என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டுமெனவும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் மறைந்த மாபெரும் தலைவர்களான பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகியோருக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் எனவும் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2019 ஜனவரி 4] [திரு. எஸ். பவுன்ராஜ்]

வேளாண் துறைக்கான 'க்ரிஷி கர்மான்' விருது, செயல்திறனுக்கான சிறந்த விருது, சுற்றுலா, உட்கட்டமைப்பு மற்றும் சட்டம்-ஒழுங்கு போன்ற பல்வேறு துறைகளில் "இந்தியா டுடே" நிறுவனத்தால் நிறுவப்பட்ட சிறப்புடைமைக்கான விருதுகள், பொது விநியோகத் திட்டத்தைக் கணினிமயமாக்கியதற்கான சிறந்த நடைமுறை விருது, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்பான செயல்முறை உட்பட உயர்தரமான சுகாதார சேவைக்கான அங்கீகாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான விருதுகள் என பல்வேறு விருதுகளையும் இந்த அரசு பெற்றுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. மேலும், பல விருதுகளைப் பெற்றிருக்கிற துறையாக நகர்ப்புற மற்றும் ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை விளங்கி வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெங்களூருவில் அமைந்துள்ள பொது விவகார மையம் வகுத்துள்ள பொது நிருவாகக் குறியீட்டில் நல்லாளுமைக்காக, நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளது. 'நிதி ஆயோக்' தற்போது வெளியிட்டுள்ள நிலையான வளர்ச்சிக் குறியீட்டிற்கான அறிக்கையின்படி, தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்வதில், இந்த அரசின் சிறந்த நிருவாகத் திறமைக்கு இவ்விருதுகள் சான்றாக விளங்குகின்றன. ** தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிக் காட்டியவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய. . .

பிற்பகல் 2-50

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கை, பெண்களின் பாதுகாப்பில் மிகச் சிறந்த மாநகராக, . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், குற்றம் சாட்டும் வகையில் ** என்று கூறியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள், குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள், உரையை முடியுங்கள்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தனது அறிக்கையில் பெண்களின் பாதுகாப்பில் மிகச் சிறந்த மாநகராக சென்னையையும், மிகச் சிறந்த நகரமாக கோவையையும் தேர்ந்தெடுத்திருப்பது, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு பேணிக் காக்கப்படுகிறது என்பதற்குக் கிடைத்திட்ட ஓர் நற்சான்றிதழ் ஆகும். பெண்களின் பாதுகாப்பிற்காக சமீபத்தில் உருவாக்கப்பட்ட "181" உதவி எண் மற்றும் "காவலன் செயலி" ஆகியவை தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பை, குறிப்பாக, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்து, இந்த அரசு மக்கள் நலன் காக்கும் அரசு என்பதை உறுதி செய்துள்ளது. உலகிலேயே முதன்முறையாக வறட்சிக்கான நிவாரணம் வழங்கி, தமிழக விவசாயிகளின் நலன் காத்தவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அண்ணன் எடப்பாடியார் அவர்களின் நல்லாட்சியில் மத்திய அரசின் திட்டமான பிரதம மந்திரியின் "பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை" சிறப்பாகச் செயல்படுத்துவதில், நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்வது பாராட்டுக்குரியது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மேலும் 4 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாசன ஏரிகளிலிருந்த வண்டல் மண்ணை விவசாயிகளே எடுத்துப் பயன்படுத்திக்கொள்ள அனுமதியளிக்கப்பட்ட நீர்ப்பாசன அமைப்புகளைப் புதுப்பிக்கும் குடிமராமத்துத் திட்டம் ஆகியவை முழு உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு, 1 ரூபாய்கூட அரசு பணத்தைச் செலவு செய்யாமல், அனைத்து நீர்நிலைகளையும் தூர்வாரி, நீரைச் சேமித்துக்காட்டி சாதனை படைத்திருக்கிற அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. ஆழ்கடல் மீன்பிடித் தொழில் வளர்ச்சிக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் மூக்கையூர் மற்றும் குந்துக்கல்லிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் எனது பூம்புகார் சட்டமன்றத் தொகுதியிலுள்ள பூம்புகாரிலும் மீன்பிடித் துறைமுகம் அமைத்து, மீனவ மக்களின் நலன் காக்கும் அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு





திகழ்கிறது. இந்த நிதி ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியில் 120 கோடி ரூபாயிலும், வெள்ளப்பள்ளத்தில் 100 கோடி ரூபாயிலும் சிறு மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என அறிவித்து, திட்டப் பணியைத் தொடங்கிட நடவடிக்கை எடுத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் மற்றும் மீன் வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் நன்றியை வணங்கி, தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் தேதி முதல் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்து சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மக்கள் நலன் காத்த மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்மூலம் மாநிலத்தில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது; பாராட்டுக்குரியது. தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசியோடு, குறைந்த விலையில், சர்க்கரை, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய்யை வழங்குவதன்மூலம் பசிப் பிணி இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. பொது விநியோகத் திட்டத்தில், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட விரிவான கணினிமயமாக்கல் திட்டத்தின்மூலம், போலி குடும்ப அட்டைகளும், பன்முறை பயனாளி பதிவுகளும் அறவே அகற்றப்பட்டு, வெளிப்படையான, சீரான பொது விநியோகத் திட்டத்தை உறுதி செய்வதற்காக, 2.01 கோடி குடும்பங்களுக்கு ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட ஸ்மார்ட் அட்டைகள் வழங்கியது ஒரு பாராட்டுக்குரிய சாதனையாகும். சென்ற தி.மு.க. ஆட்சியில் மின் பற்றாக்குறையால் இருண்டு கிடந்த தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டி, சாதனை படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில், தமிழ்நாடு 11,716 மெகா வாட் எரிசக்தித் திறனுடன் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக விளங்கி வருவது, மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அரசு என்பதற்குச் சான்றாகும்.

பிற்பகல் 2-55

முதலாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர் மாண்புமிகு

[திரு. எஸ். பவுன்ராஜ்] [2019 ஜனவரி 4

புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியிலே சென்னை வர்த்தக மையத்தில், 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இதன்மூலம் தொழில்வளம் பெருகி பல இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டும் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுவதற்கு அதிகமாக குறிப்புகள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதை என்னிடம் கொடுங்கள். அதை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன். தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிட, சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பிலே மூன்று சதவீதம் இட ஒதுக்கீட்டை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு அறிவித்துள்ளது பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, பணிபுரியும் பெண்களுக்கு மேலும் தன்னம்பிக்கையூட்டும் வகையிலே, இருசக்கர வாகனங்களை வாங்கிப் பயன்பெற, ஒவ்வொருவருக்கும் 25,000 ரூபாய் வரையிலான உதவித் தொகையை "அம்மா இருசக்கர வாகன மானிய நிதியுதவித் திட்டத்தின்" மூலம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு வழங்கி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவிலேயே மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சி செய்யும் தமிழகத்தில்தான் போக்குவரத்துக் கட்டணம் குறைவாக உள்ளது என்பது பெருமைக்குரியதாகும்.

அனைவருக்கும் வீடு என்பதே மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியம். அந்தவகையில், "பிரதம மந்திரியின் வீட்டு வசதித் திட்டத்துடன், முதலமைச்சரின் சூரிய ஒளி எரிசக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின்" மூலமாக கிராமப்புற ஏழை மக்களுக்கு வீட்டு வசதி வழங்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னிலை மாநிலமாகத் திகழ்வது பாராட்டுக்குரியது.



2019 ஜனவரி 4]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நீங்களும் நானும் ஒரே நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) அதோடு உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மத்திய அரசின் முன்னோடித் திட்டமான "பிரதம மந்திரியின் ஜன் ஆரோக்ய திட்டத்தோடு" மாண்புமிகு அம்மா அவர்களால் துவங்கப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தையும் ஒருங்கிணைத்து, ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்ட காப்பீட்டு அளவை இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தியவர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

மதுரை மாவட்டத்தில் உள்ள தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனையை அமைக்க, மத்திய அரசை வலியுறுத்தி, போராடி வெற்றி கண்டு, 1,264 கோடி ரூபாயை மருத்துவமனை அமைக்க மத்திய அரசிடமிருந்து பெற்றுத் தந்த, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையிலும், அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையிலும், 2014 முதல் 2017 வரையில், தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளாக தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல்நிலையில் உள்ளது பெருமைக்குரியதாகும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டும். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள். இரண்டு முறை சொல்லிவிட்டேன்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசில், அனைத்து கிராமப்புற ஊராட்சிகளிலும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகிறது என்பதை இம்மாமன்றத்திற்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிக் குழந்தைகள் பசியாற சரித்திரப் புகழ் வாய்ந்த சத்துணவுத்திட்டத்தைத்தொடங்கிவைத்தவர்பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். சத்துணவுத் திட்டத்தில் 13

வகையான கலவை சாதத்தை சுவையுடன் வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இத்திட்டத்தை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு சிறப்பாகச் செயல்படுத்தி, அனைத்துக் குழந்தைகளும் ஊட்டச்சத்து மிக்க உணவுப் பாதுகாப்பு பெறுவதை உறுதி செய்கிறது.

உயர் கல்வித் துறையில் 48.6 என்ற மொத்தச் சேர்க்கை விகிதத்துடன், நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. துணை வேந்தர்கள் நியமனத்தில் ஒளிவுமறைவற்ற, வெளிப்படைத் தன்மையுடன் தேர்வு மற்றும் நியமன நடைமுறைகளைக் கடைப்பிடித்து வரும் அரசு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்ன பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்? (குறுக்கீடு) இரண்டே வரிகளில் பேசி உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இரண்டு வரிகளில் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** உலகத்திலேயே தொண்டர்களால் தொடங்கப்பட்ட ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் மக்கள் பேரியக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) உலகிலேயே ஊழலை எதிர்த்து தொடங்கப்பட்ட ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) கட்சி தொடங்கிய ஐந்தே ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்த இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை நீண்ட காலம் ஆட்சி செய்து கொண்டிருக்கும் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் அனைத்துத் தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில் தனித்து போட்டியிட்டு, வெற்றிவாகை சூடிய இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இந்தியத் திருநாட்டின் பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகத் திகழ்கின்ற இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தனை சிறப்புகள் வாய்ந்த இந்த இயக்கத்தை, எந்தக் கொம்பனாலும் அழிக்க முடியாது. இந்த இயக்கத்தை அழிக்க நினைத்தவர்கள் அழிந்து போனதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)





பிற்பகல் 3-00

மாண்புமிகு அம்மா அவர்களின் வாக்குப்படி, இன்னும் 100 ஆண்டுகள் மட்டுமல்ல; இப்புவி உள்ளவரை தமிழகத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம்தான் ஆட்சி புரியும் என உறுதி கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறவுள்ள திருவாரூர் தொகுதி சட்டமன்ற இடைத் தேர்தலில் கழகம் மிகப்பெரிய அளவில் வெற்றியை பெற்று, வரலாற்றைப் பதிவு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு கழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களும் களம் இறங்கி, ஒருங்கிணைந்து களப் பணியாற்றுவோம் எனக் கூறி, எனது உரையினை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

***திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி கல்லாதவர்கள் இல்லாத நாடாக உருவாக்க வேண்டுமென்று, கடைக்கோடியிலிருந்து வந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கல்விச் செல்வத்தை நமக்குத் தந்தார். அதனாலேதான் சட்டமன்றத்தில், 'தமிழ் அறிவால்' நாம் வாதாடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாராளுமன்றத்திலே, பாரதப் பிரதமராக இருந்தாலும், யாராக இருந்தாலும் சரி, எவ்வளவு பலமுடையவராக இருந்தாலும் சரி, அதிக உறுப்பினர்களைக் கொண்டவர்களாக இருந்தாலும் சரி, எத்தனை நாடுகள் சென்று வந்திருக்கிறேன் என்று சொன்னாலும் சரி, அந்தப் பாராளுமன்றத்தில் ஒரு 'இளம் சிங்கமாய்', அந்தப் பாரதப் பிரதமரை நோக்கி கை நீட்டிப் பேசி, 'பாரதப் பிரதமர் அவர்களே, நான் கேட்கின்ற கேள்விகளுக்கு, நீங்கள் பதில் சொல்ல முடியுமா?' என்று கேட்ட ஒரே இளந்தலைவர் ராகுல் காந்தி அவர்கள். அவரது தொண்டன் என்று சொல்வதில் நான் பெருமையடைகிறேன். (குறுக்கீடு) எதற்குத் தேவையோ, அதற்கு ஏளனம் செய்யுங்கள். நான் பாராட்டுகிறேன். பாராளுமன்ற வரலாற்றிலேயே இல்லை. பாராளுமன்ற வரலாற்றினை எடுத்துப் பாருங்கள். மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு எதிரில் நேரடியாக நின்று 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என்று கேள்விகளைத் தொடுத்த

ஒரே இளந்தலைவர் ராகுல் காந்தி என்பதை உங்களுக்குச் சொல்லி, அதனை இங்கே பதிவு செய்ய நான் விரும்புகிறேன். ராகுல் காந்தியின் தொண்டனான என்னை, இந்தச் சபையில், டாக்டர் கலைஞர் அவர்களும், இளம் தலைவராக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் இணைந்து, இரு முறை சட்டமன்ற உறுப்பினராக அமர்த்தி இருக்கின்றார்கள்.

எங்கள் ராகுல் காந்தி சாதாரண மனிதர் அல்ல. 134 ஆண்டுகளைக் கடந்து வந்தது காங்கிரஸ் கட்சி. 50 ஆண்டுகள்; 75 ஆண்டுகள் அல்ல; 134 ஆண்டுகளைக் கடந்து வந்த பேரியக்கம், எங்கள் காங்கிரஸ் பேரியக்கம் என்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) ராகுல் காந்தி அவர்கள் போர்க்களத்தில் நின்றால், எப்படி நிற்பார் தெரியுமா? உலகத்தை ஆண்டு விட்டேன் என்று சிலர் சொல்வதுபோல்; உலகத்தையே நான் சுற்றி வந்துவிட்டேன் என்று சிலர் சொல்வதுபோல்; உலகத்தையே நான் வென்றுவிட்டேன் என்று சொல்வதுபோல், அன்று அலெக்ஸாண்டர் நமது நாட்டில் நுழைந்தபோது ஒரு போரஸ் மன்னன், இளைய வீரன் அவனைத் தடுத்து நிறுத்தி, இந்தியாவிற்குள் வரமுடியாமல் செய்தான் பாருங்கள்; அப்பேர்ப்பட்டவர், எங்கள் இளந்தலைவர் ராகுல் காந்தி. அவர் சாதாரண மனிதர் அல்ல. (குறுக்கீடு) 'ஒரு முறை ஆட்சியை இழந்தாலும், மீண்டும் ஆட்சியைப் பிடிப்பேன்' என்று வீர வசனம் பேசி வந்தானே நெப்போலியன்; அவனின் மறு பிறவிதான் எங்கள் ராகுல் காந்தி அவர்கள். எனவே, அந்தத் தைரியத்தில் நான் பேசுகிறேன். (குறுக்கீடு) அடுத்து, உங்களோடு நான் சேர்ந்து வருகிறேன். (குறுக்கீடு) தமிழக அரசு, மத்திய அரசோடு இணக்கமாக இருக்கிறார்கள் என்று பரவலாகப் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) இணக்கமாக இருக்கிறார்கள் என்று பரவலாகப்பேசுகிறார்கள். எங்களைப் போன்ற வியாபாரிகள் வரிப் பணத்தை, ஜி.எஸ்.டி.-ஐ ஒரு நாள்கூட கட்டாமல் இருந்தால், அங்கே எங்களுக்குத் தண்டனை உண்டு. வரிக்கு மேல் வரி போடும் மத்திய அரசாங்கம், உங்களோடு இணக்கமாக இருக்கின்ற அந்த அரசாங்கம், 7,189 கோடி ரூபாய் கடன் வைத்திருக்கிறது அய்யா! எங்கள் பணத்தை வாங்கி, . . .





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, பாரதிய ஜனதா கட்சியோடு இணக்கமாக இருக்கிறது என்று சொல்கிற உறுப்பினர் அவர்கள், நாடாளுமன்றம் நடந்துகொண்டிருக்கின்ற நேரத்தில், ராகுல் காந்தி அவர்கள், இந்திய நாட்டினுடைய பிரதமராக இருக்கிற திரு. மோடி அவர்களை கட்டியணைத்து ஏதோ பேசினாரே, அது என்ன என்பதைத் தெரிவிப்பாரா என்பதை மாற்றுத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3-05

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குறித்துப் பேசினார். இதை முதன்முதலில் அறிமுகப்படுத்தியதே அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிடக் கூடாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், பிரதமர் அவர்களை எங்களுடைய தலைவர் கட்டியணைத்தார் என்று சொன்னார். வீரனுக்கு அழகு, வீரத்தைப் போர்க்களத்தில் காட்ட வேண்டும். அன்பை வீட்டிற்குள் காட்ட வேண்டுமென்ற அடிப்படையில்தான் எங்களுடைய இளந்தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள், பிரதமரைக் கட்டியணைத்தார். "நாளை உன்னை கட்டிப் போடுவேன்" என்ற எண்ணத்தில்தான் எங்கள் இளந்தலைவர், பிரதமரைக் கட்டிப் பிடித்தார். அடுத்து, எங்கள் தலைவர் ஆட்சிக்கும் வருவார். சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்பது. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 4

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்கள், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களை பிரதமர் வேட்பாளராக முன்மொழிந்தார். அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களே, அதை ஒத்துக்கொள்ளவில்லை. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, யாரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று எங்கேயும் யாரும் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. ஒரே தலைவர் எங்கள் இளந்தலைவர் திரு. ராகுல் காந்திதான் அடுத்த பிரதமர் என்பதை நாங்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொண்டோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். எங்கள் இளந்தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள் பிரதமராக வந்தால், தமிழக அரசு கேட்டவுடனேயே, அனைத்து நிதி உதவிகளையும் செய்வதற்கான ஆற்றலை நாங்கள் உருவாக்குவோம் என்பதை நான் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும்போதுதான் VAT அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போதே தமிழகத்திற்குத் தரவேண்டிய 4,000 கோடி ரூபாயைத் தராமல் பட்டை நாமம் போட்டு விட்டார்கள். தமிழ்நாட்டிற்கு ஒரு பைசாகூட கொடுக்கவில்லை. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினையும் காங்கிரஸ் கட்சிதான் அறிமுகப்படுத்தியது. ஆனால், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை அறிமுகப்படுத்திய பிறகு, VAT-ல் பெற்ற அனுபவத்தை வைத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் காங்கிரஸ் கட்சி இவ்வாறு ஏமாற்றிவிட்டது. ஆனால், அந்தமாதிரி தற்போது விடப்போவதில்லை. மாநிலத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை அமல்படுத்தினால் எவ்வளவு இழப்பீடு வருகிறதோ, அதை ஈடுகட்டினால்தான் அந்தச் சட்டத்திற்கு ஆதரவு தருவோம் என்று இந்தியாவிலேயே குரல் எழுப்பிய ஒரே



2019 ஜனவரி 4] [திரு. டி. ஜெயக்குமார்]

முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாக இன்றைக்கு அனைத்து மாநிலங்களும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை implement செய்ததால், 14% இழப்பீடு வாங்குகிறது. எனவே, மற்ற மாநிலங்கள் எல்லாம் நன்றி சொல்லும் அளவிற்கு செயல்பட்ட ஒரு மாபெரும் முதலமைச்சர், மாபெரும் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், 4,000 கோடி ரூபாயை அன்றைக்குக் காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியில் இருக்கும்போது 'ஸ்வாஹா' செய்துவிட்டது. (சிரிப்பு) அதாவது நமது மாநிலத்திற்குத் தரவில்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது 'ஸ்வாஹா' செய்துவிட்டதாகத் தெரிவித்தார். அதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? அப்படியென்றால், இவர்கள் என்னென்ன 'ஸ்வாஹா' செய்திருக்கிறார்கள் என்பதை எங்களாலும் சொல்ல முடியும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்; 'ஸ்வாஹா' என்றால் தமிழில் என்ன அர்த்தம் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, VAT-ஐ implement செய்யும்போது அதனால் ஏற்படும் இழப்பினை ஈடுகட்ட 4,000 கோடி ரூபாயினை மத்திய அரசு தமிழக அரசிற்குத் தரவில்லை என்பதைத்தான் நான் அவ்வாறு தெரிவித்ததாக வைத்துக்கொள்ளுங்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காங்கிரஸ் கட்சியைப் பற்றிச் சொன்னார். கிட்டத்தட்ட 150 வருடங்களாக காங்கிரஸ் கட்சி இருப்பதாகத் தெரிவித்தார். சுதந்திரம் வாங்கியவுடனேயே காங்கிரஸை கலைத்து விடுங்கள் என்று எதற்காக காந்தி தெரிவித்தார்? அதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொள்கிறாரா? காங்கிரஸில் இரண்டு பிரிவுகள் இருந்தன. அதில் மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பிரிவில் அப்போது இருந்தார் என்பதற்கெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதில் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

[2019 ஜனவரி 4

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நாங்கள் எங்கள் கட்சியைப் பற்றிப் பேசுகிறோம். எங்கள் வீரத்தைப் பற்றிப் பேசுகிறோம். அவர்களுக்கு எங்கள் கட்சியைப் பற்றிப் பேசுவதற்கு உரிமை கிடையாது. எங்களுக்குள் இருக்கிற கருத்து வேறுபாடுகளை நாங்கள் சரிசெய்து கொள்கிறோம் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த அரசாங்கமும் 'ஸ்வாஹா' செய்ய முடியாது. 7,150 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையை மத்திய அரசு இதுவரை வழங்க வேண்டியுள்ள நிலை உள்ளதாக ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள்? (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை அமல்படுத்திய நிலையில், அதில் இரண்டு விஷயங்கள் உள்ளன. அதாவது SGST and IGST. IGST என்பது Inter-State Trade. Inter-State Trade-ல் ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு சரக்குகள் விற்பனையாகும்போது, எந்த மாநிலத்திற்கு அந்தச் சரக்குகள் விற்பனையானதோ, அந்த Bill-ஐக் கொண்டுதான் நாம் கணக்கிட முடியும். அதுதான் IGST. அந்த நிதியான 5,454 கோடி ரூபாய் வர வேண்டியுள்ளது. அதேபோல, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி implement செய்யப்பட்டதால், நமக்கு வரவேண்டிய வரி வருவாய் 3,230 கோடி ரூபாய். ஆக மொத்தம் 8,684 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து தமிழக அரசிற்கு வரவேண்டியுள்ளது.

பிற்பகல் 3-10

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் Prime Minister-ஐப் பார்க்கும்பொழுது அதை insist செய்து அந்தப் பணத்தை உடனடியாக release செய்யச் சொல்லி அழுத்தம் கொடுத்திருக்கிறார். அதை வலியுறுத்தியிருக்கிறோம். Chief Minister அவர்கள் Prime Minister-க்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். கவர்னர் உரையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தை முழுமையாக வாங்கிவிடுவோம், ஒன்றும் கவலையில்லை.



2019 ஜனவரி 4]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார், அடுத்த subject-க்குப் போங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** அடுத்த subject தான். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 7,180 கோடி ரூபாய் வாங்கிவிடுவோம் என்று சொல்லிவிட்டீர்கள். தவறில்லை. புயல் நிவாரண நிதியாக 15,000 கோடி ரூபாய் கேட்டீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லோரும் இரவு பகலாகக் கணக்கிட்டு, 15,000 கோடி ரூபாய் இழப்பு என்று சொல்லி, மத்தியில் இருக்கின்ற ஆட்சியிடம் 15,000 கோடி ரூபாய் கேட்டீர்கள். ஆனால், 1,133 கோடி ரூபாய் கொடுத்தார்கள். அதேநேரத்தில், எங்கள் காங்கிரஸ் அரசாங்கம் மத்தியில் இருந்திருந்தால், பிரதமராக எங்கள் தலைவர் திரு. ராகுல் காந்தி இருந்திருந்தால், "15,000 கோடி ரூபாய் என்ன; 20,000 கோடி ரூபாயை எடுத்துக்கொண்டு போ" என்று சொல்கின்ற ஆற்றல் எங்கள் காங்கிரஸ் இயக்கத்திற்கு உண்டு.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டாத வீட்டில் குடியிருக்கிறேன் என்று சொல்கிறார்கள்; அதுதான் வேடிக்கையாக இருக்கிறது. எப்போது ஆட்சிக்கு வரப் போகிறீர்கள்? கட்டப்படாத வீட்டில், நான் குடியிருப்பேன் என்பதைப்போல, இவர் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார், பேசுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** வேடிக்கை, விளையாட்டு எல்லாம் காங்கிரஸ் இயக்கத்திற்குப் பழக்கப்பட்டது. (சிரிப்பு) 134 ஆண்டுகளில் எத்தனை பேரை பார்த்திருப்போம்? உங்கள் சந்ததி, எங்கள் சந்ததி, அனைத்து சந்ததிகளையும் பார்த்த காங்கிரஸ் கட்சி; யாரையும் கண்டு பயப்படாது. எந்தக் கட்சியானாலும் பயப்படாத ஒரே இயக்கம், காங்கிரஸ் இயக்கம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். ஆக, 15,000 கோடி ரூபாய்க்கு 1,133 கோடி ரூபாய்தான் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறீர்கள். மத்திய அரசாங்கம், நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்களின்,

*வியாபாரிகளின் வரிப் பணத்தையும்* SGST, IGST *போன்ற வருவாயையும் வைத்துக்கொண்டுதான் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.*

*கர்நாடகாவில் மேகதாது அணை கட்ட வேண்டும் என்று சொல்கிற கர்நாடகாவிற்கு, மத்திய அரசாங்கம் மறைமுகமாக பசுமைத் தீர்ப்பாயத்தின்மூலம் அனுமதி அளித்து, "நீ வேலையைத் துவங்கு" என்று சொல்கிறது. அதை நீங்கள் கேட்கவில்லை. நாங்கள் கேட்கிறோம். (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில் சொல்லவில்லை; நான் தமிழனாக நின்று பேசுகிறேன். தமிழ்நாட்டில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் தொண்டனாய், தமிழனாய், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராய் நின்று பேசுகிறேன். முதலில் எனக்கு தமிழ்நாடுதான் முக்கியம்.*

*மத்திய அரசாங்கம் மேகதாது அணையைக் கட்டலாம் என்று பசுமைத் தீர்ப்பாயத்தின்மூலம் மறைமுகமாக அனுமதிக்கிறது.* Sterlite *ஆலை விஷயத்திலும் நேரடியாகச் சொல்வதற்கு சக்தி இல்லாமல், ஆலையை மீண்டும் திறப்பதற்கு பசுமைத் தீர்ப்பாயத்தின்மூலம் அனுமதி வழங்கி, தூத்துக்குடியில்* Sterlite *ஆலையைத் திறக்கப்போகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள்.*

*அதோடு மட்டுமல்ல; தமிழ்நாட்டில் மீனவர்களுக்காக செயல்பட்டுவரும் ஆராய்ச்சி நிலையத்தை மூடப்போகிறோம் என்று சொல்கிறார்கள். உவர்நீர் மீன் வளர்ப்புக்கான மைய நிறுவனத்தையும், கோயம்புத்தூரிலுள்ள கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தையும், திருச்சியிலுள்ள தேசிய வாழை ஆராய்ச்சி நிலையத்தையும், உதகமண்டலத்திலுள்ள உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிறுவனத்தையும் மற்றும் கோயம்புத்தூரிலுள்ள மத்திய அரசு அச்சகத்தையும் மூட மத்திய அரசு நினைக்கிறது. இதற்கு தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைத்தான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) இன்னும் சொல்கிறேன்; கேளுங்கள்.*

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களை மூடுவதாகச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடிதத்தைக்*





*கொடுத்து, மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இராதாமோகன்சிங் அவர்களிடம் இதுபற்றி வலியுறுத்தியபோது, அவற்றை மூடுகின்ற எண்ணம் இல்லை என்ற பதிலை அவர்கள் எங்களிடத்தில் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையில் கொடுத்த உரையிலிருந்துதான் நான் சொல்கிறேன். அவர்கள் என்னிடம் சொன்னார்கள்; அவரிடம் சொன்னார்கள் என்பதல்ல. நீங்கள் அச்சிட்டுக் கொடுத்த கவர்னர் உரையில் இருக்கிறது. இதையெல்லாம் மூட மத்திய அரசாங்கம் நினைக்கிறது என்று நீங்கள் அச்சிட்டதிலே சொல்லியிருக்கின்றீர்கள். * உண்மைக்கு மாறாகச் சொல்கின்றவன் காங்கிரஸ்காரன் அல்ல என்பதை உங்களுக்கு நான் உறுதியாகச் சொல்கிறேன். டெல்லியிலே விவசாயிகள் நூற்றுக்கணக்கான நாட்கள் போராடினார்கள்; தரையில் விழுந்து போராடினார்கள். அங்கே ஆடையில்லாமல் போராடினார்கள்; ஆனால், உலகமெல்லாம் சுற்றி வருகின்ற மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஒரு நாள், ஒரு நிமிடம் அந்த விவசாயிகளைப் பார்க்க நேரம் ஒதுக்கவில்லை என்று சொன்னால், நாம் எல்லோரும் தமிழர்களாக இருந்து என்ன பயன் என்பதைத்தான் உங்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன். நாமெல்லாம் கொதித்தெழுந்திருக்க வேண்டாமா? அங்கு தமிழன் ரோட்டிலே படுத்துக் கிடந்தான். ஒரு நிமிடம் சந்தியுங்கள் என்று சொன்னான். அதற்குப் பிறகு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார். (குறுக்கீடு)*

*பிற்பகல் 3-15*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர், ** என்ற வார்த்தையைச் சொல்லியிருக்கிறீர்கள். அதை உண்மைக்கு மாறான என்று மாற்றிக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

---

* *மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

** *மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2019 ஜனவரி 4

**திரு. எச். வசந்தகுமார்:** *சரி, உண்மைக்குப் புறம்பாக என்று மாற்றிக் கொள்ளலாம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், 7½ கோடி மக்களின் பிரதிநிதி, தமிழகத்தின் மண்ணின் மைந்தன்; தமிழுக்காக வாழ்கின்றவர்; டெல்லிக்குச் சென்றார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார். ***

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது சட்டமன்றம். ஏதோ வெளியில் பொதுக் கூட்டத்தில் பேசுவது போன்று பேசுவதெல்லாம் அவை நடவடிக்கைக் குறிப்பில் இடம்பெறுவது நியாயமற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 16 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) ஆரம்பத்திலிருந்து சப்ஜெக்ட்டே வேறு திசையில் போய்க்கொண்டிருக்கிறது. ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்று திரு. வசந்தகுமார் அண்ணன் அவர்களை லாபியில் சந்திக்கின்ற நேரத்தில், "தினமும் உங்கள் வீர வசனங்களை தொலைக்காட்சியின்மூலம் கண்டு கொண்டிருக்கின்றேன். நீங்கள் நன்றாக வீர வசனம் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்" என்று நான் அவரிடம் சொன்னேன். இன்றைக்கு அதை நிரூபிக்கின்ற வகையில் இங்கு வீர வசனங்களைப் பேசிக் கொண்டிருக்கின்றார். நான் அவரிடம் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன். 2007-ல் காங்கிரஸ் கட்சிதான் மத்தியில் ஆட்சியில் இருந்தது. அப்போது காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வந்தது. நீங்கள் நினைத்திருந்தால், அந்த இறுதித் தீர்ப்புக்கான அரசாணையை 24 மணி நேரத்தில் வெளியிட்டிருக்கலாம். ஏன் கொடுக்கவில்லை? அதை, மாண்புமிகு அம்மா அவர்கள் 2011-ல் மீண்டும் தமிழகத்தின்*

** *மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



2019 ஜனவரி 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*முதலமைச்சராக வந்தபிறகு பாரதப் பிரதமராக இருந்த டாக்டர் மன்மோகன் சிங் அவர்களிடம் கேட்டு, கேட்டுப் பார்த்தார்கள். அப்பொழுதும் முடியவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் பாரதப் பிரதமர் அவர்கள் அந்த அரசாணையைக் கொடுக்கவில்லை. உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாடி, போராடி, 6 வருடங்களுக்குப் பிறகு, 2013 ஆம் ஆண்டில்தான் காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்புக்கு அரசாணை பெற்றுத் தந்த ஒரே முதலமைச்சர், ஒரே தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*தலைமுறை தாண்டி, தலைமுறை தாண்டி, தலைமுறை தாண்டி காங்கிரஸ் கட்சிதான் நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். 1967-லிருந்து இன்று வரை காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் காலூன்ற முடியவில்லை என்ற நிலைதான் இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 18 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) நீங்கள் சப்ஜெக்ட்டுக்கே வரவில்லை. நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *நாங்கள் * உண்மைக்குப் புறம்பாக பேச விரும்பாத கட்சி. உண்மையை மட்டும்தான் பேசுவோம்.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர், அந்த வார்த்தையை மாற்றிக் கொள்ளுங்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *உண்மைக்குப் புறம்பாக நாங்கள் எதையுமே செய்வதில்லை. அதனால் சில நேரங்களில் எங்களுக்கு சறுக்கல்கள் வந்து கொண்டிருக்கின்றன. காலம் ஒரு நாள் மாறும். அப்பொழுது, காங்கிரஸ் கட்சி இந்த தமிழகத்தையும் ஆளும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். எங்கள் இளந் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள் அதற்குரிய வழிவகைகளைச் செய்வார் என்ற நம்பிக்கையோடு நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எல்லோரும் சேர்ந்து விவசாயிகளைப் பார்க்கவில்லை. (குறுக்கீடு)*

* *மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

[*2019 ஜனவரி 4*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகத்தில் ஏதோ மத்திய அரசினுடைய ஆராய்ச்சி நிலையங்களை மூடிவிட்டதாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது உண்மை அல்ல. உதாரணத்திற்கு, மீன் வளத் துறையின்கீழ் மத்திய அரசின்* CIBA *(*Central Institute of Brackish Water Aquaculture) *என்ற நிறுவனம் இருக்கிறது. அதேபோன்று,* CMFRI (Central Marine Fisheries Research Institute) *இருக்கிறது. இவையெல்லாம் மத்திய அரசின்கீழ் செயல்படும் நிறுவனங்கள். அதேபோன்று, மற்ற துறைகளிலும் மத்திய அரசின்கீழ் செயல்படும் ஆராய்ச்சி நிறுவனங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் எந்த நிலையிலும் மூடக் கூடாது என்பதற்காக தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அரசுதான், நம் அம்மா அவர்களுடைய அரசு. அந்த அடிப்படையில் ஆளுநர் உரையில் பக்கம் 7-ல் பார்த்தீர்களென்றால், அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.*

> "The proposals by the Central Government to close some of the Research and other Central institutions in the State will adversely impact the scientific research work in Tamil Nadu which are beneficial to farmers and fishermen. I expect that the request of the State Government to continue the operation of Central institutes like the Central Institute of Brackish Water Aquaculture (CIBA) in Chennai, Sugarcane Breeding Institute at Coimbatore will be duly considered by the Government of India."

*என்று ஆளுநர் உரையில் 7-ம் பக்கத்தில் இருக்கிறது. அதைப் பார்த்துக்கொள்ளுங்கள்.*

*பிற்பகல் 3-20*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எதற்காக இதையெல்லாம் சுற்றிவளைத்துச் சொன்னேன் என்று*



*2019 ஜனவரி 4*] [திரு. எச். வசந்தகுமார்]

*சொன்னால், தமிழனுக்கு மரியாதை வரவேண்டும்; "அந்த மரியாதையைக் கொடுக்காத மத்திய அரசாங்கத்தை எதிர்த்து நீங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றத் தயாரா?" என்றுதான் நான் கேட்கிறேன். நீங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுங்கள்; டெல்லிக்கு தமிழக அமைச்சர்கள் யார் சென்று பார்த்தாலும், அவர்களுடைய தேவைகளைக் கேளுங்கள். கேட்காமல் இருப்பதற்கு இது என்ன கொடுமுடி ஆட்சியா? இது மக்களாட்சி. மக்கள் பிரதிநிதி என்ற முறையில் அமைச்சர் சென்று பார்க்கின்ற நேரத்தில், அவர்களுக்கு வாய்ப்பைக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன். இத்துடன் அதை முடிக்கிறேன். அடுத்து. . .*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டும். உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள், நாடாளுமன்றத் தேர்தலை மனதிலே கொண்டு பேசுகிறார். பொதுக் கூட்டத்தில் இதுபோன்று பேசினால் சரியாக இருக்கும். ஆளுநர் உரையில் இவ்வாறு பேசுவது சரியல்ல; நீங்கள் ராகுல் வருவாரா, மோடி வருவாரா என்ற விவாதத்தை அவைக்குள்ளே பேசினால் சரியாக இருக்காது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். எந்த அரசு மத்தியில் இருந்தாலும், தமிழகத்தின் உரிமையைப் பெற்றுத் தருவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியாக இருக்கிறது. அதற்கு உதாரணமாக, 219 ஆண்டுக்காலமாக நிலுவையிலிருந்த காவேரி உரிமைக்கு நிரந்தரத் தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்த அரசு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு;* AIIMS *மருத்துவமனையை தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்த அரசு, புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. இன்றைக்கு தமிழகத்தினுடைய எந்த உரிமை பறிபோயிருக்கிறது என்பதை உறுப்பினரால் சுட்டிக்காட்ட முடியுமா? அவர்கள் அறிக்கை விடுவார்கள். அதனை எதிர்த்து தன்மானமுள்ள அரசாக நின்று, நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடுத்திருக்கிறது. அதோடு, 24 நாட்கள் நாடாளுமன்றத்தை முடக்கியது, நம்முடைய அம்மாவின் கட்சியில் இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள். எந்த உரிமை பறிபோயிருக்கிறது?*

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2019 ஜனவரி 4

ஏதோ நாங்கள் அடிமைப்பட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள். நல்ல உறவு இருப்பதை சிண்டு முடித்து, கெடுத்து விடாதீர்கள்; நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது. உரிமைகளைப் பெற்றுத் தருகிறோம். இன்றைக்கு infrastructure இருக்கிறது. நீங்கள் பட்டியலை எடுத்துப் பாருங்கள். நீங்கள் படித்தவர்கள், தொழில் துறையில் இருக்கிறீர்கள். Infrastructure இருக்கிறது. இதுவரை தமிழக அரசியல் வரலாற்றில் இல்லாத வகையில் நிதியை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அம்மாவின் அரசின் சார்பில் பெற்று, இன்றைக்கு infrastructure வளர்ந்து கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் மேம்பாலங்கள்; எங்கு பார்த்தாலும் சாலைகள்; உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிலே அத்தனை தொழிலதிபர்களும் தமிழகத்தை நோக்கி வருகிறார்கள் என்று சொன்னால், அம்மாவின் அரசு சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றி, தடையில்லா மின்சாரத்தைக் கொடுத்து infrastructure-ஐ உருவாக்கியிருப்பதுதான் அதற்குக் காரணம். ஏதோ பறிபோனதுபோல் சொல்கிறீர்கள்; சுட்டிக்காட்டுங்கள்; நாங்கள் பதில் சொல்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர். இராஜா. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் இன்னும் இரண்டு மணித் துளிகளில் முடிக்க வேண்டும்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிவகாசி பட்டாசினை வாங்கி வெடித்து உலகம் முழுவதும் சந்தோஷமாக இருந்தார்கள். சிவகாசி பட்டாசினை வெடித்து உலகம் முழுவதும் மக்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு துன்பக் கடலில் மூழ்கிக் கிடக்கும் வகையில், அந்தப் பட்டாசுத் தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அங்கே பட்டினி கிடக்கிறார்கள். அதற்கு தமிழக அரசு ஒரு முடிவெடுத்து, மத்திய அரசாங்கத்தோடு பேசி, அந்த ஏழை, எளிய மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் வைக்கிறேன். உங்களைக் குற்றமாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ



2019 ஜனவரி 4] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அரசாங்கம் மூடியதைப்போல் சொல்கிறார்கள். அரசாங்கம் மூடவில்லை. உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்ப்பின்படிதான் நடந்துகொண்டிருக்கிறோம். தமிழக அரசு அங்கிருக்கின்ற பட்டாசுத் தொழிலதிபர்களை எல்லாம் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியதில், தமிழக அரசும் இதில் சேர்ந்து மூத்த வழக்கறிஞரை வைத்து வாதாட வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். நாங்கள் தனியாக அரசின் சார்பிலே மூத்த வழக்கறிஞரை வைத்து வாதாடிய காரணத்தினால்தான், பட்டாசு வெடிப்பதற்கு 2 மணி நேரத்திற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. தீர்ப்பிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, பட்டாசுத் தொழிற்சாலைகள் இயங்குவதற்கும், பட்டாசு வெடிப்பதற்கும் அனுமதி வழங்குகிறோம் என்று தெளிவாகத் தீர்ப்பு கொடுத்துள்ளது. ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும், தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, அங்கே தொழில் செய்கின்ற முதலாளிகள், தொழிலாளர்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, அரசாங்கமே மூத்த வழக்கறிஞரை வைத்து உச்ச நீதிமன்றத்தில் வாதாடி தீர்ப்பைப் பெற்றிருக்கிறது. மறு சீராய்வு மனுவை தாக்கல் செய்திருக்கின்றோம். அதில் நிச்சயமாக நம்முடைய தொழிலாளர்கள் காப்பாற்றப்படுவார்கள்; அந்தத் தொழில் காப்பாற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் 25 நிமிடங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒரே நிமிடம். (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் முடிக்க வேண்டும்.

பிற்பகல் 3-25

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் யாரோடு யார் சேர்ந்தாலும் சரி, எது சொன்னாலும் சரி, அந்தப் பட்டாசுத் தொழிற்சாலைகள் திறக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நான் பேசுகிறேன்.

[திரு. எச். வசந்தகுமார்] [2019 ஜனவரி 4

சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாப்பதற்காக தற்போது பிளாஸ்டிக் பயன்பாடு ஒழிக்கப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். Multi-national Companies, பெரிய நிறுவனங்கள், ITC போன்ற packing நிறுவனங்களையும் மூட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், அதற்கும் மேலாக அவற்றிலும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்த நிறுவனத்தினர் வங்கியில் கடன் வாங்கியிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு ஏதேனும் ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அண்ணன் திரு. செல்லூர் ராஜூ அவர்களும், மதுரையில் அளித்த ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். அதையும் சற்று கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து, தூத்துக்குடி விமான நிலையம் மேலும் விரிவாக்கப்பட வேண்டும். நாங்குநேரி தொகுதி, பரப்பாடியில் அரசு கலைக் கல்லூரி அமைத்திட ஐந்தரை ஏக்கர் நிலத்தை எனது சொந்த செலவில் வாங்கிக் கொடுத்திருக்கிறேன். அங்கே ஒரு கல்லூரி அமைத்திட உதவி செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றேன். நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், கீழநத்தம் ஊராட்சியில், இளைஞர்களெல்லாம் விளையாட்டு வீரர்களாக வர வேண்டுமென்பதற்காக. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** அவற்றையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். பதிவு செய்துகொள்ளலாம். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். (குறுக்கீடு) இல்லையில்லை; அவற்றையெல்லாம் எழுதிக் கொடுக்குமாறு சொல்லிவிட்டேன். அடுத்த உறுப்பினர் நீங்கள் பேசுகிறீர்களா? (குறுக்கீடுகள்)

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டும். வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித ஒதுக்கீட்டினைக் கொடுப்பதாகச் சொன்ன மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில், விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு, கீழநத்தம் என்ற கிராமத்தில் sports village அமைக்க வேண்டும். மனோன்மணியம் சுந்தரனார் கல்லூரிக்கு 160 ஏக்கர் நிலம் இருக்கிறது. 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும். உலக அரங்கில் தமிழன் வீரநடை போடுவான் என்பதற்காகத்தான், கீழநத்தம் கிராமத்தில் sports village அமைக்க வேண்டுமென்று கேட்கிறேன். அதற்கு மனோன்மணியம் சுந்தரனார் கல்லூரி உதவியாக இருக்கிறது. (குறுக்கீடு) ஒரே ஒரு point. வடக்கு பச்சையாறுமூலம், நாங்குநேரியன் கால்வாய்மூலம்



2019 ஜனவரி 4] [திரு. எச். வசந்தகுமார்]

பாசனம் பெறும் 46 குளங்களுக்கு By-pass scheme--க்கு, நமது எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பதவியிலிருந்தபோது 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**தொகுதிக் கோரிக்கைகள்**

நாங்குநேரி-ஏர்வாடி-திருக்குறுங்குடிக்கு புதிய நகரப் பேருந்தும், நாங்குநேரி-ஏர்வாடி-சிறுமளஞ்சி-பட்டர்புரம்-சகாயநகர்-நாங்குநேரி வழித்தடத்தில் சர்குலர் பேருந்தும், கழுவூர்-பதைக்கம்-காரியாண்டி-விஜயஅச்சம்பாடு-இட்டமொழி-சுப்பிரமணியபுரம் - திசையன்விளை வழித்தடங்களில் பேருந்துகளும் இயக்க வேண்டும். மேலும், மூலைக்கரைப்பட்டி-முனைஞ்சிப்பட்டி-பதைக்கம்-தெற்கு பாப்பான்குளம் பரப்பாடி-சித்தூர்-வள்ளியூர் பகுதிகளுக்குப் பேருந்து வசதியும், இடையன்குளம்-களக்காடு-நாங்குநேரி வழித்தடத்தில் கூடுதல் பேருந்து வசதியும் ஏற்படுத்தித் தர வேண்டும். மூலைக்கரைப்பட்டி பாசன பாதிப்பில்லாத கூனிக்குளத்தில் ஒரு பேருந்து நிலையமும் அமைத்துத் தர வேண்டும்.

நாங்குநேரி தொகுதி, பாளையங்கால்வாயில் சிமெண்ட் தளம் அமைத்திடவும், தெய்வநாயகபேரி தெற்கு பத்தினிப்பாறை வரையிலுள்ள 4 கிலோ மீட்டர் சாலையை புதியதாக அமைத்திடவும், களக்காடு பகுதி, வாழைக்காய் பதப்படுத்திட குளிர்சாதன வசதியுடன் கூடிய பதப்படுத்தும் கிடங்கு அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி, களக்காடு அரசு மருத்துவமனையில் (பெல்ஜியம்) 100 படுக்கை வசதியுடன்கூடிய புதிய கட்டடம் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவும், மன்னார்புரம் சந்திப்பில் 100 படுக்கை வசதி கொண்ட நவீன அரசு மருத்துவமனையும் அமைத்துத் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி, காரியாண்டி மற்றும் சிவந்தியாபுரம் ஆகிய இடங்களில் புதிய கால்நடை மருத்துவமனையும், கரந்தாநேரி பஞ்சாயத்துக்குட்பட்ட பானாங்குளத்தில் கால்நடை மருத்துவமனையும், கீழநத்தம் பஞ்சாயத்தில் கால்நடை மருத்துவமனையும் அமைக்கவேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி, களக்காடு மற்றும் மூலைக்கரைப்பட்டி ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைத்திடவும்,

[திரு. எச். வசந்தகுமார்] [2019 ஜனவரி 4

களக்காட்டை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா அமைத்திடவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்தி சுற்றுலாத் தலமாக்க வேண்டும். திருக்குறுங்குடி அருள்மிகு திருமலை நம்பிக்கோயில், பாளை கிருஷ்ணாபுரம் பெருமாள் கோயில் (சிற்பக் கலைக்கூடம்) ஆகியவற்றுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி, பயன்பாட்டுக்கு வராமல் உள்ள தலைகிராமங்கள் (Village Head Quarters) சேவை மையக் கட்டடங்களில் கிராமப்புற மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் கணினிப் பயிற்சி மற்றும் ஆன் லைன் சேவை மையம் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

களக்காடு கருவேலன்குளம்-மஞ்சுவிளை சாலையில், உப்பாற்றின் குறுக்கேயுள்ள தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைத்திடவும், களக்காடு C.P. ரோட்டில் கருவேலன்குளம்-வடமலை சமுத்திரத்திற்கு இடையே உப்பாற்றின் குறுக்கே உள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன். களக்காடு ஒன்றியம், கீழக்காடுவெட்டி ஊராட்சி, கீழக்காடுவெட்டி மற்றும் மேலக்காடுவெட்டி இடையே வடக்கு பச்சையாற்றின் குறுக்கே உள்ள தரைமட்ட குழாய் பாலத்திற்குப் பதில், உயர்மட்டப் பாலம் அமைத்திட வேண்டும்.

நாங்குநேரி தொகுதி-களக்காடு-சிதம்பராபுரம் மேற்குத் தொடர்ச்சி மலையில் கோலிக்கால் தனிக் கால்வாய் திட்டம் அமைத்திட வேண்டும். கோலிக்கால் ஓடைப் பிரிவிலிருந்து பரிசுகொடுத்தான் பத்து (பருத்தாம் பத்து) வனத் துறைக்குச் சொந்தமான தெற்கு நோக்கி செல்லும் சில் ஓடை கால்வாய் S.N. பள்ளிவாசல் வழியாகச் சென்றால், வடமநேரிகுளம், இலந்தகுளம் உள்ளிட்ட பல குளங்களுக்கு தனிக் கால்வாயாக அமையும்.

பர்கிட்மாநகர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவப் பிரிவுக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டும். திருவேங்கடநாதபுரம் (சிறுமளஞ்சி) அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தைப் பழுதுபார்த்து, கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் நியமிக்க வேண்டும். சிங்கிகுளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஸ்கேன் மெஷின் நிறுவுவதுடன், கூடுதல்



2019 ஜனவரி 4] [திரு. எச். வசந்தகுமார்]

மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், ஆம்புலன்ஸ் டிரைவர் ஆகியோரை நியமனம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். கீழநத்தம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் நியமனம் செய்வதுடன், புதிய கட்டடமும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூலைக்கரைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை சீரமைக்கவும், கூடுதல் மருத்துவர், செவிலியர் நியமனம் செய்யவும் வேண்டுகிறேன்.

நாங்குநேரி தொகுதி, பாளை ஒன்றியம், சீவலப்பேரி அருகிலுள்ள சந்தைப்பேட்டையை பூர்வீகமாகக் கொண்ட நடிகர் சந்திரபாபு அவர்களுக்கு, அங்கு நினைவு மண்டபம் அமைக்க வேண்டும். சந்தைப்பேட்டையிலுள்ள பழமையான சவேரியார் ஆலயத்தை மேம்படுத்தவும், நாங்குநேரி ஒன்றியம், தெற்கு விஜயநாராயணபுரம் கிராமத்திலுள்ள செய்யது மலுக்கு மேத்த பிள்ளை அப்பா தர்ஹாவுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பாளை ஒன்றியம்-கீழநத்தம்-அரியகுளம் ஊராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்திட வேண்டும். K.T.C. நகரிலுள்ள 300 தெருக்களுக்கு சிமென்ட் சாலை அமைத்திடவும், கழிவு நீரோடை அல்லது பாதாள சாக்கடை அமைத்திடவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சிங்கிகுளம் ஊராட்சியில் புதிய காவல் நிலையமும், இட்டமொழி ஊராட்சியில் புதிய காவல் நிலையமும், திருக்குறுங்குடி மற்றும் மூலக்கரைப்பட்டி காவல் நிலையங்களை காவல் உதவி ஆய்வாளர் நிலையிலிருந்து ஆய்வாளர் நிலைக்குத் தரமுயர்த்தவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாளை ஒன்றியம், கீழநத்தம் ஊராட்சி, K.T.C. நகரிலும், நாங்குநேரி ஒன்றியம், தளபதிசமுத்திரம் 4 வழிச்சாலையிலும், களக்காடு-இடையன்குளம்விலக்கிலும் (C.P. Road) புறக்காவல் நிலையங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். (குறுக்கீடு) நன்றியை நாங்களே record செய்துகொள்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்கள் பேசும்போது, தூத்துக்குடி விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அந்த விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்காக 601 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, 31-12-2018 அன்று விமான நிலையத்திடம் ஒப்படைப்பு செய்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரையில், தூத்துக்குடி ஸ்டெர்லைட் காப்பர் ஆலையை நிரந்தரமாக மூடுவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை வரவேற்கிறேன். அதிலே இந்த அரசாங்கம் உறுதியாக இருந்து, கொள்கை முடிவெடுத்து, தூத்துக்குடி நகர மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதை இந்த நல்ல நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆளுநர் உரையிலே, "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்-2023" பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலே இளைஞர்களுக்கான கொள்கை பற்றியும் ஒரு வார்த்தை சேர்க்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, என்னுடைய கடையநல்லூர் தொகுதியிலே பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். வேலையின்றி இருந்தால், அவர்களெல்லாம் தவறான பாதைக்குச் சென்றுவிடுவார்கள். எனவே, ஏற்கெனவே நீங்கள் அறிவித்ததுபோல, அந்தப் பகுதியிலே திறன் வளர்ப்பு மையத்தை ஏற்படுத்த வேண்டும். அதேபோன்று, தனியார் மூலமாக நாங்கள் பல்வேறு





வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தியிருக்கின்றோம். அரசின் சார்பில் வேலைவாய்ப்பு முகாம் இதுவரை நடத்தப்படவில்லை. எனவே, தயவுகூர்ந்து எனது தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஒன்றியம் வாரியாக வேலைவாய்ப்பு முகாமை நடத்தித் தர வேண்டுமென்பதையும் இங்கே கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 3-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, திறன் பயிற்சியளிக்க வேண்டுமென்று கூறினார்கள். நம்முடைய தமிழகத்தில் தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் 85 தொழிற்பயிற்சி நிலையங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், industrial schools-ம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலும் ஐ.டி.ஐ. செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதிலும் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. உலகத் தமிழ் அமைப்புகளின் மாநாடு நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. உலகத் தமிழர்களுடைய ஒப்பற்றத் தலைவராக இருந்து, மறைந்திருக்கக்கூடிய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயரிலே உலகத் தமிழறிஞர்களுக்கான ஒரு விருதையும் இந்த அரசாங்கம் உருவாக்கித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசியல் நிர்ணய சபையில் தமிழுக்காக குரலெழுப்பிய தமிழர் காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிபு அவர்களுடைய பாடம் ஏற்கெனவே நமது பாடநூலிலே

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2019 ஜனவரி 4*

இடம் பெற்றிருந்தது, அது அகற்றப்பட்டுவிட்டது. மீண்டும் இணைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வாக்குறுதியை விரைவாக நிறைவேற்றித் தர வேண்டுமென்பதையும் இந்த நல்ல நேரத்திலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, குடிமராமத்துத் திட்டத்தைப் பற்றி அங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியிலே நிறைய குளங்கள் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. அந்தக் குளங்கள் தூர் வாரப்பட வேண்டும். அணைகள் அதிகமாக இருக்கின்றன. இயற்கையாகவே அடிக்கடி தண்ணீர் பெறக்கூடிய ஓர் அற்புதமான சூழ்நிலை எங்கள் தொகுதியில் இருப்பதால், அந்த அணைகளை எல்லாம் சீரமைத்து, உயர்த்தக்கூடிய பணிகளிலும் இந்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு, ஒரு முக்கியமான விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குடி தண்ணீருக்காக போராடிக் கொண்டிருக்கின்றோம்; காவேரி நதிநீருக்காக போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், தமிழ்நாட்டிலே முன்பெல்லாம் பொதுக் கிணறுகள் இருந்தன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 7 இலட்சம் உறைக் கிணறுகள் இருக்கின்றன. அவை தற்போது எந்தப் பயன்பாடும் இல்லாமல் பாழடைந்து, குப்பைக்கூளமாக இருக்கின்றன. அந்த உறைக் கிணறுகளைப் புதுப்பிக்கக்கூடிய பணிகளிலே இந்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், முன்பெல்லாம் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்து குடிநீருக்காகவும், சமைப்பதற்காகவும் பயன்படுத்தினோம். பாத்திரங்களைக் கழுவுவதற்காகவும், துணிகளைத் துவைப்பதற்காகவும், ஆடு, மாடுகள் குடிப்பதற்கும் உறைக் கிணறுகளிலேயிருந்து உப்புத் தண்ணீரை எடுத்து நாம் பயன்படுத்தி வந்தோம். இப்பொழுது 7 இலட்சம் உறைக் கிணறுகள் எந்தப் பயன்பாடும் இல்லாமல், குப்பைகள் போடப்பட்டு பாழடைந்து வருகின்றன. ஆனால், தண்ணீருக்குப் போராடுகின்றோம்; போர்வெல் மூலமாக, குறிப்பிட்ட அளவுக்குத்தான் தண்ணீர் எடுக்க முடியும், அதன் பிறகு அவை வறட்சி அடைந்துவிடும். எனவே, இந்தக் கிணறுகளையெல்லாம் பாதுகாப்பதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்பதையும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



*2019 ஜனவரி 4*] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

அதேபோலவே, ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கின்றீர்கள். பாதைகள் எல்லாம் சீராக்கப்பட வேண்டும்; நான்கு வழிச் சாலையாக ஆக்கப்பட வேண்டுமென்பதிலே எந்த மாற்றுக் கருத்தும் நமக்கு இல்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய செங்கோட்டை-திருமங்கலம் நான்கு வழிச் சாலைத் திட்டம்; NH 744-லே இராஜபாளையம் வரை எந்தப் பிரச்சினையும் இல்லை. இராஜபாளையத்திற்குப் பிறகு சத்திரப்பட்டி முதல் செங்கோட்டை வரை 69 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்த நான்கு வழிச் சாலையை அமைக்கக்கூடிய அந்த proposal-க்குப் பதிலாக சற்று புதியதாக ஒரு பாதையை அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நாங்கள் வைத்திருக்கின்றோம். அரசு அறிவித்திருக்கக்கூடிய திட்டத்திலே, அந்தப் பாதையிலே 3 இலட்சம் தென்னை மரங்கள், 200 கிணறுகள், 500 போர்வெல்கள், 200 வீடுகள் பாதிக்கப்படக்கூடியதாக இருக்கின்றன. எனவே, மாற்றுத் திட்டத்தை அங்கேயுள்ள விவசாயிகள், பொது மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் எல்லோரும் சேர்ந்து சுமார் 2 ஆயிரம் பேர் மனுவாக அளித்திருக்கின்றோம். அதை மாவட்ட நிருவாகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் வெகு சிறப்பாக எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். எனவே, நான்கு வழிச் சாலை வேண்டும். ஆனால், விளைநிலங்கள் பாதிக்கப்படாத இடங்களிலே, மாற்று இடங்களிலே நீங்கள் அதைச் செயல்படுத்த வேண்டுமென்பதையும் இந்த நல்ல நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்த மாற்றுப் பாதை திட்டம் குறைந்த தூரமாக இருக்கின்றது, வளைவுகள் இல்லை, பாதிப்புகள் இல்லை. எனவே, அதை பரிசீலனை செய்ய வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போலவே, திருநெல்வேலியிலிருந்து தென்காசிக்கு நான்கு வழிச் சாலைத் திட்டத்தில், ஆரம்பிக்கப்பட்ட பணி நிறுத்தப்பட்டு விட்டது. டெண்டர் எடுத்தவர்களுடைய தவறான அணுகுமுறையின் காரணமாக நிறுத்தப்பட்டதாக அண்மையிலே திருநெல்வேலிக்கு வந்த Public Accounts Committee-யினுடைய கூட்டத்திலே தெரிவிக்கப்பட்டது. அதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2019 ஜனவரி 4 பிற்பகல் 3-35*

தென்காசி தனி மாவட்டமாக உருவாக்கப்பட வேண்டுமென்பது அனைவரும் எடுத்து வைக்கக்கூடிய கோரிக்கையாக இருக்கின்றது. பத்துக்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட இந்த மாவட்டத்தைப் பிரித்து, தென்காசியை தனி மாவட்டமாக உருவாக்குவதற்குண்டான அறிவிப்பை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்கு முன்பாக சங்கரன்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தனி கோட்டத்தையும் இந்த அரசாங்கம் அறிவிக்க வேண்டும். நான் சொல்லும்போதே, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் சந்தோஷமாக இருக்கின்றார். சங்கரன்கோவில் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் அவர்களும் சந்தோஷமாக இருக்கின்றார்கள். ஒரு வரலாற்றுச் சிறப்புக்குரிய தென்காசி மாநகர் குற்றாலத்தை உள்ளடக்கியது. எனவே, அதை தனி மாவட்டமாக இந்த அரசு அறிவிக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, உயர் கல்வித் துறையில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். சென்ற வருடமே இதுபோன்று ஆளுநர் உரையில், உருது அகாடமி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், இதுவரை அமைக்கப்படவில்லை. அந்தச் சிறுபான்மையின மொழிகளுடைய பாதுகாப்புக்காக இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து, உருது அகாடமியை மீண்டும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்பதையும் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, விரிவான சுகாதார சேவை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. திருநெல்வேலி மாவட்டத்திலே, திருநெல்வேலி மாநகராட்சிக்கு அடுத்தபடியாக, ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட நகரம் கடையநல்லூர் நகரமாகும். அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனை வசதியில்லாமல் இருக்கின்றது. எனவே, கடையநல்லூர் மருத்துவமனையை, மாவட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். எனது தொகுதிக்குட்பட்ட வடகரை, சொக்கம்பட்டி, புளியரை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைந்துள்ள அந்தப் பகுதிகளெல்லாம் கிராமங்கள் நிறைந்த பகுதிகளாகும். மிருகங்கள் வாழக்கூடிய பகுதியாகும். சொக்கம்பட்டி



*2019 ஜனவரி 4*] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையிலே அது மிகப் பெரிய அளவிலே இருந்தாலும், பாதுகாப்புக்கு ஒரு compound wall கூட அங்கு இல்லை. எனவே, இந்தப் பகுதிகளிலெல்லாம் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

கடையநல்லூர் பகுதியிலே, இக்பால் நகரிலே ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக வைக்கப்பட்டு, இதுவரை பரிசீலிக்கப்படாமல் இருக்கின்றது. அதையும் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். கடையநல்லூரிலிருந்து சிறுநீரகம் பாதித்த நோயாளிகள் dialysis செய்வதற்கு திருநெல்வேலிக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. சென்ற வருடம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கடையநல்லூர் மருத்துவமனைக்கு dialysis machine வாங்குவதற்காக நான் நிதி வழங்கினேன். அரசாங்கம் சார்பாக ஒரு கருவி தந்தீர்கள். இந்த வருடமும் என்னுடைய நிதியிலே இரண்டு machines-ஐ வழங்கி இருக்கின்றேன். அரசாங்கம் மூலமாக ஒரு machine வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்து dialysis machines-க்கு தேவையான தண்ணீர் வசதி அந்த மருத்துவமனையில் இல்லை. அதிகமான பேர் அங்கே பயன்பெற முடியும். ஆனால், அங்கே போதுமான தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினாலே, அந்தப் பாவப்பட்ட kidney நோயாளிகள் முழுமையாகப் பயன்பெற முடியாமல் இருக்கின்றனர். அதையும், அரசாங்கம் கவனத்திலே கொண்டு, dialysis machines முழுமையாகச் செயல்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். அதற்குள் முடியுங்கள் என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு) நான் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள்கூட ஆகவில்லை. ஒரு நாள்தான் நான் பேசுகிறேன். கடலூர் மாவட்டம், லால்பேட்டையில் அதிகமான பேர் வாழ்கின்றார்கள். அங்கு அரசு மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும். இது மிக முக்கியமான கோரிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நேரிலேயே சொல்லியிருக்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் சொல்லி இருக்கின்றார்கள்.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2019 ஜனவரி 4

கடையநல்லூர் தாலுகா அலுவலகம் என்பது மறைந்த முதல்வர் அம்மையார் அவர்களால் உருவாக்கப்பட்டதாகும். தாலுகா அலுவலகம் நகர எல்லையிலே அமைக்கப்பட வேண்டுமென்பதை பலமுறை இதே சட்டமன்றத்திலே நான் பேசி இருக்கின்றேன். மறைந்த முதல்வர் அவர்களிடம் பொது மக்களுடைய நன்மை கருதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பலமுறை இங்கே சொல்லி இருக்கின்றார்கள்.

*பிற்பகல் 3-40*

சென்ற 10 நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அங்கே வந்திருந்தார்கள். "மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வந்திருக்கின்றார்கள்; நல்ல அறிவிப்புகளெல்லாம் வரும்" என்று காத்திருந்த என்னுடைய தொகுதி மக்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தையும், வேதனையையும், சொல்லொணாத் துயரத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்ற கவலையை இங்கே பதிவு செய்வது எனது கடமையாகும். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வந்து செல்கின்றார்கள். மறு தினமே, யாருக்கும் அறிவிப்பு செய்யாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மட்டும், அவர்களுக்குக்கூட முழுமையாகத் தெரியவில்லை; இருட்டிலே 7 மணிக்கு, 22 திட்டங்கள் என்று சொல்லி, 22-லே ஒன்றாக, யாருக்கும் அறிவிப்பு செய்யாமல், வனப் பகுதியிலே, போக்குவரத்து வசதி இல்லாத பகுதியிலே, தாலுகா அலுவலகத்திற்கு பூமி பூஜை நடத்தியது நியாயம்தானா? அம்மா அவர்களுடைய வாக்குறுதியை நீங்கள் ஏன் மறக்கின்றீர்கள்? (குறுக்கீடு) நான் பேசி முடித்தபிறகு பேசுங்கள். நான் சொல்லி முடித்துவிடுகின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** நீங்கள் பிரச்சினைகளைச் சொன்னால் பரவாயில்லை. "அம்மா அவர்களுடைய வாக்குறுதியை நீங்கள் ஏன் மறக்கின்றீர்கள்?" என்று கேட்கிறீர்கள். தவறு, தவறு. நீங்கள் சொல்வது தவறு. பிரச்சினையின் சாராம்சம் உங்களுக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். நீங்கள் பிரச்சினையை மட்டும் சொல்லுங்கள், நாங்கள் கேட்கிறோம்.



2019 ஜனவரி 4]

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** தாலுகா அலுவலகத்திற்கென கண்டறியப்பட்ட இடத்தில் சர்வே எண் 239/1-ல், முன்பு வேளாண்மைத் துறை அலுவலகம் இருந்தது; இப்போது காலியாக இருக்கிறது. ஒன்றிய அலுவலகத்திற்குப் பக்கத்தில் மெயின் ரோட்டில் இருக்கிறது. அங்கு நீங்கள் நினைத்தால் செய்து கொடுக்கலாம். அங்குள்ள கலெக்டர் மற்ற எல்லோருமே பரிந்துரை செய்யத் தயாராக இருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், புதிய தாலுகா அறிவித்தது இந்த அரசாங்கம். அதற்கான கட்டடத்தை நகரத்தில் அமைத்துக் கொடுத்தால் உங்களுக்குத்தானே சிறப்பு. தனிப்பட்ட சில பேருக்காக வெளியிலே அமைப்பதால் என்ன பிரயோஜனம்? போக்குவரத்து வசதி இல்லை. அந்த தாலுகா அலுவலகம் என்பது இரண்டு பெரிய நகராட்சி; புளியங்குடி எம்.எல்.ஏ. அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர் அன்றைக்குப் போகவில்லை; அதிகாரிகள் போகவில்லை. 2 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள், 32 கிராம மக்கள் எப்படி அந்த இடத்திற்குப் போவார்கள்? வனப் பகுதியாக இருக்கிறது, எந்த வசதியும் இல்லை. தற்காலிகமாக இருக்கின்ற அந்த இடத்தில் நிரந்தரமாக்கிக் கொடுங்கள். இல்லையென்றால், நான் சொல்லக்கூடிய சர்வே நம்பர் கொண்ட அந்த இடத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்த இடத்தில் நீங்கள் அமைத்துக் கொடுத்தீர்களென்றால், எல்லா மக்களும் உங்களைப் பாராட்டப் போகிறார்கள். அதுதான் எங்களுடைய கோரிக்கை. இரவோடு இரவாக, 7 மணிக்குச் சென்று அதை நடத்தினீர்களே, என்ன நன்மை இருக்கப் போகின்றது என்பதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அன்றைக்கு அமைச்சராக இருந்த அண்ணன் திரு. செந்தூர் பாண்டியன் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அன்றைக்கு அறிவித்தது. திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா என்ற புதிய தாலுகாவை, புதிய வட்டத்தை அவர்தான் அந்த சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராக இருந்தார்கள். எப்பொழுதுமே ஒரு புதிய வட்டம் தொடங்கியவுடன், அந்த

வட்டத்திற்கு தற்காலிக இடமாக, காலியாக இருக்கக்கூடிய எந்தத் துறையைச் சேர்ந்த இடமாக இருந்தாலும் அல்லது தனியார் இடமாக இருந்தாலும், அது உடனடியாக செயல்பாட்டிற்கு வர வேண்டுமென்கிற அடிப்படையில்தான் தற்காலிகமாக ஒரு இடத்திலே தொடங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தற்போது தொடங்கப்பட்டிருக்கின்ற இடமான இடைக்கல் கிராமம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, பஸ் போக்குவரத்தோ அல்லது ஆள் நடமாட்டமோ இல்லாத இடம் கிடையாது. அங்கே ஏற்கெனவே மனோ கல்லூரி இயங்கி வருகிறது. அதைத் தொடர்ந்து அரசு தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கு அங்கே 13-12-2018-ல்தான் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. தற்போது வட்டாட்சியர் அலுவலகம், இது வருவாய்த் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம். ஏனெனில், வளர்ந்து வருகிற காலங்களிலே, தற்போது இருக்கக்கூடிய சூழ்நிலையிலே, இட நெருக்கடியான ஓர் இடத்திலே நாம் அதை உருவாக்கினோம் என்று சொன்னால், அது போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் என்கின்ற அடிப்படையில்தான், வளர்ந்து வருகின்ற பகுதிகளிலே நாம் இதுபோன்ற அலுவலகங்களைத் தொடங்குகின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் என்னுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே உறுதியாக இருக்கிறார்கள், அதை என்னவென்று மறு ஆய்வு செய்யுங்கள் என்று சொன்னார்கள். 2015-லே ஒதுக்கப்பட்ட நிதி, அந்தத் திட்டம் தொடங்கப்படாமல் 3 ஆண்டுகள் நிலுவையிலே வைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். ஏற்கெனவே, ஓர் இடம் அடையாளம் காட்டப்பட்டது. அந்த இடம் நீர்நிலைப் புறம்போக்காக இருந்தது. அங்கே தொடங்குவதற்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தடையாணை இருக்கின்றது. அதற்குப்பிறகு ஓர் இடம் அடையாளம் காணப்பட்டது; அது விவசாயத் துறையின்கீழ் இருக்கிறது. அதற்குப்பிறகு ஓர் இடம் அடையாளம் காணப்பட்டது; அது பஞ்சாயத்துக்கு, உள்ளாட்சித் துறைக்கு சொந்தமான ஓர் இடமாக இருக்கிறது. ஆகவே, பிற துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்திலே, புதியதாக ஒரு வட்டாட்சியர் அலுவலகத்தை நாம் துவங்க வேண்டுமென்றால், அதற்கு கால அவகாசம் தேவை. சம்பந்தப்பட்ட துறையிடம் கோரிக்கை





வைத்து, அவர்கள் NOC கொடுக்க வேண்டும். அவர்கள் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம்; எங்கள் அலுவலகத்திற்குத் தேவைப்படுகிறது என்று பதிலளித்திருக்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையில்தான், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையினை ஏற்று, நிலுவையிலே வைத்து, 3 வருட காலம் ஆகியிருக்கிறது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கும், இதற்கும் அதிகபட்ச தூரம் இல்லை. வெறும் 3 கி.மீ.தான். அங்கே பஸ் போக்குவரத்து இருக்கிறது.

*பிற்பகல் 3-45*

கல்லூரி இருக்கிறது; தொழில்நுட்பக் கல்லூரி இருக்கிறது. அங்கே இன்னும் பல துறைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, இது தனியாருக்குச் சாதகமான ஒரு முடிவு என்று சொல்கின்றார்கள். நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அதுபோன்று எந்தத் தனியாருக்கும் சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்காது. இடம் இருந்தால், அங்கு துவங்குவதிலே அரசுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை ஏற்று, “நீங்களேகூட அடையாளம் காணுங்கள்” என்று சொன்னோம். அவர் குறிப்பிடுவது நகர்ப் பகுதி. கடையநல்லூர் நகர்ப் பகுதியிலே எந்தவிதமான காலியிடமும் இல்லாத காரணத்தினால்தான், இந்த இடம் தேர்வு செய்யப்பட்டது. இடைக்கல் கிராமத்தில் தற்போது அரசின் அனைத்துத் துறைகளுக்கும் சொந்தமான நிலம் இருக்கிற காரணத்தினாலே, எந்தத் தடையும் அங்கே இல்லை. உடனடியாக அங்கே துவக்கப்பட்டிருக்கிறது. அதுவும் அந்த மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் என்கிற முறையிலே, எல்லா மக்கள் நலத் திட்டப் பணிகளையும் நேரடியாகச் சென்று, அதைத் துவங்கி வைக்கிற, பூமி பூஜை போட்டு துவங்கி வைக்கிற முறையில் அந்த நிகழ்வும் நடந்திருக்கிறது. இதிலே எந்தத் தவறும் இல்லை. எந்தத் தப்பும் இல்லை. இதிலே அம்மா அவர்களுடைய உறுதியிலே நாங்கள் எங்கே தவறியிருக்கிறோம்? புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த கடையநல்லூர் தாலுகாவை அறிவிக்கிறபோது இவர் சட்டமன்ற உறுப்பினரே கிடையாது. இது மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் செந்தூர் பாண்டியன் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று உருவாக்கப்பட்டது. இவர் இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக மக்களால் அங்கிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்றார்.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [*2019 ஜனவரி 4*

உறுப்பினருடைய கோரிக்கையை நாங்கள் மதிக்கின்றோம், வரவேற்கின்றோம். அதைச் செயல்படுத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இருந்தால் சொல்லுங்கள் என்றுதான் கேட்கிறோமே தவிர, அம்மா அவர்களுடைய உறுதியை, வாக்குறுதியை உயிரைக் கொடுத்தாவது நாங்கள் காப்பாற்றுவோமே தவிர, அம்மாவின் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறுகின்ற பிள்ளைகளாக இருக்கமாட்டோம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள் பேசுகின்றபொழுது, 'சென்ற மாதம்கூட துணை முதலமைச்சர் அவர்கள் கடையநல்லூர் வந்திருந்தார். அவர் ஒரு நல்ல அறிவிப்பை வெளியிடுவார் என்று நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்திருந்தோம்; ஏமாற்றப்பட்டோம்' என்ற ஒரு கருத்து தொனிக்கின்ற வகையில் இங்கே பேசியிருக்கிறார். நான் கடையநல்லூர் வழியாக செங்கோட்டை சென்றேன். அங்கு முன்னாள் அமைச்சர் மறைந்த அண்ணன் திரு. செந்தூர் பாண்டியன் அவர்களுடைய மகனுடைய திருமண நிகழ்விலே கலந்துகொள்வதற்காகச் சென்றேன். போகின்ற வழியில் கடையநல்லூரில் நான் கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் இருக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. ஏனென்றால், அங்கு நம்முடைய கழகத்தினர், பொது மக்கள் வரவேற்பு கொடுத்தார்கள். அவர்களைப் பார்த்துவிட்டு செல்லக்கூடிய சூழ்நிலை வந்தது. அண்ணன் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இந்த இடம் குறித்த பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தால், அதுகுறித்து நான் அவருடன் விவாதித்திருப்பேன் என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் தொலைபேசி மூலமாக என்னிடம் பேசியிருந்தால், நானே அவருடைய இல்லத்திற்கு சென்றிருப்பேன். அதை அவர் செய்யாமல், என்மீது பழி போடுகின்ற ஓர் எண்ணத்தில் 'ஏமாற்றப்பட்டோம்' என்று அவர் சொன்னார். இந்த விவரமே எனக்குத் தெரியாது. இப்போது நீங்கள் இதைச் சட்டமன்றத்தில் பேசுகின்றபோதுதான் எனக்கே தெரிகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2019 ஜனவரி 4*]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) இன்னும் இரண்டு மணித் துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** இன்னும் இரண்டே இரண்டு விஷயம்தான். உரையை முடித்துவிடுகிறேன். நான் இங்கே சொல்லியிருக்கக்கூடிய சர்வே நம்பரை நீங்கள் பாருங்கள். நீங்கள் கூறும் இடத்தில் போக்குவரத்து வசதி இல்லை. அமைச்சர் அங்கு வந்து பார்த்திருக்கிறாரா என்று தெரியவில்லை. அந்த இடம் உள்ளே இருக்கிறது. காசிதர்மம் செல்லும் காட்டுப் பகுதி. மெயின் ரோட்டிலே இருந்தால் பிரச்சினையே இல்லை. Highways-ல் ஊருக்கு வெளியிலேயே கொடுங்கள்; நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். சமத்துவபுரம் பக்கத்திலேயே கொடுங்கள்; பிரச்சினையே இல்லை. Highways-லேயே கொடுங்கள்; பிரச்சினையில்லை. ஊருக்குள் கொடுத்தால், கிராம மக்கள் போவார்கள். இல்லையென்றால், Bus-லிருந்து இறங்கி, அங்கேயிருந்து auto-வில் செல்ல வேண்டும். அதனால் இந்தப் புதிய சர்வே நம்பர் இடத்தை, தயவுசெய்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட விருப்பம் கிடையாது. ஒட்டுமொத்த மக்களினுடைய விருப்பம். அங்கே local-ல் உள்ள அ.தி.மு.க.-காரர்களும் சொல்லக்கூடியது இதுதான். அதை மாண்புமிகு முதலமைச்சருடைய தனி கவனத்திற்கு நான் மட்டும் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

அதேபோலே, புளியறை என்பது கேரளா-தமிழ்நாடு எல்லைப் பகுதியில் இருக்கக்கூடிய பகுதி. புளியறையில் மருத்துவக் கழிவை, மனிதக் கழிவுகளைக் கொட்டிவிட்டுப்போகிறார்கள்; அதை நம்முடைய அதிகாரிகள் பிடித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். புளியறையில் நீங்கள் ஒரு Integrated Check post ஏற்படுத்திக் கொடுத்தீர்களென்றால், அதையெல்லாம் தடுக்க முடியும். 3 துறைகளும், அதாவது, வருவாய்த் துறை, போக்குவரத்துத் துறை, காவல் துறை இணைந்த Integrated Check post-ஐ நீங்கள் புளியறை பகுதியிலே கேரளா Border-லே அமைத்துக் கொடுத்தீர்களென்று சொன்னால், இந்த மனிதக் கழிவு, அதேமாதிரி மருத்துவக் கழிவுகளைக் கொட்டுவதை முற்றிலுமாக நாம் தடை செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2019 ஜனவரி 4*

அதேபோன்று, அந்த Border-ல் இருக்கக்கூடிய புளியறை காவல் நிலையம் மிகவும் சிதிலமடைந்த நிலையில் இருக்கிறது. இப்போது தற்காலிகமாக அது வேறு இடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. புளியறை காவல் நிலையத்தையும் நீங்கள் விரைவாக அமைத்துத் தருவதற்குண்டான நடவடிக்கையை ஏற்படுத்த வேண்டும். கடையநல்லூரைப் பொறுத்தவரைக்கும், குடிதண்ணீர் இணைப்புகள் 6,000 பேருக்குக் கொடுப்பதாக் கூறினீர்கள். அமைச்சர் அம்மா அவர்கள், அன்றைக்கு துவக்கி வைத்தார்கள் அன்றைக்கு நானும் போனேன். ஆனால், இப்போது என்ன சொல்கிறார்களென்று சொன்னால், unapproved layouts-க்குக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லி, அந்தப் பணிகளை அப்படியே போட்டுவிட்டார்கள். நீங்கள் ஓர் ஆளுக்குக் கொடுத்ததோடு நிற்கிறது. எனவே, கடையநல்லூர் நகராட்சியில் எல்லோருக்கும் குடிதண்ணீர் வழங்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும்.

*பிற்பகல் 3-50*

அடுத்து, பாதாள சாக்கடைத் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. எட்டு வருடங்களுக்கு முன்னால் அறிவிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டம் கடையநல்லூரில் இதுவரையில் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. அதையும் இந்த அரசாங்கம் கனிவோடு பரிசீலிக்க வேண்டும். அதேபோல, டாஸ்மாக் கடைகள்; ஏற்கெனவே 3 கடைகள்; கோயிலுக்குப் பக்கத்தில், VAO அலுவலகத்திற்குப் பக்கத்தில் இருந்ததை அகற்றிவிட்டீர்கள். செங்கோட்டையில், அகிலாண்டேஸ்வரி கோயில் பக்கத்தில் டாஸ்மாக் கடை இருக்கின்றது. அந்தக் கோயிலுக்கு வழிபடப் போகின்றவர்கள், அந்த டாஸ்மாக் கடையைக் கடந்து செல்லும்போது மிகவும் சிரமப்படுகிறார்கள். பெண்கள் மிகவும் அச்சப்படுகிறார்கள். கோயில் கும்பாபிஷேகமே போலீஸ் பாதுகாப்புடன் சென்ற வருடம் நடைபெற்றிருக்கிறது. எனவே, செங்கோட்டை அகிலாண்டேஸ்வரி கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய டாஸ்மாக் கடையை அகற்ற வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், அதையெல்லாம் எழுதிக் கொடுங்கள். அடுத்த உறுப்பினரைப் பேசுவதற்கு அழைக்கப் போகிறேன். உரையை முடியுங்கள்.



*2019 ஜனவரி 4*]

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி, நன்றி கூறி, நான் அமர்கின்றேன். பிளாஸ்டிக் தடையைப் பற்றிச் சொன்னார்கள். அதில் 5 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டதாகவும், Bank-ல் loan எடுத்தவர்களெல்லாம் அதைக் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டதாகவும் சொல்கிறார்கள். கால அவகாசம் கேட்கிறார்கள். மறு சுழற்சி முறையிலே அதையெல்லாம் பயன்படுத்த முடியும் என்பதையும் சொல்லியிருக்கின்றார்கள். திருச்சி மாநகராட்சியிலே தரம் பிரித்து விற்றதில் 2½ கோடி ரூபாய் வருமானம் பெற்றதாகவும் அவர்கள் சொல்கின்றார்கள். அவர்கள் கால அவகாசம் வேண்டுமென்று கேட்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் சந்தித்து நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தி, அதுபோன்று செயல்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதையும் இந்த அரசாங்கம் கனிவோடு பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல, காலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். எங்களுடைய கடையநல்லூருக்குப் பக்கத்தில் திரிகூடபுரத்திலே ரேஷன் கடை அமைப்பதற்கு ஜமாத்திலிருந்து இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதுவரையில் எந்த உத்தரவும் போடாததனால், அது நடைபெறாமல் இருக்கின்றது. அதையும் இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்பதை பணிவோடு கேட்டுக்கொண்டு, நான் சொன்ன கோரிக்கைகளையெல்லாம். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** அதேபோல, தோப்பூரிலே AIIMS மருத்துவமனை தென் மாவட்ட மக்களுக்கு பயன்பாட்டுக்குரியதாக இருக்கும். அதற்கு நன்றி. அதேபோல, திருநெல்வேலியிலே பொது மருத்துவமனையில் Regional Cancer Centre, Multi Speciality Hospital ஆரம்பிப்பதற்கான பணிகளை விரைவாக நிறைவு செய்து மக்களுடைய பயன்பாட்டிற்கு நீங்கள் அர்ப்பணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாவட்ட காஜிக்களுக்கு மதிப்பூதியத்தை வழங்கியிருக்கின்றீர்கள். இன்னும் சில மாவட்டங்களிலே காஜிக்கள் நியமிக்கப்படாமல் இருக்கின்றார்கள். அதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டும். உலமா pension-க்கு விண்ணப்பித்தவர்கள்

பல பேர் இருக்கிறார்கள். அதற்கான பரிந்துரை குழுவை நீங்கள் ஏற்படுத்தாத காரணத்தினாலே, அவையெல்லாம் நிலுவையில் இருக்கின்றன. எனவே, விண்ணப்பித்திருக்கக்கூடிய அனைவருக்கும் உலமா pension-ஐ இந்த அரசாங்கம் வழங்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த அளவிலே என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

**திருமதி ம. கீதா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்பமைமிக்க இப்பேரவையை சீர்மிகு பாதையில் செம்மையாக வழிநடத்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்கி, மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திலே எனது உரையைத் துவங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அம்மா என்னும் மூன்றெழுத்து மந்திரம்; அதுவே எங்கள் வாழ்வைக் காக்கும் எந்திரம் அம்மா. ஆலயத்தில் வசிப்பது கடவுள் என்றால், எங்கள் உள்ளம் என்னும் ஆலயத்தில் வசிப்பது நீங்கள் அம்மா. (குறுக்கீடு) பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய், இந்த பாரதம் போற்றும். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி Multi Super Speciality Hospital பற்றிப் பேசும்போது, அந்தப் பணியை விரைவுபடுத்த வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திருநெல்வேலியில் Multi Super Speciality Hospital மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டு, 150 கோடி ரூபாயிலே பணிகள் முழுமையாக நிறைவு பெற்று, அதற்கென staff nurse 160 என்ற அளவிற்கு புதிய பணியிடங்களும் கொடுக்கப்பட்டு, தயார் நிலையில் இருக்கிறது. நம்முடைய AIIMS மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழாவோடு சேர்த்து, 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி Super Speciality மருத்துவமனை; 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் Super Speciality மருத்துவமனை; 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிகச் சிறப்பாக நிறைவு பெற்றிருக்கக்கூடிய மதுரை Super Speciality





மருத்துவமனை; ஆக 450 கோடி ரூபாயில் மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டுப் பெற்ற அந்த மகத்தான மருத்துவ சேவையை பாரதப் பிரதமர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் நாட்டுக்கு அர்ப்பணிக்க இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

பிற்பகல் 3-55

**திருமதி ம. கீதா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய், இந்த பாரதம் போற்றும் பவித்ர தெய்வம் நீங்கள் அம்மா. பாலைவனத்தின் கானல் நீராய் வாழ்ந்த தமிழக மக்களுக்கு பருவம் தந்த மழையாய் இறைவன் அளித்த கொடை நீங்கள் அம்மா. சரித்திரத்தில் இடம் பிடிப்பவர் சாதனையாளர் என்றால், அந்த சரித்திரத்தையே மாற்றி எழுதிய நாயகி நீங்கள் அம்மா. செவ்விதழ் புன்சிரிப்பில் சந்திரனின் குளுமையையும், செயல் வீரத்தில் ஆதவனின் வலிமையையும் ஒருங்கே பெற்ற விந்தை நீங்கள் அம்மா. உங்கள் சிறந்த ஆளுமையினால் துளிர்விட்ட சிறு விதைதான் நாங்கள் அம்மா. இன்று விதை வேரூன்றி நின்றாலும், என்றும் ஆணி வேராய் நின்று எங்களைக் காத்து, சிறப்பாக வழிநடத்திச் செல்லும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையைத் துவங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடவுளிடம் தன்னை அர்ப்பணித்த பக்தனைப்போல, அம்மாவின் வழியில் மக்கள் சேவைக்கு தன்னை அர்ப்பணித்தவர்; சவாலான வேலைப் பளுவையும் துலாபாரம் எனக் கருதி ஏற்று நடப்பவர்; பிள்ளை தாய்க்கு ஆற்றும் கடமையாய் அம்மாவின் புகழை இந்த அகிலம் அறிய அரும்பாடுபடுபவர்; மக்களின் துயர் துடைக்க வந்த காப்பாளர்; வாழ்வில் எளிமையும், சிந்தனையில் புதுமையும் கொண்ட சிந்தனையாளர்; மக்கள் நலனுக்காக வகுக்கும் திட்டங்களை தன் சிரமேற்று, செயலில் துரிதம் காட்டும் மின்னல் வேக செயல்வீரர்; முள் பாதையில் பயணித்து வெற்றி பெறுவது

பெரிதல்ல. ஆனால், கடந்து வந்த முள் பாதையை பிறருக்கு மலர்ப் பாதையாய் மாற்றியமைப்பது கடினம். அதுபோல, தன் வாழ்வின் பாதையை திடமாக வடிவமைத்து, அனைவரையும் அதில் சிறப்பாக அழைத்துச்செல்லும் நம் செயல்வீரர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைதியின் உறைவிடம், ஆற்றலில் பெரும் திடம், எண்ணத்தில் மேன்மை, செய்கையில் தூய்மை கொண்டு, அம்மாவின் கனவுகளை மெய்யாக்க அல்லும் பகலும் அயராது உழைத்து, தன் தொலைநோக்குப் பார்வையால் தமிழகத்தை மெருகேற்ற பல திட்டங்களைத் தீட்டி, சவாலான தருணத்தையும் சாதகமாக மாற்றும் திறனுடையவர்; அம்மாவின் ஈடற்ற அன்பிற்குப் பாத்திரமானவர்; குழந்தைகளிடம் மழலை காட்டி; மக்களிடம் அளவில்லா அன்பு காட்டி; எடுக்கும் முடிவில் தீர்க்கம் காட்டி; முதல்வருடன் கை கோர்த்து அவருக்கு உறுதுணையாகவும், நம் உடன் பயணித்து நமக்கு சிறந்த வழித்துணையாகவும் திகழும் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கொங்கு வள நாட்டிற்கு சங்கே முழங்கு என்று குரல் கொடுத்தவர் எங்கள் அண்ணன்; எதிரிகளை வென்றெடுத்து ஈட்டி முனை போன்று கரூர் மாவட்டத்தை கட்டியாள்பவர் எங்கள் அண்ணன்; துரியோதனனை துரத்தியடித்தவர் எங்கள் அண்ணன்; துரோகியைத் தூக்கி எறிந்தவர் எங்கள் அண்ணன்; கரூர் மாவட்டத்தை களை எடுத்து, எதிரிகளின் கூடாரத்தை முறியடித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப்பெருமை சேர்த்தவர் எங்கள் அண்ணன்; கரூர் மாவட்ட கழகச் செயலாளர், மாண்புமிகு தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி வருவாயில் 14 சதவிகித வருவாய் வளர்ச்சியை மாநிலங்கள் பெறும் வகையில், உறுதியளிக்கப்பட்டவாறு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையை உடனுக்குடன் வழங்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்திய மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு 'அணைப் பாதுகாப்புச் சட்டத்தை' நாடாளுமன்றத்தில்



அறிமுகப்படுத்தியுள்ளது. வரும் காலங்களில் இயற்றப்படும் இதுபோன்ற சட்டமுன்வடிவுகளில் தமிழ்நாட்டின் கருத்துகளை மத்திய அரசு பாகுபாடில்லாமல் ஆராய்ந்து, நியாயமான முடிவுகளை எடுக்கும் என நம்பிக்கை கொடுத்த மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஸ்டெர்லைட்' ஆலையைத் திறக்க தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது. இந்த ஆணையை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை தற்காலிகமாக நிறுத்தி வைத்து ஆணையிட்டுள்ளது. இந்நிலையில், தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் ஆணையை எதிர்த்து, அம்மா அவர்களின் அரசு மேல்முறையீடு செய்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேசிய வாழை ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலத்தில் உள்ள உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள மைய அச்சகம் ஆகிய மையங்களை மூட வேண்டுமென்ற முடிவைக் கைவிட்டு, அவற்றைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் வேண்டுகோளினை மத்திய அரசு ஏற்று, சாதகமான முடிவை எடுக்கும் என அறிவித்த மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-00

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'கஜா' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2,335.48 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடி நிவாரண உதவியாக அறிவித்துள்ளார். 2018-2019 ஆம் நிதியாண்டிற்கான மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்கு இரண்டாம் தவணையாக வழங்க வேண்டிய பங்கான 353.70 கோடி ரூபாய் நிதியினை உடனடியாக விடுவித்த மத்திய அரசுக்கு இத்தருணத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 900.31 கோடி ரூபாயை கூடுதலாக விடுவித்துள்ள மத்திய அரசுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கர்நாடகாவிலுள்ள மேகதாதுவில் புதிய அணை கட்டுவதற்கான முயற்சியை கர்நாடக அரசோ அல்லது அதன் அமைப்புகளோ மேற்கொள்ளக் கூடாது என்று கர்நாடக அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டுமென்று ஒருமனதாக இச்சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய மாண்புமிகு அம்மா

அவர்களின் அரசின் நடவடிக்கை வரவேற்கத்தக்கது. இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலைகளில் வாடி வந்த 543 தமிழக மீனவர்களையும், பிடிபட்ட 206 படகுகளையும் விடுவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும் மனதார பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வடிவமைக்கப்பட்ட 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023' ஆவணம்; மாநில வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்கு தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்தக் கொள்கை வடிவமைப்புகள் பெரிதும் உதவும் என நம்புவதாகக் கூறிய கருத்து, பாராட்டத்தக்கது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண் துறைக்கான 'கிரிஷி கர்மான்' விருதையும், செயல்திறனுக்கான சிறந்த மாநிலம், சுற்றுலா, உட்கட்டமைப்பு மற்றும் சட்டம்-ஒழுங்கு போன்ற பல்வேறு துறைகளில் 'India Today' நிறுவனத்தால் நிறுவப்பட்ட சிறப்புடைமைக்கான விருதுகளையும், பொது விநியோகத் திட்டத்தை கணினிமயமாக்கியதற்கான சிறந்த நடைமுறை விருது; உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்பாகச் செயல்படுவதற்கான விருது; இவ்விருதுகள் இந்த அரசின் சிறந்த நிருவாகத் திறமைக்குச் சான்றாக விளங்குகின்றன. இந்த விருதுகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தை 'புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம்' என்று பெயர் மாற்றுவதோடு, தமிழ்நாட்டின் மறைந்த மாபெரும் தலைவர்களான பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டுமென்ற மாநில அரசின் கோரிக்கைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, '181 உதவி எண் மற்றும் காவலன் செயலி' ஆகியவை தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பை, குறிப்பாக, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு மேலும் வலு சேர்ப்பதாக அமையும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் கருத்து





வரவேற்கத்தக்கது. ஏற்கெனவே அறிவித்தபடி, 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் அத்திக்கடவு-அவிநாசி திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் தொடங்கி வைக்கப்படவுள்ளது என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் ஒருமுறை மட்டும் பயன்படுத்தி எறியக்கூடிய சில பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்துள்ளதற்கு தமிழக மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதலமைச்சர்களான புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியைப் பின்பற்றி, பொங்கல் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடும்விதமாக, அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பச்சரிசி, சர்க்கரை, உலர் திராட்சை, முந்திரி, ஏலக்காய், கரும்பு உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய சிறப்புத் தொகுப்பும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட 1,000 ரூபாய் இந்த அரசால் வழங்கப்படும் என்றும் அறிவித்த நமது அம்மா அவர்களின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 7,964 கிலோ மீட்டர் நீளமுள்ள 2,596 ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மூன்றாண்டுகளில் படிப்படியாக நெடுஞ்சாலைத் துறை சாலைகளாக அமைக்கப்படும் என அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறை; ஜெர்மன் வங்கியின் உதவியுடன் போக்குவரத்துக் கழகங்களை மறுசீரமைக்க ஒரு விரிவான திட்டத்தை அரசு செயல்படுத்தவுள்ளது. பழைய பேருந்துகளுக்குப் பதிலாக எரிபொருள் செயல்திறன்மிக்க பி.எஸ்-VI பேருந்துகளை பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதுடன், சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற மாநகரங்களில் சுற்றுச்சூழலை பாதிக்காத மின்சாரப் பேருந்துகளும் இத்திட்டத்தில் கொள்முதல் செய்யப்படும் என்ற அறிவிப்பிற்காக நமது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் கல்வித் துறை; உயர் கல்வித் துறையில் 48.6 என்ற மொத்த சேர்க்கை விகிதத்துடன் நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பது பாராட்டத்தக்கது. 41

[திருமதி ம. கீதா] [2019 ஜனவரி 4

பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக 2018-2019 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் வரவேற்கத்தக்கது. 61 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 264 புதிய பாடத் திட்டங்கள் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. பல்கலைக்கழகங்களின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களுக்கான காலிப் பணியிடங்களும் அவ்வப்போது நிரப்பப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது.

பிற்பகல் 4-05

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை; அரசு மற்றும் அரசின் உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள் உட்பட கல்வி உபகரணங்கள், நான்கு இணை சீருடைகள், புத்தகப் பைகள், காலணிகள், பேருந்துக் கட்டணச் சலுகைகள் மற்றும் மிதிவண்டிகளை இந்த அரசு விலையில்லாமல் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாணவ, மாணவிகளுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்காக, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி Atal Tinkering ஆய்வகங்கள், அறிவுத் திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் பள்ளிக்கூடங்களில் அமைக்கப்பட்டு வருவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலத்தின் சராசரி எழுத்தறிவு நிலையைக் காட்டிலும் பழங்குடியினரின் எழுத்தறிவு நிலை குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே உள்ளது. எனவே, பழங்குடியின மாணவர்களுக்கு அதிக பயனளிக்கும் வகையில் பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகளைத் துவக்கும் அரசு சாரா நிறுவனங்களுக்கு இந்த அரசு நிதியுதவி வழங்கும் புதியதொரு திட்டத்தை விரைவில் தொடங்கவுள்ளது என்பது வரவேற்கத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரத் துறை; கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் முதல் பிரசவத்திற்கு நிதியுதவி வழங்கும் மத்திய அரசின் திட்டமான பிரதம மந்திரியின் மாத்ரு வந்தனா திட்டம், 2018 ஆம் ஆண்டு



2019 ஜனவரி 4] [திருமதி ம. கீதா]

ஏப்ரல் மாதம் முதல் தமிழ்நாட்டின் முன்னோடித் திட்டமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. மகளிர் சுகாதாரத் திட்டம், அம்மா குழந்தை நலப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி போன்ற மாநில அரசின் முன்னோடித் திட்டங்கள் தாய் சேய் நலத்தைப் பேணுவதற்கான திட்டங்கள். இந்த அரசின் இத்தகைய முயற்சிகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில் உள்ள தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனையை அமைக்க 1,264 கோடி ரூபாயை அனுமதித்த மத்திய அரசிற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து தொழில் துறை; வாகன உற்பத்தித் துறையில் தமிழ்நாடு முக்கிய மையமாக விளங்கும் நிலையில், அடுத்த தலைமுறைக்கான மின்சார வாகனங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்க சிறப்புச் சலுகைகளுடன் கவனம் செலுத்தப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. 2019 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. ஜப்பான், தென்கொரியா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் 2019 மாநாட்டின் பங்களிப்பு நாடுகளாகப் பங்கெடுக்க உள்ளன என்பது வரவேற்கத்தக்கது. பாதுகாப்புத் தளவாடங்களையும், வானூர்தி சாதனங்களையும் தயாரிப்பதை ஊக்கப்படுத்த தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கையை இந்த அரசு விரைவில் செயல்படுத்துவதற்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தொடக்கத் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்குவதற்கும், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கு புதிய கொள்கை ஒன்றை இந்த அரசு விரைவில் வெளியிடும் என்ற அறிவிப்புக்கு மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறை; ஒலிம்பிக் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் போன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலும், தேசியப் போட்டிகளிலும் பதக்கம் வெல்லும் வீரர் வீராங்கனைகளுக்கும் உகந்த ஊக்கத்தொகை வழங்குவதிலும் தமிழ்நாட்டில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களை

[திருமதி ம. கீதா] [2019 ஜனவரி 4

உருவாக்கி, இளைஞர்களின் நலனைப் பேணுவதிலும் இந்த அரசு உறுதியாக உள்ளது. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பில் மூன்று சதவிகிதம் ஒதுக்கீட்டை இந்த அரசு அறிவித்துள்ளது. இதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பணிபுரியும் பெண்களுக்கு மேலும் தன்னம்பிக்கையூட்டும் வகையில், இரு சக்கர வாகனங்களை வாங்கிப் பயன்பெற ஒவ்வொருவருக்கும் 25,000 ரூபாய் வரையிலான உதவித் தொகையை அம்மா இரு சக்கர வாகன மானிய நிதியுதவித் திட்டத்தின்மூலம் வழங்கிவரும் மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு மகளிரின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினராகிய நான், என்னை உறுப்பினராகத் தேர்வு செய்திட அனுமதி வழங்கிய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருளாசியுடன், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகளை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியம், தேவர்மலை ஊராட்சியில் சீத்தப்பட்டி வழி அய்யம்பாளையம் செல்லும் பாதையில் காட்டாற்று தண்ணீர் செல்லும் வாய்க்காலின் குறுக்கே பாலம் மற்றும் தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடமாக இருக்கும் கிருஷ்ணராயபுரம் பேரூராட்சியில் அனைத்து பொது மக்களும் பயன்பெறும் வகையில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி, மலையப்புரம் காலனி, பகவதியம்மன் கோவில் தெருவில் ஊர் பொது மக்கள் இடுகாடு மற்றும் விவசாய நிலங்களுக்குச் செல்ல புதிய பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4-10*

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியத்திலுள்ள 20 ஊராட்சிகளில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்திட கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியப் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மகாதானபுரம் ஊராட்சியில் சுடுகாட்டிற்குச் செல்லும் பாலம் பழுதடைந்துவிட்டதால், புதிய பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



2019 ஜனவரி 4] [திருமதி ம. கீதா]

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாந்தோணி ஒன்றியம், கோயம்பள்ளி ஊராட்சி மற்றும் மேலப்பாளையம் ஊராட்சியை இணைக்கும் பாலப் பணியினை விரைந்து முடிக்கவும் மற்றும் அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஊராட்சி ஒன்றியம், கடவூர் பொன்னணியார் அணையையும், வலையப்பட்டி அருகில் உள்ள வாலெறும்பு அருவியையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாந்தோணி ஒன்றியம், அப்பிப்பாளையம் ஊராட்சி, செட்டிப்பாளையம் அணையை சுற்றுலாத் தலமாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பாலராஜபுரம் ஊராட்சி, வீரராக்கியம் பிரிவு தேசிய நெடுஞ்சாலை NH 67 சந்திப்பில் உயர்மட்டப் பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியம், மைலம்பட்டி துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தரகம்பட்டியில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாந்தோணி ஒன்றியம், பள்ளாபாளையத்திலிருந்து செட்டிப்பாளையம் வழியாக கட்டளை இணைப்பு காவேரி ஆற்றுப்படுகை வரை செல்லும் அமராவதி கடைசி ஆயக்கட்டுப் பாசன வாய்க்காலைத் தூர் வார வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பழைய ஜெயங்கொண்டம் பேரூராட்சியில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி ம. கீதா] [*2019 ஜனவரி 4*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் எழுந்தால் என் கண்கள் தேடும் தெய்வமே! உனைக் காணாத நாட்கள், இங்கு விடியாத பொழுதாக இருக்கிறது அம்மா! நடமாடும் தெய்வமாய் உடனிருந்த தாயே! எத்தனை உறவுகள் சுற்றியிருந்தாலும், நீங்கள் இருந்த இவ்வுலகம்போல் வருமா அம்மா! நீங்கள் இல்லாத தங்கத் தமிழ்நாடு தவித்துக் கொண்டிருக்கிறது, அம்மா! என்றென்றும் எங்கள் உயிரும், தெய்வமும் நீங்கள்தான் அம்மா! மண்ணோடு கலந்த மழைநீரைப் போல, உடலால் மறைந்து எங்கள் உள்ளத்தில் உறைந்திட்ட அம்மா! விண்ணை முட்டும் அளவுக்கு உங்கள் சாதனைகள் இருந்தும் தாயே, நீங்கள் இல்லாததை நினைக்கும்போது, என் கண்களில் முட்டுகிறது கண்ணீர்த் துளிகள்!*

*எனக்கு ஒரேயொரு ஆசை தாயே; உங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது, என் உதிரம் உறைந்துவிட வேண்டும்; இதயம் நின்றுவிட வேண்டும். இதைவிட பெரும் பாக்கியம் என்ன இருக்கப்போகிறது? அப்பொழுதும் என் உதடு உச்சரிக்கும் அமுதமொழி வார்த்தை, அம்மா. பிள்ளையை வழிநடத்தும் தாயாக, என் சிந்தையில் கலந்து, வார்த்தையில் நிறைந்து, இதுவரை நான் பேச ஆசி வழங்கி, வல்லமை தந்த இணையற்ற சரித்திரத்தின் ஈடற்ற தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் தமிழக மக்களுக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவம்பர் 16 அன்று ஏற்பட்ட கஜா புயலின் தாக்கத்தால் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி மற்றும் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிகள் முழுவதுமாக, முற்றிலுமாக பாதிக்கப்பட்டன. புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியைச் சேர்ந்த ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த விவசாயிகளுடைய ஒரே தொழில், விவசாயம் மட்டும்தான்.*



*2019 ஜனவரி 4*] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

*தங்களுடைய முழு உழைப்பையும் விவசாயத்திலே முதலீடு செய்து, அனைவரும் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வந்த நிலையில், அவர்களுடைய 35 ஆண்டுக் கால உழைப்பு முழுவதையும் ஒரு மணி நேரத்தில் அந்தப் புயல் புரட்டிப்போட்டுவிட்டது. விவசாயம் முழுவதும் அழிந்துபோனது. அதுமட்டுமல்ல; வீடுகள் அனைத்தும் சேதமடைந்தன. அப்படிப்பட்ட துன்பமான நிலையில், அந்த மக்களை நாங்கள் நேரடியாகச் சென்று சந்திக்கின்றபொழுது, எல்லோருடைய வீடுகளிலும் கதறி அழுது புரண்டு கொண்டேயிருந்தார்கள். ஓர் ஊரில், ஒரு குடும்பத்தில் துக்கமோ, துன்பமான நிகழ்வோ ஏற்பட்டால், நண்பர்களோ அல்லது சொந்தங்களோ வந்து ஆறுதலைச் சொல்வார்கள். ஆனால், அந்த ஊரே அழிந்திருக்கின்ற அந்தச் சூழ்நிலையில், அத்தனை பேர் வீடுகளிலும் அழுகுரல் இன்றுவரை கேட்டுக்கொண்டேயிருக்கிறது. அப்படிப்பட்ட ஏழை விவசாய மக்களுடைய துன்பங்களை, துயரங்களை இந்த அவையில் பதிவு செய்கிறேன்.*

*பிற்பகல் 4-15*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இது அல்லவே!” என்று தமிழ்க் கொடி பிடித்து, தாய் மொழி தமிழைக் காக்க, திருவாரூர் வீதிகளில் வலம் வந்த நாள் முதல், வாழ்நாளின் கடைசி எல்லை வரை அயராமல் உழைத்திட்ட எங்கள் தலைவர், முத்தமிழ் அறிஞர் அய்யா கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ‘நாடும் நமதே, நாற்பதும் நமதே’ என்றுரைத்த நாடாளப்போகும் நம் தலைவர், நாளைய தமிழகத்தை வடிவமைக்க (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வில்லாமல் உழைக்கும் உத்தமர், நாட்டை உலுக்கும் பேரழிவுகளைக் கண்டு பதறி, ஓடோடிச் சென்று, மக்களின் விழி நீரைத் துடைக்கும் எங்கள் தலைவர் தளபதி அவர்களுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலால் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் ஒருவனாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பிரதிநிதியாக, பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக இந்தப் பேரவையில் மாண்புமிகு ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பேச வாய்ப்புத் தந்த தமிழக மக்களின் ஒரே நம்பிக்கை, தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தளபதியார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழகத்தின் உணவுக் களஞ்சியமான காவேரி மாவட்டங்களைச் சூறையாடியது கஜா புயல். பல ஆண்டுகளுக்கு தலையெடுக்க முடியாதபடி, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரங்களை அந்தப் புயல் குலைத்துப்போட்டது. அதிலே பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தென்னை விவசாயிகள்தான். கிராமப் பகுதி மக்கள் ஒரு மாதம் வரையில் இருளில் மூழ்கிக் கிடந்தனர். தமிழகத்தின் நெற்களஞ்சியத்தைச் சேர்ந்த பெண்களும், குழந்தைகளும் நிவாரணப் பொருட்களைக் கொண்டுவந்த வாகனங்களின் பின்னால் ஒரு biscuit packet-ற்காக பசியோடு ஓடி வந்த காட்சிகள், கடந்த ஆண்டின் பெருந்துயரம்.

காவேரிப் பாசன மேற்குப் பகுதிகளான வேதாரண்யம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, ஆலங்குடி போன்ற பகுதிகளில் கடந்த 10 ஆண்டுகளாக பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காததால், விவசாயம் அழிந்துபோன நிலையில், விவசாயிகள் தென்னை சாகுபடிக்கு மாறினர். அவர்களின் ஒற்றை வாழ்வாதாரமாக உயர்ந்து நின்ற தென்னை மரங்கள் இந்தப் புயலில் சாய்ந்ததால், அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. தங்களது வாழ்வாதாரத்தை இழந்த அப்பகுதி மக்கள், வாழ்க்கையே இழந்ததுபோல் துடிக்கின்றனர். அந்தத் தென்னந்தோப்புகளின்மூலம் ஈட்டிய வருவாயைக் கொண்டு பசியாற சாப்பிட்டார்கள்; பிள்ளைகளைப் படிக்க வைத்தார்கள்; பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவைத்தார்கள். நோயால் பாதிக்கப்பட்டபோது வைத்தியம் செய்துகொண்டார்கள்; வீடுகளைக் கட்டிக்கொண்டார்கள். இப்படியெல்லாம் வாழ்ந்த அந்த தென்னை விவசாயிகள் கஜா புயலினால் தென்னை மரங்கள் அழிந்ததைப் பார்த்துவிட்டு, நிலைகுலைந்து போனார்கள். தங்களின் வாழ்வாதாரம் அழிந்ததால், நெடுவாசல் கிழக்கு கிராமத்தில், திருச்செல்வம் என்ற விவசாயி தற்கொலை செய்து கொண்டதை தமிழகம் அறியும். ஒவ்வொரு மரமும் 30 முதல் 40 ஆண்டுகள் வயதானது.

பட்டுக்கோட்டை, பேராவூரணி, ஒரத்தநாடு, ஆலங்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய வட்டங்களில் ஏறத்தாழ 35,000 ஹெக்டேரில் தென்னை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், கஜா புயலால் 32,544 ஹெக்டேரில், வளர்க்கப்பட்ட ஏறத்தாழ 45,65,000 தென்னை மரங்கள் சாய்ந்தன. இதில் ஏராளமான மரங்கள் வேரோடும், பாதியிலும் உடைந்து விழுந்தன. இதனால் தென்னை





விவசாயிகளின் வாழ்வாதாரம் பறிபோனதுடன், அவர்களுடைய பொருளாதார நிலை 20 ஆண்டுகளுக்குப் பின்தங்கிவிட்டது. புதிதாக மரம் வைத்தால், அது பலன் தருவதற்கு 8 ஆண்டுகள் ஆகும். ஆனால், ஒரு மரத்திற்கு அரசின் சார்பில் ரூ.1,100/- வழங்கப்படுகிறது. இத்தொகை கீழே சாய்ந்த தென்னை மரங்களை அகற்றுவதற்குக்கூட போதுமானதாக இருக்காது. அதேபோல், ஒருவேளை காப்பீடு செய்திருந்தால்கூட, தென்னை மரக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகையாக ஒரு மரத்திற்கு ரூ.1,750/- மட்டுமே வழங்கப்படுகிறது. ஒரு மரத்திற்குக் குறைந்தபட்சம், 25,000 ரூபாய்க்குக் குறையாமல் இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கினால் மட்டுமே, அது விவசாயிகளுக்கு அளிக்கப்படும் உண்மையான காப்பீடாக இருக்கும். ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் தென்னை நல வாரியம் அமைக்கப்பட்டு, ரூபாய் 1 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், தற்போது அது செயல்பாட்டில் இல்லை என்பதையும் இந்த அவையில் குறிப்பிட்டுக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஆகவே, தென்னை விவசாயிகளின் வலியை உணர்ந்து, குழந்தைபோல் தென்னையை வளர்த்த விவசாயிகளின் வாழ்வை மீட்டெடுக்க, தமிழக அரசு உடனடியாக அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை 20,000 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வாழை மரங்கள்; வாழை மரங்களும் ஒவ்வொரு விவசாயிக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 4-20*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கஜா புயலின் பாதிப்புகள் குறித்து இங்கே அவையில் பதிவு செய்ததெல்லாம் உண்மைதான். இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்டிருக்கின்ற அந்த இழப்புகளை பாதிக்கப்பட்ட பகுதியினுடைய பிரதிநிதியாக, அவர் இந்த அவையிலே எடுத்து வைத்ததும் உண்மைதான். இதுவரை இல்லாத வகையிலே, ஓர் இயற்கைப் பேரிடர் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக, வடகிழக்குப் பருவமழைக் காலத்திலே ஏதோ ஒரு வெள்ளமோ அல்லது ஒரு புயலோ, அதில்

ஏதோ ஒன்று, நம்முடைய பகுதியைத் தாக்கக்கூடிய வகையில் ஒரு பூகோள அமைப்பிலே நாம் இருக்கின்றோம்.

அதை அடிப்படையாக வைத்துத்தான் 2018 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் நான்கு முறை ஆய்வுக் கூட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்தினார்கள். அதன் அடிப்படையிலே, கஜா புயலின்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தென்னை மரம் சாய்ந்தது; புளிய மரம் சாய்ந்தது; மா மரம் சாய்ந்தது; எல்லாம் சாய்ந்தன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக, புயலால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதி மக்களின் உயிர் பாதுகாப்பிற்காக எப்படிப்பட்ட பாதுகாப்பு வளையம் உருவாக்கப்பட்டது என்பதை எல்லோருமே அறிவார்கள். அதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பாராட்டி வெளிப்படையாக கருத்துகளைச் சொன்னார்கள்.

அதற்குப் பிறகு, நிவாரணம். இந்த அவையில் முன்னாள் அமைச்சர் பெருமக்களெல்லாம் உறுப்பினர்களாக இங்கே இருக்கிறீர்கள். புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்குவதற்கு சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி என்ற அடிப்படையிலேதான் உடனடியாக நிவாரணம் வழங்க ஆணையிட்டார்கள். ஒகி புயலால் பாதிப்பு ஏற்பட்டபோது, இரப்பர் மரங்களுக்கு இதுவரையில் வரலாற்றில் இல்லாத வகையில் ஒரு ஹெக்டேருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையில் வழங்கினார்கள். அதைப்போல, வெறும் 102 ரூபாய்தான் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அளிக்க வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. 102 ரூபாய்தான் நிவாரணமாக அளிக்க வாய்ப்பிருக்கிறது. 102 ரூபாயை வைத்துக்கொண்டு அந்தத் தென்னை விவசாயி என்ன செய்ய முடியும்? எனவே, அந்த விதிமுறைகளைத் தளர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

பேரிடர் நிவாரண நிதியை வழங்குவதற்கு உச்சவரம்பு இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு ஹெக்டேர் நிலம்தான் இருக்க வேண்டும். உறுப்பினர்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாக இருக்கிறார்கள். பேரிடர் நிவாரண நிதியை வழங்க வேண்டுமென்றால், இரண்டு ஹெக்டேர் நிலம்தான் இருக்க வேண்டும். உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர்





அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் அந்த ஆய்வுக் கூட்டத்திலே என்ன சொன்னார்களென்றால், இரண்டு ஹெக்டேர் என்றுள்ள விதியைத் தளர்த்துங்கள். அதற்கான உச்ச வரம்பை நான்கு ஹெக்டேர் என்று உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். 1,100 ரூபாய் அவர்களுக்கு நிவாரணமாகக் கொடுப்பது என்பது முழுக்க முழுக்க--102 ரூபாய் அந்த பேரிடர் நிவாரண நிதியைத் தவிர, மீதமுள்ளவற்றை--மாநில அரசே அந்த நிதியை ஏற்றுக்கொள்கிறது.

அதுமட்டுமல்லாமல், இதுவரை இல்லாத வகையிலே, மறு சீரமைப்பிற்காக, மறு கட்டமைப்பிற்காக மூன்று இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை இரண்டு மாவட்டங்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பினார்கள். சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியும், அதேபோல, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கும், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கும் என்று மூன்று இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அங்கு நிவாரணப் பணிகளை வழங்கும் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். எதற்குத் தெரியுமா? அந்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றித் தரவேண்டும் என்பதற்காக. அவர்களின் வாழ்க்கையில் நிச்சயம் ஒளியேற்றுவோம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உறுதியளித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இல்லாத வகையில், நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன்.

இன்று காலையில்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அங்கு பாதிக்கப்பட்ட ஆறு இலட்சம் பேர்களுக்கு, 8,800 ரூபாய் வாழ்வாதார நிதியாக வழங்குவதற்கு ஆணையிட்டு, ECS-மூலம் அவர்களின் வங்கிக் கணக்குகளில் ரூபாய் 5,000/- செலுத்தப்பட்டுள்ளது. எங்களிடம் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளிடம் நீங்களும் கேளுங்கள். முழுமையாக இன்னும் நிவாரண நிதி கொடுக்கப்படவில்லைதான். அதையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ரூ.8,800/- நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை எத்தனை புயல்கள் தமிழகத்திற்கு வந்திருக்கின்றன என்பது உங்களுக்கும் தெரியும்; எங்களுக்கும் தெரியும். அவற்றை இதுவரை இருந்த அரசுகள்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2019 ஜனவரி 4

எதிர்கொண்டிருக்கின்றன. ஆனால், அப்பொழுதெல்லாம் முகாம்களில் தங்கியிருந்த பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்புகிறபோது அவர்களிடம் எதுவும் இல்லை. அதாவது, அரிசி இல்லை; பருப்பு இல்லை; சர்க்கரை இல்லை; மண்ணெண்ணெய் இல்லை; எதுவும் இல்லை. ஆனால், இப்பொழுது அரசே பொறுப்பேற்றுக்கொண்டு 3,800 ரூபாய்க்கு 27 பொருட்களை ஒரு தாய் தன் பிள்ளைக்குக் கொடுப்பதைப்போல கொடுத்த அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; அவர்களுக்கு 5,000 ரூபாய் ECS-மூலம் கொடுக்கப்படுகிறது. இதுவரை ஆறு இலட்சம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இல்லையென்று சொன்னாலும் வாங்கியவர்கள் அதை மறுக்கவில்லை. இன்னும் நிவாரண நிதியைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே, அங்கே இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பதை யாரும் மறுக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மெய்யநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை நாம் கண்கூடாகப் பார்த்தோம். உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஒரு Biscuit Packet-ற்காக குழந்தைகள் ஓடி வருகிறார்கள் என்று சொன்னார்கள். அங்குள்ள அனைத்து நிவாரண முகாம்களிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், மூன்று வேளை உணவும், குடிநீரும் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு அதற்காக சிறப்பு ஏற்பாட்டையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

திட்டமிட்டே வேலைகள் சில அங்கே நடைபெற்றன. அதை யார் செய்தார்கள், ஏன் செய்தார்கள், எதற்குச் செய்தார்கள் என்பது அங்குள்ள விவசாயிகளுக்கும் தெரியும்; உங்களுக்கும் தெரியும்; எங்களுக்கும் தெரியும். நான் அதற்குள் செல்லவில்லை. ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுடைய வாழ்வாதாரத்தை மீட்டுத் தருவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மத்திய அரசினுடைய நிதியைக்கூட எதிர்பார்க்காமல், அந்த நிதி வருகிறபோது வரட்டும் என்று சொல்லி, உடனடியாக 1,000 கோடி ரூபாய்க்கு அரசாணை வெளியிட்டு நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ரூ. 2,335 கோடிக்கு, அரசாணை வெளியிடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் ஏற்பட்ட பேரிடர்களின்போது இதுபோன்று நிதி ஒதுக்கீடு செய்ததாக வரலாறு இல்லை. நீங்கள் வேண்டுமானால் சட்டமன்ற அவைக் குறிப்பை எடுத்து படித்துப் பார்த்துக்



2019 ஜனவரி 4] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

கொள்ளுங்கள். அதில் மாற்றுக் கருத்து கிடையாது. இன்றைக்கு மத்திய அரசிடம் நாம் இரண்டு முறைகளில் நிவாரணத் தொகையைக் கேட்டிருக்கிறோம். தற்காலிக நிவாரணம் மற்றும் நீண்டகால நிவாரணம். தற்போது தற்காலிக நிவாரணத்தை நாம் பெற்றிருக்கிறோம். நீண்டகால நிவாரணத்தை துறைவாரியாக ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கான மறுகட்டமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைப்பதிலே நாம் அனைவரும் இணைந்து செயல்படவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ‘அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது’ என்று கூறுவதை மட்டும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களோடு கண்ணீர் சிந்தி, நாங்களும் அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க, அம்மாவின் அரசு முதன்மையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கஜா புயலினால் பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், இரண்டு ஹெக்டேர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்குத்தான் பேரிடர் நிவாரண நிதி வழங்க முடியும் என்றும், அதை இப்போது 4 ஹெக்டேர் நிலம் என்று உயர்த்தியிருப்பதாகவும் தெரிவித்தார். அது தென்னை மரத்திற்கு மட்டுமா அல்லது எல்லாப் பயிர்களுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று, எங்கள் திண்டுக்கல் மாவட்டம்கூட கஜா புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நிவாரணத் தொகை அங்கே வந்து சேரவில்லை. அதையும் கருத்தில்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த தி.மு.க. கொறடா அவர்கள் ஒரு விவரத்தைக் கேட்டார்கள். திண்டுக்கல் மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டனவோ, அந்தந்தப் பகுதிகளில் வீடு தேடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான மாவட்ட நிருவாகம் அரசின் நிவாரணத் தொகையை கொடுத்துக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) எல்லோருக்கும் நாங்கள் கொடுத்து வந்திருக்கிறோம். கணக்குகள் எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். உங்கள் ஊருக்கு வந்து கொடுத்தோம். நீங்கள் ஊரில் இல்லை, இருந்திருந்தால் அழைத்திருப்போம். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *நான் மட்டும் வரவில்லை. அன்று நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வந்ததை ஒத்துக்கொள்கிறீர்களா? (குறுக்கீடு) ஒத்துக்கொண்டால் சரி. இப்போது உங்களுக்குக் கணக்கு வேண்டும். சரி கொடுத்துவிடுகிறோம். (குறுக்கீடு) எவ்வளவு பாதிக்கப்பட்டதோ, அதைத் தனியாக வாங்கிக்கொள்ளலாம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, 4* Biscuit packet, 2 Biscuit packet-*க்கு எல்லாம் மக்கள் பின்னால் ஓடி வந்தார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய மக்களை நாமே கொச்சைப்படுத்தக் கூடாது. (குறுக்கீடு) ஒவ்வொரு அங்கன்வாடியிலும் முழுமையாகச் சமையல் செய்து, எல்லோருக்கும், இரண்டு வேளை மட்டுமல்ல; மூன்று வேளையும் உணவு கொடுத்திருக்கிறோம். அரசியலுக்காக நான் பேசவில்லை.*





*நான் 29 நாட்கள் அங்கு தங்கியிருந்தேன். இரவு, பகலாக நான் அங்கேயே இருந்தேன். மின் கம்பங்கள் நடுபவர்களுடன் தங்கியிருந்து, அவர்களுடன் சாப்பிட்டு, நானும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் இரவு பகலாக அங்கிருந்து எல்லாவற்றையும் கவனித்தோம். மாண்புமிகு திரு. ஓ.எஸ் மணியன் அவர்களும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடன் இருந்தார்கள்.*

*தன்னார்வத் தொண்டர்கள் ஊர்களுக்குள் போவதில்லை;* main road-*லேயே நின்று சில பொருட்களைக் கொடுத்து விட்டுப் போய் விடுகிறார்கள். அந்த நேரத்தில் அந்தப் பொருட்களை வாங்க மக்கள் வருகிறார்கள்; வேறொன்றும் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 27 பொருட்கள் அடங்கிய ஓர் அற்புதமான பெட்டகத்தைக் கொடுத்திருக்கிறார்கள். கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்களுக்குத் தெரியும். அவரும் அந்த மாவட்டத்தில் இருந்தார். பாதிக்கப்பட்ட எல்லா மாவட்டங்களுக்கும் எங்களுடைய கழகத்தின் சார்பாக பொருட்களை* pack *செய்து, வீடு வீடாகச் சென்று கொடுத்தோம். எல்லாப் பக்கமும் தெருக்களில் வீடு வீடாகச் சென்று கொடுத்தோம். எவருமே விடுபடவில்லை. திரு. தமிமுன் அன்சாரி அவர்களும் எங்களுடன் இருந்தார். அவரும் எங்கள் கூடவே வந்தார். ஒவ்வொரு தொகுதியாகப் பிரித்து விட்டோம். அரசாங்கம் கொடுத்த பொருட்கள் தனி. ஒவ்வொரு பகுதியிலும் கல்யாண மண்டபம் ஒன்றை எடுத்து, நானும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், அந்தந்த மாவட்டத்தினுடைய அமைச்சர்கள்-நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த அமைச்சர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்,* incharge Minister-*அனைவரும் ஒரு* package *ஆக எடுத்துக் கொண்டுபோய் எல்லா வீடுகளுக்கும் கொடுத்தோம். அரசின் சார்பாக வழங்கப்படும் பொருட்கள் இல்லாமல். நாங்கள் தனியாகவும் கொடுத்தோம். சிலர் கிராமத்திற்குள்ளே வராமல், மெயின் ரோடில் நின்று கொடுத்தார்கள். அதன் பிறகு நாங்கள் என்ன செய்தோமென்றால், ஒரு* check post *போன்று அமைத்து, காவலர்களின், அரசு அதிகாரிகளின் உதவியோடு "நீங்கள் ஊருக்குள்ளே சென்று அந்தப் பொருட்களைக் கொடுங்கள்; நீங்களே கொண்டு போய்க் கொடுங்கள்; நாங்கள் அதிகாரிகளை உடன் அனுப்புகிறோம்"*

என்றோம். எனவே, எந்தப் பேரிடரின்போதும் இல்லாத அளவிற்கு எல்லோருக்கும் நிவாரணங்களைக் கொடுத்த அரசு நம்முடைய அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், ஒரு மாத காலமாக மின்சார ஊழியர்கள் பணியில் இருந்தார்கள். மின் கம்பங்கள் இலட்சக்கணக்கில் சேதமடைந்திருந்தன. படிப்படியாக வீடுகளுக்கெல்லாம் மின் இணைப்புகளைக் கொடுத்து விட்டார்கள். விவசாய வயல்களுக்கு இணைப்பு கொடுக்கும் வேலைகள்தான் நடந்து கொண்டிருக்கின்றன. மின்சார ஊழியர்கள் அதிகளவில் சிரமப்பட்டு வேலைகளைச் செய்தார்கள். எல்லா கிராமங்களுக்கும் சென்று பார்த்தோம். 29 நாட்களாக நானே அங்கு முழுமையாக இருந்து, எல்லாப் பகுதிகளுக்கும் சென்று இரவு, பகலாக அங்கிருந்து பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மெய்யநாதன், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நேரமாகி விட்டது. (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 4-30

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்தவர். நாங்கள் எல்லோரும் களத்தில் நின்று பணியாற்றினோம். அதனால் அந்த விவசாயிகளுடைய வேதனைகளை, பாதிப்புகளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அதனால்தான் நான் அமைதியாக இருந்தேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, மின்சாரம் வழங்குவதற்கு 30 நாட்கள் ஆனதாகத் தெரிவித்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் அரசின் நடவடிக்கைகள் குறித்து தெரிவித்தார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் கஜா புயலால் பாதிப்பு ஏற்பட்டது. ஒரு பாதிப்பு ஏற்படுவதற்கு முன்னால் அரசு எடுத்த நடவடிக்கையை ஒட்டுமொத்தமாக அனைவரும் பார்க்க வேண்டும். அடுத்த நாள் அனைவருமே பாதிக்கப்பட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், கிராம நிருவாக அலுவலர், தாசில்தார்,





மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், காவல் துறை அதிகாரி, நான் உள்பட அனைவருமே பாதிப்படைந்தோம். எல்லோரும் பாதிப்படைந்தாலும், அதை ஒரு நொடி மறந்து, அடுத்த நிமிடம் நாங்கள் அனைவரும் சமூகப் பொறுப்போடு, அங்கே களத்தில் இறங்கி பணியாற்றினோம்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைப்பற்றி நான் சொல்வது பொருத்தமாக இருக்காது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க மின்சாரத் துறை ஊழியர்கள் 5,200 பேர் முழுமையாக களத்தில் இறக்கப்பட்டார்கள். ஆந்திராவிலிருந்து 1,000 பேர்; கேரளாவிலிருந்து 200 பேர்; நம்முடைய மாநிலத்தில் 4,000 பேர்; சேலம், எடப்பாடியிலிருந்து, கொங்கு மண்டலத்திலிருந்து அனைத்துப் பணியாளர்களும் வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே களத்திலே அதைப் பார்த்தார். நானும் பார்த்தேன். உயிரை துச்சமென மதித்து, கொட்டுகிற மழையில் அந்தரத்தில் கயிற்றைக் கட்டித் தொங்கி, வயல்களிலும், வாய்க்கால்களிலும், நிலங்களிலும், முள்ளுக் காடுகளிலும் தங்களுடைய தோள்களில் மின் கம்பங்களைச் சுமந்துகொண்டு பணியாற்றி, இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு மின்சாரத் துறைப் பணியாளர்கள் தங்களுடைய உயிரை துச்சமென பாவித்து, 4,062 கிராமங்களுக்கும் 15 நாட்களில் மின்சாரத்தைக் கொடுத்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 சதவிகிதம் மின்சாரமும் கொடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட 47,000 மின் கம்பங்கள் சரிந்தன. 170 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய காற்றினால் 45 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு சீர் குலைந்து போய், நாம் அனைவரும் இருட்டில் இருந்தோம். புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்குவதற்கு மூன்று நாட்கள் ஆனது. ஆனால், அதற்குப் பிறகு மிகக் கடுமையாகப் போராடி 47,014 மின் கம்பங்களை முழுவதுமாக நட்டு, புதுக்கோட்டை municipality-க்கு 3 நாட்கள்; Town Panchayat-க்கு 7 நாட்கள்; கிராமங்களுக்கு 15 நாட்கள் என ஒட்டுமொத்தமாக 4,062 கிராமங்களுக்கும் 100 சதவிகிதம் மின்சாரத்தைக் கொடுத்தது மின்சாரத் துறைப் பணியாளர்களும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்களும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, 30 நாட்கள் காலதாமதம் ஆனது; தொய்வு ஏற்பட்டது என்று சொல்வது சரியல்ல. அங்கு களத்தில் நின்றவர்கள் உயிரை துச்சமென மதித்து பணியாற்றினார்கள். ஒருவர் இறந்தே போய்விட்டார். இரண்டு நபர்களைக் காப்பாற்றினோம். ஒருவர்

இறந்து போய்விட்டார். ஆந்திராவைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் 25 அடியிலிருந்து கீழே விழுந்து, C1, C5-ல் fracture ஏற்பட்டு, தஞ்சாவூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்பது கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். நாங்கள் அனைவரும் போய்ப் பார்த்தோம். பணியாளர்களுடைய உழைப்பை தயவுசெய்து நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. பாதிப்பு ஏற்பட்டது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. எல்லோருக்குமே பாதிப்பு ஏற்பட்டது. களத்தில் நின்று அனைவருமே பணியாற்றினோம். சில விஷயங்களை நாம் வார்த்தைகளால் சொல்கிறபோது, அவர்களுடைய மனம் பாதிப்படைந்துவிடக் கூடாது.

மாவட்ட ஆட்சித் தலைவர் முதல் வருவாய்த் துறை உள்பட அனைத்துத் துறை அதிகாரிகளும் களத்தில் நின்று பணியாற்றினார்கள். அதிகாலை 2 மணி வரை கூட்டம் நடத்தப்பட்டது என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அங்கே ஒருவர் இறந்தபோது mortuary-க்கு நானும் சென்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சென்றார். நானும் அவரைச் சந்தித்தேன். அவரும் என்னைச் சந்தித்தார். அனைவரும் சேர்ந்துதான் பணிகளை மேற்கொண்டோம். மிகக் கடுமையாக வேலை செய்தோம். நிவாரணப் பொருட்கள் பற்றிக் குறிப்பிட்டார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மாவட்டம் முழுவதுமுள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் நிவாரணப் பொருட்களை வழங்கியது. ஆலங்குடி மற்றும் கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதிகளில் பாதிப்புகள் அதிகம். ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் கணக்கெடுத்து அதிகபட்சமாக 47,289 வீடுகளுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பியிருக்கிறோம். 'ஏதாவது விடுபட்டிருந்தால், அதுபற்றித் தெரியப்படுத்துங்கள், அதனை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்து, அதை நாம் சேர்க்கச் சொல்வோம்' என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் நேரடியாக நானே தெரிவித்தேன். அப்படித்தான் பேசினோம். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோர் நேரடியாக வந்து பார்வையிட்டார்கள். மத்தியக் குழுவும் வருகை தந்தது. மத்தியக் குழு வருகை தந்தபோது சட்டமன்ற உறுப்பினரும், நானும் களத்தில் நின்றோம். பணிகளை எல்லோரும் சேர்ந்துதான் மேற்பார்வையிட்டோம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வரலாற்றில் இல்லாத அளவிற்கு, ஒரே





நாளில் 1,000 பணியாளர்களை களத்தில் இறக்கினார். எல்லோரும் நமக்கு உதவி செய்தார்கள். எனவே, தயவுசெய்து அதுபோன்ற வார்த்தைகளைத் தவிர்க்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், காலையிலிருந்து கஜா புயல் பற்றி நிறைய பேசிவிட்டோம். போதும்; வேறு சப்ஜெக்டில் பேசி முடியுங்கள்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னமும் எதுவுமே பேசவில்லை. முக்கியமான விஷயம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியில்லை. இன்னும் 10 நிமிடங்களில் உங்கள் உரையை முடிக்க வேண்டும்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு ஒரு செய்தியைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு நேரம் இல்லை.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** புயல் தாக்குவதற்கு முன்பு நவம்பர் 15 அன்று நான் 78 கிலோ இருந்தேன். இப்போது நான் 72 கிலோதான் இருக்கிறேன். அந்த மக்களுடைய பிரச்சினைகளை நான் சொல்லித்தான் ஆக வேண்டும்; குறைகளைச் சொல்லித்தான் ஆக வேண்டும். அதாவது, கஜா புயலால் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டது ஆலங்குடி தொகுதி. புதுக்கோட்டை மாவட்டத்தில் 2,17,000 பேருக்கு 27 பொருட்கள் கொண்ட நிவாரணத் தொகுப்பு வழங்கப்பட்டது. ஆனால், ஆலங்குடி தொகுதியில் உள்ளவர்களுக்கு வழங்கப்படவில்லை. மத்தியக் குழு வந்தபோது, அந்தக் குழுவினரிடம் இங்கேயிருக்கிற மாண்புமிகு அமைச்சர் உள்பட அனைவரும் சொன்னது, ஆலங்குடி தாலுகாவில் 37,000; அறந்தாங்கி தாலுகாவில், 20,000; மொத்தம் 57,000 நபர்கள் என்று சொன்னார்கள். ஆனால், 57,000 பேருக்கு இன்னமும் பொருட்கள் வரவில்லை. அதுபோக, இன்னும் 10,000 பேருக்கு பொருட்கள் வழங்கப்படாமல் விடுபட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் இதுகுறித்து தெரிவித்தேன். 67,000 பேருக்கு இன்னும் போய் சேரவில்லை. அவர்களுக்கு நிவாரணப் பொருட்களும், நிவாரண நிதியும் வழங்க வேண்டும்.

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [2019 ஜனவரி 4

அங்கேயிருக்கின்ற ஆதி திராவிட காலனி மக்கள் வசிக்கின்ற அந்தப் பகுதி விடுபட்டிருக்கிறது. 50,000 ரூபாயில் அவர்கள் வீடு கட்டியிருக்கிறார்கள். 'நீங்கள் எல்லோரும் அரசாங்கப் பணத்தில் வீடு கட்டியிருக்கிறீர்கள். எனவே, உங்களுக்கு நிவாரண நிதி இல்லை' என்று அவர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். எப்படி முடியும்? அவர்களின் வீடுகளெல்லாம் இடிந்து போயிருக்கின்றன. போட்டோ எடுக்கச் சென்ற அதிகாரிகள் எல்லாம் இது என்ன இப்படியிருக்கிறது என்று வெளியில் ஓடிவந்துவிட்டார்கள். அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமல்லவா? இதைக் கேட்டுத்தான் நாங்கள் போராடுகிறோம். தயவுசெய்து எல்லோருக்கும் நிவாரணப் பொருட்களும், நிவாரண நிதியும் கொடுங்கள். அதைக் கொடுத்தால் எங்களுக்குப் போதும். வேறு எதுவும் வேண்டாம்.

பிற்பகல் 4-35

அடுத்து, மின்சாரம் வழங்கப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். மின்சார ஊழியர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து 10 நாட்கள் சிறப்பாகப் பணியாற்றினார்கள். நாங்களும் பாராட்டுகிறோம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதற்குப் பிறகு எல்லோரையும் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

இன்றுவரை விவசாயத்திற்கு மின் இணைப்பே கொடுக்கப்படவில்லை. எஞ்சியிருக்கிற விவசாயம்; அதாவது நெல், காய்கறிகள், சிறு தானியங்கள் இவை எல்லாம் பட்டுப்போகக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. இங்கேயிருக்கின்ற மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 500 transformers ஏற்கெனவே வந்துவிட்டன.வெளிமாவட்டங்களிலிருந்து 1000 பணியாளர்களை வரவழைத்து, 3000 மின் கம்பங்களையும் கொண்டு வந்து 10 நாட்கள் வேலை நடந்தால், பணி முடிந்துவிடும். அந்த விவசாயிகளுடைய பயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இன்றைக்கு 1 இலட்சம் கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். செய்தி வந்திருக்கிறது. செய்தி வெளியே வந்தவுடனே, 'எங்களுக்கு வீடு வாங்கிக் கொடுங்கள்' என்று சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் என்னிடம் கேட்கிறார்கள். அது மத்திய அரசு நிதியிலிருந்து கட்டப்படுகிறதா, மாநில அரசு நிதியிலிருந்து கட்டப்படுகிறதா என்பது கேள்வியாக இருக்கிறது. ஏனென்றால், 1 இலட்சம் வீடுகள் மத்திய அரசு நிதியிலிருந்து கட்டப்படும் என்று எதிர்பார்த்தால், அவர்கள் நிதி கொடுப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், 2015 ஆம் ஆண்டு சென்னையில் பெருவெள்ளம் ஏற்பட்டபோது, நீங்கள் கேட்டது 25,912 கோடி ரூபாய். மத்திய அரசு தந்தது 1,940 கோடி ரூபாய் மட்டும்தான். 2016 ஆம் ஆண்டு வர்தா புயலுக்கு நீங்கள் கேட்டது 22,573 கோடி ரூபாய். மத்திய அரசு தந்தது 266 கோடி ரூபாய். ஒகி புயலுக்கு நீங்கள் கேட்டது 9,300 கோடி ரூபாய். மத்திய அரசு தந்தது 280 கோடி ரூபாய் மட்டும்தான். மொத்தமாக நீங்கள் கேட்டது 57,785 கோடி ரூபாய். மத்திய அரசு தந்தது 2,486 கோடி ரூபாய் மட்டும்தான்.



2019 ஜனவரி 4] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

கடந்த ஆண்டு ஒகி புயலுக்காக நடைபெற்ற நிவாரணப் பணிக்கே இன்னும் வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். 1 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசின் நிதியை எதிர்பார்த்தால், எப்படி இந்த மக்களுக்கு வீடு கட்டித் தர முடியும் என்பது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. அதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, ஆளுநர் உரையில் 8, 9, 10 மற்றும் 11 ஆகிய பக்கங்களில் கஜா புயல் பாதிப்பு பற்றிக் கூறப்பட்டுள்ளது. கஜா புயல் பாதிப்புகளுக்கு உரிய நிவாரணப் பணிகளுக்காக 2,709 கோடி ரூபாயும், நிரந்தர மறுசீரமைப்புப் பணிகளுக்காக 15,190 கோடி ரூபாயும் வழங்க வேண்டுமென மத்திய அரசிடம் மாநில அரசு கோரியுள்ளது. மத்திய அரசு மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு வழக்கமாக வழங்குவது போல் 353.70 கோடி ரூபாயை வழங்கியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கஜா புயல் பாதிப்புக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 1,141 கோடி ரூபாய் வழங்கியுள்ளதாகக் காலையில் அறிவித்தார்கள். மாநில அரசு கோரிய தொகையில் மத்திய அரசு வழங்கியது யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டதுபோல அல்லது கடலில் கரைத்த பெருங்காயத்தைப்போல ஆகுமே தவிர, முழுமையான நிவாரணப் பணிகளுக்கு அது உதவாது. உண்மை இப்படி இருக்கையில், ஆளுநர் உரையில் மத்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பது நியாயம்தானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இதேபோல் இயற்கைச் சீற்றம் ஏற்பட்டது. 2007-2008-ல் கனமழை. அப்பொழுது தற்காலிக நிவாரணத்திற்காக 449.91 கோடி ரூபாயும், நீண்டகால சீரமைப்புக்கு 689.87 கோடி ரூபாயும், மொத்தம் 1139.78 கோடி ரூபாயும் அப்பொழுதிருந்த அரசு கோரியது. ஆனால், மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி 142.95 கோடிதான்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 4

அதேபோல், 2008-2009-ல் 'நிஷா' புயல் ஏற்பட்டபோது, தற்காலிக நிவாரணத்திற்காக மத்திய அரசிடம் கோரப்பட்ட நிதி 2,105.71 கோடி ரூபாயும், நீண்டகால சீரமைப்புக்கு 1,683.53 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 3,789 கோடி ரூபாய் என்று கணக்கிட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதில் மத்திய அரசு வழங்கியது 570.17 கோடி ரூபாய்தான்.

அதேபோல், 2010-2011-ல் வெள்ளம் வந்தபொழுது தற்காலிக நிவாரணத்திற்காக நீங்கள் 2,125.82 கோடி ரூபாயைக் கேட்டு மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்தீர்கள். நீண்ட கால சீரமைப்புக்கு நீங்கள் கேட்கவில்லை. ஆனால் அவர்கள் வழங்கியது ரூ.317.17 கோடிதான். ஆகவே நாம் கேட்கின்ற நிதியையெல்லாம் எப்போதுமே மத்திய அரசாங்கம் ஒதுக்கியதே கிடையாது. மாநிலத்திலும் உங்கள் ஆட்சிதான். மத்தியிலும் நீங்கள் அங்கம் வகித்தீர்கள். நீங்கள் அங்கம் வகிக்கும்போதே இவ்வளவு நிதிதான் கிடைக்கப்பெற்றது. ஆனால், நாங்கள் கூட்டணி கிடையாது. மத்தியில் ஆட்சி அதிகாரத்திலும் நாங்கள் கிடையாது. இருந்தாலும் நீங்கள் குறிப்பிட்டதைப்போல நம்முடைய மக்களுக்குத் தேவையான நிவாரணம் வழங்கப்பட வேண்டும். நிரந்தர நிவாரணமும் வழங்கப்பட வேண்டும், தற்காலிக நிவாரணமும் வழங்கப்பட வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தோம். ஆனால், கோரப்பட்ட தொகையில் குறைந்த அளவு நிதிதான் கிடைத்தது. மேற்கொண்டு நிதியை நாங்கள் கேட்டிருக்கின்றோம். நிச்சயமாகக் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றோம்.

பிற்பகல் 4-40

இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 1 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படுமா என்ற சந்தேகத்தை இங்கே எழுப்பினார்கள். நிச்சயமாக 1 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்லாமல், ஒவ்வோர் ஆண்டும் 50 ஆயிரம் வீடுகள் வீதம், கிட்டத்தட்ட 4 ஆண்டுகளில் 2 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்ற செய்தியையும் சொல்லியிருக்கின்றோம். ஆகவே, நம்முடைய மக்களைப் பொறுத்தவரையில், வீடு இல்லாத மக்களுக்கு, கூரை வீட்டிலிருந்து, இந்தப் புயலால் பாதிக்கப்பட்டு வசிக்க இடம் இல்லாமல் இருக்கின்ற அந்த ஏழை மக்களுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நிச்சயம் சொன்னதைச் செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.



2019 ஜனவரி 4]

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** கஜா புயலால் பாதிக்கப்பட்டு, 63 உயிர்கள் பலியாகியுள்ளன. தென்னை மரங்கள் இலட்சக்கணக்கில் வேரோடு சாய்ந்துள்ளன. மா, பலா, சவுக்கு மற்றும் தேக்கு போன்ற மரங்களும், பல இலட்சக்கணக்கான வீடுகளும் முழுமையாக அழிந்து, மிகப் பெரிய அளவில் பேரழிவைச் சந்தித்துள்ளன. இந்த பாதிப்பு தமிழக மக்கள் அனைவரையும் நிலைகுலையச் செய்துள்ளது. ஒட்டுமொத்த தமிழகமும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் இறந்தவர்களுக்கு ஓர் இரங்கல் செய்தியைக்கூட சொல்லவில்லை. இதுபோன்ற இயற்கைப் பேரிடர் ஏற்படும்பொழுது அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டு ஆறுதல் சொல்வதுதான் வழக்கம். அந்த வழக்கத்தையும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. மாநில அரசின் சார்பில் கேட்கப்பட்ட நிவாரணத் தொகையையும் முழுமையாக வழங்கவில்லை. இந்நிலையில் ஆளுநர் அவர்கள் உரையில் மத்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பது எந்த அடிப்படையில் என்பது தெரியவில்லை. இது தமிழக மக்களின் 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது' போன்று உள்ளது.

16-11-2018 அன்று கஜா புயல் ஏற்பட்டது. அன்று மறுநாள் 17-11-2018 அன்று கஜா புயலால் எந்த பாதிப்பும் இல்லை என்று புதுக்கோட்டை மாவட்ட உயரதிகாரிகள் தெரிவித்தனர். 17-11-2018 அன்று பத்திரிகையில் இச்செய்தி வந்தது. அந்தச் செய்தியை அறிந்து அதிர்ச்சியடைந்த மக்கள் 17-11-2018 அன்று நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பசியோடும், பட்டினியோடும் போராடினார்கள். 17-11-2018 அன்று கொத்தமங்கலம் கிராமத்தில் சுமார் 15,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்ற அந்த ஊரில் ஏற்பட்ட ஓர் அசம்பாவித சம்பவத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலால் மிகப் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளானது என்னுடைய தொகுதி மக்கள்தான். அதைப்பற்றிப் பேச நீண்ட நேரமாகும். அதனால், நான் அதற்குள் போகவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக இந்த அவையில் கருத்துகளை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசுத் தரப்பிலிருந்து சேதாரம் இல்லை

என்று கருத்து சொல்லப்பட்டதாக சொல்லி, அதனால் சாலை மறியல் ஏற்பட்டது என்று சொன்னார்கள். எனக்கு ஏற்பட்ட ஒரு நிலையைப் பற்றி நான் இந்த அவையில் சொல்லியே ஆக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயல் வந்த நேரத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சென்னையிலிருந்துகொண்டு, எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பது குறித்த அறிவிப்புகளை, செய்திகளை மக்களுக்கு உடனுக்குடன் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். நான் வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தங்கியிருந்து, அங்கிருந்து நாங்கள் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடன் இரவில் தொடர்பு கொண்டு, பேசிக்கொண்டிருந்தோம். கிட்டத்தட்ட விடியற்காலை 4½ மணி வாக்கில் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு, வேதாரண்யத்திலிருந்து தேசிய புனரமைப்பு பாதுகாப்புக் குழுவினர் மற்றும் தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த பாதுகாப்புக் குழுவினர் இணைந்து, விழுந்த மரங்களையெல்லாம் அறுத்து எடுத்துக் கொண்டு சென்றார்கள். அவர்களுடன் நானும் வேதாரண்யத்திலிருந்து நாகையை நோக்கி வந்து கொண்டிருந்தேன். நாகப்பட்டினம் எஸ்.பி., மற்ற அதிகாரிகளோடு சேர்ந்து, நாகப்பட்டினத்திலிருந்து விழுந்த மரங்களை அறுத்து எடுத்துக் கொண்டு, வேதாரண்யம் நோக்கி வந்து கொண்டிருந்தார். அதுவரை நான் பல் துலக்கவில்லை, சாப்பிடவும் இல்லை. 3-00 மணி ஆகிவிட்டது. நான் sugar patient. அதற்குமேல் என்னால் இருக்க முடியவில்லை. 16-11-2018 அன்று மதியம் 3-00 மணிக்குப் பிறகு அங்கிருந்து காரிலோ, வேறு வாகனத்திலோ வர முடியவில்லை. கார் உடைந்துவிட்டது. அதனால் பைக்கில் வந்தேன். நான் பைக்கில் வருவதைப் பார்த்து என்ன செய்தி சொல்கிறார்கள் என்றால், அமைச்சர் தப்பித்து ஓடுகிறார் என்று தொலைக்காட்சியில் செய்தி வெளியிடுகிறார்கள். அதற்குப் பிறகு பார்த்தீர்களென்றால், கடலூர் மாவட்டத்தில் தானே புயல் அடித்தபோது, எங்களுடைய நாகப்பட்டினம் மாவட்டத்தில் புயல் பாதிப்பு இல்லை; எங்கள் பகுதி மக்களுக்கு எந்தவித சேதமும் இல்லை; எங்களுக்கு இன்னும் மழை வேண்டுமென்று அன்றைக்கு நான் சொல்லியிருந்தேன். அந்தப் பேட்டியில் எதை வெட்ட வேண்டுமோ, எதை கட் செய்ய வேண்டுமோ, எதை நறுக்க வேண்டுமோ, எதை ஒட்ட வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து ** சேர்ந்த ஓர் இளைஞர் Whatsapp-ல் வெளியிட்டுவிட்டார். Whatsapp-ல் மட்டுமல்ல; செய்தியாகவே சொல்லிவிட்டார்கள்.

** மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 4-45

இந்தச் செய்தி தீயாகப் பரவி ஊர் ஊராகப் போய், 'என்ன இப்படிச் சொல்லிவிட்டீர்களாமே, என்ன இப்படி சொல்லிவிட்டீர்களாமே,' என்று கேட்கிறார்கள். என்ன ஒரு நிலைமை என்று பார்த்தால், அரசு வெளியிட்டிருக்கிற நிவாரணத்திற்கான அறிவிப்பு அந்த மக்களுக்குத் தெரிந்ததா என்று கேட்டால், தெரியவில்லை. ஏனென்று கேட்டால் பத்திரிகை கிடையாது, செல் கிடையாது, ரேடியோ கிடையாது, T.V. கிடையாது. எந்தத் தகவல் தொடர்பும் கிடையாது. அதனால் அது போய்ச் சேரவில்லை. அரசு அறிவித்திருக்கிற நிவாரணம் என்ன, தொகை எவ்வளவு என்பது குறித்த செய்தி அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. ஆனால் "ஓ.எஸ். மணியன் சேதாரமில்லை என்று சொன்னார்" என்ற அந்தச் செய்தி எல்லோருக்கும் போய்விட்டது. எல்லோருக்கும் போயிற்று என்றால், யாருக்குப் போயிற்று தெரியுமா, கல்வி அறிவு இல்லாத, வயதில். . . (குறுக்கீடு) அரசியல் செய்வது என்றால், அதற்கு இடம் இருக்கிறது. அரசியல் செய்வதற்கு காலம் இருக்கிறது, இடம் இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, இல்லை (குறுக்கீடு) நீங்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அந்தப் புயலினால் பாதிக்கப்பட்டிருக்கிறார். அந்த பாதிப்பை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். அதை விட்டுவிட்டு உங்கள் சௌகரியத்திற்கு விளக்கமெல்லாம் சொல்ல முடியாது. (குறுக்கீடு) அமைதியாக இருங்கள், அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** அரசியல் செய்வதற்கு காலம் இருக்கிறது, நேரம் இருக்கிறது, சந்தர்ப்ப சூழ்நிலை இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் விளக்கம்தான் சொல்கிறார். (குறுக்கீடு) விளக்கம்; விளக்கம்தான் சொல்கிறார். (குறுக்கீடு) இருங்கள், அவர் சொல்லி முடிக்கட்டும், தேவைப்பட்டால் நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள், திரு. இராஜா, உட்காருங்கள். அமைச்சர் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் பேசினால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். புயலினால்

கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதனால் ஏற்பட்ட விளைவுகளை விளக்கமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். அந்த நேரத்திலே இருந்த அமைச்சர்கள் விளக்கங்களை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். நானோ நேரத்தின் அருமையைக் கருதினாலும், முக்கியமான பிரச்சினை என்பதனால் நிறைய நேரம் allow செய்துகொண்டிருக்கிறேன். ஒவ்வொருவருக்கும்... (குறுக்கீடு) அவர் முழுமையாகச் சொல்லட்டும், அதில் ஏதாவது ஆட்சேபணை இருந்தால், அதற்கு என்ன என்பதை நான் பிறகு சொல்கிறேன். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டீர்கள். ஆதாரத்தை அவர் பேசும்போது சொல்வார். (குறுக்கீடு) பொது வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு இந்த மாதிரி நிகழும்போது, அதற்கான விளக்கத்தை அளிப்பது வழக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொல்கிறார். அதுமட்டுமல்ல; இன்னொரு நிகழ்வு நடந்தது. ஓர் அமைச்சர் போகும்போது ஒருவர் அரிவாளை எடுத்துக்கொண்டு வருகிறார், அது யார் என்று காவல் துறையினர் கண்டுபிடித்திருக்கிறார்கள். யாருக்கு வேண்டுமானாலும் இந்த நிலைமை வரலாம். பொது வாழ்க்கையில் நாம்தான் இருக்கிறோம். அவர் ஒரு விளக்கத்தைச் சொல்கிறார், கேளுங்கள். ஆதாரம் வேண்டுமென்றால், நீங்கள் வாய்ப்புக் கேட்டு மறுபடி தெரிவியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்த பின்னர் நீங்கள் மறுத்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசும்போதே ஒட்டுமொத்தமாக எழுந்து பேசினால் என்ன அர்த்தம்? முதலில் அவர் ஒரு சட்டமன்ற உறுப்பினர், அதற்குப் பின்னர்தான் அமைச்சர். (குறுக்கீடுகள்) அவருக்கு இந்தமாதிரி ஒரு பிரச்சினை வந்திருக்கிறது என்று சொல்கிறார். அதை என்ன என்று முதலில் கேளுங்கள்.

*பிற்பகல் 4-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாதிக்கப்பட்ட மாண்புமிகு அமைச்சர், அவர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டார் என்ற விவரத்தை முழுமையாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு)





திரு. புகழேந்தி, அது உங்கள் இடமே இல்லை. இப்படியெல்லாம் ஆளாளுக்கு..... (குறுக்கீடுகள்) முழுமையாக அவர் தன்னுடைய விளக்கத்தை இந்த அவைக்குத் தெரிவித்ததற்குப் பின்னால், வேறு எதாவது தேவையிருந்தால் நீங்கள் கேளுங்கள், நான் அப்பொழுது வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அவரை முழுமையாகச் சொல்ல விடுங்கள். அவர், தான் எப்படி பாதிக்கப்பட்டார் என்பதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவரை முழுமையாகச் சொல்ல விடுங்கள். (குறுக்கீடுகள்)

இல்லையில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுமையாகச் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) இருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, நான் அவரை இடைமறித்து உங்களுக்கு வாய்ப்புத் தர முடியாது. மாண்புமிகு அமைச்சர் முழுவதுமாக விளக்கம் சொன்னதற்குப் பின்னால், அதில் கருத்து வேறுபாடு ஏதேனும் உங்களுக்கு இருக்குமேயானால், நீங்கள் வாய்ப்புக் கேட்டால், வாய்ப்பு வழங்கப்படும். அதை விடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பேச்சை இடைமறித்து, அவரை அமரச் சொல்லிவிட்டு, உங்களது விளக்கத்தை நான் கேட்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்கத்தை முழுமையாகச் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பாதிக்கப்பட்டுள்ளார்; அந்த பாதிப்பினை இந்த அவைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதை முழுவதுமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் விளக்கத்தைச் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், "எந்த பாதிப்பும் இல்லையென்று அரசு அதிகாரிகள் சொன்னார்கள்" என்று இங்கே குறிப்பிட்டார். அது எப்படிப்பட்ட தவறு என்பதைத் தெரிவிப்பதற்காக, எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை, அந்தச் சம்பவத்தை இங்கே நான் குறிப்பிட்டேனே தவிர, இதில் அரசியல் உள்நோக்கம் எதுவும் கிடையாது. 1952-ல் ஏற்பட்ட புயலுக்குப் பிறகு, இப்போதுதான் இவ்வளவு மோசமான புயலை நாம் பார்த்தோம். 1977-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஒரு புயல் ஏற்பட்டது. அது இந்தளவிற்குக் கிடையாது. அதற்குப் பிறகு வறட்சி, வெள்ளம் எல்லாம் ஏற்பட்டன. ஆனால், இவ்வளவு மோசமான புயலை இப்போதுதான் நாம் சந்தித்திருக்கிறோம். மக்கள் வாழ்வாதாரத்தை

இழந்து தவிக்கிற நேரத்தில், "புயல் அடித்த மூன்றாவது நாளே சாலை மறியல் செய்வதா?" இதுதான் என்னுடைய கேள்வி. இது நியாயமா? மக்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். "எத்தனை இடங்களில் வேண்டுமானாலும் சமைத்துச் சாப்பிடுங்கள்" என்று அனுமதித்ததோடு, அரசே ஓடோடி வந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. எல்லா இடங்களிலும் சமையல் நடைபெற்றது. 300-க்கும் மேற்பட்ட JCBs-ஐக் கொண்டுவந்து, விழுந்த மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது. 500-க்கும் மேற்பட்ட ஜெனரேட்டர்களைக் கொண்டுவந்து தொட்டிகளில் நீரேற்றி தண்ணீர் வழங்குவதற்காக, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மரத்தின் வேர்கள் புகுந்து குழாய்களெல்லாம் உடைந்து போய்விட்டன. அந்தச் சூழ்நிலையிலும்கூட சென்னை மாநகராட்சியிலிருந்தும், கோவை மாநகராட்சியிலிருந்தும், தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் water tankers வந்தன; Tractor tankers வந்தன. அந்த மாவட்டத்தில் இல்லாத தண்ணீரை, அடுத்த மாவட்டத்திலிருந்து காரைக்காலிலிருந்து கொண்டு வந்து, சாதாரண நாட்களில் வழங்கப்படுவதைவிட, பல மடங்கு தண்ணீரை நாங்கள் வழங்கினோம்.

புயலின்போது பெட்ரோல் பம்புகள் பிடுங்கி தூக்கி எறியப்பட்டுவிட்டன. அங்கே பெட்ரோல் பங்குகள் 8 நாட்கள் இயங்கவில்லை. JCBs-ஐ கடலூரிலிருந்து டீசல் போட்டு கொண்டுவந்து, அங்கே வேலை செய்தோம். மக்கள் அனைவரும் பள்ளிக்கூடங்களிலும், சமுதாயக் கூடங்களிலும், அரசுக் கட்டடங்களிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர். மின் துறைப் பணியாளர்கள் 3,000 பேர், 4,000 பேர், 5,000 பேர் என்று வருகிறார்கள். அவர்களைத் தங்க வைப்பதற்குக்கூட இடமில்லை. அவர்களுக்கு உணவு கொடுப்பதற்கும் வழியில்லை. அந்தச் சூழ்நிலைகளை எப்படிச் சமாளிப்பது என்று நாங்கள் கவனித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், மூன்றாவது நாளில் சாலை மறியல் நடந்தது. சாலை மறியலின்போது வேதாரண்யம் நகராட்சிப் பகுதிக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட, Commissioner of Municipal Administration வேதாரண்யம் செல்வதற்காக வந்தார். அவரை செம்போடை என்ற கிராமத்தில் நான்கரை மணி நேரம் மறியல் செய்து தடுத்துவிட்டனர். "நான் வேதாரண்யம் செல்லவில்லை; திரும்பி நாகப்பட்டினம் சென்று விடுகிறேன்; என்னை விடுங்கள்" என்று அவர் கேட்கிறார். 'முடியாது' என்று சொல்லி, நான்கரை மணி நேரம் அவரைத் தடுத்து





நிறுத்தி வைத்திருந்தார்கள். அதேபோல், வேதாரண்யம் போக வேண்டிய மின் பணியாளர்களையும் தடுத்து நிறுத்திவிட்டார்கள். அதனால், வேதாரண்யம் செல்ல வேண்டிய பணியாளர்கள், புதுக்கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தச் சூழ்நிலையில்தான் சாலை மறியல் நடந்தது. நான் இதை அரசியலுக்காகச் சொல்லவில்லை. அவர்களைக் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை; யதார்த்த உண்மையைச் சொல்கிறேன். இவ்வாறு சாலை மறியல் நடந்து கொண்டிருந்தபோது, தி.மு.க. தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அங்கு வந்தார். CMA மற்றும் மின் பணியாளர்களைச் செல்லவிடாமல் மறியல் செய்து தடுத்தவர்கள், சாலை மறியலுக்கிடையே வழியை ஒதுக்கிக்கொடுத்து எதிர்க்கட்சித் தலைவரை அனுப்பி வைத்தார்கள். (குறுக்கீடுகள்) அப்படியானால் இதற்கு அதுதானே அர்த்தம்? பிறகு இதற்கு என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அப்படியானால் சாலை மறியல் செய்தவர்கள் யார்? புயல் வந்து மூன்றாவது நாள் அது. 48 மணி நேரம் முடிந்திருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் உங்களையே கேட்கிறேன். கஜா புயல், செல்ஃபோன் கோபுரங்கள் அனைத்தையும் முறுக்குப் பிழிவதுபோல் பிழிந்து போட்டுவிட்டது. புயல் பாதிப்பினால் மிகப் பெரிய இராட்சச மரங்களெல்லாம் விழுந்து கிடந்த சூழ்நிலையில், மின் இணைப்பு அறவே இல்லாத சூழ்நிலையில், கட்டமைப்புகள் எதுவுமே இல்லாத நேரத்தில், பெட்ரோல் பங்குகள் எதுவுமே இல்லாத நேரத்தில், கடை, கடைத் தெரு, டீக் கடை, பெட்டிக் கடை என்று எதுவுமே இல்லாத நேரத்தில், வீட்டைவிட்டு யாருமே வெளியில் வர முடியாத சூழ்நிலையில் 48 மணி நேரம் முடிந்து 49-வது மணி நேரத்தில் சாலை மறியலா? இது நியாயமா? இது நீங்களாக இருந்தாலும் சரி, நாங்களாக இருந்தாலும் சரி, இது தவறு, இது மிகப் பெரிய குற்றம். அதைத்தான் இப்போது உலகம் பூராவும் சாலை மறியல், சாலை மறியல் என்று எடுத்துக்காட்டுகிறீர்கள், 49-வது மணி நேரத்தில் சாலை மறியல் செய்வது நியாயமா?

பிற்பகல் 4-55

ஒரேயொரு உதாரணம் சொல்கிறேன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், வேதாரண்யம் நகரத்தில் பணிகளை மேற்பார்வையிட in-charge-ல் இருந்தார். புயல் வருவதற்கு முன்னால் 9 நிவாரண முகாம்களை நான் அமைத்தேன். 15 ஆம் தேதி இரவு புயல் அடிப்பதற்கு முன்னால், இரவு 10-00 மணிக்கு முன்னால் சமைக்க முடியாத இடங்களில்கூட பள்ளிக்கூடத்தில்

[திரு. ஓ.எஸ். மணியன்] [2019 ஜனவரி 4

வேதாரண்யம் கன்யா குருகுலத்தில் உப்புமா செய்து கொண்டு போய்க் கொடுத்தேன். லைட் இல்லாத இடங்களில் எல்லாம் Petromax Light-ஐ எடுத்துக் கொண்டு போய் கொடுத்தோம். வேதாரண்யம் நகரம் 21 வார்டுகள் கொண்டது; சாதாரண சிறிய நகரம்தான். ஆனால், அங்கு 105 பொது இடங்களில் சாப்பாடு தயார் செய்து, சாப்பாடு போட்டோம். தாராளமாக அள்ளிக் கொடுத்தார் நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். 21 வார்டுகளுக்கு 105 இடங்களில் சமையல்; இதைவிட என்ன செய்ய முடியும்? சொல்லுங்கள் பார்க்கலாம்; இதைவிட என்ன செய்ய முடியும்? இப்போது எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையிலும், 99.9 சதவிகிதம் கரன்ட் கொடுத்துவிட்டோம். எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன; எதுவும் பாக்கி கிடையாது.

உதாரணத்திற்கு ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது, வேதாரண்யத்தில் பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து வந்து நான் பேச வேண்டுமென்று சொன்னால், நாகப்பட்டினம் வந்தால்தான் பேச முடியும்; இல்லையென்றால் பேச முடியாது; யாரையும் பார்க்க முடியாது. தினமும் என்னைச் சந்திப்பவர்கள்கூட என்னைப் பார்த்து 8 நாட்கள் ஆனது; என்னோடு பேசுவதற்கு 8 நாட்களாயின. அந்த பாதிப்பு என்பது கூரை வீட்டுக்காரர்களுக்கு மட்டுமல்ல; ஓட்டு வீட்டுக்காரர்களுக்கு மட்டுமல்ல; மாடி வீட்டுக்காரர்களுக்கு மட்டுமல்ல; எல்லோருக்கும் அந்த பாதிப்பு இருந்தது. மாடி வீடுகள் என்று சொன்னால், கண்ணாடிகள் சிதறி உடைந்து போய்விட்டன. கதவை உடைத்துத் திருடன் தள்ளுவதுமாதிரி புயல் தள்ளியது; உடைக்கிற மாதிரி உடைக்கிறது.

ஒரு மோசமான நிலையைச் சொல்கிறேன்; நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். கதவை புயல் வந்து தள்ளி, கதவைத் திறக்கிறபோது மீண்டும் தாழ்ப்பாள் போடுவதற்கு முயற்சி எடுத்தவர்களுடைய ஆட்காட்டி விரல் எத்தனை பேருக்குத் துண்டாகிவிட்டது என்பது தெரியுமா? அவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது; கொஞ்சம்நஞ்சமல்ல; அவ்வளவு பெரிய பாதிப்பு; சொல்ல முடியாத பாதிப்பு. மாடி வீடாக இருந்தால் வீட்டில் கண்ணாடி கதவுகள் கிடையாது; கூரை வீடு கிடையாது; ஓட்டு வீடு கிடையாது; இன்னும் கூரை வீட்டுக்காரர்களைவிட ஓட்டு வீட்டுக்காரர்களுக்குத்தான் பாதிப்பு அதிகம். ஏனென்றால், புயல் ஓடுகளை அள்ளிக்கொண்டு போய்விட்டது. இந்தமாதிரி மிகப் பெரிய மோசமான பாதிப்பில், அரசியல் பார்க்கக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தாராளமாக என்ன செய்ய வேண்டுமோ, அத்தனையையும் செய்வதற்கு



2019 ஜனவரி 4] [திரு. ஓ.எஸ். மணியன்]

உத்தரவு போட்டார்கள். நிவாரண உதவிகளை தாராளமாகக் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் மன்னிக்க வேண்டும், ஒரேயொரு செய்தியை மட்டும் சொல்லி முடிக்கிறேன். மாவட்டத்தில் சுத்தமாக network கிடையாது. அதற்குப் பிறகு UPS உள்ள கல்லூரிகளில் 150 கம்ப்யூட்டர்களை வாங்கி, 150 கம்ப்யூட்டர் படிக்கிற மாணவர்களை வரவழைத்து, திரு. விஷ்ணு என்கிற I.T. Department IAS Officer ஒருவர் இருந்தார்; அவரிடம் அங்கு போய் பயிற்சி கொடுக்கச் சொல்லி, அந்த 150 மாணவர்களையும் அந்தப் பணத்தை ECS-ல் அனுப்பச் சொல்லி-network கிடையாது; இரயில்வே துறையினரிடம் network இரவல் வாங்கி, அங்கு பணத்தை அனுப்பியிருக்கிறோம். இன்று வரையிலும் எங்கள் ஊரில் Bank வேலை செய்யவில்லை; network இல்லை. State Bank இன்று வரையிலும் வேலை செய்யவில்லை. Chief Secretary-யிடமும் மாண்புமிகு முதலமைச்சரிடமும் கேட்டிருக்கிறோம். Government of India-விடம் பேசி Mobile Bank வாங்குங்கள் என்று கேட்டிருக்கிறோம். ஆக, இந்த அளவிற்கு ஒரு மோசமான புயல் பாதிப்பு நாட்டிலே யாராலும் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது. மக்கள் கோபப்பட்டிருக்கிறார்கள் என்பது இயற்கை. ஏனென்று கேட்டீர்களென்றால், இரவு படுக்கும்போது வீடு இருந்தது; பொழுது விடியும்போது வீடு இல்லை.

இப்போது நான் ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும். பெரியவர்களாக இருந்தாலும், சிறியவர்களாக இருந்தாலும், அவர்களுக்கேற்ற பொருளாதார வசதியில் latrine கட்டி வைத்திருக்கிறார்கள். புயல் அடித்தபோது அந்த latrine-ல் இருந்துதான் உயிரைக் காப்பாற்றிக் கொண்டார்கள். இந்த latrine மட்டும் சிமெண்ட்டில் இல்லாமல் இருந்திருந்தால், நிறைய பேர் இறந்திருப்பார்கள்; latrine தான் நிறைய இடங்களில் மக்களைக் காப்பாற்றியது. இதுதான் உண்மை; அந்த அளவிற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. வரலாற்றில் இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதவிகளை தாராளமாக வழங்கினார்கள். இந்த நிவாரணம் என்பது நிச்சயமாக இன்றோடு முடிந்து போகாது; இன்னும் 3 வருடத்திற்கு இந்த நிவாரண உதவிகளை தொடர்ந்து இந்த மக்களுக்குக் கொடுத்தாக வேண்டும்; தொடர்ந்து செய்தாக வேண்டும். அவ்வளவு பெரிய பிரச்சினை இருக்கிறது. இப்போது நான்கூட எனக்கு வேண்டிய நண்பர்களிடம் எல்லாம்

[திரு. ஓ.எஸ். மணியன்] [2019 ஜனவரி 4

கேட்டு, நானும் என்னுடைய முதலீட்டைப் போட்டு இப்போது என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 15 இலட்சம் கீற்றுகள் கொடுத்திருக்கிறேன். நான் மாண்புமிகு அமைச்சர்களிடம் எல்லாம் கீற்றுகள் கொடுப்பதற்குக் கேட்டிருக்கிறேன். கூரை வீட்டுக்காரர்களுக்கு தலா 250 வீதம் இன்னும் 10 இலட்சம் கீற்றுகளுக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறேன். ஆக மிகப் பெரிய பாதிப்பு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தார்ப்பாய் வழங்குவதற்குக் கேட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; "நாம் தானே பாலித்தீன் பேப்பருக்குத் தடை விதித்திருக்கிறோம். அதனால் எப்படி அரசாங்கப் பணத்தில் பாலித்தீன் பேப்பர் வாங்கிக் கொடுக்க முடியும்?" என்று கேட்டார்கள். கொடுத்தால்தான் முடியும்; அதுதான் immediate relief என்று சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 இலட்சத்து 60 ஆயிரம் தார்ப்பாய்கள் வழங்குவதற்கு உத்தரவு போட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற இடங்களிலிருந்தெல்லாம் கொண்டு வரச் சொல்லி, இன்றைக்கு அந்த கூரைகளையெல்லாம் மூடுவதற்கு ஏற்பாடு செய்து, ஒரு மிகப்பெரிய புண்ணியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்தார்கள். கோடிக்கணக்கில் பணம் கொடுக்கலாம், அது வேறு விஷயம். ஆனால், கிடைக்காத பொருளைத் தேடிக் கண்டுபிடித்து, அதை உற்பத்தி செய்யச் சொல்லி, கொண்டு வந்து கொடுக்கிற காரியம் இருக்கிறது பாருங்கள், அதுவும் அவ்வளவு வேகமாகக் கொடுத்தார்கள், பாருங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய அருமை எனக்குத்தான் தெரியும்; எங்கள் மக்களுக்குத்தான் தெரியும்.

பிற்பகல் 5-00

அப்படிப்பட்ட ஒரு மோசமான இந்தப் புயலிலே அரசின் சார்பில் தாராளமாகக் கொடுத்து, எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் இரண்டு கட்சியினரும் கை கோர்த்து, எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைக்க வேண்டுமே தவிர, இதில் அரசியல் வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சி என்பது வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) நமக்குள்ளான அரசியலை தனிப்பட்ட முறையில், தேர்தல் களத்தில் வைத்துக்கொள்வோம். மக்கள் பாதிக்கப்படுகின்ற



2019 ஜனவரி 4] [திரு. ஓ.எஸ். மணியன்]

இடத்திலே மக்களை வாழ வைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு விடுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, அவர் தவறாகச் சொல்லவில்லை. அவர் வேற்றுமையாக எதுவும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) மேற்கொண்டு அவர் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். அதை விட்டுவிடுங்கள். இல்லை, கஜா புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை, அரசு உணர்ந்து செய்த காரியங்களை எல்லாம் காலையிலிருந்து மாண்புமிகு முதலமைச்சரும், மாண்புமிகு அமைச்சர்களும் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டு அதை விவாதப் பொருளாக்க வேண்டாம். (குறுக்கீடுகள்) உரையை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் வேதாரண்யம் தொகுதியில் ஏற்பட்ட 'கஜா' புயல் பாதிப்பு குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. அனைவரும் இணைந்துதான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார். மாலையில் இருந்த வீடு காலையில் இல்லை என்று அவர் சொன்னார். சாப்பாட்டிற்கு வழி இல்லை; கஷ்டப்படுகிறார்கள்; மக்கள் அவர்களாகத்தான் போராட்டத்திற்கு வருகிறார்கள். இருந்தபோதிலும் அவர் பேசுகின்ற சமயத்திலே ** இளைஞர் ஒருவர் WhatsApp-ல் செய்தி போட்டார் என்று சொன்னார். அதுவும் செல்போன் செயல்படவில்லை, எங்கேயும் வேலை செய்யவில்லை என்று சொல்கிறார். அதேநேரத்திலே, ** வெளியிட்டு, அது வெளிவந்து தனக்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார். அவர் எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அவர் ஆதாரமிருந்தால் சொல்லட்டும். இல்லையென்றால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அவ்வளவுதான். வேறு ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2019 ஜனவரி 4

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** நாகபட்டினம் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். இனியன் என்கிற சகோதரர், அவருடைய அப்பா பெயர் இராஜேந்திரன். இராஜேந்திரன் என்பவர் தலைஞாயிறிலே ** முன்னாள் தலைவர். இராஜேந்திரன் கைது செய்யப்பட்டு, சிறையிலே இருக்கிறார். அவருடைய இன்னொரு மகன் சிறையிலே இருக்கிறார். நான் சொல்கிற இனியன்தான் WhatsApp-ல் நான் மருந்து குடித்துவிட்டு சாகப் போகிறேன்; போலீஸ் என்னை விரட்டுகிறது; நான் ஓடிக் கொண்டே இருக்கிறேன்; என்னை விடமாட்டேன் என்கிறது, பல்வேறு வழக்குகள் போடுகின்றனர்; மருந்து குடிக்கிறேன் என்றெல்லாம் சொல்லி, வெள்ளையாய் ஒரு திரவத்தைக் குடித்தார். ஆனால், இப்போது நன்றாக இருப்பதாக ஒரு தகவல் வந்திருக்கிறது. அப்படிப்பட்டவர்தான் அதைச் செய்தது. Cyber crime-ல் கண்டுபிடித்திருக்கிறார்கள். வழக்கு போட்டிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வழக்கு போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார் அல்லவா? *(குறுக்கீடுகள்)* இல்லை, தடுத்தவர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதைக் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* இருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் கேட்ட விளக்கத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* இங்கே பாருங்கள்; நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்வதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* இல்லை; மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்கின்றபோது, மேற்கொண்டு அதைப்பற்றி இங்கே விவாதிக்க வேண்டியதில்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். நேரமாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அதாவது, நான் சொல்வது, *(குறுக்கீடுகள்)* சரி, இருங்கள். *(குறுக்கீடுகள்)* அதற்குத்தான் நான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* அதற்குத்தான் நான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* இல்லை, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2019 ஜனவரி 4] [பேரவைத் தலைவர்]

பொறுப்பேற்றுக்கொண்ட காரணத்தினால், அதற்குரிய விவரம் இருந்தால், அவற்றை என்னிடத்திலே கொடுக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இதற்குமேல் நீங்கள் வற்புறுத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* திரு. அர. சக்கரபாணி, இதற்குமேல் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* இப்போதே *5-04* மணியாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* இல்லை. *(குறுக்கீடுகள்)* இதெல்லாம் செய்ய முடியாது. *(குறுக்கீடுகள்)* அதுசம்பந்தமாக, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லிவிட்டேன். *(குறுக்கீடுகள்)* அதற்குரிய விளக்கத்தை, ஆதாரத்தை என்னிடத்திலே கொடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 5-05*

அது வரட்டும். *(குறுக்கீடு)* அது வந்த பிறகு, நான் பார்த்து நடவடிக்கை எடுக்கிறேன். *(குறுக்கீடு)* அதுவரையில், அவர் சொன்ன விளக்கத்தை நான் அவைக் குறிப்பில் ஏற்றாமல் இருக்க முடியாது. *(குறுக்கீடு)* ** என்ற வார்த்தையை வேண்டுமானால், அவரிடமிருந்து விளக்கம் வரும் வரை தற்காலிகமாக நான் நிறுத்தி வைக்கிறேன். விளக்கம் வந்த பிறகு, அதன் முழு விவரமும் ஏற்றுக்கொள்ளப்படும். *(குறுக்கீடு)* மற்றபடி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அத்தனை விளக்கங்களும் அவைக் குறிப்புக்கு வரும். ** என்கிற ஒரு வார்த்தையை மட்டும், அவர் ஆதாரத்தை என்னிடம் கொடுக்கும் வரை நான் நிறுத்தி வைக்கிறேன். *(குறுக்கீடு)* சொல்லுங்கள், திரு. மெய்யநாதன். *(குறுக்கீடு)* அவ்வளவுதான். *(குறுக்கீடு)* இல்லை, முடியுங்கள். *(குறுக்கீடு)* நேரம் இல்லை, முடியுங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் முடிக்கிறீர்களா அல்லது நான் அவையை முடித்துவிடவா? *(குறுக்கீடு)* அதிக நேரமாகிவிட்டது. எவ்வளவு நேரம்தான் நான் பேச அனுமதிக்க முடியும். *4-13* மணிக்குப் பேச ஆரம்பித்து, *55* நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். *(குறுக்கீடு)* அவர் பேசியதால்தான், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். *(குறுக்கீடு)* இல்லை, இவர் கேள்வி கேட்கவில்லை என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்க மாட்டார்கள். காலையிலிருந்து அவர் அமைதியாகத்தான் இருந்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேச வைத்தது திரு. மெய்யநாதன் அவர்கள்தான். *(குறுக்கீடு)* பிறகு அவர் விளக்கம் சொல்வார். *(குறுக்கீடு)* அதையெல்லாம் நீங்கள் சொல்ல முடியாது. சொல்லுங்கள், திரு. மெய்யநாதன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2019 ஜனவரி 4

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17-11-2018 அன்று கொத்தமங்கலத்தில் நடைபெற்ற ஒரு அசம்பாவித சம்பவத்தில், சம்பந்தமே இல்லாத அப்பாவி மக்கள் 62 பேர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் ஜாமீனில் வந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு, அப்பாவி விவசாயியான திரு. துரை என்பவர் தற்போது குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார். அதுமட்டுமல்லாமல், இப்போதும் கைது படலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வழக்கு பயம் காரணமாக, கொத்தமங்கலம் ஊரிலிருக்கின்ற 15,000 மக்கள், அந்த ஊரிலிருந்து வெளியிலே இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவென்றால், அந்த ஊரில் மட்டுமல்ல; இந்தப் புயல் பாதிப்பிற்குப் பிறகு, நிறைய பேர்மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். என்மீதுகூட நிறைய வழக்கு போட்டிருக்கிறார்கள். அதுபற்றி பிரச்சினை இல்லை. அப்பாவி விவசாயிகள்மீது போடப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தையும் ரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயம் பாதிக்கப்பட்டதால், 100 நாள் வேலைதான் அவர்களுடைய வாழ்வாதாரமாக இருக்கிறது. நிறைய பேர் 100 நாள் வேலை அட்டை கேட்கிறார்கள். அவர்களுக்கு புதிய அட்டை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பேரூராட்சிப் பகுதிகளிலும் இந்த 100 நாள் வேலைத் திட்டத்தைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஆலங்குடி பேரூராட்சிப் பகுதியிலும், கீரமங்கலம் பேரூராட்சிப் பகுதியிலும் 100 நாள் வேலைத் திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மெய்யநாதன், நீங்கள் விளக்கம் மேல் விளக்கம் கேட்க மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். அதையும் உங்களால் கேட்டுக்கொள்ள முடியவில்லை. தற்போது மணி 5-07 ஆகிவிட்டது. எவ்வளவு நேரம்தான் பேசுவீர்கள்? (குறுக்கீடு) காலையிலிருந்து மக்கள் பிரச்சினைகளைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். திரு. ரவிச்சந்திரன், காலையிலிருந்து மக்கள் பிரச்சினைகளைப் பற்றிதான் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. வேறு பிரச்சினை பற்றி விவாதம் எதுவும் நடக்கவில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2019 ஜனவரி 4]

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொத்தமங்கலம் பிரச்சினைக்குள்ளே செல்லவில்லை. ஆனால், நான் ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிராமத்திலிருந்த 15,000 மக்கள் வழக்குக்குப் பயந்து வெளியிலே போய்விட்டார்கள் என்று சொன்ன அந்தக் கருத்து தவறான கருத்து, தவறான தகவல். அந்தச் சம்பவம் நடந்ததற்குப் பிறகு, கொத்தமங்கலம் கிராமத்திற்கு நான், மாவட்ட ஆட்சித் தலைவருடன் சேர்ந்து நேரடியாகச் சென்றேன்; அங்குள்ள மக்களுடன்தான் சாப்பிட்டேன். அந்த ஊர் மக்களே என்னிடமும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் வந்து, சம்பவம் நடந்தது, ஆனால், அந்தச் சம்பவத்தை எங்கள் ஊர் மக்கள் யாரும் செய்யவில்லை. வெளியிலிருந்து வந்த கொஞ்சம் பேர் செய்துவிட்டார்கள் என்று கூறி, அவர்களே பட்டியலை காவல் துறைக்குக் கொடுத்து, இவர்கள்தான் செய்தார்கள், ஊருக்கு களங்கம் கற்பித்துவிட்டார்கள். இவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள் என்று கூறினார்கள். ஊர் மக்களே வந்து கொடுத்ததன்படிதான் காவல் துறை வழக்குப் போட்டிருக்கிறது. மற்றபடி, அந்த ஊர் மக்களுக்கு நாங்களே சென்று முழுமையாக நிவாரண உதவிகளை வழங்கினோம். ஊர் மக்கள் எங்கள்மீதும் பாசமாக இருக்கிறார்கள், நம்மீதும் பாசமாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தகவல் அவைக்குத் தவறான தகவல் என்பதை மட்டும் சொல்கிறேன். எல்லோருமே அதாவது, ஊர் மக்கள் நம்முடைய நிவாரணப் பணிகளை, நம்முடைய பணிகளை மெச்சுகிறார்கள், பாராட்டுகிறார்கள், வரவேற்கிறார்கள், ஏற்றுக்கொள்கிறார்கள். சம்பந்தமே இல்லாமல், திடீரென 4, 5 இளைஞர்கள் உள்ளே வந்து ஒரு பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். அந்த தகவலைத்தான் நம்முடைய அண்ணன் மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் தெரிவித்தார்கள். அதே விஷயம்தான், இந்த விஷயத்திலும் நடந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊர்க்காரர்களே, இன்னார்தான் செய்தார்கள் என்று எஸ்.பி.-யிடம் பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் தகவலுக்காகச் சொல்கிறேன். வேறொன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மெய்யநாதன், உரையை முடியுங்கள்.

[2019 ஜனவரி 4

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், இணைந்து செயலாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். தமிழக சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தினுடைய தலைவர் மாண்புமிகு தலைவர் தளபதி அவர்கள், கஜா புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து தமிழக முதலமைச்சர் நிவாரண நிதிக்கு, கழகத்தின் சார்பாக 1 கோடி ரூபாயை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு மாத சம்பளத்தை வழங்கியிருக்கிறோம்.

பிற்பகல் 5-10

அதுமட்டுமல்லாமல், இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கின்ற, பாதிக்கப்படாத மாவட்டங்களிலிருந்து கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிவாரணப் பொருட்களைத் திரட்டி வந்து, பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கழகத்தினுடைய தலைவர் தளபதி அவர்கள், ஆலங்குடி தொகுதியை வந்து பார்த்துவிட்டு, அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லி, திருச்சி மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் மரியாதைக்குரிய அண்ணன், முன்னாள் அமைச்சர் நேரு அவர்களிடம் சொல்லி, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிகமாக நிவாரணப் பொருட்களை வழங்க வேண்டுமென்று சொல்லி, அதிகமாக நிவாரணப் பொருட்களை அங்கே வழங்கினார். அதுமட்டுமல்ல; முரசொலி நிருவாக இயக்குநர், இளஞ்சூரியன் அண்ணன் உதயநிதி அவர்களிடம் தொலைபேசியில் பேசினோம். அண்ணன் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நிவாரணம் வேண்டுமென்று பேசினோம். முரசொலி நிருவாக இயக்குநர் உதயநிதி அவர்கள், தனது சொந்தப் பணத்திலிருந்து 25 இலட்சம் ரூபாய்க்கு நிவாரணப் பொருட்களை ஆலங்குடி தொகுதிக்கு அனுப்பி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி நிவாரணப் பொருட்களை வழங்கியதன் அடிப்படையிலே-இன்றைக்கு நாங்கள் தனியாள்; நாங்கள் ஆளுங்கட்சி கிடையாது. சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர்; ஆலங்குடி தொகுதியில் இருக்கின்ற 65,000 குடும்பங்களுக்கு இவர்கள் திரட்டித் தந்த நிவாரணப் பொருட்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழங்கியிருக்கின்றோம்.



2019 ஜனவரி 4] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

இங்கே நான் குறிப்பிட்ட அனைவருக்கும் இந்த அவையின் மூலமாக என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-1-2019), சனிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. (i) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-4)/2017 மற்றும் II(2)/வவப/532(d-5)/2017 ஆகிய எண்களிட்ட அறிவிக்கைகளுக்கு பிழைத் திருத்தங்கள் வெளியிட்டது குறித்து 11-7-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 80-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; (ii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-4)/2017ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத் திருத்தங்கள் வெளியிட்டது குறித்து 13-7-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 81-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-4)/2017 மற்றும் II(2)/ வவப/532(d-5)/2017 ஆகிய எண்களிட்ட அறிவிக்கைகளுக்கு பிழைத் திருத்தங்கள் வெளியிட்டது குறித்து 27-7-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 86-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் (iv) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத் திருத்தங்கள் வெளியிட்டது குறித்து 31-7-2017 ஆம் நாளிட்ட

[*2019 ஜனவரி 4*

*வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் அரசாணை (நிலை) எண் 87-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]*

*2.* (i) *29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-*II*, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின்* II*(2)/வவப/532(*d*-4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 31-7-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் அரசாணை (நிலை) எண் 88-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும்* (ii) *29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-*II*, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின்* II*(2)/வவப/532(*d*-4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 18-8-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் அரசாணை (நிலை) எண் 93-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]*

*3. (i) தமிழ்நாடு மாநிலத்தில் எதிர் இலாபமீட்டுவதைக் கண்காணிப்பதற்கான மாநில அளவிலான ஒரு குழுவினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களைக் கொண்டு ஏற்படுத்தியது குறித்து 9-10-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் அரசாணை (நிலை) எண் 122-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) 9-10-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-*II*, பிரிவு-2 இல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் (*II*)(2)/வவப/838(*d*)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு பதிலாக, தமிழ்நாடு மாநிலத்தில் எதிர் இலாபமீட்டுவதைக் கண்காணிப்பதற்கான மாநில அளவிலான ஒரு குழுவினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களைக் கொண்டு ஏற்படுத்தியது குறித்து 16-3-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் அரசாணை (நிலை) எண் 36-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]*



*2019 ஜனவரி 4*]

*4. (i) தமிழ்நாடு முன் தீர்வுக்கான அதிகார அமைப்பினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தியது குறித்து 20-10-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் அரசாணை (நிலை) எண் 145-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை;* (ii) *சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கான தமிழ்நாடு முன் தீர்வு வழங்கும் மேல் முறையீட்டு அதிகார அமைப்பினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தியது குறித்து 17-11-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் அரசாணை (நிலை) எண் 171-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும்* (iii) *20-10-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-*II*, பிரிவு-2 இல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் (*II*)(2)/வவப/868(*b*)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு பதிலாக, தமிழ்நாடு முன் தீர்வுக்கான அதிகார அமைப்பினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தியது குறித்து 11-6-2018-ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் அரசாணை (நிலை) எண் 64-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]*

*5. பதிவு பெற்ற வழங்குநரால், மாநிலத்திற்குள்ளே வழங்கப்படும் வரிவிதிக்கத்தக்க சரக்குகள் மீதான மாநில வரியிலிருந்து ஏற்றுமதியின் பொருட்டு பதிவு பெற்ற பெறுநருக்கு அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்து 23-10-2017 ஆம் நாளிட்ட வணிகவரி மற்றும் பதிவுத் (*B1*) துறையின் அரசாணை (நிலை) எண் 146-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*6. (i) 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான படிவம்* GSTR *3*B*-ல் அளிக்கப்பெற வேண்டிய விவர அறிக்கையினை உரிய தேதிக்குள் அளிக்கத் தவறிய அனைத்துப் பதிவு பெற்ற நபர்களுக்கும் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் பிரிவு 47-ன்கீழ் செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்தது குறித்து*

15-9-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 105-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) மாநிலங்களுக்கிடையே வரி விதிக்கத்தக்க கைவினைப் பொருட்களின் வழங்கல்கள் செய்யும் நபர்களுக்கு 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெறுவதிலிருந்து விலக்களித்தது குறித்து 15-9-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 106-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (iii) 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் பிரிவு 51-ன் உட்பிரிவு (1)-ன் கூறுகள் (a), (b) மற்றும் (d)-ன்கீழ் குறிப்பிடப்பட்ட நபர்களைப் பொறுத்தவரையில் மேற்படி சட்டத்தின் பிரிவு 51-ன் உட்பிரிவு (1)-ன் வகைமுறைகள் 18-9-2017 அன்று முதல் நடைமுறைக்கு வரும் நாளாக நியமித்தது குறித்து 15-9-2017-ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 107-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

7. (i) 29-6-2017ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-14)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 21-9-2017ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 111-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-15)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 21-9-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 112-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (iii) அணுசக்தித் துறையால் இந்திய அணுமின் கழக லிமிடெட்-க்கு வழங்கப்படும் கனநீர் மற்றும் அணு எரிபொருட்களை மாநிலத்திற்குள்ளான வழங்கல் மீதான மாநில வரியிலிருந்து விலக்களித்தது குறித்து 21-9-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 113-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]





8. (i) 29-6-2017ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 22-9-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 114-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-5)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 22-9-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 115-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (iii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-8)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 22-9-2017ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 116-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

9. (i) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-14)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 22-8-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 94-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-15)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 22-8-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத்(B1)துறையின் அரசாணை (நிலை) எண் 95-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-16)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 22-8-2017ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை

(நிலை) எண் 96-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (iv) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-20)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 22-8-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 97-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

10.(i) 29-6-2017ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-16)/2017 ஆம் எண்ணிட்ட அறிவிக்கைக்கு பிழைத்திருத்தம் செய்தது குறித்து 25-9-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 117-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (II) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d-15)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 28-9-2017ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 120-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

11. (i) 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) செயல் நோக்கங்களுக்காக அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை நியமித்தது குறித்து 14-7-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 82-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) 14-7-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் (II)/(2)/வவப/562(b)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு பதிலாக, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களை 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு 19/2017) செயல் நோக்கங்களுக்கான தகுந்த





அலுவலர்களாக நியமித்தது குறித்து 10-7-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 79-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

12. 11-6-2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் (II)/(2)/வவப/519(a)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத் திருத்தம் வெளியிட்டது குறித்து 3-9-2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 111-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017-ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

13. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 10-8-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 91-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

14. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து (i) 17-8-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 92; (ii) 30-8-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 100; (iii) 15-9-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 108; (iv) 28-9-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 121; (v) 13-10-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 138; (vi) 17-10-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 141; (vii) 25-10-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 148; (viii) 27-10-2017ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 151; (ix) 15-11-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 164 மற்றும் (x) 21-12-2017 ஆம் நாளிட்ட

வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 182 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; (xi) 30-8-2017 ஆம் தேதியிட்ட தமிழக அரசின் அரசிதழ் அசாதாரணத்தில் பிரிவு 1(a) பகுதி III-ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை அறிவிக்கையின் SRO A-40(a)/2017-ல் வரிசை எண் 2(vii) மற்றும் 2(viii)-ன் விதிமுறைகள் 1-2-2018 அன்று செயலுக்கு வரும் நாளாக நியமித்தது குறித்து 29-12-2017ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 187-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (xi) 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 29-12-2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 188-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

15. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து (i) 23-1-2018ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 6; (ii) 7-3-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 34; (iii) 23-3-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 40; (iv) 18-4-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 50; (v) 13-6-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 66; (vi) 19-6-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 68 மற்றும் (vii) 6-7-2018 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 77 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2017ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

16. 2017-2018 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)





17. 2017-2018ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்-ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2018). (ஆங்கிலம்)

2. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2018). (ஆங்கிலம்)

3. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2018). (ஆங்கிலம்)

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ்-ஆங்கிலம்)

5. 2019ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 2 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

# இணைப்பு

*(167 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

Hon'ble Members of the Legislative Assembly,

Vanakkam.

It is my privilege and honour to inaugurate this sixth session of the fifteenth Legislative Assembly by delivering my address in this august House. I take this opportunity to extend my warm greetings to all of you for the New Year and the ensuing Pongal festival. I wish that the New Year will bring greater prosperity and happiness to the people of Tamil Nadu.

2. This Government, led by the Hon'ble Chief Minister is being steadfast in carrying forward the proud legacy of the late Chief Minister J Jayalalithaa, by implementing programmes and policies envisioned by her. As a true welfare State, this Government continues to focus on the socio-economic development of the State, with a special emphasis on protecting the interests of the poor and other vulnerable sections of society. I am glad to mention that the Hon'ble Chief Minister with his able leadership has made the administration responsive to public needs and has been taking swift decisions by clearing an unprecedented number of 11,286 files since he assumed office.

3. Tamil Nadu, as always, has continued to be a fiscally prudent State, notwithstanding several financial challenges. However, the revenue deficit has been on the rise in recent years mainly due to the devolution formulae evolved by the 14$^{th}$ Finance Commission which has adversely affected the State finances. Further, implementation of Ujwal Discom Assurance Yojana (UDAY) and 7$^{th}$ Pay Commission recommendations has also widened the revenue deficit. The delay in the release of Integrated Goods and Services Tax (IGST) and Goods and Services Tax (GST) compensation, due to the State, has also accentuated this problem. The Fifteenth Finance Commission, constituted by the Hon'ble President of India to give recommendations on the distribution of financial resources between Centre and States, visited the State in September 2018 and has had detailed discussions with the Government. I earnestly hope that the 15$^{th}$ Finance Commission will uphold the principles of equity and efficiency and will give a fair deal in financial devolution to the State of Tamil Nadu.

4. Tamil Nadu has successfully embraced the GST despite the challenges associated with the transition to a completely new tax regime. However, there has been delay by the Government of India in the release of State share of IGST and in the settlement of GST compensation on the guaranteed 14 per cent growth in SGST revenues. The Government of India is yet to make IGST settlement of Rs.5,454 crore relating to the year

2017-18 and short payments on GST compensation of Rs.455 crore for the year 2017-18 and Rs.1,305 crore for the period from April to September 2018, which are adversely affecting the State finances. I therefore urge the Central Government to settle these dues at the earliest and ensure prompt release of such dues in future.

5. The State of Tamil Nadu has expressed its concerns on various National legislations such as suggesting amendments to National Medical Commission Bill, withdrawal of Dam Safety Bill, issues related to Motor Vehicles (Amendment) Bill, Electricity Bill etc. These concerns have been put forward by the State to uphold the interests of the people of Tamil Nadu. The Government of India has introduced the Dam Safety Bill in the Parliament, which infringes upon the State's rights. I hope the concerns of the State will be impartially addressed and resolved by the Government of India in such legislations.

6. The Government has issued orders for permanent closure of the Sterlite copper plant in Thoothukudi with immediate effect, as the unit has failed to comply with the environmental norms. This order has been challenged by Sterlite Industries in the National Green Tribunal (NGT) and the Tribunal has ordered to reopen the unit in spite of the objections raised by this Government. This order has already been stayed by the Madurai bench of the Madras High Court. This Government will appeal against the order of the National Green Tribunal.

7. Tamil Nadu has been pioneering various research activities. The proposals by the Central Government to close some of the research and other Central institutions in the State will adversely impact the scientific research work in Tamil Nadu which are beneficial to farmers and fishermen. I expect that the request of State Government to continue the operation of Central institutes like the Central Institute of Brackish water Aquaculture (CIBA) in Chennai, Sugarcane Breeding Institute at Coimbatore, National Research Centre for Banana at Tiruchirappalli, Potato Research Institute at Ooty and the Central Press at Coimbatore will be duly considered by the Government of India.

8. The State has recently suffered from the devastating Gaja cyclone, which ravaged the Cauvery delta area and the central districts of the State, causing enormous destruction in terms of loss of life, damages to houses, crops, coconut and other plantations and severe damages to power infrastructure. The State Government had taken prompt pre-emptive action to evacuate people from vulnerable coastal areas and alerted the fishermen as part of its pre-monsoon preparedness, which saved large number of lives. The Government also acted swiftly in the aftermath of the calamity and put 4.81 lakh persons in relief camps and has compassionately extended gratuitous



relief to 6.4 lakh affected families which includes a package of essential items. The Hon'ble Chief Minister announced a comprehensive package of Rs.2,335.48 crore so far for immediate relief and rehabilitation of the affected areas. I thank the Central Government for expediting the release of Rs.353.70 crore towards second instalment of its committed contribution to SDRF allocation for the year 2018-19. I applaud the Hon'ble Chief Minister for unveiling a programme for replacing one lakh fully damaged huts with concrete houses and extending full financial support for rejuvenation of coconut and other plantations under project mode. The State Government has sought assistance of Rs.2,709 crore as immediate relief and Rs.15,190 crore for permanent restoration from Government of India, following which a Central team visited the affected districts. While thanking the Government of India for sanctioning Rs.900.31 crore additionally under National Disaster Relief Fund (NDRF) for immediate relief, I request the Government of India to extend adequate additional financial assistance to the State Government under ongoing schemes to rebuild the affected houses and restore the economic livelihood of people.

9. This Government has strongly opposed the recent move by the Central Water Commission for giving clearance to Government of Karnataka to prepare the Detailed Project Report for constructing a reservoir at Mekedatu in Karnataka. This act is a blatant violation of the Hon'ble Supreme Court judgment on the order of the Cauvery Water Disputes Tribunal which states that 'upper riparian State shall not take any action so as to affect the scheduled deliveries of water to lower riparian States'. It is my duty to point out that this august House has also passed a resolution unanimously condemning and opposing the action of the Government of Karnataka and the Central Water Commission. It has also urged the Government of India to direct the Central Water Commission immediately to withdraw the permission granted for preparing the Detailed Project Report and to restrain the Government of Karnataka or its agencies from taking up any work at Mekedatu or at any other place in the Cauvery basin of Karnataka, in violation of the final order of the Cauvery Water Disputes Tribunal and the judgment of the Hon'ble Supreme Court, without the consent of the State of Tamil Nadu.

10. This Government opposes the attempt by Kerala to construct a new dam to replace the existing Mullai Periyar Dam and will continue its pursuit of raising the water level of this dam to 152 feet. Though the inter-State river water disputes can be better resolved through mutual trust and understanding, the State of Tamil Nadu has been repeatedly forced to seek legal remedy to protect its legitimate riparian rights. Therefore, following the footsteps of late Chief Minister J Jayalalithaa, our Hon'ble Chief Minister is committed to protecting the interests of the farmers and

the people of Tamil Nadu by all legal means in inter-State river water disputes.

11. The arrest of fishermen and confiscation of their fishing vessels by the Sri Lankan Navy continues unabated. In the last two years, 551 fishermen were apprehended by the Sri Lankan Navy. I appreciate the efforts taken by the Hon'ble Chief Minister in securing the release of 206 boats and 543 fishermen who were languishing in the Sri Lankan prisons. The State Government reiterates its stand that Government of India should amicably resolve this issue to find a lasting solution with the Sri Lankan Government.

12. The 'Tamil Nadu Vision 2023' Document conceived by the late Chief Minister J Jayalalithaa has always served as the guiding light for this Government to take the State on the path of development. The Government has laid down the broad policy framework and strategies for the critical areas of development which includes the recently unveiled Eco-tourism policy, Forest policy, Youth policy, Food processing policy, e-Governance policy and Information Communication Technology policy. I hope that this well-thought out policy framework will pave the way for the State to achieve its developmental goals.

13. I am happy to note that the State Government has won several accolades such as Krishi Karman award for agriculture and Awards of Excellence instituted by 'India Today' in categories of 'Overall best performing State', 'Tourism', 'Infrastructure' and in 'maintenance of law and order'. Further, the State also received best practice award for the computerisation of Public Distribution system, recognition for high quality health services, including best performance in organ transplantation as well as awards for renewable energy. The State is also ranked second in good governance in the Public affairs index created by the Public Affairs Centre, Bengaluru. The State ranks second in the Sustainable Development Goals index compiled and published recently by Niti Aayog. These accomplishments bear testimony to the remarkable administrative prowess of this Government in ensuring overall development of the State.

14. The Government has approved the creation of Puratchi Thalaivar M.G.R. Arts and Social Development Research Chair in the name of Bharat Ratna Dr.M.G.R at a cost of Rs.1.08 crore in the International Institute of Tamil Studies, Chennai. In the interest of promoting Tamil language and culture, a conference of international Tamil organizations will be held once in two years through World Tamil Sangam, Madurai. I hope that the Government of India will favourably consider the requests of the State Government to confer 'Bharat Ratna' posthumously on Tamil Nadu's revered leaders, Perarignar Anna and Puratchi Thalaivi Amma and to rename the Chennai Central Railway Station as 'Puratchi Thalaivar Dr. M.G. Ramachandran Central Railway Station'.



15. The maintenance of law and order is a pre-requisite for the overall development of the State. This Government has effectively maintained law and order, ensuring peace and stability in the State. The wellness programme launched by the Government to rejuvenate police personnel is a path breaking programme that will motivate the police force and keep their morale high. I wish to point out that the recent National Crime Records Bureau (NCRB) report has named Chennai as the safest metro and Coimbatore as the safest city for women. The launch of 181 helpline for women's safety and 'Kavalan App' of Police will definitely strengthen the efforts of the State Government in ensuring safety and security of the people, particularly women.

16. The State Government has always adopted a multi-pronged approach towards the development of agriculture and its allied sectors, aimed at creating sustainable livelihood opportunities for the farmers through technological interventions and diversification. It is heartening to note that the State is one of the top performers in implementing the 'Pradhan Mantri Fasal Bima Yojana', a centrally sponsored scheme, aimed at mitigating weather risk through crop insurance. The 'Mission on Sustainable Dry Land Agriculture' to improve the productivity of millets, pulses, cotton and oil seeds in dry lands, Collective Farming Scheme, Integrated Farming, accelerated implementation of micro irrigation schemes, strengthening of irrigation structures and remunerative value addition through Farmer Interest Groups and Farmer Producer Organisations etc., will certainly enhance farmers' income and promote sustainable farming.

17. This Government is taking several measures to strengthen irrigation structures and augment water storage capacity. The 'Tamil Nadu Irrigated Agriculture Modernisation Project' (TNIAMP) at an outlay of Rs.2,962 crore has already been launched. The programme of permitting farmers to collect silt from irrigation tanks and 'Kudimaramath' programme to rejuvenate irrigation structures, are being implemented with full zeal. I appreciate the Government for immediately sanctioning Rs.387.60 crore to construct the new Kollidam regulator at Mukkombu in Trichy district to replace the old regulator which was damaged in the recent flood. The comprehensive Athikadavu-Avinashi Scheme has been taken up at a cost of Rs.1,652 crore and will benefit 24,468 acres of cultivated lands besides recharging ground water and augmenting water supply in Coimbatore, Erode and Tiruppur districts, by channelising surplus water of Bhavani river to 74 tanks and 971 ponds. The tender process has already commenced and the project will be launched very soon by the Hon'ble Chief Minister.

18. The flagship scheme of 'Free distribution of milch cows, goats and sheep' being implemented by this Government since 2011, has

provided sustained livelihood opportunities to the rural poor, insulating them from economic vulnerabilities. These efforts have been supplemented by initiatives such as 'Poultry Development Scheme', 'Fodder Development Scheme' and by substantially augmenting the veterinary infrastructure throughout the State. The State has witnessed remarkable growth in the dairy sector due to the concerted efforts of the Government with the milk procurement reaching a record level of 37.03 lakh litres during October 2018.

19. This Government is committed to improving the Fisheries Sector, by strengthening of infrastructure like fishing harbours, fish landing centres, fish processing parks and promoting inland aquaculture. The Government is working in tandem with the Government of India to encourage deep sea fishing using tuna long-liners. The development of fishing harbours at Mookaiyur and Kunthukal in Ramanathapuram district and at Poompuhar in Nagapattinam district will further promote deep sea fishing.

20. The innovative strategies in poverty reduction under 'Pudhu Vazhvu' led to the formation of Self Help groups, Village Poverty Reduction Committees and Panchayat Level Federations ensuring better economic and social empowerment of the rural poor in 120 blocks of the State. These strategies are now being scaled up to cover the remaining 265 blocks under the 'Tamil Nadu State Rural Livelihood Mission' (TNSRLM) thereby covering the whole State. Through the Self Help Group - Bank Linkage Programme, credit linkages are being extended under TNSRLM, to start micro-enterprises for sustained economic security of the rural poor. The TNSRLM model has been replicated in the urban areas through the 'Tamil Nadu State Urban Livelihoods Mission' for providing sustained employment opportunities to the urban poor.

21. The State has taken earnest efforts for implementing the 'Swachh Bharat Mission' effectively to meet its national goals. I am happy to note that 100 percent sanitation coverage has been achieved in the State and all Village Panchayats have been declared Open Defecation Free (ODF). The State is taking active steps for sustaining the ODF status to attain the goal of universal sanitation in the State. Tamil Nadu is the first State in the country to achieve universal coverage in the establishment of Solid Waste Management Systems among Village Panchayats. The 'Thooimai Kaavalars' have ensured that last mile sanitation is a reality. This Government is committed to protecting the environment and eco system and has banned certain 'use and throw away plastics' with effect from 1st of January, 2019.

22. I take pride in the fact that the policy of 'Universal Public Distribution System' (PDS) of the State Government has ensured food



security for all. The supply of rice free of cost and supply of sugar, dal and palm oil at subsidised prices to eligible card holders, has ensured that the State is free from hunger. Implementation of 'Comprehensive Computerization Scheme' in PDS operations with Aadhaar linkage has eliminated bogus cards and multiple entries of beneficiaries. This Government has achieved the remarkable feat of distributing Aadhaar linked smart cards to 2.01 crore families to ensure a seamless and transparent Public Distribution System. Following the footsteps of late Chief Ministers M.G.Ramachandran and J Jayalalithaa, who have always helped the poor and downtrodden during calamities, this Government will distribute Pongal Gift hampers containing raw rice, sugar, raisins, cashew nut, cardamom and sugarcane to all card holders to celebrate the Pongal festival, to mitigate the impact of Gaja cyclone in Cauvery delta and the widespread drought in northern districts. In addition to this, I am happy to announce that this Government will give a cash support of Rs.1,000/- per family for the celebration of Pongal festival which will be applicable for the entire State except Thiruvarur district where the Model Code of Conduct is in force, in view of the by-election to Thiruvarur assembly constituency.

23. The systematic efforts taken by the late Chief Minister J Jayalalithaa brought about a turn around in the power sector in the State. This Government continues her initiatives by implementing thermal and hydro-electric projects to the tune of 17,100 MW at a total estimated cost of Rs.1.27 lakh crore, which are under various stages of execution. Tamil Nadu continues to top the States producing renewable energy, with an installed capacity of 11,716 MW.The transmission infrastructure throughout the State is being strengthened with assistance from Japan International Cooperation Agency (JICA), Asian Development Bank (ADB), KfW and National Clean Energy Fund at a cost of Rs.9,178 crore. A robust power sector has become the biggest strength of the State for attracting new investments.

24. The State has been undertaking major road infrastructure projects including construction of by-passes, ring roads and bridges under the 'Comprehensive Road Infrastructure Development Programme'. The decision of the Government to transfer 7,964 kilometre length of 2,596 Panchayat and Panchayat Union roads from rural local bodies to Highways Department for upgrading them in a phased manner over three years, to the standards of Other District Roads is a laudable initiative. The first phase of upgrading 1,436 kilometre of roads at a cost of Rs.608 crore is under progress and the second phase to upgrade 1,538 kilometre of roads at a cost of Rs.882 crore has been sanctioned by the Government this year. The World Bank aided 'Tamil Nadu Road Sector Project-II' is also contributing immensely to the creation of road infrastructure of high standards in the

State. I compliment the State for developing an excellent road network which provides the core strength for accelerated economic development of the State.

25. The development of certain major infrastructure projects requires close coordination between the Union and State Governments. Some critical projects such as Chennai Port-Maduravoyal Elevated Corridor, Chennai-Bangalore Industrial Corridor, Chennai-Kanyakumari Industrial Corridor and upgrading the East Coast Road as four lane National Highway, are of vital importance to the State. I hope that the Government of India will give paramount priority to these projects and will expedite their implementation.

26. The State Transport Corporations operate more than 21,678 buses on about 19,488 routes carrying 1.74 crore passengers per day. Despite revision in fares, the bus ticket tariffs in Tamil Nadu are still among the lowest in the country. The Government is absorbing the additional costs that arise due to increase in diesel prices and has sanctioned Rs.268.35 crore as Diesel Price Compensation to the Transport Corporations from January 2018 to October 2018. The Government is also embarking on a comprehensive restructuring programme for the transport corporations with the support of the German bilateral financing agency, KfW. This would involve replacement of the aging fleet with fuel efficient BS-VI buses and procurement of environment friendly electric buses in metro cities like Chennai, Coimbatore and Madurai.

27. The State Government has revived the schemes of 'Integrated Urban Development Mission' (IUDM) and 'Chennai Mega City Development Mission' (CMCDM) in 2018-19 with an annual allocation of Rs.750 crore and Rs.500 crore respectively, to augment financial resources for urban infrastructure development. The 'Smart Cities' programme is being implemented in eleven cities. Various urban projects are currently being undertaken in 28 cities and towns of Tamil Nadu under the 'Atal Mission for Rejuvenation and Urban Transformation' (AMRUT) programme. The Government is also implementing the 'Tamil Nadu Sustainable Urban Development Project' (TNSUDP) with World Bank aid and the 'Tamil Nadu Urban Flagship Investment Programme' (TNUFIP) with Asian Development Bank assistance, for giving greater fillip to meeting the growing urban infrastructure requirements of the State.

28. One of the noteworthy initiatives of this Government is to ensure slum-free cities and hut-free villages in the State. The State has been a forerunner in providing houses to the rural poor through the 'Chief Minister's Solar Powered Green House Scheme' supplementing the efforts under the 'Pradhan Mantri Awas Yojana (Gramin)'. The Government has constituted the 'Shelter Fund' to raise adequate resources to meet the



housing needs of the urban poor. The Tamil Nadu Slum Clearance Board (TNSCB) has so far taken up construction of 5,16,741 dwelling units at a project cost of Rs.21,604 crore under the 'Pradhan Mantri Awas Yojana (Urban)'. The Government has formulated a comprehensive housing project called 'Tamil Nadu Housing and Habitat Development Project' to transform slums in Chennai, Thiruvallur and Kancheepuram Districts with World Bank funding assistance. A similar project for areas other than Chennai Metropolitan Area has been posed to the Asian Development Bank for assistance. The Common Building Rules will also be notified shortly to enhance the ease of doing business in the housing sector. Further, the decision of the Government to raise the Floor Space Index (FSI) will go a long way to make housing more affordable.

29. The Chennai Metro Rail has provided a world class urban public transport facility in Chennai. The Phase-I has already commenced operations and is expected to be fully commissioned by January 2019. The Phase-I extension from Washermenpet to Wimco Nagar at an estimated cost of Rs.3,770 crore will be ready for inauguration by June 2020 as scheduled. The State Government has already accorded in-principle approval for the implementation of Phase-II of Chennai Metro Rail Project covering 107.55 kilometre in three corridors. I am happy to inform this august House that the Japan International Cooperation Agency has now approved the funding of Rs.20,196 crore for the priority stretches totaling 52 kilometre from Madhavaram to Sholinganallur and Madhavaram to Chennai Mofussil Bus Terminus (CMBT). The loan agreement for the first tranche of approximately Rs.4,770 crore was signed on 21$^{st}$ December, 2018 and work will commence shortly. I am glad to announce that the Chennai Unified Metropolitan Transport Authority (CUMTA) Act and its relevant rules will be notified on 16$^{th}$ January, 2019 to make the integrated functioning of Multi Modal Transportation System a reality.

30. With the Gross Enrolment Ratio in higher education at 48.6, Tamil Nadu continues to reign as *numero-uno* in India. In order to make higher education affordable to students from economically backward regions and rural areas, 41 University constituent Arts and Science Colleges are being converted to Government Arts and Science Colleges in a phased manner from 2018-19. The scholarship support to first generation graduates has also made immense contribution in this regard. Further, 264 new courses have been started during this year in 61 Government Arts and Science Colleges. Higher education institutions should be headed by competent and talented Vice Chancellors to improve the quality of teaching and research to international standards. Accordingly, this Government is adopting a transparent selection procedure in appointing Vice Chancellors. Similarly the vacancies in the syndicate of Universities are being filled up promptly.

I am confident that these efforts of the Government will substantially improve the quality of higher education and research work in the State.

31. I compliment the State for providing essential study materials like books, notebooks and laptops, four sets of uniform, school bags, footwear, bus passes and bicycles to students of Government and Government aided schools, free of cost. The special cash incentives provided by the State to girl children have increased their enrolment and reduced drop-outs. The Government has been making substantial investments in the development of school infrastructure and upgrading schools wherever necessary to ensure availability of high quality education. It is heartening to note that the 'Atal Tinkering labs', Smart classes and Hi-Tech labs in schools have been effectively leveraging the capabilities of modern technology to impart quality education to students. As the literacy among tribals is significantly lower than the State average, this Government will soon launch a scheme to extend financial support to Non Governmental Organisations for opening schools in interior tribal areas, catering substantially to tribal students.

32. I am proud to say that Tamil Nadu has made great strides in comprehensive public health service delivery. As per the latest Sample Registration System Data, the Maternal Mortality Ratio (MMR) has reduced to 66 per one lakh live births and Infant Mortality Rate (IMR) has been brought down to 17 per 1,000 live births. The ambitious 'Chief Minister's Comprehensive Health Insurance Scheme' launched in 2012 continues to deliver state-of-the-art quality health care to the poor and needy. The Government has recently increased the insurance coverage from Rs.2 lakh to Rs.5 lakh per family by integrating the State scheme with the Government of India's flagship scheme of 'Pradhan Mantri Jan Arogya Yojana' from September 2018. I am delighted to note that the Government of India's 'Pradhan Mantri Matru Vandana Yojana' which benefits pregnant and lactating women giving first live birth, has also been synchronised with the State Government's 'Dr.Muthulakshmi Reddy Maternity Benefit Scheme' with effect from April 2018. The State sponsored health schemes like 'Menstrual Hygiene Programme', 'Amma Baby Care Kit' and 'Amma Magapperu Sanjeevi' will continue to augment the efforts of the State in ensuring maternal and child care. I thank the Government of India for sanctioning Rs.1,264 crore for establishing AIIMS at Thoppur in Madurai District. It will go a long way in providing high-end healthcare services to the people of southern districts of Tamil Nadu.

33. Industrial sector being the engine of economic growth and development, the State Government is giving special focus to attract new investments. The State being a major automobile hub, thrust will be given for the promotion of new-generation electric vehicles with appropriate



incentives. Renowned organisations such as National Council of Applied Economic Research (NCAER) have hailed the efforts of the State in fostering industrial development. The Government of Tamil Nadu is organising the second edition of Global Investors Meet (GIM) on 23rd and 24th of January 2019 at Chennai Trade Centre. Japan, South Korea, Australia, France and United Kingdom are the partner nations for GIM-2019. The State Government is taking all efforts to make GIM-2019 a resounding success. To promote aerospace and defence production, this Government will release the Tamil Nadu Aerospace and Defence Industrial policy shortly. The establishment of industrial hubs for defence products in Chennai - Vellore - Salem - Hosur -Coimbatore-Trichy corridor will definitely improve the prospects of Tamil Nadu as a major defence manufacturing force. I request the Government of India to expedite the implementation of this defence industrial production corridor project.

34. The Government has taken various steps to provide a vibrant business environment and eco system for starting new enterprises, through single window clearance besides promoting innovation and entrepreneurship. Start-up entrepreneurs are being promoted under the 'New Entrepreneur-cum-Enterprise Development Scheme' (NEEDS). The new startup and innovation policy will be unveiled by this Government shortly to improve the startup environment. The Government has amended the Tender Transparency Act to make it mandatory for State Government departments and Public Sector Undertakings to procure at least 25 percent of the requirement of goods and services from Medium, Small and Micro Enterprises (MSME) when they participate in the tender. The numerous initiatives taken by the Government will definitely give an impetus to the MSME sector in Tamil Nadu.

35. The Government has taken up eGovernance initiatives with the primary objective of improving public service delivery and ushering in transparency and efficiency in public administration. An online portal for e-Sevai services has been developed and launched to make these services available round the clock to the public. Under land record modernisation programme, the Tamil Nadu eGovernance Agency has developed 'e-Adangal', an application for digitising the adangal registers. The Registration Department has implemented the prestigious web-based comprehensive software called STAR 2.0 which ensures end-to-end digitisation of the registration process. The completion of land record modernisation and computerisation of registration process will help the Government in updating the land records online, facilitating speedy disposal of land record mutations.

36. The Tamil Nadu Skill Development Corporation has been closely working with the industries in the State to identify skill gaps and

for conducting training to improve the employability of our youth. I am happy to note that the State Government is ensuring the skilling of the rural and urban poor through the Centrally Sponsored schemes namely 'Deen Dayal Upadhyaya Grameen Kaushal Yojana' (DDU-GKY), 'Pradhan Mantri Kaushal Vikas Yojana' (PMKVY) and 'Employment through Skills Training & Placement' (ESTP) under the 'Deendayal Antyodaya Yojana - National Urban Livelihoods Mission' (DAY-NULM) programme. I am confident that all these endeavours will significantly improve the employability of the educated youth while also resolving the problem of skill deficit presently being faced by the industries.

37. The Government is committed to ensuring the welfare of the youth and strives to develop world class sportspersons in the State by providing necessary infrastructure and financial support like sports scholarships and awarding high cash incentives to the medal winners and their coaches in National and international tournaments such as Olympics, Asian Games, Commonwealth Games, South Asian Federation Games and the National Games. I appreciate the Government for announcing three percent reservation in employment for eminent sportspersons.

38. Tamil Nadu has been ranked first in both domestic and foreign tourist arrivals in the Country for four consecutive years from 2014 to 2017. The promotional slogan 'Enchanting Tamil Nadu' continues to attract large number of tourists to the State. The State has signed a Memorandum of Understanding recently with the Asian Development Bank (ADB) for the Tranche IV funding of Rs.218 crore for continuing our efforts in promoting destination and circuit based tourism.

39. The Government has always given utmost importance to the safety, empowerment and welfare of socially disadvantaged sections of the society like the Scheduled Castes, Scheduled Tribes, Most Backward Classes, De-notified Communities, Backward Classes and Minorities. I am happy to mention that the Vanniyar Trust Act has already been notified by this Government. The post-matric scholarship schemes for the students belonging to the socially disadvantaged sections have given them access to higher education. The Government of India has revised the guidelines of post-matric scholarship for Scheduled Caste students, thereby increasing the committed liability of the State from Rs.353.55 crore to Rs.1,526.46 crore with effect from 2017-18. As a result, post-matric scholarship scheme, though a centrally sponsored scheme, the State is forced to bear almost the entire liability. I request the Government of India to reconsider this issue and hope that the guidelines would be revised to share the expenses between the Centre and States as in the case of other Centrally Sponsored Schemes.



40. As a welfare State, it is the duty of the Government to protect and safeguard the vulnerable sections of the society like women, children, differently-abled, transgenders, senior citizens and destitutes. The Government will continue to provide assistance through the marriage assistance schemes, social security pensions, cradle baby scheme and integrated special homes for senior citizens and destitute children. The 'Integrated Child Development Services' (ICDS) scheme is being effectively implemented to ensure proper development of children, adolescent girls, pregnant women and nursing mothers by providing them nutritious food and supplements. The 'Puratchi Thalaivar M.G.R. Nutritious Meal Programme' is a praise worthy scheme of Tamil Nadu which tends to ensure overall nutritional security of all school-going children by providing them variety meals with eggs. I am happy to state that 'Amma Two Wheeler' scheme is empowering the working women by providing them financial assistance upto Rs.25,000/- each to purchase two wheelers.

41. I have broadly outlined the policies and programmes of the State Government. We all know that democracy fosters noble institutions. This Democracy only has enabled all of you to represent the people who have elected you to this august House with the confidence that you will serve the State and its people with utmost dedication and commitment. It is therefore your bounden duty to dedicate yourselves to fulfill the aspirations of the people and to win over their trust and confidence. I am confident that you will adhere to the highest traditions of democratic principles while discussing and debating issues that will further the socio-economic development of the State and the well-being of the people. Finally, before concluding my speech, I once again wish you a happy New Year and Pongal.

Nanri

Vanakkam

Jai Hind

**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.**

*பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையின் ஆறாம் அமர்வுக்கான கூட்டத் தொடரை தொடங்கி வைத்து, எனது உரையை இந்த மாமன்றத்தில் நிகழ்த்துவதை பெரும்பேறாகக் கருதுகிறேன். இத்தருணத்தில், உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துகளையும், பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களின் வளமும், மகிழ்ச்சியும் பெருக இப்புத்தாண்டு வழிவகுக்க உளமார வாழ்த்துகிறேன்.*

[2019 ஜனவரி 4

2. மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்துத் தந்த திட்டங்களையும் கொள்கைகளையும் முனைப்போடு செயல்படுத்தி, அவர்கள் பின்பற்றி வந்த பெருமைமிகு மரபைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு உறுதியாக உள்ளது. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு, குறிப்பாக ஏழை, எளிய மக்களின் நலனையும், எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினரின் நலனையும் பாதுகாப்பதில் சிறப்பு கவனம் செலுத்தி, தொடர்ந்து பாடுபட்டு வரும் ஒரு உண்மையான மக்கள் நல அரசாக இந்த அரசு திகழ்ந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது திறமைமிக்க தலைமையின் மூலம், பதவியேற்ற நாள் முதல் இதுவரை முன் எப்போதும் இல்லாத அளவில் 11,286 கோப்புகளில் துரிதமாக முடிவு கண்டு, பொதுமக்களின் தேவைகளை உணர்ந்து செயல்படும் அரசாக, இந்த அரசை வழிநடத்தி வருகிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

3. நிதி நிலை சார்ந்த பல்வேறு சவால்களுக்கு இடையிலும், நிதிநிலைமையை சிறப்பாக நிர்வகித்து வரும் மாநிலமாகத் தொடர்ந்து தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. எனினும், மாநிலங்களுக்கான மத்திய அரசின் வரிப் பகிர்வில், பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரைகளால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட பாதிப்பினால், மாநிலத்தின் வருவாய்ப் பற்றாக்குறை கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில், உதய் திட்டத்தைச் செயல்படுத்தியதாலும், ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றியதாலும், மாநிலத்தின் வருவாய்ப் பற்றாக்குறை மேலும் அதிகரித்துள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறையில் மாநிலங்களுக்கு இடையேயான வரியில் கிடைக்க வேண்டிய பங்கும், இந்த வரி விதிப்புத் திட்டத்தில் உறுதியளிக்கப்பட்டவாறு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையையும், மத்திய அரசு உடனுக்குடன் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருவதால், மாநிலத்தின் நிதிநிலை பாதிக்கப்பட்டுள்ளது. மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான நிதிப் பகிர்வு பற்றிய பரிந்துரைகளை வழங்க மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஆணைப்படி உருவாக்கப்பட்ட பதினைந்தாவது நிதிக்குழு, 2018 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் தமிழ்நாட்டிற்கு வருகை தந்து, மாநில அரசுடன் விரிவான கலந்தாலோசனைகளை நடத்தியுள்ளது. செயல்திறன், பாரபட்சமற்ற நியாயமான நிதிப் பகிர்வு ஆகிய வழிமுறைகளை பதினைந்தாவது நிதிக்குழு பின்பற்றி, தமிழ்நாட்டிற்கான நியாயமான நிதிப் பகிர்விற்கு உரிய பரிந்துரைகளை அளிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

4. மாறுபட்ட புதிய வரிவிதிப்பு முறைக்கு மாறுவதில் ஏற்பட்ட சிக்கல்களைத் திறம்படக் கையாண்டு, பொருட்கள்



2019 ஜனவரி 4]

மற்றும் சேவைகள் வரிவிதிப்பு முறையை தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. எனினும், பொருட்கள் மற்றும் சேவைகள் வரி வருவாயில் 14 சதவீத வருவாய் வளர்ச்சியை மாநிலங்கள் பெறும் வகையில் உறுதியளிக்கப்பட்டவாறு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையும், மாநிலங்களுக்கு இடையேயான பொருட்கள் மற்றும் சேவைகள் வரி வருவாயில் மாநிலத்தின் பங்கினையும் மத்திய அரசு உடனுக்குடன் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. இதனால், 2017—18 ஆம் நிதியாண்டிற்கு மாநிலங்களுக்கு இடையேயான பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில் தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய 5,454 கோடி ரூபாய் அளவிலான வருவாயினையும், பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில் 2017—18 ஆம் ஆண்டிற்கான 455 கோடி ரூபாய் அளவிலான இழப்பீட்டுத் தொகையையும், 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான காலத்திற்கு 1,305 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையையும் மத்திய அரசு இதுவரை வழங்க வேண்டியுள்ள நிலையில், இந்நிலுவை மாநிலத்தின் நிதி நிலையில் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந்த நிலுவைத் தொகைகளை விரைவாக மாநில அரசுக்கு வழங்குவதுடன், இனிவரும் காலங்களிலும் மாநிலத்திற்குரிய தொகையை உடனுக்குடன் வழங்க வேண்டும் என மத்திய அரசை நான் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

5. மருத்துவ ஆணைய சட்டமுன்வடிவில் சில மாற்றங்களை பரிந்துரை செய்தும், அணை பாதுகாப்பு சட்டமுன்வடிவை திரும்பப் பெற வலியுறுத்தியும், மோட்டார் வாகனச் சட்ட முன்வடிவிலும், மின்சாரச் சட்டமுன்வடிவிலும் சில கருத்துகளை எழுப்பியும், தேசிய அளவில் மத்திய அரசு கொண்டுவரும் பல்வேறு சட்டமுன்வடிவுகளில் இந்த அரசு தனது கருத்துகளை சுட்டிக்காட்டியுள்ளது. இவை தமிழ்நாட்டு மக்களின் நலனையும், மாநில உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் வலியுறுத்தப்பட்டவையாகும். தமிழ்நாட்டின் உரிமைகளை பாதிக்கும் வகையில் அணைப் பாதுகாப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. வரும் காலங்களில் இயற்றப்படும் இதுபோன்ற சட்ட முன்மொழிவுகளில் தமிழ்நாட்டின் கருத்துகளை மத்திய அரசு பாகுபாடில்லாமல் ஆராய்ந்து, நியாயமான முடிவுகளை எடுக்கும் என நான் நம்புகிறேன்.

6. சுற்றுச்சூழல் விதிமுறைகளை மீறியதால் தூத்துக்குடியிலுள்ள ஸ்டெர்லைட் காப்பர் ஆலையை நிரந்தரமாக மூட இந்த அரசு ஆணையிட்டது. ஆனால், இந்த ஆணையை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தது. மாநில அரசு தனது ஆட்சேபணைகளைத் தெரிவித்த பின்னரும், இந்த ஆலையைத்

[2019 ஜனவரி 4

திறக்க தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது. எனினும், இந்த ஆணையை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை தற்காலிகமாக நிறுத்தி வைத்து ஆணையிட்டுள்ளது. இந்நிலையில், தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் ஆணையை எதிர்த்து இந்த அரசு மேல்முறையீடு செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

7. பல்வேறு துறை சார்ந்த ஆராய்ச்சிப் பணிகளில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றி வருகிறது. மாநிலத்தில் உள்ள மத்திய அரசின் ஆராய்ச்சி மற்றும் பிற நிறுவனங்கள் சிலவற்றை மூடுவதற்கு மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள், விவசாயிகள் மற்றும் மீனவர்களின் நலனுக்காக தமிழ்நாட்டில் நடந்து வரும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, சென்னையில் உள்ள உவர்நீர் மீன் வளர்ப்பிற்கான மைய நிறுவனம், கோயம்புத்தூரில் உள்ள கரும்பு ஆராய்ச்சிக்கான நிறுவனம், திருச்சியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலத்தில் உள்ள உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள மைய அச்சகம் ஆகிய மையங்களை மூடவேண்டும் என்ற முடிவைக் கைவிட்டு, அவற்றைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் வேண்டுகோளினை மத்திய அரசு ஏற்று சாதகமான முடிவை எடுக்கும் என எதிர்பார்க்கிறேன்.

8. சகாவேரி வடிநிலப் பகுதியையும், மாநிலத்தின் சில மத்திய மாவட்டங்களையும் கஜா புயல் கடுமையாகத் தாக்கி, உயிரிழப்பினை ஏற்படுத்தியதோடு, பயிர்களுக்கும் வீடுகளுக்கும் பெரும் சேதங்களை விளைவித்து, தென்னை மரங்கள் உட்பட பிற மரங்களையும் அடியோடு வீழ்த்தி, மின்சார விநியோகக் கட்டமைப்பிற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பருவகால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்த அரசு உரிய நேரத்தில் எடுத்து, பாதிப்படையக்கூடிய கடற்கரைப் பகுதிகளில் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றியதுடன், கடலுக்குச் செல்லும் மீனவர்களையும் எச்சரித்து துரிதமாகச் செயல்பட்டதால், உயிர் சேதம் வெகுவாகத் தவிர்க்கப்பட்டது. புயலினால் ஏற்பட்ட தாக்கத்திற்குப் பிறகு, இந்த அரசு விரைவாகச் செயல்பட்டு, 4.81 இலட்சம் மக்களை நிவாரண முகாம்களில் தங்கவைத்து, புயலால் பாதிக்கப்பட்ட 6.4 இலட்சம் குடும்பங்களுக்கு அத்தியாவசியமான பொருட்கள் அடங்கிய பைகள் உள்பட வாழ்வாதார நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் மற்றும் மீட்டெடுப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, இதுவரை 2,335.48 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடி நிவாரண உதவியாக அறிவித்துள்ளார். 2018—19 ஆம் நிதியாண்டிற்கான மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்கு, இரண்டாம் தவணையாக வழங்க வேண்டிய பங்கான 353.70 கோடி ரூபாய் நிதியினை உடனடியாக விடுவித்த மத்திய அரசுக்கு



2019 ஜனவரி 4]

இத்தருணத்தில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். முழுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சம் குடிசை வீடுகளுக்குப் பதில் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கும், தென்னை மரங்கள் உட்பட்ட மரத்தோட்டப் பயிர் சாகுபடியை மீண்டும் மறுசாகுபடி செய்ய முழு நிதியுதவி வழங்கியும், பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்திற்குப் புத்துயிரளிக்கும் புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதை வெகுவாகப் பாராட்டுகிறேன். உடனடி நிவாரணப் பணிகளுக்காக 2,709 கோடி ரூபாயையும், நிரந்தர மறுசீரமைப்புப் பணிகளுக்காக 15,190 கோடி ரூபாயையும் மத்திய அரசிடம் இந்த அரசு நிதியுதவியாகக் கோரியதன் அடிப்படையில், பாதிக்கப்பட்ட மாவட்டங்களை மத்தியக் குழு பார்வையிட்டுச் சென்றுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, தேசியப் பேரிடர் நிவாரண நிதியத்திலிருந்து 900.31 கோடி ரூபாயை கூடுதலாக விடுவித்துள்ள மத்திய அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, பாதிக்கப்பட்ட குடிசைகளுக்குப் பதில் கான்கிரீட் வீடுகள் புதிதாகக் கட்டவும், மக்களின் பொருளாதார வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கவும், மத்திய அரசுத் திட்டங்களில் மறுசீரமைப்புப் பணிகளுக்காக கூடுதல் நிதியொதுக்கீட்டையும் செய்ய வேண்டும் என மத்திய அரசை நான் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

9. கர்நாடகாவில் உள்ள மேகதாதுவில் புதிய அணை கட்டுவதற்காக, விரிவான திட்ட அறிக்கையை கர்நாடக அரசு தயாரிக்க, அண்மையில் ஒப்புதல் அளித்துள்ள மத்திய நீர் ஆணையத்தின் நடவடிக்கையை இந்த அரசு கடுமையாக எதிர்க்கிறது. மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பகிர்வில், 'கீழ் படுகை (டுடிறநச சுவீயசயையஸ) மாநிலங்களுக்கு முறையாகக் கிடைக்க வேண்டிய நதிநீர் கிடைப்பதில் பாதிப்பு ஏற்படும் வகையில் மேல் படுகையில் உள்ள (ருயீயீநச சுவீயீயசயையஸ) மாநிலம் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது' என்ற காவேரி நடுவர் மன்ற ஆணையின் மீதான உச்சநீதிமன்ற உத்தரவினை வெளிப்படையாக மீறுவதாக இந்தச் செயல் அமைகிறது. கர்நாடக அரசு மற்றும் மத்திய நீர் ஆணையத்தின் இந்த நடவடிக்கையை கண்டனம் செய்வதுடன், கர்நாடக அரசிற்கு அளித்த அனுமதியை மத்திய நீர் ஆணையம் உடனடியாகத் திரும்பப் பெற உத்தரவிடக் கோரி மத்திய அரசை வலியுறுத்தியும், தமிழ்நாடு அரசின் சம்மதமின்றி காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையையும், உச்சநீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி கர்நாடகாவில் மேகதாதுவிலோ, காவேரி வடிநிலப் பகுதியில் வேறெந்த இடத்திலோ, எந்த ஒரு பணியையும் கர்நாடக அரசோ அல்லது அதன் அமைப்புகளோ மேற்கொள்ளக் கூடாது என்று கர்நாடக அரசிற்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும்

[2019 ஜனவரி 4

என்று இச்சட்டமன்றப் பேரவை ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

10. முல்லைப் பெரியாறு அணைக்கு மாற்றாக, புதிய அணை கட்டுவதற்கான கேரளா அரசின் முயற்சியை இந்த அரசு தொடர்ந்து எதிர்த்து வருவதோடு, முல்லைப் பெரியாறு அணையின் கொள்ளளவை 152 அடிக்கு உயர்த்துவதற்கான உறுதியான நடவடிக்கையை இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். மாநிலங்களுக்கு இடையேயான அனைத்து நதிநீர்ப் பிரச்சினைகளிலும், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பரஸ்பர நம்பிக்கையுடனும், பொறுப்புணர்வுடனும் நடந்து கொண்டு, நீர்ப் பகிர்வு உரிமைகளை பாரபட்சமின்றிப் பகிர்ந்து கொள்ளும் வகையில் செயல்பட்டால் மட்டுமே இத்தகைய பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியும் என்று இந்த அரசு உறுதியாக நம்பினாலும், மாநிலத்தின் நீர்ப் பகிர்வு உரிமைகளை நிலைநிறுத்த, மீண்டும் மீண்டும் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கும் நிலைக்கு தமிழ்நாடு அரசு தள்ளப்பட்டு வருகிறது. எனவே, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் அடியொற்றி, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க அனைத்து சட்டரீதியான நடவடிக்கைகளையும் எடுக்க உறுதி பூண்டுள்ளார்.

11. இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 551 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் சீரிய முயற்சிகளை மேற்கொண்டு இலங்கை சிறைச்சாலைகளில் வாடிவந்த 543 மீனவர்களையும், பிடிபட்ட 206 படகுகளையும் விடுவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்நிலையில், மத்திய அரசு இலங்கை அரசிடம் இணக்கமாகப் பேசி இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்துகிறது.

12. மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களால் வடிவமைக்கப்பட்ட 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023' ஆவணம், தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு இந்த அரசிற்கு ஒரு வழிகாட்டியாக தொடர்ந்து விளங்கி வருகிறது. சூழல் சுற்றுலா கொள்கை, வனக் கொள்கை, இளைஞர்களுக்கான கொள்கை, உணவு பதப்படுத்தும் கொள்கை, மின்னாளுமைக் கொள்கை, தகவல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கை உட்பட வளர்ச்சிக்கான முக்கியத் துறைகளில் இந்த அரசு விரிவான கொள்கைகளை வகுத்து அதற்கான உத்திகளையும் உருவாக்கியுள்ளது. மாநிலம்



2019 ஜனவரி 4]

வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்கு தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்தக் கொள்கை வடிவமைப்புகள் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

13. வேளாண் துறைக்கான கிரிஷி கர்மான் விருதையும், 'செயல்திறனுக்கான சிறந்த மாநிலம்', 'சுற்றுலா', 'உட்கட்டமைப்பு' மற்றும் 'சட்டம் ஒழுங்கு' போன்ற பல்வேறு துறைகளில் 'இந்தியா டுடே' நிறுவனத்தால் நிறுவப்பட்ட சிறப்புடைமைக்கான விருதுகளையும், பொது விநியோகத் திட்டத்தை கணினிமயமாக்கியதற்கான சிறந்த நடைமுறை விருது, உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையில் சிறப்பான செயல்முறை உட்பட உயர்தரமான சுகாதார சேவைக்கான அங்கீகாரம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான விருதுகள் என பல்வேறு விருதுகளையும் இந்த அரசு பெற்றுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. பெங்களூருவில் அமைந்துள்ள பொது விவகார மையம் வகுத்துள்ள பொது நிர்வாகக் குறியீட்டில் நல்லாளுமைக்காக, நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளது. நீத்தி ஆயோக் தற்போது வெளியிட்டுள்ள நிலையான வளர்ச்சிக் குறியீட்டிற்கான அறிக்கையின்படி, தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்வதில், இந்த அரசின் சிறந்த நிர்வாகத் திறமைக்கு இவ்விருதுகள் சான்றாக விளங்குகின்றன.

14. சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கலை மற்றும் சமூகவியல் மேம்பாடு ஆய்வு இருக்கையினை, 1.08 கோடி ரூபாய் செலவில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயரில் இந்த அரசு நிறுவிட ஆணையிட்டுள்ளது. தமிழ்மொழியையும், தமிழர் பண்பாட்டையும் பேணிப் போற்றும் வகையில், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் மூலமாக உலகத் தமிழ் அமைப்புகளின் மாநாடு நடத்தப்பட உள்ளது. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தை 'புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம்' என்று பெயர் மாற்றுவதோடு, தமிழ்நாட்டின் மறைந்த மாபெரும் தலைவர்களான பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கையை மத்திய அரசு சாதகமாக பரிசீலிக்கும் என நான் நம்புகிறேன்.

15. மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவது அவசியம் என்பதை நன்குணர்ந்த இந்த அரசு, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை திறம்பட நிர்வகித்து, அமைதியை நிலைநாட்டி வருகிறது. காவல் துறையினருக்காக இந்த அரசினால் துவங்கப்பட்ட 'புத்தாக்க நலத்திட்டம்' ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம், காவலர்களை ஊக்குவிப்பதுடன்,

அவர்களின் மன உறுதியை வலுப்படுத்தவும் உதவும். அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கை, பெண்களின் பாதுகாப்பில் மிகச் சிறந்த மாநகராக சென்னையையும், மிகச் சிறந்த நகரமாக கோயம்புத்தூரையும் தேர்ந்தெடுத்திருப்பதைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன். பெண்களின் பாதுகாப்பிற்காக சமீபத்தில் உருவாக்கப்பட்ட, '181 உதவி எண்' மற்றும் 'காவலன் செயலி' ஆகியவை தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பை, குறிப்பாகப் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு மேலும் வலுசேர்ப்பதாக அமையும்.

*16.* பன்முகத் தன்மை கொண்ட அணுகுமுறையைக் கையாண்டு, தொழில்நுட்ப முயற்சிகளுடன் பல்வகையாக்கல் மூலம் விவசாயிகளுக்கு நிலைக்கத்தக்க வாழ்வாதாரத்தை உருவாக்கி, வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகளின் மேம்பாட்டிற்கு இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. பருவநிலை சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்பின் பாதிப்பினைத் தணிக்க, மத்திய அரசின் திட்டமான 'பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை' சிறப்பாகச் செயல்படுத்துவதில், நாட்டிலேயே முன்னிலை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வது பாராட்டுக்குரியது. மானாவாரி நிலங்களில் சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான 'நிலையான மானாவாரி வேளாண்மைக்கான இயக்கம்', கூட்டுப் பண்ணையத் திட்டம், ஒருங்கிணைந்த வேளாண்மை, நுண்ணீர்ப் பாசன ஊக்குவிப்புத் திட்டங்கள், பாசனக் கட்டமைப்புகளை வலுப்படுத்தும் திட்டம், உழவர் ஆர்வலர் குழுக்கள் மற்றும் வேளாண் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலமாக மதிப்பைக் கூட்டி வருவாயை அதிகரிக்கும் திட்டம் ஆகியன நிலைக்கத்தக்க வேளாண் பெருக்கத்தையும், விவசாயிகளின் வருமானத்தையும் உயர்த்திட உதவும்.

*17.* நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை வலுப்படுத்தவும், நீர் சேமிப்புத் திறனை மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. 'தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம்' *2,962* கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. பாசன ஏரிகளில் இருந்து வண்டல் மண்ணை விவசாயிகளே எடுத்துப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்ட திட்டம், நீர்ப்பாசன அமைப்புகளைப் புதுப்பிக்கும் 'குடிமராமத்து திட்டம்' ஆகியவை முழு உத்வேகத்துடன் செயல்படுத்தப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், முக்கொம்பில் அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொள்ளிடம் நீரொழுங்கிக்குப் பதிலாக, புதிதாக ஒரு நீரொழுங்கியை அமைக்க *387.60*



கோடி ரூபாயை உடனடியாக இந்த அரசு அனுமதித்துள்ளது பாராட்டுக்குரியது. ஏற்கெனவே அறிவித்தபடி *1,652* கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் அத்திக்கடவு—அவிநாசி திட்டம், பவானி ஆற்றின் உபரி நீரை கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள *74* ஏரிகளிலும் *971* குளங்களிலும் நிரப்பி, அதன் வாயிலாக *24,468* ஏக்கர் வேளாண் விளைநிலங்கள் பாசன வசதி பெறச் செய்வதோடு, நிலத்தடி நீரை செறிவூட்டி குடிநீர் வழங்கலையும் செம்மைப்படுத்தும். இத்திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*18. 2011* ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடித் திட்டமான 'விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டம்' பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து கிராமப்புற ஏழை மக்களைப் பாதுகாப்பதுடன், அவர்களுக்கு நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கியுள்ளது. 'கோழியின அபிவிருத்தித் திட்டம்', 'தீவன அபிவிருத்தித் திட்டம்', கால்நடை பராமரிப்பு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் போன்ற முன்முயற்சிகள், மாநிலத்தில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும். இந்த அரசின் உறுதியான முயற்சிகளால் பால்வளத்துறையில், தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளதன் மூலம், *2018* ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இதுவரை கண்டிராத உயர்ந்தபட்ச அளவான *37.03* இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

*19.* மீன்வளர்ப்பு மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்கும் அதே வேளையில், மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், மீன் பதப்படுத்தும் பூங்காக்கள், உள்நாட்டு மீன் வளர்ப்பை மேம்படுத்துதல் என உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தி, மீன்வளத் துறையினை தொடர்ந்து மேம்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மத்திய அரசுடன் இந்த அரசு இணைந்து, நீடித்த நிலைக்கத்தக்க மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் சூரை மீன்பிடிப் படகுகள் மூலமாக ஆழ்கடல் மீன்பிடிப்பை தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மூக்கையூர் மற்றும் குந்துக்கல்லிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் பூம்புகாரிலும் அமைக்கப்பட்டு வரும் மீன்பிடி துறைமுகங்கள், ஆழ்கடல் மீன்பிடி தொழில் வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கும்.

*20.* வறுமை ஒழிப்பில் முன்னோடித் திட்டமான புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சுயஉதவிக் குழுக்கள், கிராமப்புற வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி

அளவிலான கூட்டமைப்புகள் ஆகியன, மாநிலத்தில் உள்ள 120 வட்டாரங்களில் கிராமப்புற ஏழை எளிய மக்களிடையே சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்துள்ளன. இத்திட்ட வழிமுறைகள், மாநிலத்தில் மீதமுள்ள 265 வட்டாரங்களிலும் தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற ஏழை மக்களிடம் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த, ‘தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்’ மூலம் குறுந்தொழில்கள் தொடங்குவதற்கான கடனுதவிகளை அவர்கள் பெறும் வகையில் சுய உதவிக் குழுக்கள்—வங்கிகள் இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தின் அணுகுமுறையைப் பின்பற்றி நகர்ப்புரங்களிலும் ‘தமிழ்நாடு மாநில நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்’ மூலம், நகர்ப்புர ஏழை மக்களுக்கு நீடித்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருகிறது.

21. ‘தூய்மை பாரதம் இயக்கத்தை’ திறம்படச் செயல்படுத்தி தேசிய அளவிலான இலக்குகளை எய்திட, இந்த அரசு சிறப்பான முயற்சிகளைச் செய்து வருகிறது. அனைத்து கிராமங்களும் ‘திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத’ கிராமங்களாக அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு 100 சதவீத சுகாதார நிலையை எட்டியுள்ளது. ‘திறந்த வெளியில் மலம் கழிக்காத’ நிலையை தொடர்ந்து நிலைக்கச் செய்து, மாநிலம் முழுவதும் முழுமையான சுகாதார நிலை என்ற சூழ்நிலையை உருவாக்க இந்த அரசு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அனைத்து கிராமப்புற ஊராட்சிகளிலும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகிறது. கிராமங்களில் முழுமையான சுகாதார நிலையை எட்ட ‘தூய்மை காவலர்கள்’ வழிவகுத்துள்ளனர். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளதால், 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி முதல், ‘ஒருமுறை மட்டும் பயன்படுத்தி எறியக்கூடிய சில பிளாஸ்டிக்’ பொருட்களை தடை செய்துள்ளது.

22. இந்த அரசின் ‘அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்’ மூலம் மாநிலத்தில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது பாராட்டுக்குரியது. தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசியோடு, குறைந்த விலையில் சர்க்கரை, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் வழங்குவதன் மூலம் பசிப்பிணி இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. பொது விநியோகத் திட்டத்தில், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட ‘விரிவான கணினிமயமாக்கல் திட்டத்தின்’ மூலம் போலி குடும்ப அட்டைகளும், பன்முறை பயனாளி பதிவுகளும் அறவே அகற்றப்பட்டுள்ளன. வெளிப்படையான, சீரான, பொது விநியோகத் திட்டத்தை உறுதி செய்வதற்காக, 2.01





கோடி குடும்பங்களுக்கு ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட ஸ்மார்ட் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது ஒரு பாராட்டுக்குரிய சாதனையாகும். பேரிடர் ஏற்பட்டபோது ஏழை எளிய மக்களுக்கு நேசமுடன் உதவிக்கரம் நீட்டிய மறைந்த முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி. இராமச்சந்திரன் மற்றும் ஜெ ஜெயலலிதா அவர்களின் வழியைப் பின்பற்றி, காவேரி வடிநிலப் பகுதிகளில் கஜா புயலினால் ஏற்பட்ட தாக்கத்தையும், வட மாவட்டங்களில் பரவலாக ஏற்பட்டுள்ள வறட்சியின் தாக்கத்தையும் கருத்தில் கொண்டு, பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடும் விதமாக, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பச்சரிசி, சர்க்கரை, உலர் திராட்சை, முந்திரி, ஏலக்காய், கரும்பு உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய சிறப்புத் தொகுப்பை இந்த அரசு வழங்க உள்ளது. இது தவிர, திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற உள்ளதால், அந்த மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு உட்பட்டு, திருவாரூர் மாவட்டம் தவிர மாநிலத்தின் மற்ற மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாட 1,000/- ரூபாய் இந்த அரசால் வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

23. மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்த முயற்சிகளின் விளைவாகவே மாநிலத்தின் மின்துறை ஒரு பெரும் மாற்றத்தைக் கண்டுள்ளது. அவர் எடுத்த முன்முயற்சிகளின் தொடர்ச்சியாக, இந்த அரசால் 1.27 இலட்சம் கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் 17,100 மெகாவாட் அளவிலான அனல் மின் மற்றும் புனல் மின் திட்டங்கள் தொடங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில், தமிழ்நாடு 11,716 மெகாவாட் எரிசக்தித் திறனுடன் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி, ஜெர்மன் வங்கி மற்றும் தேசிய மாசற்ற எரிசக்தி நிதியம் ஆகியவற்றின் நிதியுதவியுடன், 9,178 கோடி ரூபாய் செலவில் மின்கடவு உட்கட்டமைப்பு, மாநிலம் முழுவதும் வலுப்படுத்தப்பட்டு வருகிறது. எரிசக்தித் துறையின் இந்தச் சிறந்த செயல்பாடுகள் மாநிலத்தில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கு முக்கியக் காரணியாக உள்ளது.

24. புறவழிச் சாலைகள், வட்டச் சாலைகள், மேம்பாலங்கள் உட்பட முக்கிய சாலைக் கட்டமைப்புத் திட்டங்களை இந்த அரசு ‘ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்’ செயல்படுத்தி வருகிறது. ஊரக உள்ளாட்சிகளின் கட்டுப்பாட்டிலிருந்த 7,964 கிலோமீட்டர் நீளமுள்ள 2,596 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை, மூன்று ஆண்டுகளில் படிப்படியாக நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிற்கு

கொண்டுவந்து, அவற்றை பிற மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு உயர்த்த இந்த அரசு எடுத்த முடிவு பாராட்டத்தக்கது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, 608 கோடி ரூபாய் செலவில் 1,436 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை தரம் உயர்த்த பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டத்தில், 882 கோடி ரூபாய் செலவில் 1,538 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளைத் தரம் உயர்த்த அரசு நடப்பு ஆண்டில் ஆணையிட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் 'தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II மாநிலத்தில் உயர்தரமான சாலைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் பெரும் பங்காற்றி வருகிறது. மாநிலத்தில் துரிதப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த உதவும் சிறப்பான சாலை அமைப்பை உருவாக்கியதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

25. முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய - மாநில அரசுகளிடம் சிறந்த ஒருங்கிணைப்பு அவசியம். சென்னை துறைமுகம்-மதுரவாயல் இடையேயான உயர்தள வழித்தடம், சென்னை-பெங்களூரு தொழில் வழித்தடத் திட்டம், சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம் மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்குவழி தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்துவதற்கான திட்டம் ஆகியவை மாநிலத்திற்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து துரிதமாகச் செயல்படுத்த, மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன்.

26. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நாள் ஒன்றிற்கு 1.74 கோடி பயணிகள் பயன்பெறும் வகையில், 19,488 வழித்தடங்களில் 21,678 பேருந்துகளை இயக்கி வருகின்றன. பேருந்துக் கட்டணங்களை உயர்த்திய பின்னரும், நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் போக்குவரத்துக் கட்டணம் குறைவாக உள்ளது. டீசல் விலை உயர்வால் ஏற்படும் கூடுதல் செலவினை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை டீசல் மானியமாக 268.35 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது. ஜெர்மன் வங்கியின் உதவியுடன் போக்குவரத்துக் கழகங்களை மறுசீரமைக்க ஒரு விரிவான திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளது. பழைய பேருந்துகளுக்குப் பதிலாக எரிபொருள் செயல்திறன் மிக்க பி.எஸ்-VI பேருந்துகளை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதுடன், சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற மாநகரங்களில் சுற்றுச்சூழலை பாதிக்காத மின்சாரப் பேருந்துகளும் இத்திட்டத்தில் கொள்முதல் செய்யப்படும்.

27. நகர்ப்புரக் கட்டமைப்பு மேம்பாட்டிற்கான கூடுதல் நிதி ஆதாரங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த 'ஒருங்கிணைந்த நகர்ப்புர





மேம்பாட்டுத் திட்டத்தையும்', 'சென்னைப் பெருநகர மேம்பாட்டு இயக்கத்தையும்' புதுப்பித்து, 2018-19 ஆம் ஆண்டிற்கு முறையே 750 கோடி ரூபாயையும், 500 கோடி ரூபாயையும் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. பதினோரு மாநகரங்களில் 'திறன்மிகு நகரங்கள்' திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டத்தின்' (அம்ருத்) கீழ், தமிழ்நாட்டின் 28 நகரங்களில் பல்வேறு நகர்ப்புர மேலாண்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர, மாநிலத்தில் அதிகரித்து வரும் நகர்ப்புரக் கட்டமைப்பு தேவைகளைப் பூர்த்தி செய்யும் முயற்சிகளுக்கு மேலும் ஒரு உந்துதலாக அமையும் வகையில், உலக வங்கி உதவியுடன் 'தமிழ்நாடு நிலைக்கத்தக்க நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தையும்', ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் 'தமிழ்நாடு நகர்ப்புர முதன்மை முதலீட்டுத் திட்டத்தையும்' இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

28. தமிழ்நாட்டில் குடிசையில்லா கிராமங்களையும், குடிசைப் பகுதியில்லா நகரங்களையும் உறுதிசெய்வது இந்த அரசின் முன்னோடி முயற்சிகளுள் ஒன்று. 'பிரதம மந்திரியின் வீட்டுவசதித் (ஊரகம்) திட்டத்துடன்' 'முதலமைச்சரின் சூரியஒளி எரிசக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின்' மூலமாக கிராமப்புற ஏழை மக்களுக்கு வீட்டுவசதி வழங்குவதில், நாட்டிலேயே தமிழ்நாடு முன்னிலை மாநிலமாகத் திகழ்கிறது. நகர்ப்புர ஏழை மக்களின் வீட்டுவசதித் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்ட இந்த அரசு 'உறைவிட நிதியத்தை' நிறுவியுள்ளது. 'பிரதம மந்திரியின் (நகர்ப்புரம்) வீட்டுவசதித் திட்டத்தின்' கீழ், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் இதுவரை 21,604 கோடி ரூபாய் செலவில் 5,16,741 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுள்ளது. சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள குடிசைப்பகுதிகளை மேம்படுத்த, உலக வங்கி உதவியுடன் 'தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்' என்ற விரிவான வீட்டுவசதி வழங்கும் திட்டத்தை இந்த அரசு வடிவமைத்துள்ளது. சென்னைப் பெருநகரப் பகுதிகளைத் தவிர்த்து, மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் இதுபோன்றதொரு திட்டத்தைச் செயல்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியை இந்த அரசு நாடியுள்ளது. விரைவில் கட்டடங்களுக்கு பொது விதிமுறைகளுக்கான அறிவிக்கை செய்யப்பட உள்ளதால் கட்டுமானத் துறையில் எளிதில் தொழில் புரிவதற்கான வாய்ப்புகள் மேம்படும். குடியிருப்புக் கட்டடங்களுக்கு தரைப் பரப்புக் குறியீட்டை உயர்த்த அரசு எடுத்த முடிவால் வீட்டுவசதி வாய்ப்புகள் வாங்கத்தக்க விலைகளில் எளிதில் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

[2019 ஜனவரி 4

29. உலகத்தரம் வாய்ந்த நகர்ப்புரப் பொதுப் போக்குவரத்து சேவையை சென்னை மாநகரில், சென்னை மெட்ரோ ரயில் உருவாக்கியுள்ளது. இத்திட்ட வழித்தடத்தின் ஒரு பகுதியில் சேவைகள் ஏற்கெனவே தொடங்கியுள்ள நிலையில், 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் முதற்கட்டத் திட்டத்தின் அனைத்து வழித்தடங்களிலும் சேவைகள் முழுமையாக இயக்கப்படும். சுமார் 3,770 கோடி ரூபாய் செலவில் வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரையிலான முதற்கட்ட விரிவாக்க திட்டச் சேவைகள், 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் திட்டமிட்டபடி துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று வழித்தடங்களை உள்ளடக்கிய இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தினை, 107.55 கிலோமீட்டர் நீளத்திற்கு செயல்படுத்துவதற்கு மாநில அரசு ஏற்கெனவே கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையானது 20,196 கோடி ரூபாய் நிதியுதவியினை, 52 கிலோமீட்டர் நீளத்திற்கான மாதவரம்-சோழிங்கநல்லூர் மற்றும் மாதவரம்-சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரையிலான முன்னுரிமை வழித்தடப் பகுதிகளுக்கு தற்போது ஒப்புதல் வழங்கியுள்ளதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ 4,770 கோடி ரூபாய்க்கான முதல் தவணைக்கான கடன் ஒப்பந்தம் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்டுள்ள நிலையில், இத்திட்டத்திற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட பன்முகப் போக்குவரத்து அமைப்பை செயல்பாட்டிற்கு கொண்டுவரும் முயற்சியாக, சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமச் சட்டம் மற்றும் அதற்கான சட்ட விதிகள், 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் நாளன்று அறிவிக்கை செய்யப்படும் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

30. உயர் கல்வித் துறையில் 48.6 என்ற மொத்தச் சேர்க்கை விகிதத்துடன், நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. கிராமப் பகுதிகளிலிருந்தும், பொருளாதாரத்தில் நலிவடைந்த பகுதிகளிலிருந்தும் வரும் மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி எளிதில் கிடைக்கச் செய்ய 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக, 2018-19 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகைத் திட்டம் இந்நோக்கத்திற்குப் பேருதவியாக உள்ளது. இது தவிர, 61 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 264 புதிய பாடத்திட்டங்கள் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன. கற்பித்தல் தரத்தையும், ஆராய்ச்சிகளையும் பன்னாட்டுத் தரத்திற்கு



2019 ஜனவரி 4]

மேம்படுத்த, உயர்கல்வி நிறுவனங்கள் தகுதி வாய்ந்த, திறமையான துணை வேந்தர்களின் தலைமையின் கீழ் இயங்க வேண்டும். அதன் அடிப்படையில், துணை வேந்தர்கள் நியமனத்தில் ஒரு ஒளிவு மறைவற்ற, வெளிப்படைத் தன்மையுடன் தேர்வு மற்றும் நியமன நடைமுறைகளை இந்த அரசு கடைபிடிக்கிறது. மேலும், பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களுக்கான காலிப் பணியிடங்களும் அவ்வப்போது நிரப்பப்பட்டு வருகின்றன. அரசின் இத்தகைய முயற்சிகளால், உயர்கல்வியின் தரமும், ஆராய்ச்சிப் பணிகளின் தரமும் கணிசமாக மேம்படுத்தப்படும் என நான் நம்புகிறேன்.

31. அரசு மற்றும் அரசின் உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள் உட்பட கல்வி உபகரணங்கள், நான்கு இணை சீருடைகள், புத்தகப்பைகள், காலணிகள், பேருந்து கட்டணச் சலுகைகள் மற்றும் மிதிவண்டிகளை இந்த அரசு விலையில்லாமல் வழங்குவதை நான் பாராட்டுகிறேன். மாணவிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் இந்த அரசின் திட்டத்தால், பள்ளிகளில் மாணவிகளின் இடைநிற்றல் குறைக்கப்பட்டு பள்ளிச் சேர்க்கை அதிகரித்துள்ளது. உயர்தர பள்ளிக்கல்வியை வழங்குவதற்காக, தேவையான இடங்களில் பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்தியும், தேவைக்கேற்ப பள்ளிகளைத் தரம் உயர்த்தியும் இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மாணவ, மாணவிகளுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்காக, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ‘அடல் டிங்கரிங் ஆய்வகங்கள்’, அறிவுத் திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் பள்ளிக்கூடங்களில் அமைக்கப்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. மாநிலத்தின் சராசரி எழுத்தறிவு நிலையைக் காட்டிலும் பழங்குடியினரின் எழுத்தறிவு நிலை குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே உள்ளது. எனவே, பழங்குடியின மாணவர்களுக்கு அதிகப் பயனளிக்கும் வகையில், பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகளைத் துவக்கும், அரசு சாரா நிறுவனங்களுக்கு இந்த அரசு நிதியுதவி வழங்கும் புதியதொரு திட்டத்தை விரைவில் தொடங்கவுள்ளது.

32. விரிவான பொது சுகாதாரச் சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு கணிசமாக முன்னேறியுள்ளது என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதைய மாதிரிப் பதிவு புள்ளிவிவரப்படி, மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு இலட்சம் குழந்தை பிறப்புகளுக்கு 66 ஆகவும், பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் ஆயிரம் குழந்தை பிறப்புகளுக்கு 17 ஆகவும் குறைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், உயர்தர மருத்துவ சிகிச்சை வசதிகளை ஏழை எளிய மக்களுக்கு அளித்து வருகிறது. 2018 ஆம்

[2019 ஜனவரி 4

ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் மத்திய அரசின் முன்னோடித் திட்டமான 'பிரதம மந்திரியின் ஜன ஆரோக்யத் திட்டத்தோடு' தமிழ்நாட்டின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தையும் இந்த அரசு ஒருங்கிணைத்து, ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்ட காப்பீட்டு அளவை இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது. தகுதியுள்ள கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் முதல் பிரசவத்திற்கு நிதியுதவி வழங்கும் மத்திய அரசின் திட்டமான 'பிரதம மந்திரியின் மாத்ரு வந்தனா திட்டம்' 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், தமிழ்நாட்டின் முன்னோடித் திட்டமான 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்துடன்' ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. 'மகளிர் சுகாதாரத் திட்டம்', 'அம்மா குழந்தை நலப் பெட்டகம்', 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' போன்ற மாநில அரசின் முன்னோடித் திட்டங்கள் தாய் சேய் நலத்தைப் பேணுவதற்கான இந்த அரசின் முயற்சிகளுக்கு மேலும் வலுசேர்த்து வருகின்றன. மதுரை மாவட்டத்தில் உள்ள தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனையை அமைக்க, 1,264 கோடி ரூபாயை அனுமதித்த மத்திய அரசிற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு உயர்நிலை மருத்துவ வசதிகளை அளிப்பதில் இம்முயற்சி பேருதவியாக அமையும்.

33. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் தொழில்துறை அடிப்படையாக உள்ளதால், புதிய முதலீடுகளை தொடர்ந்து ஈர்ப்பதில் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. வாகன உற்பத்தித் துறையில் தமிழ்நாடு முக்கிய மையமாக விளங்கும் நிலையில், அடுத்த தலைமுறை மின்சார வாகனங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்க சிறப்பு சலுகைகளுடன் கவனம் செலுத்தப்படும். பயனுறு பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (NCAER) போன்ற புகழ்பெற்ற நிறுவனங்கள் தொழில் மேம்பாட்டில் தமிழ்நாடு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டியுள்ளன. சென்னை வர்த்தக மையத்தில், 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளது. ஜப்பான், தென்கொரியா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள், 2019 மாநாட்டின் பங்களிப்பு (Partner) நாடுகளாகப் பங்கெடுக்க உள்ளது. இம்மாநாட்டை மாபெரும் வெற்றி நிகழ்வாக்க மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. பாதுகாப்புத் தளவாடங்களையும், வானூர்தி சாதனங்களையும் தயாரிப்பதை ஊக்கப்படுத்த, தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கையை இந்த அரசு விரைவில் வெளியிட உள்ளது. பாதுகாப்புத் தளவாடங்களைத் தயாரிக்கும் தொழில் பெரு—மையங்களை, சென்னை—வேலூர்—சேலம்—



2019 ஜனவரி 4]

ஓசூர் கோயம்புத்தூர்—திருச்சி வழித்தடத்தில் நிறுவுவதன் மூலமாக, தமிழ்நாட்டை பாதுகாப்புத் தொழில் துறையில் மாபெரும் சக்தியாக உருவாக்க வாய்ப்புகள் ஏற்படும். இந்தப் பாதுகாப்புத் தொழில் வழித்தடத் திட்டத்தைச் செயல்படுத்துவதை மத்திய அரசு துரிதப்படுத்த வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

34. புதிய தொழில் முனைவோர்களையும், புத்தாக்கத்தையும் ஊக்குவிப்பதோடு, ஒற்றைச் சாளர முறையின் மூலம் பல்வேறு முயற்சிகளை எடுத்து, புதிதாகத் தொடங்கப்படும் தொழில்களுக்கு உகந்த, துடிப்பான தொழில் வளர்ச்சி சூழலையும், அதற்கான அமைப்பையும் இந்த அரசு ஏற்படுத்தி வருகிறது. 'புதிய தொழில் முனைவோர் (Start-ups) மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ், தொடக்கத் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்குவதற்கும், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், புதிய கொள்கை ஒன்றை இந்த அரசு விரைவில் வெளியிடும். அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பங்கேற்றால், குறைந்தபட்சம் 25 சதவீத அளவிலான பொருட்களோ, சேவையோ அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யும் வகையில் இந்த அரசு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டு வந்துள்ளது. இந்த அரசு எடுத்துவரும் பல்வேறு முன்முயற்சிகள், தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்குப் பெரும் உந்துதலாக அமையும்.

35. பொதுச்சேவை வழங்குவதை மேம்படுத்தவும், அரசு பொது நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையையும், செயல்பாட்டுத் திறனையும் கொண்டுவருவதற்கு அரசு மின்னாளுமை முன்முயற்சிகளை எடுத்து வருகிறது. மின்னணு சேவைகளை வழங்கிட, இணையவழி வலைவாசல் (Online Portal) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதன் மூலம், இச்சேவைகள் அனைத்தையும் பொதுமக்கள் எந்த நேரத்திலும் பயன்படுத்தலாம். நிலப் பதிவேடுகள் நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ், அடங்கல் பதிவேடுகளை கணினிமயமாக்க 'இ—அடங்கல்' என்ற புதிய செயலியை தமிழ்நாடு மின்னாளுமை முகமை உருவாக்கியுள்ளது. பத்திரப் பதிவு நடைமுறைகளை முழுமையாக கணினிமயமாக்குவதற்காக, இணையவழி மூலமான விரிவான கணினிமயமாக்கும் ஸ்டார் 2.0 என்ற சிறப்பான திட்டத்தை பத்திரப்பதிவுத் துறை செயல்படுத்தியுள்ளது. நிலப் பதிவேடுகளை கணினிமயமாக்கி நவீனப்படுத்துவதுடன், பத்திரப் பதிவையும் இணையவழியில் கொண்டு வருவதன் மூலம் நிலப் பதிவு மாற்றங்கள் உடனுக்குடன் செய்யப்படுவதுடன், நில உரிமை மாற்றங்களை நிகழ்நிலையில் விரைவாக மேற்கொள்ள வழிவகை ஏற்படும்.

[*2019 ஜனவரி 4*

*36.* திறன் இடைவெளியைக் கண்டறிந்து, உரிய பயிற்சி அளித்து இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் தன்மையை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மாநிலத்தில் உள்ள தொழில் துறைகளுடன் இணைந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. மத்திய அரசின் திட்டங்களான 'தீனதயாள் உபாத்தியாய் கிராமப்புறத் திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டத்தையும்', 'பிரதம மந்திரி திறன் வளர்ப்புத் திட்டத்தையும்', 'தீனதயாள் அந்தியோதயா யோஜனா — தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்' கீழ் 'திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் திட்டத்தையும்' தமிழ்நாடு அரசு திறம்படச் செயல்படுத்தி வருவது மகிழ்ச்சியளிக்கிறது. இம்முயற்சிகளின் விளைவாக, தொழில் துறை சந்தித்து வரும் திறன் இடைவெளிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, படித்த இளைஞர்களின் வேலை வாய்ப்புகளைக் கணிசமாகப் பெருக்கும் என நான் நம்புகிறேன்.

*37.* ஒலிம்பிக் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் போன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலும், தேசியப் போட்டிகளிலும் பதக்கம் வெல்லும் வீரர் வீராங்கனைகளுக்கும், அவரது பயிற்சியாளர்களுக்கும் உகந்த ஊக்கத்தொகை வழங்குவதன் மூலமாகவும், கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலமாகவும் தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி, இளைஞர்களின் நலனைப் பேணுவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு, வேலைவாய்ப்பில் மூன்று சதவீதம் ஒதுக்கீட்டை இந்த அரசு அறிவித்துள்ளது பாராட்டுக்குரியது.

*38.* உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகையிலும், அயல்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகையிலும் *2014* முதல் *2017* வரையில், தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளாக தமிழ்நாடு நாட்டிலேயே முதல்நிலையில் உள்ளது. 'பரவசமூட்டும் தமிழ்நாடு' என்ற விளம்பர முழக்கம் மூலம் சுற்றுலாப் பயணிகளை மாநிலம் தொடர்ந்து ஈர்த்து வருகிறது. சுற்றுலாத் தலம் சார்ந்த சுற்றுலாக்களையும், சுற்றுலாச் சுற்றுகளை ஊக்கப்படுத்தும் தொடர் முயற்சியாக *218* கோடி ரூபாய் அளவிலான நான்காவது கட்ட நிதியுதவியைப் பெற ஆசிய வளர்ச்சி வங்கியுடன் அரசு தற்போது ஒப்பந்தம் செய்துள்ளது.

*39.* ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், சீர்மரபினர் போன்ற சமூகத்தில் பின்தங்கிய பிரிவினரின் நலத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும், அவர்களின் நல்வாழ்விற்காகவும் இந்த அரசு தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. வன்னியர் அறக்கட்டளை சட்டத்தை அரசு அறிவிக்கை செய்துள்ளது



*2019 ஜனவரி 4*]

மகிழ்ச்சி அளிக்கிறது. சமூகத்தின் பின்தங்கிய பிரிவைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் உயர்கல்வி உதவித்தொகை, அவர்கள் தடையின்றி உயர்கல்வி கற்பதற்குப் பேருதவியாக அமைந்துள்ளது. ஆதிதிராவிட மாணவர்களுக்கான உதவித் தொகைத் திட்டத்தின் வழிமுறைகளை மத்திய அரசு மாற்றியமைத்து, தமிழ்நாட்டின் உறுதி செய்யப்பட்ட பொறுப்பினை (State's Committed liability) *2017-18* ஆம் ஆண்டு முதல் *353.55* கோடி ரூபாயிலிருந்து *1,526.46* கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது. இதன் விளைவாக, உயர்கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் மத்திய அரசின் திட்டமாக இருந்தாலும், தமிழ்நாடு அரசு ஏறத்தாழ முழு நிதிச்சுமையையும் ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்து, மத்திய அரசின் பிற திட்டங்கள் போன்று, இத்திட்டத்திற்கும் மத்திய மாநில அரசுகளின் நிதிப்பங்கை மாற்றியமைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

*40.* பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், மூத்த குடிமக்கள், ஆதரவற்றோர் போன்ற சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் நலனைக் காத்து பேணுவது, மக்கள் நல அரசான இந்த அரசின் தலையாய கடமையாகும். திருமண உதவித்தொகை வழங்கும் திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், தொட்டில் குழந்தை திட்டம் ஆகியவற்றை தொடர்ந்து செயல்படுத்துவதுடன், மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்புக் காப்பகங்கள் மூலமாக இந்த அரசு அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது. சத்துமிக்க உணவுடன், ஊட்டச்சத்துப் பொருட்கள் வழங்கி குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களின் முறையான வளர்ச்சியை உறுதி செய்ய 'ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்' சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு கலவை சாதமுடன் முட்டையும் வழங்கி, அவர்கள் ஊட்டச்சத்து மிக்க உணவுப் பாதுகாப்பு பெறுவதை தமிழ்நாட்டின் உன்னத திட்டமான 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' உறுதி செய்கிறது. பணிபுரியும் பெண்களுக்கு மேலும் தன்னம்பிக்கையூட்டும் வகையில், இருசக்கர வாகனங்களை வாங்கிப் பயன்பெற, ஒவ்வொருவருக்கும் *25,000* ரூபாய் வரையிலான உதவித் தொகையை 'அம்மா இருசக்கர வாகன மானிய நிதியுதவித் திட்டத்தின்' மூலம் வழங்கி வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

*41.* மாநில அரசின் கொள்கைகளைப் பற்றியும், நலத் திட்டங்களைப் பற்றியும் நான் இங்கு எடுத்துரைத்துள்ளேன். மக்களாட்சியின் மாண்புகளால்தான் உன்னத அமைப்புகள் உருவாகின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

[2019 ஜனவரி 4

அத்தகைய மக்களாட்சியின் மூலம்தான், தமிழ்நாட்டு மக்கள், இந்த மாநிலத்திற்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்காகவும் அர்ப்பணிப்பு உணர்வோடு உறுதியுடன் பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களைத் தேர்வு செய்து இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு, தங்களின் பிரதிநிதிகளாக அனுப்பியுள்ளனர். தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கைக்கு உற்ற வகையில், அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிட, கடின முயற்சிகளை மேற்கொள்வது உங்களது தலையாய கடமையாகும். எனவே, தமிழ்நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகவும், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவும் உன்னதமான மக்களாட்சி மாண்புகளைப் பின்பற்றி,விவாதிக்கப்பட வேண்டிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து, ஆக்கப்பூர்வமாக விவாதித்து முடிவுகளை எடுப்பீர்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். இறுதியாக, எனது உரையை நிறைவு செய்வதற்கு முன்னர், உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் நல்வாழ்த்துக்களையும் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

வணக்கம்

ஜெய்ஹிந்த்